


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக் கமலமடி

## குறமகள்

மித்ர வெளியீடு

Mithra Arts & Creations

சென்னை ◆ சிட்னி ◆ மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mithra Books
ISBN 1 87 6626 67 4

Apart from any fair dealing for the purpose of Private Study, Research, Criticism or Review as Permitted under the Copyright Act, No part may by reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or any means, electronic, mechanical or photocopying, recording or otherwise without prior written permission from the publishers.

Mithra Publication books are published by

**Dr Pon Anura**

Publication Editor

**Espo**

**ULLAKKAMALAMADI**

by

**KURAMAGAL**

Illustrations

**ELANKAI NATHAN**

Layout & Cover Design

**M. Sridharan**

**First Edition**

**15th August 2001**

**Mithra Arts and Creations**

| | | |
|---|---|---|
| 1/23 MUNRO STREET<br>EASTWOOD 2122 AUSTRALIA<br>Ph: (02) 9868 2567<br>e-mail: www.anura@matra.com.au | 30 VANNIAH STREET<br>BATTICALOA (EP)<br>SRI LANKA | 375/8-10 ARCOT ROAD<br>CHENNAI 600 024 INDIA<br>Ph: (044) 372 3182<br>e-mail: www.mithra@md4.com.in<br>Fax : 0091-44-4721336 |

மித்ர : 54
விலை : 80.00

முதற் பதிப்பு : ஆகஸ்டு. 2001
பக்கங்கள் : 256



V Ramalingam
516-20 Wade Ave
Toronto ON M6H 4H3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவளின் வாழ்க்கைத்
துணைவர்

# சமர்ப்பணமாகச்
# சில நினைவுகள்

குறமகள்

ஆன்ற தமிழ்ப் புலவர்களால் சங்கத் தமிழ் நூல்கள் ஒன்றுள் 'வடகடலிட்ட நுகத்தடி ஒன்று தென் கடலிட்ட கழியொன்றில் பொருந்தியவாறு' என தலைவன் தலைவித் தொடர்பு விதந்தோதப் பட்டுள்ளது.

முன்பின் கண்டு கேட்டு அறியாத, தேடித் தேடிப் பார்த்தாலும் ஒரு சொந்த பந்தமோ தொடர்போ இல்லாத நல்லூர் கள்ளியங்காட்டு வேலுப்பிள்ளை குடும்பத்துக் கடைசி மைந்தன் இராமலிங்கம் இவளது கணவனாக வருவதற்கு இறையருள் பாலித்திருந்தது.

மற்றக் கன்னியர் போல வரப்போகிறவன் எப்படி எப்படி இருக்க வேண்டும் எனக் கற்பனைகள் செய்தவளல்லள். பன்னிரண்டு வயதிலிருந்து, தந்தையாருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று காந்தியக் கோட்பாடுகளால் ஈர்க்கப் பட்டவள். வயது வந்ததும் பல புதிய நூல்களின் பயிற்சியாலும் சிறிது மாற்றத்தை விரும்பியவள்.

சீதனம் கேட்காதவராக - குடிவகையை ஏற்காதவராக - எளிமை வாழ்வுக்கு பழக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்... மரபு ரீதியான விவாகமா? மூச்! தான் மாப்பிள்ளை பார்த்து பிடித்தாற்தான் — கோவிலில் ஆடம்பரம் அற்றதாக விவாகம் நடைபெறல் வேண்டும்... என்றெல்லாம் சிரித்துச் சிரித்தே சொல்லியிருந்தாள். சாதகம் பொருந்தியிருந்தால் மட்டும் போதும் என்றார் தந்தை.

ஒரு பெரிய வரவேற்பு உபசாரம் வீட்டில். கணவனாரின் அண்ணன்மார், அண்ணிமார், பொருத்தி வைத்த பேராசிரியரின் மாணவர்கள்... அம்மி மிதித்து, அருந்ததி பாராமல், பிள்ளையார் பூசை ஒன்றுடன் விவாகம் நடைபெற்றது. இவளுக்கு கணவனையிட்டுப் பெரும் மகிழ்ச்சி; பெருமை. "அவரது கொள்கைக்கு நான் அடிமை."

பின்னொரு நாள் சகஜமாகப் பேசிக் கொண்டிருந்த போது இவள் கேட்டாள்: 'சீதனம் கேட்க வேண்டாம் என்று கொண்ணருக்குச் சொன்னீர்கள்; சரி. பெண்ணைப் பார்க்க வேண்டுமென்றுகூடத் தோன்றவில்லையோ? சம்மதம் கொடுத்திட்டியளாம். கலியாணம் என்று ஒன்று நடந்தாலே போதும் என ஏங்கியிருந்தீர்களோ?

இவளின் கேலிக்கு அவர் ஒரு ஆழ்ந்த பார்வை பார்க்கிறார். அது ஒரு ரகசியம் என வெற்றிப் புன்னகை புரிகிறார். "ஓ வந்து பார்த்தேனே. பேராசிரியர் கட்டாயப் படுத்தினார்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பேராசிரியர் சாதகத்தை அண்ணாவிடம் கொடுத்து விட்டு, 'இடைக் கிடை பேசவும் போறவ. நாளைக்கு சிவகாமியம்மன் கோவிலடியில் சொற்பொழிவு ஒன்று இருக்குதாக்கும். கப்பும் வளையும் பொறுக்கத் தாங்களாயே விட்டிடுவினம்' என்றவர். "அன்றே கொழும்புக்குப் போகும் பயணத்தை நிறுத்தி, நண்பன் ஒருவனையும் கூட்டிக் கொண்டு அங்கை வந்து கேட்டுக் கொண்டிருந்தன். இறங்கி வரும்போது ஒரு ஐந்தடி தூரத்தில் கூட நின்று பாத்தன். ஆளை உள்ளும் புறமுமாக நன்கு அறிந்தன்."

தனக்குத் தெரியாமலா? வெலவெலத்துப் போன இவள் நினைத்துப் பார்க்கிறாள். "சீதனக் கொடுமை"தான் பேச்சு. 'கன்னிப் பெண்கள் ஒவ்வொருவரும் ஒற்றுமையாக நின்று சீதனம் கேட்டு வருவோருக்குக் கழுத்தை நீட்டாதீர்கள். கன்னியராகவே வாழ்ந்து விடுங்கள். இளைஞர்களே இது உங்கள் ஆண்மைக்கு ஒரு சவால்' என்ற ரீதியில் அமைந்த, சிறிது ஆவேசம் கலந்த பேச்சு.

இவளின் தவிப்பு அவருக்கு சிரிப்பை வரவழைக்கிறது. "நல்ல காலம்! நான் வந்து சிறை மீட்காவிட்டால் இத்தனை இளமையும் வீணாகி, சாதுரியமும் விவேகமும் வம்ச விருத்தி பெறாமலே போய்விடும்" என்றார் குறும்பாக.

"நீர் சிந்திய கருத்துக்கள் நல்ல இதயங்களில் விளைந்திருக்கும். அதில் நானும் ஒரு மாதிரி சீவன். சரிதானே? ஆனால் அன்றே மனதில் பதிந்து விட்ட உருவமும் உள்ளமும்! "எந்த விலை கொடுத்தும் எடுத்துப் போட வேண்டும். நிறங் குறைஞ்சாலும் பரவாயில்லை. என் மனம் நிறைஞ்சிருக்கு" என்று என் நண்பனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னேன். அவனோ, 'ஆள் திறம்தான். ஆனால் எதிர்காலத்தை யோசித்துப் பார். கூசாதூக்கி ஆகிவிடுவாய்,' என்று அன்று சொன்னவன், இப்போ சொல்கிறான், 'நீ அதிர்ஷ்டம் செய்தவன்டா' என்று..."

இவள் நெக்குருகிப் போனாள். இத்தகைய அன்புக்குத் தான் அருகதையுடையவளோ? தன் கரிசனை பெற்றார் சகோதரர் எனப் பகிர்ந்து போகிறது. அவரோ தன்னையே ஒப்படைத்த ஒரு சுயநலமற்ற அன்பு. இரண்டு வயதிலே தந்தையைப் பறிகொடுத்து, பத்து வயதிலே நீண்ட நாள் நோயாளியான தாயைப் பறிகொடுத்து, தத்தம் குடும்பங் களோடு ஒன்றிவிட்ட மூத்த சகோதரர்களின் அதிகாரம் அலட்சியம் சுயநலங்களுக்கிடையில் பந்தாடப்பட்டு ஈற்றில் அத்தனை அன்பையும் இவள்மீது கொட்டிக் கொண்டிருந்தார்.

எப்படி இவள் தந்தை கல்வி கற்பித்து, உலக அனுபவங்கள் விரிந்து செல்ல வழி வகுத்து ஆசிரியத் தொழிலை மேற்கொள்ள வைத்தாரோ அப்படியே, அல்லது அதன் பன்மடங்காகவே அவரும் இவள் உயர்ச்சிக்காகப் பாடுபட்டார். விட்டகுறை தொட்ட குறையோ?

விண்ணப்பப் படிவங்களைக் கொண்டு வந்து தந்து மேலதிகச் சான்றிதழ்களைப் பெற வைத்தார். தலைநகரி லிருந்து வரும் போதெல்லாம் தூதரகங்களுக்குச் சென்று சிறுவர் நூல்களையும் புதிய நூல்களையும் பெற்று வருவார். கற்பித்தலுக்கு உதவியாக அரச திணைக்களங்களிலிருந்து அரசியல் யாப்பு, ஹான்சாட் போன்றவை வந்து சேரும். பரீட்சைகளின் மேற்பார்வைக்குள் புகுத்திவிட்டார். அதிலிருந்து முழுமையான பொறுப்பு வரை உயரமுடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக வரலாற்று நூல்களைத் தாமே வாசித்து சுருக்கி எழுதி இவளுக்குக் கொடுத்து, இவளது வேலையைச் சுலபமாக்கி விடுவார்.

யாரும் இவளைச் சொற்பொழிவுக்கு அழைக்கின் நல்ல மகிழ்ச்சியடைவார். ஒருமுறை விவேகானந்த சபையினர் சரஸ்வதி மண்டபத்தில் ஒரு விழாக் கொண்டாட இருந்தனர். இவளுக்கு எழுதி சம்மதங் கேட்டுப் பிரசுரிக்க நாள் போதாமையால் அவரோடு பேசியபோது அவர் சம்மதங் கொடுத்து விட்டார். வீட்டுக்கு வந்த போது இவள் சத்தம் போட்டாள். மூன்றாவது குழந்தை வயிற்றில். ஏழு மாதம் முடிந்து விட்டது. 28 வயது. கொஞ்சம் அழகுணர்ச்சி. "இந்தக் கோலத்தோடு எப்படி ஒரு கூட்டத்தின்முன் நின்று பேசுவது? வெட்கம், ஒரு புறம். நல்ல நிலையில் இருந்து தன்னை மறந்து பேசும் போது வரும் கவர்ச்சி வயிறு வயிறு என நினைக்க நினைக்க பேச்சு சோபிக்காதே... கூட்டத்தினர் இப்படியான நிலையில் கட்டாயம் வந்து பேச வேண்டுமா... என்று பரிதாபம்; அல்லது பரிகசிப்பாகப் பேசுவார்களே" இது என் தயக்கம். பேசி முடியும் வரை அமைதியாகக் கேட்டிருந்தார். ஈற்றில் தாழ்வான குரலில் அன்பான வார்த்தைகளால் " என்ன வாயாலை பேசப் போறீரா அல்லது வயிற்றாலை பேசப் போறீரா" என்று கேட்டார். இனிப் பேசுவதற்கு ஒன்றும் இல்லை. கத்துகிறவர்கள்தான் விட்டுக் கொடுப்பார்கள் போலும்.

அவருடைய உயர்ச்சியில் இவளும் கவனமாக இருந்தாள். அஞ்சலதிபர் தொழிலில் வரும் பரீட்சைகளுக்குத் தயார் படுத்த உதவுவாள். சட்டக் கோவைகளை வாசிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கிக் கொண்டிருப்பார். வினாக்கள் கேட்டு விடைகள் சொல்ல வைப்பாள். அவரது ஆழ்ந்தடங்கிய சுபாவமும் அமைதியான போக்கும் உயரதிகாரிகளதும் நண்பர்களதும் மதிப்பையும் அன்பையும் பெற்றுத் தந்தன. குழப்பம் இருக்கும் அஞ்சலகங்களுக்கு மாற்றங் கிடைக்கும். ஒரு வருடத்தில் சீர்செய்யப்பட்ட திணைக்களத்தின் நம்பிக்கையையும் மதிப்பையும் பெறுவார். நல்ல நிர்வாகி. அஞ்சல் தொலை தொடர்பு சேவையாளர் சங்கத்தின் நீண்டநாள் உறுப்பினர். நிர்வாக சபையில் அங்கத்துவம். கிளைச் சங்கங்களில் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் தொழிற் சங்கத் தலைவராக இருந்து அங்கத்தவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்ததோடு தாய்ச் சங்கத்தின் நிர்வாக அங்கத்தவராக இருந்து அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கினார். சங்க அங்கத்தவர்கள் மத்தியில் "ராம்" எனும் பெயர் அன்போடு உச்சரிக்கப்படும் என நண்பர்கள் கூறுவார்கள்.

"போஸ்ட் மார்க்" எனும் சஞ்சிகைக்கு கட்டுரைகள் வரைவார். காவிய நாயகனாக விளங்கிய இராமனின் ஓர் அம்சமே இவன் என நண்பர் புகழ்ந்தனர். *'Of men of fruitful life who kindly benefits dispense the world unites to praise the whole excellence'* எனப் புகழாரம் சூட்டினர். அலுவலக சம்பந்தமாக அல்லது சங்கம் சம்பந்தமாக என்ன விழாக்களோ விருந்துபசாரங்களோ மிகவும் பெருமிதமுடன் மனைவியையும் அழைத்துச் சென்று மற்றவர்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

மனைவிக்கும் குழந்தைகளுக்கும் உயர்ச்சிக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்திட்டது மட்டுமல்ல தன்னுடைய தனித்துவத்தைப் பேணித் தன்துறையிலும் இன்றியமையாத உயர்ந்த மனிதர் எனப் புகழ் பெற்றவர் இவர். எமது ஊரிலும் யங் றோயல் விளையாட்டுக் கழகத்துக்கும் குரு விளையாட்டுக் கழகத் துக்கும் போஷகராக இருந்து தானும் விளையாடி அவர்களுக்கு அனுசரணையாகவும் இருந்தவர். விவாகத்தின் முன் யாழ்ப்பாணம் தேவனுடன் சேர்ந்து நாடகத்தில் உப பாத்திரங்கள் ஏற்றுள்ளார். அரசாங்கத் திணைக்கள உத்தியோகத்தர் கல்முனையில் "உடையார் மிடுக்கு" நாடகம் போட்ட போது உடையாரின் மகனாக நடித்தவர்.

இத்தகைய பரந்த மனப் பான்மையுடையவரே இவளின் கணவராகக் கிடைத்தது இவள் செய்த புண்ணியமே. தொழிற் சங்க விடயங்களில் இவளுக்கும் அறிவு தந்தமையால் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் இன்றியமையாத தொண்டராகி ஈற்றில் உப தலைமைப் பதவியும் இவளை வந்தடைந்தது.

அவர் தம் மக்களோடு பழகும் விதம் மிக நெருக்க மானது; அன்பு மயமானது. "அம்மா" "அப்பன்" என்றுதான் அழைப்பார்; கதைப்பார்; பக்கத்தில் இருத்தியோ மடியில் இருத்தியோ பேசுவார். சிறு சிறு விடயங்களைச் சொல்லும் போதும்கூட ஒரு வியப்பு, ஒரு மகிழ்ச்சி காட்டி தெரியாதது போல திருப்பித் திருப்பிக் கேட்பார். என்னையழைத்து, "சித்தி வீட்டு ஆடு குட்டிபோட்டதாம் இரண்டு கால் முன்னுக்கு வந்ததாம்" என்பார்.

சிறிய பிழைகள் செய்தால் ஒரு பார்வை பார்ப்பார். வெறுப்புப் பார்வை, கோபப் பார்வையல்ல. பயந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவார்கள். கண்கள் கலங்கிவிடும். சிறிது நேரத்தில் அப்பாவுக்குக் கிட்டப் போய் அண்ணாந்து பார்ப்பார்கள். உடனே அணைத்துக் கொண்டு எதுவும் நடவாதது போல "அங்கே பார், தந்திக் கம்பியில் ஒரு கரிக்குருவி இருக்குது. அதைத்தான் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்பார். எப்படி அவர்கள் அப்பாவை நேசித்தார்கள்! நேசிக்கப் பட்டார்கள்! இவளானால் ஒரு சிறு தவறுக்கும் ஓரே கத்து. ஏச்சு. அவர்கள் சுருண்டு விடுவார்கள். அவமானமாக உணரு வார்கள். என்ன செய்வது? பேரும் புகழும் பெற்ற வீடுகளை உலகம் அவதானித்துக் கொண்டிருக்கும். ஒரு சிறு தவறு நேரினும் மிகப் பெரிது படுத்தி, தலைவால் வைத்துத் தூற்றித் திரியும். அத்துடன் நம் பிள்ளைகள் பிழைவிடலாமா எனும் ஈகோ. அம்மாவைக் கேளாமல் மாங்காய் பிடுங்கித் தின்றாலே பெருங்குற்றம்தான். அவர் மெல்ல வந்து தாழ்ந்த அன்பான குரலில் "படித்த உளவியல் எல்லாம் பாடசாலை வகுப்பறைக்குத்தானே? வீட்டுக்கில்லைத் தானே?" என்பார். நல்ல சாட்டையடி; இத்தகைய அன்புள்ளம். பிள்ளைப் பாசத்தால் வருந்தி வருந்தித்தான் மறைந்தார். எத்தனை இரத்தத் தொடர்பாயினும் சமயப் பெரியார்கள் சொல்வது போல தாமரை இலைத் தண்ணீர் மாதிரி ஒட்டாமல் வாழ்வது சிறந்தது. உயிரை ஈர்க்கும் பாசம் வைக்கக் கூடாது.

இவள்மீது அன்பைச் சொரிந்து திக்குமுக்காடப் பண்ணியது மாத்திரமல்ல; மூத்த மருமகன் என்ற கௌரவத்தைக் கொடுத்தும், சகல விடயங்களையும் கலந்தாலோசிப்பதன் மூலம் ஒரு கணிப்பையும் நல்கிய இவள் பெற்றோரையும் அன்புடன் நேசித்தார். "இவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிமையாக, இருக்கிறாரே அப்பு" என வியந்தார். பணக்காரர் எனில் இதயமற்றவர் என்பதுதானே சாதாரண விளக்கம்? இவளின் தம்பி, தங்கைமகளாரை மூத்த அண்ணர் போலவே கவனித்து குடும்பத்துடன் இணைந்து வாழ்ந்தார். பெற்றோர் நோயுற்ற நேரம் தன் பெற்றோருக்கு சேவை செய்யக் கொடுத்து வைக்கவில்லை; இவருக்காயினும் செய்வோமென விடுப்பு எடுத்து நின்று சேவை செய்தார். எத்தகைய தன்னலமற்ற அன்பு.

மற்றவர்கள் சுதந்திரத்தில் தலையிட்டதுமில்லை. அதற்காகத் தலையிடாக் கொள்கை எனும் அலட்சியமும் இல்லை. தேவையான இடங்களில் அறிவுரை பகர்வார். டாக்டர் மு. வரதராஜனார் தனது நூல்களில் "தோழமை பயின்ற வாழ்வு" என அடிக்கடி சொல்வார் அதுவே வேதவாக்காகக் கொண்டவள் இவள். அப்படியே இவளும் உயிரையும் கொடுக்கக்கூடிய சிறந்த நண்பர்களாகத்தான் வாழ்ந்தனர். வயது போன காலத்திலும் நெஞ்சு நிறைந்த காதல்.

ஐந்து வயதிலிருந்தே நல்லூர்க் கந்தனுக்கு பிரதிட்டை. எங்கு போனாலும் வடம் பிடித்து இழுக்க வேண்டும். சுவாமி காவ வேண்டும். அதிர்ச்சியால் ஏற்பட்ட நோய் பாரிசவாதம். தம்மைக் காவினவரே என எந்த சுவாமியும் விதியிலிருந்து காப்பாற்ற வரவில்லை. இத்தகைய நோய்க்காரரை கண்டிருக்கின்றோம். அப்பா, எத்தனை பாடுபடுத்தி விடுவார்கள். வீட்டிலுள்ளவர்களை ஆட்டிப் படைத்து விடுவார்கள். ஆனால் அவரோ வழக்கத்திலும்விட பொறுமையைக் கடைப்பிடித்தார். இவள் தொழிலால் வரப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிந்திவிட்டால் பரபரப்பாகத் தெருவையே பார்த்திருப்பார். பிள்ளைகள் வந்தவுடன் புதினம் சொல்வார்கள். மகிழ்ச்சி யோடு கேட்டுக் கொண்டு, தான் ஏதும் சொல்ல விரும்பின் சரியான வார்த்தைகள் வராமையால் துயரத்தோடு தலை குனிந்து விடுவார். ஒரு நாளும் வாராத கண்ணீரைத் தம் மகளொருவர் விடுதலைப் போரில் தன்னை இணைத்துக் கொண்டதை அறிந்து பெருக்கினார்.

ஏதாவது அவமதிப்புக்குள்ளாகி உளம் நொந்து அவரிடம் முறையிடும் போதெல்லாம், "அவர்களின் வீட்டால் கஞ்சி வருகிறதா? நீர் யார்? அவர்கள் யார்? அலட்சியப் படுத்தி விடும்" எனக் கூறி இவள் மனதைப் பண்படுத்தி விட்டமையால் எந்தக் கல்லெறிகளையும் சொல்லெறி களையும் தாங்கும் அல்லது அலட்சியம் செய்யும் மனப்பக்குவத்தைப் பெற்றுக் கொண்டாள்.

உனது பிரிவின் பின் இவள் ஆத்மா தத்தளித்தது. எத்துறையை எடுத்தாலும் அதனைப் பூரணமாக முடித்து முழுமை சேர்த்துப் பலரது பாராட்டையும் பெறக் கைகோர்த்து நின்ற பலம் மறைந்து விட்டது. இந்தப் பத்தாண்டு காலமாக எதையும் தொடங்க முயற்சிப்பதில்லை. தொடங்கினாலும் அரைகுறையாக நின்று விடுகிறது. உந்து சக்தியும் உயிரின் ஒரு பகுதியும் இழக்கப் பட்டமையால் தோல்வியும் சோம்பலும் கட்டிப் போட்டு விட்டன. தன்னம்பிக்கை தளர்ந்து விட்டது. இயற்கையான உள்ளத் தூண்டுதல் மேற்கொள்ளும் போது மட்டும் இவள் செயற்படுகிறாள்.

பெண்களின் உயர்ச்சியில் பொறாமை கொண்டு தடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்து வருத்துவோரையும், அல்லது அலட்சியப்படுத்தி நமக்கென்ன என்றிருப்போரையும், அவமானமாக உணர்வோரையும் கண்டிருக்கிறோமே தவிர அவர்களை ஊக்கப்படுத்தி உதவிகளும் செய்து உயரத்தில் ஏற்றிப் பெருமித மடையும் கணவர்மார் வெகு சிலர். அப்படிப்பட்டவர் என் துணைவராய் அடைந்தது என் பாக்கியம். அவருடைய வாழ்க்கை மற்றைய ஆண்களுக்கும் ஒரு வழிகாட்டியாய் அமையட்டும்.

இவளது துணைவன், கணவன், தெய்வம், குரு, ஆண்டான், குழந்தை, அடிமையாகவும் எல்லாவற்றிற்கும் மேலான ஆப்த நண்பன். உயிர்த்தோழன் என்ற வகைகளிலும் பாதிப்பை உணர்ந்தாலும் அவர் இவளுள் வாழ்கிறார். அவருடன் அனுபவித்த இனிமையான கணங்களை நினைந்து நினைந்து மகிழ்ச்சியாக வாழ்கிறாள் இவள்.

*"இனியவனே என்னளவில் இன்னும் நீ வாழ்கின்றாய்*
*ஒரு நாளும் நின்பிரிவை உணராத தன்மையினால்*
*எந்நாளும் நானோர் சுமங்கலியாய் வாழ்கின்றேன்."*

பத்தாண்டுகளின் பின் வரும் முதலாவது தொகுதியாகிய "உள்ளக் கமலமடி" ஆகிய இத்தாமரை மலரைத் தங்கள் பாதாரவிந்தங்களில் சமர்ப்பிக்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

**இந்திரா பார்த்தசாரதி**

**1993** - ல் ஆஸ்திரேலியா சிட்னியில், நான் எஸ்.பொ வைச் சந்தித்தது, என் இலக்கிய வாழ்வில் ஒரு திருப்பு முனை என்று சொல்லவேண்டும். அதுவரை, நான் அதிகம் அறியாதிருந்த ஈழத்து இலக்கியச் செல்வங்கள் எனக்கு அறிமுகமாயிற்று.

எஸ். பொ.வின் விருப்பத்துக்கிசைந்து, நான் 'பனியும் பனையும்' என்ற, புலம் பெயர்ந்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதைக் களஞ்சியத்தைத் தொகுத்தது, எனக்கும் ஈழத்துக்குமுள்ள இலக்கியப் பிணைப்பை உறுதி செய்தது.

'குறமகள்' எனும் பெயரில் எழுதும் திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் என்கிற அற்புத எழுத்தாளரின் சிறுகதைகளை, 'உள்ளக் கமலமடி' என்ற இச்சிறுகதைத் தொகுப்புக்கு முன்னுரை எழுதும் வரை நான் படித்ததில்லை, படித்த பிறகுதான், இதுவரை எனக்கு ஏற்பட்டிருந்த இழப்பை என்னால் உணர முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி நபர் உலகம், குடும்பம், சமூகம், நாடு என்ற நான்கு வகை அமைப்புக்களுக்கிடையே உள்ள உறவு மிகவும் சிக்கலானது. இச்சிக்கல்தான், ஒரு நல்ல படைப்பாளியின் கருத்தோவியத்துக்குப் பகைப் புலனாகிறது.

'குறமகள்' எழுத்தில் 'இச்சிக்கல்', கலை நேர்த்தியுடன் வடிவச் சிக்கல் ஏதுமின்றி வெளிப்படுவதுதான், நான் காணும் முதல் தரிசனம். அநீதியைக் கண்டு பொங்கும் போதுகூட, அச் சீற்றத்தில், ஆழ்கடலின் அமைதி தெரிவதுதான். சினம், கலை வடிவம் கொள்ளும் போது, அதற்கு உருவாகிற புதுப் பரிமாணம், பிரச்சினைகளை அணுகும்போது, படைப்பாளி தன்னை இழந்து விடாமலிருப்பதுதான், அவன்/அவள் கலையின் வெற்றி.

திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் தாய்நாட்டில் ஏற்பட்ட அரசியல் கொந்தளிப்பினால் அகதியாகி, தென்புலம் நீங்கி, வடபுலத்தில் வாழ்கிறவர். இருவேறு உலகங்கள்; இருவேறு கலாசாரங்கள். அவருடன் அங்குக் குடி பெயர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான ஈழத்தமிழ்க் குடும்பங்களை அவர் அன்றாடம் பார்த்து வருகிறார். ஒவ்வொரு குடும்பத்திலும் ஏற்படும் கலாசார மோதல்கள் அக் குடும்பப் பின்னணிக் கேற்ப மாறுபடும். இவற்றைக் கவனித்து, தம் அநுபவத்தைப் படைப்பிலக்கியமாக உருவாக்குவதற்கு, திண்ணிய பார்வையும், தெளிந்த மனப் பக்குவமும் ஓர் எழுத்தாளருக்கு வேண்டும். இவை இரண்டும் பிரகாசமாகக் 'குறமகளு'க்குக் கைவந் திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிநபர் → குடும்பம், குடும்பம் → சமூகம், சமூகம் → நாடு-என்ற நிலையில் ஏற்படும் மோதல்களை, உளவியல் நோக்கில் இவ்வாசிரியர் அணுகும் முறை, கோஷங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு படைப்புலகத்தை நமக்கு அறிமுகம் செய்து வைக்கிறது.

சாதீய அமைப்பை அடிநாதமாகக் கொண்ட பழைய சமூகம், முற்றிலும் வேறுபட்ட ஒரு புதிய கலாசார அமைப்பைக் கொண்ட சமூகத்தில் அடைக்கலம் கொள்ளும் போது, காலத்துக் கொவ்வாத தங்கள் கலாசார உடைமைகளை (Cultural Baggages) இழக்க விரும்ப வில்லை எனும் போதுதான், அச்சமூகத்தில் இதுவரை இருந்து வந்திருக்கும் உள்புகைச்சல்கள் வேற்றுப் புலனில், விசுவரூபம் கொள்வதற்குக் காரணமாகின்றன. பாட்டன் கட்டிய கிணறு என்பதற்காக, இக் கிணற்றில் காணும் அசுத்தங்களை அகற்றாமலிருக்க வேண்டுமா என்பதுதான் இக்காலத்திய தலைமுறையினரின் கேள்வி.

இத் தொகுதியில் வரும், 'சங்கமத்தை நோக்கி' என்ற கதை வேற்றுப் புல கலாசாரப் பின்னணியில், தமிழிசை சாதீய வேறு பாட்டினாலும், பால் உணர்வு மேலாண்மையினாலும், ஏற்படும் மனச்சிக்கல்கள் ஒரு குடும்பத்தின் அமைதி கெடுவதற்குக் காரணமாகின்றன என்று அழகாகச் சித்தரித்துக் காட்டுகின்றது. ஆசிரியர் மிகத் துணிச்சலுடன் இக்கதைக் கருவை அணுகியுள்ளார் என்று எனக்குச் சொல்லத் தோன்றுகிறது.

ஏனெனில், தமிழ் நாட்டில், இன்றுள்ள கலாசார - சமூகச் சூழ்நிலையில், சாதிப் பிரச்சனைகளை அடிப்படையாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு கதை எழுத இயலாது. அரசியல் சரி நோக்கு பாவனைக்காகவோ (Political Correction) அல்லது ஆதிக்க கோஷ அநுசரணைக்காகவோ பல சமரசங்கள் செய்து கொண்டதாக வேண்டுமென்பது இலக்கிய நிர்ப்பந்தம், 'குறமகள்', இத்தகைய மனத் தடைகளில்லாமல், கலா பூர்வமாகப் பிரச்சினையை அணுகியிருக்கிறார் என்பதே இக்கதையின் வெற்றி.

குயிலியும் யோகநாதனும், வெவ்வேறான பொருளாதாரப் பின்னணியைக் கொண்டிருந்தும், சாதி வகையில் கலப்புத்திருமணம் செய்து கொண்ட "புரட்சி வாதிகள்'. செல்வத்திலும், சாதியிலும் 'உயர்வான' வள் குயிலி, 'தன் பீடத்திலிருந்து இறங்கி வந்த மன நிலையில்', யோகநாதனுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் அவள் காட்டும் ஆதரவு மனப்பான்மை, அவனுக்கு எரிச்சலூட்டி, அவன் தாழ்வு மனப்பான்மையை அதிகரிக்கச் செய்கின்றது என்பதை, குயிலியால் உணர்ந்து கொள்ளவே முடியவில்லை. யோகநாதனாலும், ஈழத்திலிருந்து கனடாவுக்குக் கொண்டு வந்திருக்கும் மனத்தளவிலிருக்கும் அவனுடைய கலாசார உடைமைகளை (Cultural Cargo) விட்டொழிக்க முடிய வில்லை. இப்பிரச்சனைகளை மிக நாசூக்காகவும் (sophistication) நுண்மையாகவும் (subtle) எடுத்தாள்கிறார் குறமகள். அவருக்கு, ஆசிரியர் என்ற நிலையில் எந்தக் கதாபாத்திரத்தினிடத்திலும் சார்பு இல்லை. நடுவுநிலையிலிருந்து பிரச்சினைகளை சொல்லி வாசகர்ளைச் சிந்திக்க வைக்கிறார்.

உ-1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் இராஜாஜி, 'அர்த்த நாரி' என்ற கதை ஒன்று 1930 களில் எழுதினார். ஒடுக்கப்பட்ட இனத்தைச் சார்ந்த ஒருவன் கல்வியினால் உயர் நிலை அடைந்து, உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணை மணந்து, தான் தாழ்ந்த சாதியைச் சார்ந்தவன் என்பதை அவளுக்கும் சொல்லாமல் மறைக்கிறான். இதனால், அவன் பெற்றோர்கள் இறந்த போதுகூட, அவனால் இழவுக்குப் போகமுடிய வில்லை. மற்றவர்கள் சொல்லிக் காட்டுவதைக் காட்டிலும், சாதி நம் மனத்தை விட்டே அகல மறுக்கின்றது என்பதுதான் கதையின் உட்கருத்து. உயர் சாதியினராக இருந்தாலும் சரி, தாழ்ந்த சாதியினராக இருந்தாலும் சரி, தமிழ்ச் சமூக அமைப்பில், அனைவருமே இரட்டை வேஷம் தரித்த 'அர்த்த நாரிகள்' தாம் என்று சொல்லத் தோன்றுகிறது.

பிறந்த புகுந்த சமூக ஒட்டுறவினால் ஏற்படும் தனிமனித சமூக விளைவுகளை, 'குறமகள்' மிகச் சிறப்பாக எடுத்துக் காட்டியிருக்கிறார். இக் கதைகளின் நிகழ்வுகள் அனைத்தும் அவர் புகுந்திருக்கும் கனடா ஈழத் தமிழ்ச் சமூகத்தில்தான் சாத்தியம் என்பது இப்படைப்பு களுக்கு ஒரு தனி வலுவைச் சேர்க்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால், 'சீவனுள்ள வானிலா' என்ற கதை. கீழை நாட்டுக் கலாசாரத்தில் வளர்ந்த ஒரு சிறுமி (நிலாணி)க்கு, கனடாவில், தொலைக் காட்சியைப் பார்த்த போது, ஏற்படும் கலாசார அதிர்ச்சியைச் சொல்லுகிறது இக்கதை.

இத்தொகுப்பில் பல கதைகள், ஈழத்து அரசியல் பிரச்சனையைப் பின் புலமாகக் கொண்டவை. ஆனால் கதைகளில் எந்த அரசியலும் கிடையாது. மனித நேயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரமாகப் பற்றிக் கொண்டு பல அரசியல் கோட்பாடுகளைக் கேள்விக்கு உரியனவாக்கும் கலைப் பிரக்ஞையை முதன்மைப்படுத்தும் சிந்தனைக்குரிய சீரிய கதைகள்.

"குறமகளின்" கதைகளை நான் முன்னால் படித்ததில்லை என்பதற்குத் தமிழ் நாட்டு இலக்கியச் சூழ் நிலையே காரணம்.

தங்களை தாங்களாகவே சிஷ்ய கோடிகளின் ஆதரவோடு நியமித்துக் கொண்ட சில இலக்கிய ஆதீனங்களின் அஃக் மார்க் முத்திரைதான், நல்ல இலக்கியங்களை அடையாளம் காட்டுமென்ற கொச்சைத் தனமான இலக்கியச் சூழ்நிலை 'மாற்று இலக்கிய' (Alternative Literature) நாட்டாண்மைக்காரர்களும், அவர்களுடைய பெயரை உச்சரிப்பதினாலேயே தங்களுக்கு இலக்கிய அந்தஸ்து உண்டாகிவிடுமென்று நினைக்கிறவர்களும், உலகத் தமிழ் எழுத்தாளர்களாக, ஒரு சில பெயர்களையே சிற்றேட்டு பைபிள்களில் எழுதி வருவதினால், பல நல்ல எழுத்தாளர்களை அறிய முடியாமலேயே போய்விடுகின்ற இலக்கியச் சூழ்நிலை.

'குறமகளி'ன் எழுத்துக்களை அறிமுகம் செய்துவைத்த எஸ்.பொவுக்கு நன்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

களம் : கனடா

எங்கோ வெகுதொலைவில் முற்றிலும் வேறுபட்ட ஒரு சூழலில் இரவும் பகலும் சம்பவங்களுக்கும் ஒரு நாட்டில் அரை நூற்றாண்டுக்கு மேலாக காலங்காலமாய் அங்கே வாழ்ந்த உணர்வோடு—பாரம்பரியச் சொத்துக்களை ஆண்டனுபவித்து இனிவரும் பரம்பரைக்கும் வீடுகள் கட்டி மரங்கள் நாட்டி வாழ்க்கை நிலையாமை தெரிந்தும் நாடு நிரந்தர்மானது சாசுவதமானது என,

உண்டு உடுத்து, கற்று கற்பித்து, ஆடிப்பாடி, எழுதி பேசி, சமூகம், சேவை என,

உறவு, நட்பு, ஊர், நாடு என ஒட்டியும் ஒட்டாமலும் பின்னியும் பிணைந்தும் நிம்மதியாக வாழ்ந்த வாழ்வு தட்டிப் பறிக்கப்பட்டு கனவாய் பழங்கதையாய், பேச்சுவார்த்தையாய் தொடர...

கணத்துக்குக் கணம் சலனப்படும் காலநிலை; பனியில் புதைந்து புறப்பட்டு உறுத்தும் ஊதற்காற்று; காற்றும் புகாத விண்ணளாவிய புறாக் கூண்டு வதிவிடங்கள் தனிமைப்படுத்தப்பட்ட மௌன வாழ்க்கை—

எனினும் அணைப்பில் — ஆதரவு தருதலில் — வசதிவாய்ப்புகளில் — உதவும் மனப்பாங்கில் உயர்ந்து நிற்கிறாள் எம் சிற்றன்னை. ஆயினும் இவள் மடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறங்கிக் கொண்டே என் தாய்மடிக்கு அழுகிறது இந்த உள்ளம்?

பிரிவின் அருமையில் அதன் அழகு துல்லியமாகத் தெரிவதனாலா? கண்களில் ஏக்கம் படருகிறது.

காங்கேசன்துறை. அதுதான் என் ஊர். என் கனவுலகக் காவிரிப்பூம்பட்டினம், தலையகத்தே கலங்கரை விளக்கம் தாங்கிய நெய்தல் நிலப்பாவை அவள். கடலோரம் நகரத் தன்மையும் சற்று உள்ளே கிராமத்தன்மையும் அமைந்துள்ள குறிச்சிகள் பலவற்றின் சேர்க்கை.

இந்தியாவுக்கும் இலங்கைக்குமான மிகக் குறைந்த தூரம் காங்கேசன்துறை — கோடிக்கரை 17 கி.மீற்றர் தொலைவு ஆகும். கெடுபிடிகள் இல்லாத காலத்தில் வேதாரண்யம், மதுரை முதலான இடங்களில் நடக்கும் கோயில் திருவிழாக்கள் நாதஸ்வரக் கச்சேரி சின்னமேளம் பார்க்கவென நண்பர்களாகக் கூடி வள்ளத்தில் இரவு 10 மணிக்குப் புறப்பட்டுப் போய் காலை 5 மணிக்கு வந்துவிடுவார்களாம்.

கயாத்துறை, கசாத்துறை, வீணாகானந்துறை, குரக்கன்துறை எனப் பற்பல பெயர்களால் அழைக்கப் பட்டிருந்தாலும் கீரிமலை காங்கேசன்துறை மாவிட்டபுரம் சார்ந்த வரலாற்று நிகழ்வொன்றின்பின் மாவிட்டபுரத் துக்கான காங்கேயன் விக்கிரகம் வந்திறங்கிய காரணத்தால் காங்கேசன்துறை எனும் பெயர்பெற்ற துறைமுகம் அது. அடிக்கடி அந்நியர் வருகையால் அல்லல்பட்டு கலக்கம் அடைவதும் நம்மூர்தான்.

காவிரிப்பூம்பட்டினம் என்றா சொன்னேன்? சின்ன வயதிலே யாழ்நகர வியாபாரிகளுக்கு இந்தியா, சீனா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யப்பான் தேசங்களிலிருந்து கப்பல்கள் நாவாய்களும் வரும். பந்தி பந்தியாகக் கட்டிவிடப்பட்டிருக்கும். கப்பல்கள் சிறிது தூரத்தே நிற்கும். அரிசி, ஓடு, சீமெந்து, மற்றும் பலவகைச் சரக்குகள் யப்பான் சீனாவிலிருந்து துணிமணிகள் வெடிகள் போன்ற ஆடம்பரப் பொருள்கள் இறக்குமதியாகும். மைம்மல் நேரத்தில் வெளிச்சவீடும் இக்காட்சியும் மனதைவிட்டகலாது. தெருவோரத்தில் பெற்றோமாக்ஸ் வெளிச்சத்தில் உணவுப்பண்டங்கள் விற்பனையாகும். தொழிலாளர் அவற்றில் பசியாறி, பறியல் நடத்துவர். மங்கைப் பருவத்தில் பட்டினப்பாலை படிக்கும்போது காவிரிப்பூம்பட்டினம் என் காங்கேசன்துறையாகத்தான் இருந்தது.

புகையிரதநிலையம், வாடிவீடு, சுங்க இலாக்கா, காவல் நிலையம் என்பவற்றோடு இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது காயக்காரரை இறக்கவென, நாலுமைல் தொலைவில் ஒரு விமான நிலையமும் துறைமுகத்தருகே ஒரு பெரிய வைத்தியசாலையும் ஆங்கிலேய அரசால் வந்து சேர்ந்தன. சுதந்திரம் பெற்றபின் துறைமுகம் பெருப்பிக்கப்பட்டு சீமேந்து தொழிற்சாலையும் வந்து சேர்ந்தது — எங்கள் கிராம மக்கள் பலர் பாரம்பரிய தொழில்களைக் கைவிட்டு தொழிற்சாலைக்குள் புகுந்து கொண்டனர். தூசிப்படிவால் விவசாயம் பாழாயிற்று.

**அ**திகாரம் கையுள் வந்ததும், அண்ணன் என்னடா தம்பி என்னடா எனத் தமிழரின் உரிமைகள் பறிக்கப்பட்டன. படிப்படியாக வெறுப்பும் உரிமை இழத்தல்களும் போர்க்காலச் சூழ்நிலை ஒன்றை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணன் தம்பி குடும்ப விவகாரம்தானே... யாரோ ஒருவர் அடிபட்டுச் சாகட்டும் பின் நிலைமை சீர் திருந்தும் என பொறுப்புள்ள அயலவர் பார்த்திருக்க....

உள்ளங்கள் குமுறின. எல்லாத் திசைகளிலிருந்தும் முழக்கம், இடி, மின்னல், ஓட்டம் ஓட்டம்! ஓடி ஒளிவது எங்கே? வானத்து நிலாவையும் தாரகைகளையும் பார்த்துப் பார்த்து வியந்து பரவசமான நிலைபோய், வகை வகையான விமானங்களை — வீசும் குண்டுகளை பயங்கரத்தோடு பார்த்து ஒளியும் காலம். விழுந்தவனுக்காக அழவே நேரமில்லாது சுற்றிச் சுற்றி ஓட்டம்.

இச்சூறாவளிக்குள் சுற்றிச் சுழன்று, பார்த்த தொழில், பாரம்பரிய சொத்துக்கள், தோட்டங்கள், வீடுகள், உடைமைகள், ஆவணங்கள், எமது கதை கட்டுரை கவிதைகளின் ஒட்டுப்புத்தகங்கள், சொந்த பந்தங்கள் எல்லாம் இழந்து, என் உயிரினும் மேலான துணைவனையும் பறி கொடுத்து, ஓட்ட வாழ்வுக்கு விடை கொடுத்து காட்டுவாழ்வை மேற்கொண்டு தமிழ் ஈழங் காண்போரிடம் போய்ச் சேர்ந்த கடைசி மகள் றோசாவையும் உயிருடன் பறிகொடுத்து, எற்றப்பட்டு எற்றப்பட்டு, கரையொதுங்கிய தேசம் கனடா.

தமிழ் ஈழ மக்களின் அவலத்துக்கு இது ஒரு எழுந்தமான மாதிரி ஒன்றே, எதையும் திரும்பிப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் மேலும் இரு தொகுதிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட கதைகள், நூற்றுக்கணக்கான சமூக நலக் கட்டுரைகள்; பெண்கல்வி, ஆய்வுக்காக நூல் நிலையங்கள், சுவடிச்சாலைகள், கிறிஸ்தவமத குழுக்களின் பழங்காலக் குறிப்புப் புத்தகங்கள், மூலை முடுக்குகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தேடிச் சேகரித்து வைத்த ஏராளமான தகவல்கள்; அத்தனையும் இளமையிலே சேகரித்து வைத்தவை. இவற்றைத் திருப்பிப் பெறமுடியுமா? முதுமையில் தேடிப்பிடிக்க முடியுமா? வாழ்நாள் பூரா பூத்துக் காய்த்து கனிந்து வரும் நேரத்தில் தட்டிப் பறிக்கப்பட்ட ஏக்கமும் மனக்கொதிப்பும் அளவிடமுடியாதவை.

எந்த இழப்புக்களும் நீண்ட நாள் நிலைப்பதில்லை. நிலைத்தால் மனநோயாளராகிவிடுவோம். சிறிது காலம் செயலற்று இருந்தாலும், நூல் நிலையங்களுக்குப் போய் கனடா பற்றிய முழுமையான வரலாறு, புவியியல், சமூகவியல், பெண்கள்நிலை, சட்டங்கள், உரிமைகள் எல்லாவற்றையும் வாசித்தறிந்து அவ்வப்போது தமிழில் தமிழர் தகவல், தமிழோசை, செந்தாமரை மூலமாக மக்களையும் சென்றடையச் செய்வதுண்டு. சகல சமூகங்களுடனுமான தொடர்பும் விரித்துக் கொள்ளப் பட்டது.

சமூகத்திலுள்ள பிரச்சினை அத்தனையையும் எழுதப் பலர் இருந்தார்கள். ஆனால் எழுதும் ஒரு சில பெண்கள்கூட ஆண்களின் கணிப்பை வேண்டி பெருவிரல் நுனியைப் பார்த்துத்தான் பெண்கள் நடக்க வேண்டும் என எழுதுவர். கல்வியும் சீதனமும் அக்காலத்தில் தலையாய பிரச்சனைகளாயிருந்தன. வயதுக்கு வந்தவுடன் பெண்களை பாடசாலையில் மறித்து விடுவார்கள். வசதியுடையவர்கள் விடுதிப் பெண்கள் பாடசாலைகளுக்கு அனுப்புவர். இது ஒரு சவால். அப்போது படைப்புகள் இவற்றைச் சார்ந்திருந்தன.

போலிக் கௌரவங்களுக்கும், சாதீய வர்க்க வேறுபாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கும் அப்பாற்பட்ட — மனித நேயமும் பொதுநல அக்கறையும் கொள்ளத்தக்கதான இலட்சியங்களை வளர்த்து, அவற்றிற் கியைய வாழ்ந்து காட்ட வேண்டும் எனும் பரபரப்பு; அதற்கான முயற்சிகள்.

மனித உரிமைப் பிரகடனத்தின்படி ஒரு மனிதனின் உரிமைகளாகக் கணிக்கப்பட்டவை அனைத்தும் பெண்களுக்கும் உரியனவே. யாரும் ஆண்டானுமில்லை அடிமையுமில்லை என்பது தாரக மந்திரம். ஆனால் மாதா பிதா, குரு, தெய்வத்துக்கு சமானம் எனும் அறநெறியும் தன்னுணர்வு பெற்று, தாமே சிந்தித்து, தாமே முடிவு எடுக்கக் கூடிய அளவுக்குத் தட்டியெழுப்புதல்; வார்ப்பெண்ணங்களைக் களைதல்; உரிமைகள் கடமைகள் வேறுபாட்டை நன்கு புரிய வைத்தல் இன்றுங்கூடச் சிரமமான சவால்களே.

ஓர் இலட்சிய எழுத்தாளன், சமூகத்தின். விருப்பு வெறுப்புகளுக்கும் நீதி அநீதிகளுக்கும் வளைந்து கொடுக்க முடியாது. புகழைக் குறிக்கோளாகக் கொண்டவர்களால் அது சாலும். பெரியவர்களால் சொல்லப்பட்ட ஏற்றுக் கொள்ளக்கூடிய நல்ல கருத்துக்களை வலியுறுத்தியும் விரித்தும் செவிகைப்ப, ஆளுமையோடு எழுதுவதுதான் சத்திய வார்த்தைகள். அதுதான் தனித்துவம். சொல்வன வற்றில் ஒரு பொறுப்பும் விசுவாசமும் எண்ணக் குவிவும் சேர, சொல்லும் பாணியில் வாசகனை ஈர்க்கவும் வேண்டும். இயலுமானவரை அப்படியே வாழ்ந்து காட்டவும் வேண்டும்.

யுத்தமேகம் சூழ்ந்தபோது அமைதியான வாழ்வியலில் துன்பச் சுமை ஏறியது. அது எவ்வித வேறுபாடுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களை ஒன்று சேர்த்தது ஆண் பெண் பேதமற ஒரு குறிக்கோளை நோக்கிச் செயற்படும் அளவுக்கு அறிவும் ஏற்பட்டு சுறுசுறுப்பும் உற்சாகமும் தோன்றியது. நாற்பது வயதிலும் சைக்கிள் ஓடக்கற்று, தமது முதியோர்களை ஏற்றிக் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு ஓடினர் பெண்கள். அனைத்துப் பெண்களும் முதலுதவி கற்றுக் கொண்டார்கள். பங்கர் வெட்டினார்கள். மண்மீட்புப் போர் முனைக்கு சமைத்துப் பொதிகட்டி அனுப்பினார்கள். கிராமச் சுத்தம் பேணினார்கள். சாதி, சமய இன, வர்க்க, பால் வேறுபாடுகளற்ற ஒரு உன்னத சமுதாயமாக மாறியது தமிழ் ஈழம். ஈற்றில் ஆயுத மேந்திப் போராடவும் புறப்பட்டது பெண்ணினம். உலகம் காணாத ஒரு உன்னதம் இது.

### பிரசித்தம் : கதைகள்

இளமைக்காலத்தே சிறுகதைத் தொகுதி ஒன்று வெளியிடுமாறு சன்மார்க்க சபையினர் தூண்டிக் கொண்டேயிருந்தனர். பிரபலமாக வந்தபின்தான் நூல் வெளியிடும் தகுதி வரும் என வாளாதிருந்தோம். அப்படியான ஒரு காலம் வந்தபோது, பதவியுயர்வுகள், படிப்பு — கல்வி சம்பந்தமான இதர சேவைகள், அவசரங்கள், ஓய்வின்மை தொடர்ந்து பிள்ளைகளின் பல்கலைக் கழகப் பிரவேசங்கள்...

இந்திய ராணுவம் வெளியேறும் காலத்தில் சிறிது தளர்ச்சி. அந்த இடையில் யாழ்—இலக்கிய வட்டமும், தெல்லிப்பளை கலை இலக்கியக் களமும் தாமே முன்னின்று கதைகளை எடுத்துப் போய் இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிகளுக்காகத் தெரிவு செய்தன. அக்காலத்தில் இயக்க மோதல்களும் இருந்ததால் சில தீவிரமான கதைகளைத் தவிர்த்து 12 கதைகள் முதலாவது தொகுதியாக குறமகள் கதைகள் எனத் தொகுத்து வெளியிடப்பட்டது. இரு மாத இடை வெளிக்குள் மீண்டும் ஓட்டம், உடுத்த உடுப்போடு! கனடாவில் வந்துதான் கால் தரித்தது.

இங்கே, நிறையத் தமிழ் முகங்களைக் காண நேர்ந்தது. எல்லாம் பொய் முகங்கள். விரக்தியான முகங்கள். உற்சாகமாக சீட்டியடித்து சிரித்து வீதியுலா வந்து எம்மிடம் ஏச்சும் வாங்குகின்ற அந்த உல்லாச இளமைகள் எங்கே? ஆம்! சூழலோடு ஒன்றிக்க இவர்களுக்கு என்ன இருந்தது?

மொழியா, நிறமா, பணமா, அந்தஸ்தா, கலாசாரமா? எதுதான் பொதுமையானது? இவற்றிற்குப் பதிலாக நிரந்தர சோகமும் வேரோட முடியாத பரிதவிப்பும் தாய் நாட்டு ஏக்கமும், விட்டு வந்த உறவினரை வரவழைக்கும் வெறியும், ஓய்வு ஒழிச்சல் இல்லாத இரண்டு மூன்று வேலைகளும் பணம் பண்ணும் யந்திர வாழ்க்கை. வேலைக் கடுமையாலோ, நாகரீகம் எனக் கருதியோ அங்கே மதுவை ஏறெடுத்துப் பாராதவர்கள்கூட குடிக்கு அடிமையாக அதன் பிரதிபலனாக புறாக்கூண்டுகளுள் பேயாட்டம். ஏனென்று கேட்க நாதியில்லை. இங்கிதமாக நடத்தல், அறநெறிவாழ்வு, இன்பம் துய்த்தல் என்பன மறந்து போக, விஞ்சியது விரக்தி, மனச்சோர்வு, மன அழுத்தம், மன உளைச்சல், மனோநிலை பாதிப்பு! அதனால் ஒரு சில இடங்களில் கொலை, தற்கொலை, கலாசாரச் சீரழிவுகள். அது மட்டுமா? அதனைத் தூக்கிப் பிடித்து நாளேடுகளும் வானொலிகளும் எங்கோ பெற்றுக் கொண்ட ஊக்கு விப்பால் வன்முறைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயம் எனப் பட்டம் சூட்டி மிகைப் படுத்திப் பரப்பி முழு சமுதாயத்துக்குமே சேறள்ளிப் பூசின. சத்தியத்தின் பக்கம் நின்று போராடும் அந்தக் கட்டுக் கோப்பான குழுவுடன் தொடர்புறுத்தி ஆத்திரம் ஊட்டுகின்றன.

கடந்த சில ஆண்டுகளாக ஒரு விழிப்புணர்ச்சி நம்முன்னே தோன்றியுள்ளது. கனேடிய தேசீய நீரோட்டத்தில் இணைந்து கொள்ளும் வாய்ப்புகள் தோன்றியுள்ளன. புரியாத சட்டங்கள் திட்டங்கள் எம்மிடம் எதிர்பார்க்கப்படுவது என்ன போன்றவை தமிழ் வானொலிகள் தோற்றங் கொண்டதாலும் புதிய புதிய கோயில்களின் வருகையாலும், மன்றங்கள், பழைய மாணவர் சங்கங்கள், பத்திரிகைகள், விழாக்கள் போன்றவற்றாலும் புதியன அனைத்தையும் அறிய வைக்கப்படுகின்றனர். தெட்டந் தெட்டமாக வாழ்ந்த பலர் தமிழால் ஒன்றுபடத் தொடங்கியுள்ளனர்.

இந்தப் பத்து வருடகாலத்துள் எத்தனையோ யுகங்களைக் கடந்தது போன்றதொரு தோற்றம். படைப்புகளும் அவற்றினூடாக நடைபெற்றுள்ளன. தாய்நாட்டைப் பற்றிப் பேசக்கூடப் பயப்பட்டது ஒரு காலம். இன்று அப்படி இல்லை. சிலர் கண்ட பாவனையில்.... என்பது போல பிறந்த இடம் மறந்து நிறத்தைத் தவிர மற்றெல்லாம் மேல்நாட்டவராக வாழ்கிறார்கள். இவர்களுக்குத் தாய் மண் சுரணை வரவேண்டும். இப்படிப் பல உந்துதல்கள்.

இத் தொகுதியில் இருக்கும் கதைகள் எல்லாம் ஏதோ அவசரத்தில் படைக்கப் பட்டன போலத் தோற்றம் பெறுகின்றன. நாம் விட்டு வந்த தாய் மண்ணுக்கு உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யவே வேண்டும். எவ்வாறு செய்யலாம்? களமுனையில் நிற்போர் யார்? எம் ஒவ்வொருவரின் மக்கள், பெறாமக்கள், மருமக்கள், மச்சான்மார், சகோதர—சகோதரிகள், தோழர் — தோழியர். இதன் அடிப்படையிற் சில. எங்கள் ஊரைப் பிடிப்பதில் முன்னுக்கு நிற்பாள் என நம்பியிருந்த எமது மகள் றோசா எட்டு வருட சேவையின் பின் மாவீரராகி விடவே எழுந்தது. "மீண்டும் வரவேற்கிறது." உளச் சாந்திக்கானக் கற்பனையாக்கிவிட்ட உண்மைக் கதை.

ஆண்களுக்கே பயப்படுத்தி "அப்பா அடிப்பார் அண்ணா ஆண்பிள்ளை அடியாதை உதையாதை" என்றெல்லாம் வளர்த்து இராணுவத்துக்கு உள்ளதிலேயே பயம். அவனால் வல்லுறவுக்கு ஆளாகும் போது பயத்தால் நடுங்க, அதனால் வல்லுறவு அல்ல என சட்டம். தீர்மானிக்கிறது. பொறுக்க முடியுமா? அதனால் ஒன்று, ஆத்திரம் தீர்ப்பதற்கு!

ரி. வி. பார்ப்பது குழந்தைகள் இளசுகளைக் கெடுப்பது மாத்திரமல்ல, முதியவர்கள்கூட பாதிக்கப்படுகிறோம் என்கிறார்கள். தனிமையில் ரிவி பார்ப்பதும் இணை வலையம் உபயோகிப்பதும் தடுக்கப் படவேண்டும். சில காதல் கலியாணங்கள் கூட தாழ்வுச் சிக்கலால் பாழ்பட்டுப் போகின்றன. அப்படி சேர்த்து வைக்கப்பட்ட தம்பதியின் கரு இன்னொன்று. இப்படிப் பல குடும்பச் சிக்கல்கள். பல குடும்பங்கள், உற்றார் உறவினர் இல்லாது வாழும் தனிக் குடும்பங்களில் பேற்றுக் காலத்தில் கூட உதவி யெதுவுமின்றி நொய்ந்த உடம்போடு வீட்டு வேலைகளும் பார்க்கிற பல பெண்கள் கணவனின் கரிசனையுமின்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Post Partum* மன உளைச்சல் நாளடைவில நோய்க்கு ஆளாகிறார்கள். இப்படிப் பல நிகழ்வுகள் "உள்ளக் கமலமடி" நூலுக்கு ஆதாரமாகின்றன. ஆளுக்காள் விருப்புகளும் ரசனைகளும் வெவ்வேறானவை. ஒவ்வொருவருக்கும் ஏதோ சில பிடிக்குமென நினைக்கின்றேன். ஏற்பதை ஏற்று வாழ்த்துங்கள்!

எஸ். பொ இல்லாவிட்டால் இந்தத் தொகுதி வந்திருக்கவே முடியாது. நீண்ட காலமாகவே எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரியவர். என் கணவரோடும் நன்கு உசாவுவார். கனடா வந்தபோது எனது சுகவீனம் கண்டு கவலைப் பட்டார். ஒரு நூலுமா வெளிவரவில்லை என விசனித்தார். "சேர்த்து வைத்து என்ன கண்டோம் எனும் விரக்தியில் எதுவும் சேர்த்து வைக்கவில்லை'. நூலுருவாக்க வேண்டும் எனும் ஆசையோ கிஞ்சித்துமில்லை. அனுபவம் புகட்டிய பாடம்.

ஆனால் எந்த நண்பர்களும் காட்டாத அக்கறையைக் காட்டி, "வைத்திருப்பதைத் தாருங்கள் சிறு நூலாகப் போடலாம். நானே போட்டுத் தருகிறேன்' என்றார். எமக்கு பணப் பிரச்சனை இல்லை. யார் யாரோ கேட்கிறபோது எழுதிக் கொடுக்கிறேன். அத்தோடு விட்டு விடுகிறேன் எனக் கூறி எட்டுக் கதைகளைக் கொடுத்தேன். நண்பர் பத்மநாதன் தனக்கு பிடித்து சேகரித்து வைத்திருந்த இரு கதைகளை அனுப்பித் தந்தார். பின்னரும் கிடைத்த சிலதை அனுப்பி வைத்தேன். இந்த நன்றியை மறக்க முடியாது. வாழ்வின் அந்திமத்தில் எனது இருப்பினை உறுதி செய்ய ஒரு நூலை உருவாக்கித் தந்தாரே அதற்காக எஸ் பொ வுக்கு கடமைப் பட்டுள்ளோம். இவரது மனித நேயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கப் பட முடியாதது.

பழமையை அழிந்துவிடாது காப்பதிலும் ஆவணப் படுத்துவதிலும் மறைந்து போன — மறந்து போன எழுத்தாளர்களைக் கௌரவிக்கின்ற "மித்ர வெளியீடு" ஊழியர்களுக்கும் நன்றி.

"ராமானுஜம்" நாடகத்துக்கான சரஸ்வதி சம்மான் விருது கிடைத்தவுடனேயே எமது சிறுகதைத் தொகுதியையும் வாசித்து நயவுரை தந்தார் இந்திரா பார்த்தசாரதி.

முன்னுரை மூலம் பூவோடு சேர்ந்த நாராகி அவருக்கும் நன்றி கூறுகிறேன்.

V.R.
20 Wade (2 வேட் அவென்யூ) H516
கனடா M6 H 4H3

**வள்ளிநாயகி இராமலிங்கம்**
**திருப்தி**
**கல்லூரி வீதி**
**காங்கேசன்துறை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளுறை

❖ பிணைந்தும் இணையாத உள்ளங்கள் 33
❖ எங்களுக்கு ஒரு ஏயர்போட் வேணும் 47
❖ புத்தகங்கள் புகட்டாத புத்திமதிகள் 57
❖ உள்ளக் கமலமடி 71 ❖ சீவனுள்ள வானிலா 81
❖ வாலுகள் - விலாங்குகள் - மைனாக்கள் 93
❖ மூலமும் உரையும் 102 ❖ உதையும் பயன் தருமா? 115
❖ பெற்றவ பெரிசுதான் 132 ❖ உருப்படிகள் மூன்று 150
❖ மீண்டும் வரவேற்கிறது 164 ❖ சங்கமத்தை நோக்கி 174
❖ நிறை நிலா பூத்தது 193
❖ ஒரு அன்பு மகன் காதலனாகிறான் 227
❖ மதியம் திரும்ப மதியும் திரும்புகிறது 243



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பிணைந்தும் இணையாத உள்ளங்கள்

**பிரசாந்த் சொல்கிறான்**

**நா**ன் நிறத்தால் மட்டுமே தமிழன். புகலிட நாகரிகத்தில் தோய்ந்தவன். பிரிட்டிஷ்காரனே தோற்கும் அளவுக்கு நடை யுடைபாவனை எல்லாமே. ஆனால் பால்ய நண்பன் ஒருவனின் பரிவும் பாசமுமே தமிழ் ஈழம் என்று ஏதோ ஒன்று இருக்கின்றதென்பதை உணர்த் திக் கொண்டிருந்தது. அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைவை மட்டும் என்னால் பிடுங்கி எறிய முடியவில்லை.

என்னோடு படித்த இன்னொரு பையனும் இங்கே என்னுடன் நட்பாக இருந்தவன். அவனும் ஒரே தமிழ் ஈழம் பற்றியே பேசிக் கொண்டிருப்பான். அவனும் இப்போ கனடா போய் விட்டான். நான் விரும்பினேனோ இல்லையோ இடையிடையே 'உலகத்தமிழர்' பத்திரிகையை அனுப்பிக் கொண்டேயிருப்பான். வரும் பத்திரிகையை ஏதோ மேலோட்டமாகப் பார்த்துவிட்டுப் போட்டு விடுவேன்.

இன்றும் பத்திரிகை வந்தது. அதன் முன்பக்க மேல் வெற்றிடத்தில் **இதைப் பத்திரப்படுத்தி வை. அவனிடத்தை நிரப்ப நான் தமிழ் ஈழம் செல்கிறேன்** என எழுதப் பட்டிருந்தது. அதைப்பற்றி அதிகம் சிந்திக்காமலே பத்திரிகையைப் பிரித்தபோது....

முழுப்பக்க அளவில் வண்ணனின் முழுப்படம். என்னுள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. என் ஒரேயொரு பால்ய நண்பன்... என்ன கம்பீரம்? அவனது சீருடையிலும் பதவி இலச்சினைகளிலும் 'தொப்பியிலும்' என்ன எடுப்பா யிருக்கிறது. கட்டிப்பிடிக்க வேண்டும் போன்ற தோற்றம். கண்ணைக் கவர்ந்த உச்சந்தலை முதல், உள்ளங்கால் வரையிலான வீரம் ஒரு பயபக்தியை வரவழைத்தது. இந்தச் சீருடைகளும் அணிகளும் அவனுக்காகவே படைக்கப்பட்டன போன்றதொரு அதிசயம். அத்தனை பொருத்தம். எட்டு வருட இடைவெளியில் நண்பா நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவனாகவே இருக்க நீ மனிதன் ஆகிவிட்டாய். உன்னையிட்டு நான் பெருமிதம் அடைகிறேன். ஆசை யோடு படத்தைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறேன்.

உணர்வு வந்து கீழே பார்த்தபோது... ஐயோ!! நீ மாவீரனாகி விட்டாயா? இனி உன்னை நான் ஒருபோதும் பார்க்க முடியாதா? மணிவண்ணா மனந்திறந்து பாராட்ட இனி முடியாதா? பதறியவாறே மறுபக்கம் புரட்டுகிறேன். கதை கதையாய் அவரது வரலாறு, விசுவாசம், சாகசச் செயல்கள், கண்டுபிடிப்புகள். இவையெல்லாம் சாத்தியமா? எம் மண்ணில் இத்தனை வேகமாகத் தொழில் நுட்பம் வளர்ந்துள்ளதா? இன்னமுமே நான் படித்து முடிக்காத வற்றை வண்ணன் எவ்வாறு குறுகிய காலத்திலேயே கற்றுப் புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்தான்; செயலாற் றினான்! பிரமிப்பு; ஒரே பிரமிப்பு! நீ சரித்திர நாயகன்தான்.

பத்திரிகையை மடித்துப் பெட்டியில் வைக்க வேண்டும். ஒரு காலத்தில் குடியும் குடித்தனமுமாக இருக்கும்போது எனது வாரிசுகளுக்கு இராமர் கதைபோல் வீரசாகசக் கதைகளுக்குப் பதிலாக இதனைச் சொல்ல வேண்டும். என் பால்ய நினைவுகளில் வாழவும்முடியும்.

**தொடர்வது கதைசொல்லி**

**பி**ரசாந்த் லண்டனுக்கு வந்த நாட்களில் நினைவுகள் அவனை ஆட்டிப்படைக்கின்றன. நான்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிக்கே விழிப்பு வந்து விடுகிறது. இதன்மேல் படுக்கையிலிருக்க மனசாகுதில்லை. நேரமெல்லாம் அவமாக நித்திரையில் கழிந்துவிடுவதா? போர்வையைத் தள்ளிக் கொண்டு எழுந்தான் பிரசாந்த்.

ஓ, என்ன குளிர்! அங்கிள் உஷ்ணக் கருவியைக் குறைத்து விட்டாரா? இது என்ன நாடு...? அவன் திரும்பவும் 'கொம்போட்டருள்' நுழைந்து கொண்டான். அப்பா நீங்கள் இப்போது இங்கே இருக்க வேண்டும். அடுக்கியடுக்கி உடைபோடுவதற்காக சந்தோசப்படுவீர்களா, அல்லது சபித்துக் கொள்ளுவீர்களா?

அவனது அப்பா சில சம்பிரதாயங்களுக்கு உட்பட்டவர். சிறுவயதிலேயே கிறிஸ்தவ ஆங்கிலக் கல்லூரிகளில் படித்த வெள்ளையர் சொன்னதற்கு மறு பேச்சு இல்லாதவர். வியர்க்கிறதே என்றுகூட மேலங்கியை வீட்டிலும் கழற்றாதவர். பெனியன், சட்டை அணிந்தபடி படியில் செருப்பு மாட்டியே இறங்கவேண்டும் எனும் சட்டம்.

அயற் பிள்ளைகளோடு சேரவிடமாட்டார். தனது நேரத்தில் பிரசாந்துக்கு ஒரு பகுதியை ஒதுக்கி, பந்தை மட்டையினால் அடித்தல், பிடித்தல், வீசுதல், என விளையாட்டு நுட்பங்கள் பல பழக்குவார். இருவருந்தான் விளையாட்டுத் தோழர்கள். செஸ் விளையாடுவதும் இருவருந்தான். மாமரத்திலே மணல் மூட்டை தொங்க விடப்பட்டுக் குத்துச் சண்டை பழக்குவார். அவரில்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விட்டால் அவன் தோழன் மணல் மூட்டை தான். அந்த மணல் மூட்டை இப்பவும் இரக்கத்தோடு நினைக்கப் படுவது. விளையாடி முடிய வேர்த்துக் கொட்டும். களை யாறிக் குளிக்கும் வரை ஈரப்பனியன் படப் படக் குளிர்ந்து சினமாயிருக்கும். அந்தச் சினம் அப்பா மீது திரும்பும்.

யன்னலூடாக பிரசாந்தின் சக மாணவர்களும் நண்பர்களும் பந்து விளையாடிக் கொண்டிருப்பதை ஏங்கும் விழிகளுடன் பார்த்துக் கொண்டிருப்பான். இவனைக் கண்டால் அவர்கள் "பிரசாந்திப் பெட்டை, டேய் பிரசாந்திப் பெட்டை" என்று கேலி செய்வதும் மணிவண்ணன் மறிப்பதும் அதனால் ஏற்படும் சண்டையில் கட்டிப்பிரண்டு உருள்வதும், இரண்டு குத்து விட்டு நண்பனைக் காப்பாற்ற வேண்டும் என்ற இவனது உந்து தலையும் இப்போது நினைத்தாலும் ஒரு பரபரப்பும் யன்னலால் பாய்ந்திருக்க வேண்டும் எனும் தீவிரமும் தோன்றும்.

"மணிவண்ணா என் நண்பனே நீ எங்கே? எவ்வித சுயநலமும் இல்லாமல் என்னை ஏன் நேசித்தாய்? என்னில் என்ன கண்டாய்? உலக அறிவு இல்லாது, அடக்கி ஒடுக்கி வளர்க்கப்பட்ட அப்பாவி எனப் பரிதாபப்பட்டா? ஆம்; உன்னுடன் கழித்த அந்தச் சிறு பொழுதுகளிலே தான் நான் உலகவிளக்கம் பெற்றேன்.

பாடசாலை விட்டதற்கும், அவனை வந்து கூட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வதற்கும், இடையிலுள்ள ஒரு மணிகூட அவன் பிற பிள்ளைகளுடன் சேர்ந்து கெட்டுப் போகக் கூடாதென்ப தற்காக ரியூசன் ஒழுங்கு பண்ணியிருந்தார் தந்தை. அவனுக்கு எதற்குமே ரியூசன் தேவையில்லை. எனவே ஆசிரியர் நாடி பிடித்து நோயை அறிபவராதலால்...

"பிரசாந்த் உனக்கு நண்பர்களோடு விளையாட ஆசை. நீ போய் விளையாடு. பதினைந்து நிமிடத்துக்கு முன்னே வந்து கணக்குகளைச் செய்து போடு" என்று ரியூசன் மாஸ்டர் சொல்வார். அவரிடம் வந்து இரகசிய மாகப் பேசுகின்ற அண்ணாக்களை கவனிப்பான். வரை படங் கீறுவார்கள்; சரித்திர - பூமிசாத்திர ரீதியாக உரையாடுவார்கள். வன்னியர் கல்வெட்டு என்ற சொற்களும் அடிபடும். பழைய உக்கிப்போன புத்தகங்களை ஆசிரியர் அவர்களுக்குக் கொடுப்பார். "ஓடிப்போய் விளையாடு" என்று சொல்லி விட்டு, "ஆள் சுழியன்; நல்லபிள்ளை. பாவம், தகப்பன் பெருங்கெடுபிடி" என்று சொல்வதைக் கேட்டிருக்கிறான்.

## பிரசாந்த் சொல்கிறான்

பிரசாந்த் ஆகிய நானே எனது கதையை சொல்ல வேண்டும். எனக்காகவே காத்திருக்கும் மணிவண்ணனிடம் (சப்பாத்துக்களைக் கழற்றி வைத்துவிட்டு) ஓடுவேன். அந்த அண்ணமார் வந்து அவன் தோள்களில் தட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொடுத்துவிட்டுப் போவார்கள். இவன் எனக்கு அவை பற்றிக் கதை சொல்லுவான். அவை நம்பமுடியாத வீர சாகசக் கதைகள் போல் இருக்கும். நாங்கள் விளையாடு வோம். அண்ணமார் இந்தியாவுக்குப் பயிற்சி பெறப் போவதாகக் கூறுவான்.

மற்றவர்களுடன் நேசபாவமாக விளையாடப் போனாலும் அவர்கள் என்னை ஒதுக்கிவிடுவார்கள். என் உடை - நடை - பாவனை, கார்ச் சவாரி, ஆசிரியர் என்னை அன்பாகவும் மதிப்பாகவும் நடத்தும் தன்மை; - இவை அனைத்தும் என்னிடமிருந்து அவர்களைப் பிரித்தே வைத்திருந்தது. அவர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் நான் அறிந்தும் புரிந்தும் வைத்திருக்கிறேன். அவர்களோ என்னை புரிந்துகொள்ள முயல்வதேயில்லை. 'நேற்று விழுந்தீங்களே, இப்பவும் வலிக்கிறதா?" உண்மையான இரக்கத்துடன் கேட்பேன்.

"டேய் பிரசாந்திப் பெட்டை என்ன கேட்குதென்று பார்டா. நேற்று விழுந்தீங்களே" எனப் பெண்குரலில் சொல்லி நெளித்துக் காட்டுவார்கள். எல்லாரும் "விழுந் தீங்களே" என்று சொல்லிச் சொல்லி நையாண்டி செய்வான் கள். ஏன் என்று எனக்குப் புரியாது. மணிவண்ணன் புரிய வைப்பான். நண்பர்களோடு மரியாதைச் சொல் கூடாதாம். மறுநாள் அவங்கள் பேசுவது போலவே பேசிப்பழகி. "இப்ப சுகமாக இருக்குதாடா?" என்று கேட்டேன். விழுந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறை ஒன்று கன்னத்தில். "நீர் பணக்காரன் என்றாப்போல, 'டா' ப் போட்டுக் கதைக்கலாம் என்று நினையாதையும்."

திரும்பவும் அவமானப்பட்டேன்.

அம்மாவுக்கும் உலகம் தெரியாது. அப்பாதான் உலகம். கோயிலா,கடையா, தியேட்டரா, அம்மம்மா வீடா அப்பாதான் கூட்டிப் போவார். ஏதும் அவசரம் என்றால் மட்டும் அம்மம்மா வீட்டுக்கு என்னைக் கூட்டிக் கொண்டு போவா. "அவர் வந்து விடுவார் ரீ குடுக்க வேண்டும்" என வீட்டுக்கு வருவதற்கு அந்தரப்படுவா. உள்ளே போய் யாருடனும் தனிய கதைக்கமாட்டா. அப்பாவுக்கு ஊரிலே யாருமே நண்பர்கள் இல்லை. மணிவண்ணனின் அப்பா வுடன் மட்டுமே எங்காவது சந்தித்தால் பேசுவார். வீட்டுக்கு வேலை செய்ய வருபவர்களால்தான் ஊருலகப் புதினங்கள் அறிந்து தேவையாயின் அப்பாவுக்கு அஞ்சல் செய்வா அம்மா.

ஊர்அரசியல் தடம் மாறிப் புரண்டு கொண்டிருக்கிறது. பாட சாலையிலிருந்து ஒன்பதாம் பத்தாம் வகுப்பு மாணவர்கள் காணாமல் போகத் தொடங்கினர். வண்ணனுடன் பேசுவதை அம்மாவே விரும்பாத காலமாயிற்று. அவன் கூறும் சில புதினங்களை அம்மாவுக்கு நான் சொன்னதால் வந்த வினை.

தீவிர சிந்தனையில் அடிக்கடி ஆழ்ந்து விடுகிற வண்ணன் ஒருநாள், 'பிரசாந்த் உயிர் உள்ளவரை உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் மறக்கமாட்டேன். எங்கே இருந்தாலும் உனக்குக் கரைச்சல் வராதபடி உன்னோடு தொடர்பு கொள்வேன். முடியாதாயினும் உன் நன்மை தீமைகளை அறிந்து கொண்டே இருப்பேன். நீ தமிழ் ஈழத்தின் பிரதமராகக் கூட வரலாம். அப்போது மெய்பாதுகாவலன் பதவியை எனக்குத் தர வேண்டும்." துக்கமும் விகடமுமாகச் சொன்னான். நாலு நாட்களாகக் கையைப் பிடித்துக் கொண்டே திரிந்தான்.

வலுவான சந்தேகம் எனக்கு. ஆனால் கேட்க வில்லை. புனிதமான பரமரகசியங்களைப் பேணுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டுமே தவிர, பிடுங்கிப்பிடுங்கிச் சோதனைக்குள்ளாக்கக் கூடாது. அன்று சிறிது பரபரப் பாக காணப்பட்டான். கைகள் குளிர்ந்து காணப்பட்டன. பாடசாலை மூலைமுடுக்கெல்லாம் சுற்றி வந்தோம். பாடசாலைப் பெயரை அன்றுதான் பார்ப்பது போல நீண்ட நேரம் பார்த்துக் கொண்டு நின்றான். மணியடித்ததும் காதருகில் "வண்டி வந்திட்டுதாம்; எந்நேரமும் போகக் கூடும்" என்றான்.

நான் எதிர்பார்த்தது போலவே மறுநாள் அவன் பாடசாலைக்கு வரவில்லை.

வண்ணனின் அப்பா, எங்கள் அப்பாவுக்கு அடுத்த படியாக சமூகத்தால் கணிக்கப்பட்ட உத்தியோகத்தர். ஆனால் அவர் சமூகத்துடன் ஒன்றி வாழ்ந்து சுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துக்கங்களில் பங்கு கொள்ளுவார். அதனால் ஊரெல்லாம் அவருக்காக அழுதது. ஆறுதல் கூற விரைந்தது. அப்பாவும் போய் வந்தார். துள்ளினார். வளர்த்த வளர்ப்பு என்றார். 'ஓடுகாலி' என்றார். தீவிரமாக யோசிக்கத் தொடங்கினார்

வண்ணா என் கண்ணில் நீரைக் கண்டால், "சீ ஆண்களும் அழுவதாடா" என்று கேலி செய்வியே. இரவிரவாக கடைசி நேரத்தில் கண்ட உன் சோக முகத்தை நினைத்து நினைத்து நித்திரை இன்றிக் கண்ணீர் பெருக்கியதை நீ அறிவாயாடா? அம்மா அடிக்கடி என்னறைக்கு வந்து "நித்திரை கொள் ராசா" என்கிறா. அதிகாலையில் அப்பா பேசும் சத்தம் கேட்கிறது. "சும்மா அழாதையும். ஓரேயொரு பிள்ளைதான். அதுக்காக பிள்ளை இல்லை என்றிராமல் எங்கோ சுகமாக இருக்கி றானே என்று சந்தோசமாய் இருக்கலாம். இரண்டு வருடத்தில் நீரும் போகலாம். பென்சனோடு நானும் வரலாம்" என்கிறார்.

அடுத்து வந்த நாட்களில் அம்மா அதிகபட்சமாகவே அன்பைப் பொழிகிறா. கண்ணில் துளிர்க்கும் நீரை மறைத்தவாறுத் தயங்கி நிற்கிறா. உடுப்பு இப்பபடித்தான் தோய்ப்பது எனக் காட்டித் தருகிறா. அவர்கள் பேசும் போது 'லண்டன்' 'கிருபா' என்ற சொற்கள் காதில் விழும். அம்மா விசும்பும் சத்தம் கேட்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாலாம் நாள் அப்பா என்னைத் தன்னருகே இருத்தி அறிவுரைகள், ஆக்கவுரைகள், கல்வியின் அவசியம், உயிர்காப்பின் முக்கியத்துவம் எனப் பலப்பல கூறி, மறுநாள் இருவரும் கொழும்பு போய் லண்டனில் இருக்கும் தன் நண்பன் கிருபாவிடம் அனுப்பப் போவதாகவும், அங்கே படிக்கும் படியும் கூறினார். அப்பா வீட்டில் நிற்கும் வரை எனக்குச் சிறைதான். அதீத அன்பு காரணமாக மற்றவர்களோடு சேரவிடாமால் தன்னாதிக்கம் பண்ணுவார், பிறர் வீடு போனாலும் சரி, நம் வீட்டிலிருந் தாலும் சரி என்னை மடியிலோ, வளர்ந்த பின் பக்கத்திலோ, இருத்திக் கட்டி அணைத்தபடிதான் இருப்பார். அம்மா கூடத் தவிர்க்கப்பட்டவளாகத் தவிக்கும் போது என்மனம் அம்மாவுக்காகத் துக்கப்படும். அம்மம்மாவிடமோ சித்தி மாரிடமோ போக விடாத. பொஸஸிவ்னெஸ் மீறினால் தொடையில் ஒரு கிள்ளு. அதன் நோ போக மூன்று அல்லது நான்கு நாள் எடுக்கும். அதற்குள் எனக்கு விருப்ப மான விடயங்களைப் பற்றி நிறையக் கதைத்து அன்பு பாராட்டிச் சமாளித்து விடுவார்.

அப்படிப்பட்ட அப்பாவா இதைச் சொல்கிறார்? உடுப்பு செற் அம்மா எடுத்து வைக்க, சப்பாத்துப் பொலிஸ் அப்பா போட, கழற்றிய உடையைத் துவைத்துப்போட, அழுத்தம் செய்ய என்கிற சிறு வேலைகளைக் கூட இந்த பதினைந்து வயதுவரை என்னைச் செய்ய விடுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போட்டி போட்டுச் செய்வார்கள். உனது வேலைகளைச் செய்வதில் எமக்கொரு சந்தோசம். நெடுகவே செய்யபோறம், என்று சொல்லி அம்மா சோறும் தீத்தி விடுவா. அம்மா எப்படிச் சகிக்கப் போகிறா?

மணிவண்ணன் இல்லாத பாடசாலை எனக்கும் பிடிக்க வில்லை. என்னைக் கண்டாலே வெறுக்கும் ஓர் நோஞ்சல் பையன் இப்போது வலியவே வந்து கதைக்கிறான். வண்ணன் சொல்லிப் போயிருக்கிறான். தனக்குக் கடிதம் போடும்படியும் தான் வண்ணனுக்கும் புதினங்கள் அறிவிப்பான் என்றும், தோணி அக்கரைக்குப் போய் விட்டதெனவும் கூறினான்.

லண்டன் வந்துவிட்டேன். கிரமமாகக் கடிதம் எழுதிய அப்பையனும் இரு வருடங்களில் குடும்பத்தோடு ஷெல்லடியில் இறந்து விட்டானாம். அம்மாவும் வந்து விட்டா. நான் என் நாட்டுக்காக ஏங்கவில்லை எட்டு அடி உயரமான மதிலுக்குள்ளே இருந்த வீடும், மணல் மூட்டையும், நான் பேசித் திரிந்த அந்த மாமரமும்,. செவ்வரத்தைப் பூமரமும், கமுகு, தென்னை மரங்களும் தவிர வேறென்ன பிடிமானம் இருந்தது? எனக்காக அம்மம்மாவையும் தன் ஊரையும் பிரிந்து வந்த அம்மா ஒரு தியாகியோ? கிராமத்தில் நான் எதையும் அனுபவித்த தில்லை. அதன்மீது மண்பக்தி வரத்தக்கதாக நான் வளர்க்கப் படவில்லை. அதனால், அன்பைக் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆதிக்கப்படுத்திய அப்பாவின் மடியும் அரிகண்டமான ஒரு சிறையே. சுதந்திரப் பாடல்களையோ பேச்சுக்களையோ நான் கேட்டதில்லை. கேட்டதெல்லாம் "இந்தப் பெடியளாலை வாழேலாமல் கிடக்குது" என்பதுதான். அதனாலும் சொந்த மண் எனும் உணர்வே வந்ததில்லை.

எப்படி மூளைச்சலவை செய்யப்பட்டு வளர்க்கப் பட்டேன்? தன் மண்ணைப்பற்றிச் சிந்திக்காத சுயநலவாதியாக வாழ்ந்தேன் எப்படி எல்லாம் நான் மண்ணிலிருந்தும், அங்கு வாழும் மண்ணின் மைந்தர்களிடமிருந்தும் அந்நியப் படுத்தப்பட்டேன்? வண்ணா! உன் உலக அறிவு முதிர்ச்சி அந்த வயதில் என்னிடம் காணப்படவில்லையே. என் முதிர்ச்சி பள்ளிப்படிப்பில் மாத்திரம் இருந்தது. அன்பனே, உன் தியாக வாழ்வை எண்ணுகிறேன். தலை வணங்குகிறேன். என்மனம் உன் போன்ற மாவீரருக்காகப் பாகாய் உருகுகிறது. என் நாட்டின் சுதந்திரத்துக்காகக் குரல் கொடுக்கத்துடிக்கிறது. போராளிகளின் பல்வேறு வருத்துதல்களுக்கு உட்படும் கஷ்ட சீவியத்தை உணருகிறேன்.

முது பொறியியல்மாணிப் படிப்பில் கருவிகளுடனே பழகிப் பழகி என்மனமும் இரும்பாக மாறிவிட்டதடா? இல்லை இல்லை, நாட்டுக்குத் திரும்பிச் செல்வேன். உன் ஆசைகளை நிறைவேற்றுவேன். மெய்ப் பாதுகாவலன் எனக்குத் தேவையில்லை. நீ ஆவி ரூபத்தில் என்னைக் காப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முடிப்பது கதைசொல்லி

பிரசாந்த் சில நாட்கள் இந்த உணர்வுகளால் உந்தப் படுகிறான். ஆனால் இந்த மாற்றம் சுடலை ஞானம் தானோ? எவ்வளவு ரூபா சம்பளம் வரும் என யோசித்தான். நவீன வசதிகளுடன் கூடிய பங்களா இருக்குமா? தானி யங்கித் தண்ணீர்க்குழாய் இருக்குமா? சுரங்க ரயில் பாதையை நான்தான் நிர்மாணிக்கவேண்டுமா? எதையெ தை எல்லாம் செய்யலாம் எனச் சிந்தித்தான். ஆனால் ஈற்றில் பிரசாந்திப் பெட்டையாகிவிட்டான் போலவும்— பெட்டை என்றேனா, மன்னிக்கவும், பெண்களே களம் நடத்தி வெற்றி ஈட்டும் இந்நாட்களில் — அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது. ஆனால் பெட்டை எனும் சொல் மிருகங்களின் பெண் உயிர்களுக்குச் உபயோகப் பட்டிருக்கிறது. எனவே, பையன்கள் வைத்த பிரசாந்திப் பெட்டை தகுதியடையது போலத்தான் தெரிகிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2



## எங்களுக்கு ஒரு ஏயர் போட் வேணும்



இருமி இருமிக் கொண்டிருக் கிறார் சின்னத்தம்பி. சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டு பைப் சத்தம் ஓயும் நேரம் பார்த்து, 'பிள்ளை உங்கை என்ன செய்கிறீரப்பா' என்றார்.

தன் சேலையைக் கழுவிக் கொண்டிருந்த செல்ல முத்து 'ஒன்றும் இல்லையுங்கோ, என்ன வேணுங்கோ?' - குரல் கொடுக் கிறார். 'ஐயோ என்னாலை ஒன்றும் ஏலாது. மூச்சு வருகுதில்லை'...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்தரப்படும் கணவனைப் பார்த்துப் பதறுகிறார் முத்து. இருமினால் பரவாயில்லை. இந்த 'முட்டு' வந்தால் சத்தம் இல்லாத ஒரு இருமலும் காற்றுக்குத் தவிப்பும் பார்க்க முடியாது.

'ஆண்டவனே உடம்புக்கு முதல் தேவையான காற்றுக்கே அவதிப்படும் நோயைக் கொடுத்திட்டியே! இதைவிடக் கொடுமை வேறென்ன இருக்கு? இப்ப என்ன செய்யுறது? வென்ரலின் வாங்க வைச்சிருந்த காசையும் அவங்களட்டைத் தூக்கிக் கொடுத்திட்டயள்.' என்று கூறிக்கொண்டே ஓடிச்சென்று ஒரு கராம்பைக் கொண்டு வந்து, 'மெல்ல மெல்லப் பல்லாலை நசியுங்கோ...'

அதன் காரம் இறங்குகிறது. அக்ஸ் தைலத்தை மூக்குக்கும் நெஞ்சுக்கும் உச்சிக்கும் போடுகிறார். அரைவாசி தெரியும்படியாக யன்னல் கதவைத் திறந்து விட்டதோடு, மேசை விசிறியைத் தூக்கி வந்து இயக்கி விடுகிறார்.

கொஞ்சம் ஆறுதல் வரவே திணறித் திணறிக் கூறினார். 'இஞ்சேரும் புனிதமான விடயத்துக்குக் கொடுத்த காசைப்பற்றித் திருப்பித் திருப்பிக் கதைச்சால் புண்ணியம் கெட்டுப்போகும். மனநிறைவோடு கொடுத்தால் தான் அது சுவறும்.'

மார்க்கம் வீடொன்றின் நிலக்கீழ் வீட்டில் தம்பதியரி்ன் சீவியம் போகிறது. மேலே வந்து காற்றாட இருக்கக்கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவருக்கு சோர்வாகவும், ஏறும் போது திரும்பத் தொய்வு தாக்கத் தொடங்கி விட்டால் என்ற பயமும் அவரைத் தடுக்கிறது.

சென்ற வருடம்தான் மகன் நவீன் இவர்களை ஸ்பொன்சர் பண்ணி இங்கே அழைத்திருந்தான். நவீனும் சியாமளாவும் நல்ல கணக்காளர் பதவிகளில் இருந்தனர். இரண்டு குழந்தைகள். அவர்களின் மூத்த குழந்தை இரண்டு வயதாக இருக்கும்போதே இரண்டாவதும் பிறந்து விட்டது. வீட்டில் உதவியில்லாது இருக்க முடியா தென்றில்லை.

எட்டு வருடங்களின் முன் அவன் கனடா வரும்போது அப்பாவும் அம்மாவும் நல்ல உற்சாகமான, சுறுசுறுப்பான சோடிகளாகத்தான் இருந்தனர். தங்கள் ஆசார அனுட்டா னங்களோடு வீடுவளவு எனப் பாடுபட்டுக் கொண்டு திடகாத்திரமாக இருந்தனர். உற்சாகமும் பூரிப்பும் அவர்கள் வாழ்க்கையிலே கொஞ்சி விளையாடியது. இங்கே வந்திருக்கும் முதியவர்களில் நிலை கண்டதால் அவர்களை அழைக்க அவன் விரும்ப வில்லை. நீரிலிருந்தும் தூக்கி வெளியே போட்ட மீன் போலத் துடித்துப் போவார்கள். நடமாடும் சுதந்திரத்தை, தேவை யானவர்களுக்கு உதவி செய்யும் வாய்ப்பை, படம் - கோவில் - குளமென்று சோடியாகத் திரியும் உல்லா சத்தைக் கெடுக்க அவன் விரும்பவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊர் விட்டு ஊர் இடம் பெயர்ந்து கொண்டே யிருந்தாலும், வருகின்ற கடிதங்கள் உற்சாகமாகவும் மகிழ்ச்சி தருவனவாகவும் இருக்கும். இருவரும் மாறி மாறி எழுதுவார்கள். தங்கள் ஓய்வூதியமும், அவன் மாதாமாதம் அனுப்பும் நூறு டொலர்களும் மிச்சம் மிச்சமாகக் காணும் என்றும், சிறு தர்மங்கூடச் செய்ய முடியமெனவும் மேலதிக மாக அனுப்ப வேண்டாம்; தேவையாயின் கேட்போம் எனவும் எழுதினார்கள்.


தம்மீது அதீத பாசம் வைத்திருக்கும் மகன் கண் கலங்கக் கூடாது; பதகளிச்சு இந்தக் குண்டடி ஷெல்லடிக்குள் ஓடி வரக்கூடாது என்பதில் அந்தப் பெற்ற மனங்கள் இரண்டும் ஒன்றாகச் செயற்பட்டன.

யுத்த நிலைகளினால் அவர்கள் நன்றாகப் பாதிக்கப் பட்டு விட்டனர். ஷெல்லடிகளினால் வீட்டை விட்டு ஓடும் போது விழுந்து கால் குழைச்சில் சவ்வுப்பிரிவு ஏற்பட்ட தோடு கை ஊன்றியதால் மணிக்கட்டின் சிறிது மேலே முறிவும் ஏற்பட்டது செல்ல முத்துவுக்கு. சரியான ஓய்வில் வைத்து மாற்ற முன்னரே திரும்பவும் ஓட்டம். அதனால் நோ நிலையாகி விட்டதோடு, ஒரு பக்கம் வாங்கி வாங்கித்தான் நடக்க முடிந்தது.

சின்னத்தம்பியருக்கு எப்படி நேர்ந்ததென்பது தெரியாது. நச்சுப் புகையைச் சுவாசித்தமையாலோ என்னவோ, ஒரு இருமல். கசக்காரர் மாதிரி இருமிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கொண்டேயிருப்பார். தொய்வு மாதிரி இழுப்பும் முட்டும். யுத்த நிலைமை மக்கள் மனதையும் விசாலமாகிவிட்டது. யாரும் அவர்களுக்கு நல்ல உதவி செய்வார்கள். அரசியல் பிரிவுப் பெண் போராளிகள் சிலசமயம் சமைத்து வைத்து விட்டுப் போவார்கள்.

நிலத்தால் வரமுடியாத பேடிகள், வானத்தால் பொழியும் குண்டு மழை இவர்களை நிலைகுலைய வைத்தன. பங்கருள் போக முடியாது. வருவது வரட்டும் என தோட்டங்களுள் படுத்து இருப்பர். வானமும் எப்போது எம் கையில் வரும் என்பது தான் தமிழ் மக்களின் ஆசை.

முன்பு ஒருமுறை எவ்வளவு திட்டமிட்டுப் பலாலி எயர்போட்டில் நுழைவதற்குச் சுரங்கமமைத்தார்கள். எவ்வளவு எவ்வளவு தியாக சிந்தையோடு, எத்தனை எத்தனை தமிழ் ஈழத் தொண்டர்கள் மிக ரகசியமாக இரவு பகல் சேவையாற்றினார்கள். ஆனமான உணவும் இல்லாமல் எத்தனை கடும் உழைப்பு. அத்தனையும் காட்டிக் கொடுக்கும் கயவர் கூட்டம் விட்டு வைத்தார்களா? உந்த அரக்கர்களை நாட்டை விட்டே அடித்துத் துரத்த வேண்டும் சித்திரவதை செய்து அணுஅணுவாகச் சாகடிக்க வேணும் எனத் தம்பதிகள் பேசிக் கொள்வார்கள். எங்களுக்கொரு எயர்போட் வேணும் என்று சொல்லிக் கொள்வார்கள். அவர்களும் தமிழ்ஈழமும் படும்பாட்டை அனுபவித்தவனுக்குத் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த முதியவர்கள் ஏன் இப்படிக் கூறுகிறார்கள் என்பதுப் புரியும்.

'ஏன் நவீனின் சொந்தவீடு வாசல் காணி நிலம் எல்லாம் இராணுவம் ஆக்கிரமித்து விட்டதே. மாமா, மாமி அநாதைகள் மாதிரித்தானே ஊரெல்லாம் அலையினம்? இங்கே கூப்பிடுங்கோவன். என்னைச் சந்திக்கிற ஊராட்கள் அவையளைக் கூப்பிடயில்லையோ என்று கேட்கினம். மருமோளுக்கு இஷ்டமில்லையாக்கும் எனச் சனம் கதைக்கப்போகுது. எனப் பயமாயிருக்கு.' சியாமளா அனுங்கத் துவங்கினாள்.

'என்ன செய்வது சியா? அவர்களால் விரும்பக்கூடிய ஒரு ஓய்வுகால வாழ்வை என்னால் அமைத்துக் கொடுக்கவும் முடியாது. காசைக் கொடுத்தாலும் உதவிக்கு வேலைக்காரரை இங்கே வைக்கவும் முடியாது. எழுதிப் பார்ப்போம்.'

ஒருவர் போய் மற்றவர் இருந்தால் என்ன செய்வது எனச் சமீபகாலமாக அவர்களுக்கும் ஒரு ஏக்கம். கனடாவில் நல்ல வைத்தியமும் செய்விக்கலாமாம். அவர்கள் உடனேயே வந்து விட்டனர்.

எயர்போட்டில் சக்கரவண்டியில் தள்ளி வந்த பணிப்பெண் சமீபத்திலே வந்து, 'நீங்கள்தான் நவீனா?' என்ற போது தந்தையையும் தாயையும் எட்டியெட்டிப் பார்த்துக் கொண்டிருந்த நவீன் திடுக்குற்றுவிட்டான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சூட்கேசுகளை வண்டியில் தள்ளிக்கொண்டு விந்தி விந்தி வந்த தாயையும் பார்த்து உணர்ச்சி வசப்பட்டு, 'அப்பா அம்மா இது என்ன கோலம்' என அலறி விட்டான். எப்படி இந்தக் கிழட்டுத்தனம் வந்தது?

'ஐயையோ இவர்கள் எப்படிப் பிள்ளைகளைப் பார்ப்பார்கள்? பொறுத்த முதலாகிவிட்டது. போட்டோவில் பார்த்த ஸ்மார்ட்னஸ் இல்லையே.' ஏமாற்றத்துடன் நினைத்துக் கொண்டாள் சியா.

மாடியில் ஒரு அறை இவர்களுக்காக ஒதுக்கப் பட்டிருந்தது. மற்றது குழந்தைகளுடையது. அடுத்தது நவீன் சியாமளாவுடையது. குளியலறை கால் கழுவுகி றோம், உடுப்பு அலம்புகிறோம் என ஈரமாக்கப் பட்டபடியும் புளித்து மணப்பதான பிரமையும் இரவு நேரத்து இருமல் திறந்த கதவூடாக குழந்தைகளை விழிப்படையச் செய்த தோடு சின்னத்தம்பதியருக்கும் சிவராத்திரிதான். குழந்தைகளுக்கு இவர்களால் பழக்கப்பட்ட உணவு களைத் தயாரிப்பதும் சிரமம். நின்றபடி சமையல் செய்வது முத்துவுக்குச் சிரமம். அத்தோடு ஊர்ந்து துடிக்கும் குழந்தைகளை ஓடிப் பிடிக்க முத்துவால் முடியவில்லை. அவருக்கு அசைந்தாலே இருமலும் இழுப்பும் வந்துவிடும்.

சிறிது நாட்களில் நிலக்கீழ் வீடு அவர்கள் வாசஸ்தல மாயிற்று. குழந்தைகள் பழையபடி பராமரிப்பு நிலையங் களுக்குச் சென்றனர். செல்லமுத்து மாத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வகை வகையாகச் சமைத்து மகனுக்குப் பிடிக்கும் அப்பம் தோசை பிட்டுச் செய்து மேலே கொண்டு போய் குளிர் பெட்டியில் வைத்து விடுவார். நவீன் காபேஜ் எடுத்துப் போவான். இவர்களை டாக்டர் வீட்டுக்கு அழைத்துச் செல்லவும் நேரமில்லாமல் போய் விடும். திருத்திய மைக்கவோ திருப்பியமைக்கவோ முடியாத வாழ்க்கை முறை. ஆயினும் தனி ரெலிபோன், இருபத்திநான்கு மணி நேர றேடியோ கசற் பிளேயர் ஆகியனவும் இருந்து சமைக்கக் கூடிய பிளக் உள்ள பாத்திரங்கள் ஆகிய வசதிகளையும் அவன் செய்திருந்தான்.

ஆயினும் 'அம்மா இன்று எனக்கு ஒரு கூட்டம். சியாவும் பிள்ளைகளை எடுத்து வரப் போக வேணும். கோடைகாலம் தானே? நீங்கள் ராக்ஸி பிடித்துப் போய் அப்படியே மருந்தும் வாங்கி வாருங்கோ' என நூறு டொலரைக் கொடுத்துப் போனான்.

'பேப்பரிலே போட்டுக் கிடந்தது. காசு சேர்க்கினம் என்று... காசைக் காண அந்த நினைப்பு வந்தது. போய் மருந்தை வாங்காமல் வந்து காசைக் குடுப்பம்.'

'ஓமுங்கோ. எங்கடை சனம் வானத்தைப் பார்த்துப் பார்த்தே அணு அணுவாய் சாகுதுகள். ஆகாயத்தைப் பிடிக்கவேணும். ஒரு எயர் போட் வேணும்.'

அவர்கள் டாக்டரிடம் போய் மருந்துத் துண்டோடு வருகிறார்கள். போன் பண்ணி இளைஞர்களை அழைக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றார்கள். ஐம்பது டொலர் தான் இருக்கு கொடுப்பதற்கு. பரவாயில்லை. தம்பி, செந்தில் இது தான் இருக்கு. குண்டு போட வாற விமானங்களைச் சுட்டுத் தள்ள வேண்டும். எமக்கொரு எயர்போட் வேணும்.'

அவன் கண்களில் ஈரம்.

'பெரியவரே, இதே பெரிது. சிறு துளி பெரு வெள்ளம். உங்கள் ஆசியால் இதுவும் சாத்தியமாகும். நன்றி ஐயா. நன்றியம்மா. மகனட்டைத்தான் ஏச்சு வாங்கப் போறியள்.' போய் விட்டார்கள்.

தம் மகனுக்கு இயக்கங்களுக்குக் காசு கொடுப்பது அவ்வளவு விருப்பமில்லை. ஆனால் அல்லலுறும் தம் உறவினர்களுக்குத் தாராளமாக அனுப்புவான்.

இரண்டு நாளில் பழைய வென்ரலின் முடிந்து விட்டது. 'இருமல் முட்டு மோசமாயிருக்கிறது இன்று.

முத்து அப்ப என்ன செய்ய?'

'பொறுங்கோ வாறன் கைம்மருந்து தாறன். சரிவரா விட்டால் மருந்தெடுத்தும் நிற்குதில்லை என்று தம்பிக்குச் சொல்லி இன்னொருக்கால் போவம். மருந்துத் துண்டு என்னிடம்தானே இருக்கிறது.'

ஓடி ஓடி இஞ்சிசாறு அரை கிளாஸ் எடுத்து நாலு மேசைக்கரண்டி தேன் விட்டுக் கலக்கிக் குடிக்கக் கொடுக்கிறார். தேயிலைச் சாயத்தில் தோய்த்த கைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துண்டினால் முகத்தைத் துடைத்து விடுகிறார். மீண்டும் தைலத்தை மூக்கு உச்சி நெஞ்சு எனப் பூசுகிறார். விசிறி யைப் பக்கம் பார்த்து வைக்கிறார். இந்தப் பணி விடை களில் இருமலும் அடங்கி மெல்லக் கண்ணயர்கிறார் சின்னத்தம்பி. அவர் கண்முன் பலாலி எயர்போட்டில் தம்பதியராக அரச உடுப்புக்களோடு இறங்குவது போலவும் தமிழ்ஈழ இராணுவம் ஒரு பக்கம் ஆண்களும் மறுபக்கம் பெண்களுமாக இராணுவ மரியாதை தந்து சல்யூட் அடிப்பதாகவும் ஒரு பிரமை. அவர் வாய் முணு முணுக்கிறது.


'ஆம் எமக்கொரு ஏயர்போட் வேணும்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3

## புத்தகங்கள் புகட்டாத புத்திமதிகள்



**வா**னம் சூரிய ஒளியில் மென்மையான வெளுப்பைப் பூமிக்கு தந்து கொண்டிருக்கிறது. சூரியன் நடுவானில் தன் களையிழந்து காணப்படுகிறான். வெறும் பௌதீகக் கண்களால் ஆதவனைப் பார்க்க முடிவதனாற் போலும், இந்நாட்டவர் நம்நாட்டவரைப் போலப் படபட வெனக் கண்களை இமைப்பதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழி புவனாவின் நியாயமான சந்தேகம் இராசாத்தியின் உள்ளத்தில் சிரிப்பலையாகப் புறப்படுகிறது. இந்நாடுகளில் வாழ்பவர்களைக் கண்டவர் யாரோதான், தேவர்களுக்கு வரைவிலக்கணம் வகுத்தார்களோ! பொன்னிற மேனி, இமைக்காத கண்கள், நிலத்தில் படாத கால்கள் (பூட்ஸ் அணிவதால்), வாடாத மாலைகள் (பூக்கள்), வெள்ளிப் பனிபடர் பிரதேசம். இதுதான் தேவலோகமோ இன்றும் காமதேனுக்களும் கற்பக தருக்களும் அகதி களைத் தாங்கி நிற்கின்றனவோ?

அவளுக்கு திடீர் திடீரென இப்படித்தான் தத்துவ விசாரணை தொடங்கிவிடும். இராசாத்தி நூல் நிலையம் போகப் புறப்படுகிறாள். பனி, மழையில்லை. வெய்யிலைக் கண்ட சந்தோஷம். சிறிது தூரம் நடக்க முன்னரே சில்லென்ற குளிர் காற்று. கை, கால்கள் குளிரால் விறைக் கின்றன. வெளியே போகும்போது தொலைக் காட்சியில் சுவாத்திய நிலையைப் பார்த்து ஏற்ற உடையணிந்து போங்கள்......என்ற புத்திமதியைக் கவனிக்காது புறப்பட்ட மடமை. கிறீன்வூட் நிலையத்தில் இறங்குகிறாள்.

பச்சைக்காடு - மொழிபெயர்ப்பு ஒரு நகைச் சுவையை எழுப்புகின்றது. "புறாப் பொறுக்கி", "பூநாறியடி" என்பன அநாகரீகமாகப் பட்டது அவளுக்கு அங்கே. இங்கேயோ பைன்காடு, கீழ்காணி, அகலக்காட்சி.

தன்னுள் தானே சுருங்கிக் கொள்கிறாள் இராசாத்தி. எப்போதும் எதையும் ஊரோடு ஒப்பிட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பார்த்து நம்நாடும் இதற்குச் சமம்தான், இதிலும் மேலானதுதான் என்று ஏன் தோன்றுகிறது?

"இராசாத்தியே?" தமிழ்க்குரல் கேட்கிறது. கோட்டும் சூட்டும் தொப்பியும் பொட்டும் அடையாளம் புரியவில்லை.

"எப்ப வந்த நீங்கள்?" குரல் கிட்டே நகர்ந்த போது...

அன்னலட்சுமி!

மகிழ்ச்சிப் பிரவாகம், இறுகிப் போன முகநரம்புகளுக்குச் சூடேற்றுகிறது. என் தாய் நாடே, தமிழ் ஈழமே முன் நிற்பதான பிரமை. அன்னலட்சுமி அவளுடன் சிறு வயதில் படித்து, இறுதிவரை சிநேகிதியாகவே இருந்த உள்ளூர்த் தோழி. ஒருவகையில் உறவுமாகலாம். வாழ்க்கைப் படியில் சிறிது தாழ்ந்திருந்தாலும், படிப்பை நிறுத்தி விட்டாலும், பொய்மையற்ற நட்பும் வெளிப் படையான பேச்சும் இராசாத்தியின் நட்பில் நிலைத்து விட்டவை. அன்னலட்சுமியோ இராசாத்திமீது தேவதா விசுவாசம். "வந்து மூன்று மாதமாகிறது" கைகளைப் பற்றுகிறாள்.

"குளிருக்கு நல்ல உடுப்பு போடவேண்டும். ஸ்வெற்றர் மட்டும் காணாது. காதையும் மூட வேணும். நாரிப்பிடிப்பு வாதம் வரப்பாக்கும்" அசட்டுத்தனத்தோடு சிரிக்கிறாள் இராசாத்தி.

அங்கெல்லாம் பாடசாலையை எட்டிப் பார்க்காதவர்கள்கூட இங்கே ஊருலகம் அடியுண்டு நல்ல அனுபவக் கல்வி பெற்றவர்களாக விளங்குகிறார்களே. தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்சி போன்ற தொடர்புச் சாதனங்களும், பொதுக் கல்வியும் பிரயாணங்களும் மக்களை அறிவுடையவர் களாக்குகிறதோ? அன்னலட்சுமி வழக்கம் போலவே வெகுளியாக வார்த்தைகளை உதிர்க்கிறாள்.

"என்ன? வருகுது வரமுந்தி கனேடியனாகிறியள். பொட்டு வைக்காமல் முகம் செத்துப் போய்க்கிடக்கு. நல்லாய் வாடி வதங்கி கழுத்தெலும்பெல்லாம் தெரியுது."

உலகத்தின் சோகமெல்லாம் முகத்தில் திரள "நான் அந்தத் தகுதியை இழந்திட்டன்."

ஸ்டேஷன் என்றும் பாராமல் அவள் கையைப் பிடித்து விட்டாள். எங்கே தோள் மீதும் கைபோட்டு ஒப்பாரி வைத்து விடுவாளோ என்று பயந்து போய் இராசாத்தி தன்னைச் சுதாரித்துக் கொள்கிறாள். புகையிரதங்கள் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கின்றன. அன்னலட்சுமி கனடா வந்து ஒருவருடமாகிறது. அந்த ஒரு வருடமும் இராசாத்தி, இராசாத்தியாய் இருந்தாலல்லவோ ஒவ்வொருவரைப் பற்றியும் விசாரித்து அறிய.

ஜுன் மாதம் 1990ம் ஆண்டு 11ந் திகதி, துறை முகத்திலிருந்து கண்போட் அடிக்கத் தொடங்கிவிட்டது. ஹெலி ஒருபுறம், ஷெல் அடி மறுபுறம். வீடுகளிலும் பாதை களிலும் முழக்கமும் இடியுமாக இறங்குகிறது. சுதாகரித்து ஊர்மக்கள் கலைந்து ஓடுகிறார்கள். அந்தப் பயங்கர இரவு இன்று வரை அவள் வரையில் இருண்டு போய் கிடக்கிறது.

"அன்றைக்கு இரவு நாங்கள் ஓடிய ஓட்டத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரை ஆர் கவனிச்சது? நீ வருத்தக்காரனை வைத்துக் கொண்டு என்னபாடு படுகிறாயோ என்று நினைச்சனான் தான். சின்னவளைத் தகப்பன் கொண்டு போறார் என்று நான் ஆச்சியைப் பிடிச்சுக் கூட்டிப் போனன். அவரோ சின்னவள் என்னோடு வருவாள்தானே என்று அடுத்த வீட்டு அப்புக் குட்டிக் கிழவனைச் சைக்கிளிலை கொண்டு போட்டார். விடிஞ்சாப் போலதான் ஆளையாள் கண்டு பிடிச்சால் அவளைக் காணவில்லை.

"துர்க்கையம்மனிலை இல்லை. தலையிட்டி வைர கோயிலுக்கு ஓடினம். பெரியாச்சி நல்ல பேச்சு.

"என்ன காலுக்கையும் கையுக்கையும் கிடந்து இழுபடுதோ கவனிக்காமல் வர. பெரியவன் வெளி நாட்டிலை, பெரியவளும் போக்கத்தவள் போட்டாள். இந்தக் குழந்தை உனக்கு பாரமாய்ப் போச்சோ?

"அவ ஓடி வரயுக்கை இவ அம்மா அம்மா என்று கத்திக் கேட்டுதாம். ஷெல் விழுந்து எனக்கேதுமோ என்று ஓடிப்போய் பார்க்க இவளாம். பிள்ளையை கூட்டி வந்திட்டா. என்ன ஓட ஓட முன்னாலும்விழுகுது பின்னாலும் விழுகுது வாணவேடிக்கை மாதிரி. ஒளிக் கீறுகளாய் ஓடுற சனத்துக்கு ஹெலியன் பிப்ரிகலிபராலை அடி."

அன்னலட்சுமி சொல்லிக்கொண்டே போகிறாள்.

அந்தக் கொடிய இரவின் பிடியில் இராசாத்தி....

ஊர்மக்கள் அல்லோல கல்லோலப்பட்டு உடுத்த உடுப்போடு ஓடுகிறார்கள். யாரை உதவி கேட்பது? யார்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிரைப் கையிலை பிடிச்சு உதவி செய்வார்கள்?

குமரகுருவின் குரலும் மனைவியின் பதிலும் வீட்டுள் கேட்கிறது.

"இராசாத்தியவை என்ன செய்யினமோ பார்க் கட்டே?"

"அவை இவ்வளவுக்கும் ஓடாமக் கிடக்கே? நீங்கள் ஓடுங்கோ ஓடுங்கோ" நாங்கள் நிற்கிறோம் எனக் கூறுவதற்குப் பூட்டிய கதவைத் திறந்து வெளியே வரப் பயம். எங்கே துவக்கு சன்னங்கள் வீட்டுள் பாய்ந்து விடுமோ என்று அதிர்வெடிச் சத்தங்களைத் தாங்க இயலாது இதயம் வேகமாகத் துடிக்கிறது. அயலட்டை வீடுகள் நொருங்கும் சப்தம். சுவர் மூலைகளில் பாதுகாப்பு தேடுகிறார்கள். மக்களோடு சேர்ந்து ஓடும்படி மகளைக் கெஞ்சுகிறாள் இராசாத்தி. இருவரையுமே ஓடும் படியும் தான் பத்திரமாக இருப்பதாகவும் சொல்கிறார் தகப்பன்.

"ஆகாயத்திலும் கடலிலும் ஒளிஞ்சு நின்று கொண்டு நாங்கள் பிறந்து வளர்ந்த ஊரை விட்டுக் கலைக்கிற இவங்களுக்குப் பயந்து கொண்டு ஓட முடியுமோ? நீங்கள் ஓடுகில் ஓடுங்கோ. நான் இங்கேயே இருந்து எனது கையாலாகாத்தனத்தை நினைச்சுக் கொண்டு சாகிறன்."

மகளின் பிடிவாதத்தைச் சகிப்பாளா? தகப்பனின் தியாகவார்த்தையைக் கேட்பாளா? சத்யசாயிபாபாவே கண்கண்ட தெய்வமே என்ற ஓயாத அழைப்பு புட்டபர்த் திக்கே கேட்டிருக்கும். மெல்ல விடிகிறது. அடிகுறைகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியே பூரண நிசப்தம். ஆளரவம் இல்லை. மக்களே இல்லாத ஊரில் யாராவது தனியே இருந்து அனுபவம் உண்டா? அந்தோ, றொபின்சன் குருசோ! நீ பாவிதான்.

"மகள், இப்ப சைக்கிளிலே போங்கோ. துர்க்கை அம்மன் கோவிலடியில்தான் சனம் நிற்கும். சித்தப்பாவைத் தேடிப்பிடிச்சு அனுப்பிவிடு அப்பாவைக் கூட்டிவர."

சிறிது நேரத்தில் முகமெல்லாம் பயங்கரமாக ஓடிவருகிறாள் மகள்.

"தெருவிலை சனமெல்லாம் செத்துக் கிடக்கு. லிங்கண்ணாவின் சேட்டைப் பார்த்தபின்... சைக்கிள் எல்லாம் நொருங்கி தலை தனியாகக் கடைப் படியிலை கிடக்குது. நான் திரும்பிற்றன். பயமாய்க் கிடக்கு. ஒரு வாகனமோ ஈ காக்காகூட இல்லை."

ஓடிப் போனவர்கள் அகப்பட்டிருக்கிறார்கள் பகவானே!

"பரவாயில்லையம்மா. மக்கள் இல்லாத ஊரில் இருக்க முடியுமா? சனங்களைக் கலைச்சுப் போட்டுதானே, ஆக்கிரமிக்க ஆமி வாறவன். நாங்கள்தான் வயது போனவர்கள் உன்னை நாராய்க் கிழிக்கப் போறான்கள். எங்களுக்கு முன்னாலேயே போபோ. றயில் பாதை ஒழுங்கை வழியாக ஓடு. சித்தப்பாவை அனுப்பு. நீ திரும்பி வராதை?"

நகைகள், சில உடுப்புகள் அடங்கிய சிறு பெட்டியுடன் திரும்பிப் பார்த்துப் பார்த்துப் போகிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனியே அனுப்பப் பயமாக இருந்தாலும் சுதந்திர வேட்கையின் பின் பெண்கள் வன்முறை அங்கே நடப்பதில்லை. மனித நேயம் கூர்மை அடைந்திருந்தது. இராசாத்தி சமாதானமானாள்.

மைத்துனருடன் கோவில் சென்றபோது மக்கள் வெள்ளம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது. நிர்வாகியான பெண்மணி அவர்களுக்கு ஆதரவு தந்து "உங்கடை மகள் வந்து ஒரு பெட்டியைத் தந்தவ. நீங்கள் வந்து கொண்டிருக்கிறீர்கள் என்று அப்பாவுக்கு ஒரு இடம் ஒதுக்கித் தரும்படி..." அழைத்துச் செல்கிறா.

கண்ணீர் பெருகுகிறது, விடுப்புப் பார்ப்பார் இங்கே இல்லை. நல்ல காலம். துடைத்து விடுகிறாள் அன்னலட்சுமி கூர்ந்து பார்க்கிறாள் அவளை. "சும்மா அழாதையுங்கோ. இவ்வளவு படிச்சு என்ன பிரயோசனம்? எல்லாருக்கும் புத்தி சொல்லுற நீங்கள். பூவும் பிஞ்சுமாய் அள்ளிக் கொடுத்தவையும், உயிரோடை பறிகொடுத்தவையும் சந்தோஷமாய் வாழயில்லையே? பூரணமாய் வாழ்ந்திட்டியள். இவ்வளவிலை போனது அவருக்கும் நல்லது உங்களுக்கும் நல்லது."

இராசாத்தியின் வாயில் துடித்துக் கொண்டிருக்கிறது ஒரு கேள்வி. கேட்கவோ பயம். "ஊரிலை என்ன கிடக்கு எங்களுக்கு? இந்த ஒரு பரப்பு காணியும், ஷெல் இடிச்ச வீடும் தானே? அதே ஓட்டமாய் கொழும்பு வந்தம். தம்பியோடை கதைச்சம். அவன் கடன் எடுத்து 30,000 அனுப்பிவிட்டான். (இராசாத்தியின் மனம் ஒரு கோடி எனக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணக்குப் போடுகிறது). ஸ்பொன்ஸர் என்றால் நாள் எடுக்கும். உடனேயே வந்திட்டம்."

"கவிதாவின் செய்தியும் அடிக்கடி வருகிறது. யாராவது எழுதுவார்கள்..." அப்பாடா விடை கிடைத்து விட்டது.

"இராசாத்தி, அன்றைக்கு நான் உன்னைத் திட்டித் தீர்த்ததுதான் அடிக்கடி நினைவில் வந்து கவலைப் படுத்தும். இளம் பிள்ளைகளின் சிந்தனை சுயநலமற்றது. அதன் காரணகாரியத் தொடர்பைக் கற்பிக்க முடியுமோ? எங்கள் மனதைப் பயிற்றிக் கொள்ள வேண்டியதுதான். கனடாவிலை நாலு வருடமாய் தம்பி இருந்தபோது பிரிஞ்சிருக்கவில்லையே? அப்படித்தான் என்று தேற்றிக் கொண்டேன். இப்ப நல்ல நிலையில் இருக்கிறாளாம். போட்டோ வந்தது. நல்ல கம்பீரம், அழகு. அவரவர் தமது வாழ்க்கையை நிர்ணயித்துக் கொள்ளட்டும்."

அன்ன லட்சுமி தேற்றங் கொண்டு விட்டாளா? அப்படியானால் இவள் கற்க வேண்டிய பாடம் நிறைய இருக்கிறது.

நினைவில்.....

பச்சை *வானைக்* கண்டால் ஹெலிக்கு ஹிஸ்ரீறியா வாறது வழக்கம். அன்று ஒருநாள் காலை ஹெலி அப்படி அடிக்கத் தொடங்கியதும் *வானில்* இருந்த பெண்கள் இறங்கி ஓடியிருக்கிறார்கள். இராசாத்தியின் கண் முன்னாலேயே ஒருத்தி செத்துப்போக இரு பெண்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காயம் பட்டு விட்டார்கள். அது அவள் உள்ளத்தில் பதிந்து உறைந்து வேதனை தருகிறது. அன்று மாலை பெண்கள் ஆய்வு வட்டத்தில் அவள் பேசுவதாக இருந்தது. சுயமாக இயங்கும் பெண்கள் விழிப்புச் சங்கங்களில் இதுவும் ஒன்று. சவால்களை எதிர்கொள்ளும் தைரியத்தை ஊட்டும் வழி வகைகளை பிரச்சாரம் செய்வது இராசாத்தியின் வேலை. தமிழ்ப் புலவர்களின் கவிதைகள் எல்லாம் காலத்துக் கேற்றவாறு பொருள் கொள்ளப்பட்டு சான்றுகளாகி வருவது போல இவளும் பாரதியின்,

*"காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடலாம்*

*காதற் பெண்கள் கடைக் கண் பணியிலே"*

எனும் பாடலின் பின்பாதியை மறைத்து விளக்கம் தருகிறாள்.

"கடைக் கண்ணால்தன்னிலும் ஒரு பணியின் மீது பெண்கள் காதல் கொண்டு விட்டார்களானால், அவர்கள் ஆகாயத்திலே ஏறி விண்ணையும் வெற்றி கொள்ளலாம்; அதாவது விமான ஓட்டிகளாகப் பயிற்சி பெற்று எமது எதிரி களை முறியடிக்க முடியும் என விளக்கம் தருகிறாள். இது அரசியற் சிந்தனையல்ல, சமூக சிந்தனை. பெண்களைக் காப்பாற்றும் வழி என்ற ரீதியில் ஓடியது பேச்சு. எந்த வேலையும் பெண்களால் செய்ய முடியும் எனும் விருப்பினை முன்மொழிந்தது, இது திரண்டிருந்த கூட்டத்தின் உள்ளத்தில் ஆழப்புதைந்து வீட்டுக்கு வீடு ஒலிபரப்பப் பட்டு விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறுநாள் மாலை அவள் வீட்டில் இருக்கிறாள். தலை விரித்த படி அன்னலட்சுமி ஓடி வருகிறாள். முற்றத்திலே வீழ்ந்து மண்ணில் உருண்டு,"அள்ளி வைச்சிட்டியே எனக்கு அள்ளி வைச்சிட்டியே" என அழுதாள்.

"என்ன?"

ஒன்றும் புரியவில்லை அவளுக்கு.

"ஒன்றும் தெரியாத மாதிரி நடிக்காதை என்ரை பிள்ளையைத் தா. ஐயோ தா தா."


காலை பாடசாலை போன பத்தொன்பது வயது மகள் வீடு திரும்பவில்லையாம். புத்தகங்களையும் நகைகளையும் யாரோ கொண்டு வந்து படியில் வைத்து விட்டுப் போய் விட்டார்களாம். மேலே ஒரு துண்டில் "தமிழ் ஈழம் காணப்போறேன். தேடி வரவேண்டாம்" என்றிருந்ததாம்.

அதிர்ந்து விட்டாள் இராசாத்தி. தனது மகளின் தோழி. கட்டாயம் மருந்துவக் கல்லூரிக்குப் போகக் கூடியவள். இவளின் தூண்டுதலால்தான் நகரப் பாடசாலைக்கு படிக்கப் போனவள். எத்தனை கெட்டிக்காரி? அப்பாடசாலை கோட்டையிலிருந்து புறப்படும் ஷெல்லினால் அடிக்கடி தாக்கப்படுவதுண்டு.

இத்தகைய மனமாற்றங்களுக்கு எத்தனையோ காரணகாரியத் தொடர்புகள், சந்தர்ப்ப சூழ்நிலைகள், செல்வாக்குகள், ஆழமான சிந்தனை முதலியன இருக்கலாம். ஆனால் அன்னலட்சுமிக்குத் தெரிந்தது இவளின் பெண்கள் எழுச்சிப் பேச்சுத்தான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அன்னலட்சுமி இன்றைக்குச் சொல்கிறன் கேள். அன்றைக்கும் சரி இன்றைக்கும் சரி, பெண்கள் கலியாணம் செய்து நிறையப் பிள்ளைகளைப் பெற்று இனத்தைப் பெருக்க வேண்டும் என்பதுதான் என் முதல் விருப்பம்."

"மன்னிச்சிடுங்கோ, இப்ப பார்க்க, யாராவது தேவை தானே? எல்லாரும் பிள்ளைகளைப் பூட்டி வைச்சுக் கொண்டு "ஈழம் கொண்டு வா" என்றால் ஆர் தாறது? எதையும் எலும்பில்லாத நாக்கால் கதைக்கலாம். ஆள் வலுவைப் பிறநாடுகள் தருமோ?"

கவிதா இப்ப பெரிய பதவியிலை இருக்கிறாளாம். நல்ல சாதனைகள் செய்கிறாளாம். எனக்குப் பெருமை தான்.

ஏன் அவள் கமலம், இப்படி நடந்திடும் என்று கடன் பட்டுத் தன்ரை மகனை இஞ்சை அனுப்பி விட்டாள். வந்து ஆறு மாதம் ஆகயில்லை. ஏதோ அடிபிடிக்குள் அகப்பட்டு இறந்திட்டான்.

"எப்படி? பிள்ளைகள் என்ன செய்கினம்?"

அதிலும் பார்க்க இது பரவாயில்லை.

எந்தக் கேள்வி வந்திடுமோ என்று பயப்பிட்டாளோ அது வந்து கொண்டிருக்கிறது.

"என்ன பேசாமல்... இளையவள் மெடிக்கலுக்கு எடுபட்டவளல்லே, நல்லாய் படிக்க வை ."

"அங்கை விட்டிட்டு வந்திட்டன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அதுவும் நல்லதுதான். படிச்சு முடிச்சு ஒரு கடதாசி யோடை வந்தால்தான் இஞ்சை செல்வாக்கு. எந்த யூனி வேசிற்றியிலை? யாழ்ப்பாணமோ கொழும்போ?"

"ஊரைவிட்டு ஓடி வந்த அன்று திரும்பி வராதை என்று சொல்லி அனுப்பிவிட்டன். அதுதான் கடைசியாகக் கண்டது. அவளும் அங்கை போய்விட்டாள்."

அன்னலட்சுமியும் அதிர்ந்து விட்டாள். நடக்கக் கூடாதது நடந்து விட்ட மாதிரி அவள் முகம் போன போக்கு!

இரக்கமான அந்தப் பார்வை சுதாரித்துக் கொண்டு பொங்கி வழியும் கண்ணீரைத் துடைத்து விடுகிறாள்.

"நல்ல ஒழுக்கமாக வளர்ந்த பிள்ளை. இப்படியே? கவலைப் படாதீங்கோ. அதுகள் சோத்துக்குப் படிக்க வில்லை. சிந்திக்கப் படிச்சதுகள். உலக அறிவும் கூட... எத்தனை புத்தகங்களைப் படிச்சுத் தள்ளினதுகள். பாடப் புத்தகத்தைப் படியுங்கோ என்றால் ரீச்சர் சொல்லித் தந்த போதே மனதிலை பதிச்சிட்டம். வீட்டிலை படிக்கத் தேவையில்லை என்றதுகள். அதுகளுக்கு இலட்சியம் என்று ஒன்றைப் பிடித்தால் மற்றதெல்லாம் இரண்டாம் பட்சம் தான். வயதும் அது. தாமாக ஏற்றுப் போனவர்கள் நாமாகக் கண்ணீர் வடித்தால் அது துர்ச்சகுனம். கண்ணீரைக் கொட்டாது நன்றாக வாழவேண்டும் எனக் கும்பிட வேண்டும்."

அதிகம் படிக்காத அன்னலட்சுமி தனது அனுபவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஞானத்தால் ஆசிரியை இராசாத்திக்கு ஆசிரியை ஆகிறாள்.


இதுவரை... புத்தகங்கள் புகட்டாத புத்திமதிகளை.. அறிவுக்கும் அப்பால் சில அர்த்தங்களை இலகுவாகவே அவளால் போதிக்க முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4

## உள்ளக் கமலமடி



"என்ன ஒரு மாதிரி இருக்கிறீர்? வாசலுக்கு ஓடி வாற வஞ்சிக்கொடி வாடி வதங்கிக் கிடப்பதேனோ?" என்று செல்ல மாக வசுவின் முகத்தைத் திருப்புகிறான் சங்கர்.

"என்ன செய்கிறது? நான் அமாவாசைதான். கறுப்பாய் பிறந்தது என் குற்றமே? நான் உங்களுக்கு ஏற்றவள் இல்லைத்தான்" என்றாள் வசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஏது திடீர் ஞான உதயம் பிறக்கிறது? ஏதோ உள் மனதிற்குள் கிடக்குது... எண்டைக்கு உம்மடை கழுத்திலை தாலி கட்டினனோ அன்றைக்கிருந்து உன்னையே ரதி யென்று..." என்று கீழ் ஸ்தாயியில் பாடி, "அது சரி ஆனை கறுத்தாலும் ஆயிரம் பொன் என்பினம்" என முடித்தான்.

அவன் பாட்டோடு சிறிது மலர்ந்த முகம் திடீரென கறுக்கிறது. கூடவே விம்மல் புறப்படுகிறது. "ஓம் ஒரு லட்சம் பொன்னல்லே!"

தவறை உணர்ந்து நாக்கைக் கடிக்கிறான் அவன். பச்சாதாபம் பெருக அவளை அணைத்து ஆசுவாசப் படுத்துகிறான். ஆயிரம் மன்னிப்புக் கேட்டு முகத்தோடு முகம் வைத்து உள்ளம் உருகப் புறப்பட்ட கண்ணீர்த் திவலைகள் அவள் கண்ணீரோடு கலக்கின்றது. அதனை உணர்ந்து திடுக்கிட்ட வசுவுக்கு இப்பொழுது அவனைத் தேற்றும் நிலை. கூடவே கணவனிடம் எதுவும் மறைக்காத தன்மை.

சங்கர் வசுமதியை விவாகம் செய்து ஆறு மாதங்கள் ஆகின்றன. கல்வியும் வீடும் பணமும் சேர்ந்திருந்த வசுமதிக்கு சங்கருடைய சாதகம் மிகச் சிறப்பாக பொருந்தி இருந்தது. பெண் கறுப்பு. அழகில்லை என்பதாலும், தமக்கு மீறிய அந்தஸ்த்து என்பதாலும் சங்கர் அதனைத் தட்டிக் கழித்து வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனால் அவனால் குருவின் ஸ்தானத்தில் வைத்துப் பார்க்கும் ஆசிரியர் கனா என்னும் கனகசபை. அவள் வீட்டாரின் குடும்ப நண்பர். அவர் சங்கரைச் சந்தித்து "நிறத்திலே என்னடா கிடக்குது? குணத்திலை தங்கப் பவுன். பாவங்கள் குடிகொள்ளாத உள்ளம். உனக்கு ஏற்றவள் அவள்தான். ஒரு வாத்திக்குத்தான் பிள்ளைகளின் உளவியற் பாங்குகள் தெரியும். என்னை நம்பி செய். இந்தக் கனகரை உள்ளளவும் நன்றியோடு நினைப்பாய்..." என்று அழுத்தமாகக்கூறி விட்டார்.

இதைவிட தாயின் கடிதம் அடிக்கடி வந்து அவனை தொந்தரவு செய்தபடி. ஒரு பக்கம் முழுவதும் அவனைக் காணாத கண்களின் தவிப்பு; அவன் குரல் கேளாத காது களின் வெறுமை; அவன் அங்கே இருந்த காலத்திலே செய்த குறும்புகளின் நினைவில் மகிழ்வு; அவன் உடல் நலனில் அக்கறை; இவை பற்றிப் படர்ந்திருக்கும். அது வெறும் நடிப்போ என எண்ணும் வகையில் அவனது அனுபவங்கள் இருக்கும்.


அங்கே இருந்தவரை அவனை அவளுக்கு கண்ணிலே காட்ட ஏலாது.

"பனையால் விழுவானே, மூதேவி ஏனெடா அங்கே மசமசவென்று நிற்கிறாய். பூங்கன்றுகளுக்கு தண்ணீர் வாரன். குத்தியனுக்கு அவிச்சுப் போட்டுக் கட்டாது."

"பாராடா ஒரே மாதத்தில் உன்னோடை பிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சேகரை - வகுப்பிலை அவன் முதலாம் பிள்ளை. நீயோ ஊருலகம் எல்லாம் தொண்டு தொழும்பு செய்து நக்கி வாய் நனைச்சு நல்ல பிள்ளை பட்டம் கேட்க மட்டும் தெரிஞ்சிருக்கு."

இவைதான் நினைவில். வீட்டிலும் எல்லோருக்கும் எடுபிடி சங்கர்தான். புத்தகத்தைக் கையில் எடுத்தாலே "சங்கர் சங்கர்" எண்ட கூப்பாடுதான். அண்ணன் அக்கா அப்பா தங்கைகள் எல்லார் தேவைகளையும் பூர்த்தி செய்தும் "படிப்பு ஏறாது" என்ற பட்டம் சூட்டி ஊர் தொழு வாரம் பார்க்க விட்டினம்.

இப்ப எப்படி படிப்பு ஏறுது! அண்ணரை விடக் கூடப் படிச்சாச்சு. ஓ எல் உடன் வந்து, சிஜிஏ... நாலு பாடங்கள் செய்தாயிற்று.

"பொறுப்பற்ற தம்பியை வெளிநாட்டுக்கு அனுப்பி விடுங்கோ. இவனால் ஆமி எங்களைத்தான் கொண்டு போய் சுடப்போகுது. அவங்களோடை சேர்ந்து வீடு வீடாக பங்கர் வெட்டிக் கொடுக்கிறானாம்."

தமது உயிருக்கு ஆசைப்பட்டு தம்பியை வெளி நாட்டுக்குத் துரத்திய தன் குடும்பத்தை நினைக்கும் போதெல்லாம் ஆத்திரம்தான் வரும். ஆனால் அம்மாவின் கடிதங்கள் வந்ததும் பாசங்கள் பொங்கி வழியும். "அம்மாவும் அடிக்கடி கண்டிப்பதும் தண்டிப்பதும் பிள்ளைகள் நல்லாய் வரவேண்டும் - பெற்றோருக்கு பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகழைத் தேடித் தர வேண்டும் என்று தானே" எழுதிக் கொள்வாள்.

"அதுவும் சரிதானே" அவனுடைய அறிவு தொழிற் படும்.

தொடர்ந்து பக்கங்களில் தங்களிலும் கேவலமானவர் களுக்கு இப்ப வந்த பவுசு, அவர்களுக்கு வெளிநாட்டு காசாலும் பணத்தாலும் ஏற்பட்ட மவுசு. பெயர் வாரியாக வரும். அடுத்தாற்போல் அண்ணருக்குக் கல்வீடு தங்கைக்கு கல்யாணம், அக்காவின் மகளைக் கள்ளமாக கனடாவிற்கு எடுப்பித்தல், தம்பிமாரை ஸ்பொன்சர் பண்ணி கனடாவில் படிப்பித்தல் ஆகியன வருடா வருடம் நீளும். மொத்தத்தில் அவன் ஒரு பணம்காய்ச்சி.

ஏன் இவன் உள்ளத்தில் மட்டும் பாசம் விளையாடு கிறது? தன் குடும்பம் என்றில்லாது தன் சுற்றம், தன் கிராமம், தன் தேசம் என அந்தப் பாச உணர்வு அவனை ஆட்டி வைக்கிறதே! மற்றவர்கள் போல் ஏன் விட்டேத் தியாக வாழ முடியவில்லை? வந்ததும் வந்தான் கனடா வுக்கு. தனக்காக குடும்பம் பட்ட கடனை அடைக்க வேண்டும். படிக்கப் போகாமல் வேலை தேடினான். பேப்பர் இல்லாமல் செய்யும் வேலைகள் நாலு டொலர் வேதனத்தில் தேவைக்கு அதிகமாகவே கிடைத்தது. அரசின் பணிப்பு குறைந்தது ஆறு டொலர். ஆனால் அதைப் பார்த்தால் உழைக்க முடியுமா? படி படி என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நண்பர்கள் கூறினார்கள். ஆனால் இலங்கை கடிதங்களோ உழை உழை என்று கூறின. இரவும் பகலும் உழைத்து கடனை அழித்தான். குடும்பம் பஞ்சம் பாடிப் பாடியே ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தது. இப்பொழுது வசுமதியின் விவாகம் அவனையும் வாழ வைத்து அவன் குடும்பத்தையும் ஆதரிக்கிறது.

"உங்கடை நேசமலரைக் கண்டனான்... அவ சொன்னா..."

என்ன சொல்லியிருப்பாள் என்று அவனுக்குத் தெரியும். அவனது அசிரத்தை அவளுக்குத் தென்பினைத் தருகிறது.

"நீங்கள் தானோ மிஸஸ் சங்கர்?"

"ஆம் நீங்கள்..."

"நான் சங்கரின் நண்பி நேசம்." "உங்கடை போட்டோ பாத்தனான். அவருக்கு புறோக்கர் கொடுத்தவராக்கும்." "என்ன செய்வது கறுப்பாய் பிறந்தது எங்கடை குற்றமே? ஆம்பிளைகள் நல்லாய் நக்கல் அடிப்பினம். முதலிலே மாட்டன் என்று தான் சொன்னவராக்கும்."

"ஓம் என்ன செய்யிறது? சாதகம் நல்ல பொருத்தம். குணமும் தங்கக் கம்பி என்று புறோக்கரும் சொன்னவர்.

"அதிலை அப்பா, முன்னும் பின்னும் திரிஞ்சவர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கண்களில் குறும்பு மின்ன சிரிக்கிறாள் நேசம்.

"ஓம் ஓம்... குறை நினைக்காதையும். என்னைத் தான் செய்ய இருந்தவர். இவை கொஞ்சம் சாதி குறைய. அதாலே நான் இலங்கைக்கு அம்மா அப்பாவை வளைக்கப் போனனான். அவை தொடுகிலும் மாட்டம் என்றிட்டினம்."

"ஆ! இவர் சொல்லலை. 'நேசம் என்றொரு நண்பி இருக்கிறா என்றுதான் சொன்னவர்...' "ஐ ஆம் சொறி." முகம் இருள்கிறது.

"நோ டோன்றப்பீ சில்லி..." அப்பா அம்மா சொல்லாட்டியும் நடக்காத கலியாணம்தானே? நான் விழுந்தடிக்கேல்லை. என்ன சின்னப் பிள்ளைகளோ? அத்தோட ஆள் நல்ல குணம்தான். ஆனால் காசு என்றால் கொலையும் செய்யும். அவ்வளவு பிறசர் தாயிட்டை யிருந்து. பாவம் வீட்டைப் பொறுத்தவரை ஏமலாந்தி. ஆனால் ஆம்பிளைகள் படு கள்ளர் பாருங்கோ."

கதை நீளுகிறது.

அவன் எப்படி அவள் ஒரு கரிக்கட்டை என்றெல்லாம் நக்கல் அடித்தான் என்றெல்லாம் சிரித்து சிரித்து விளாசி விட்டு, "என்ன லைற் ஓவ் பண்ணிப்போட்டே உங்களோடை சிரிச்சு பறைஞ்சு சந்தோசமாக இருக்கிறவர்?" என்று ஒரு பெரிய பகிடியை விட்டு, தானே கெக்கட்டம் விட்டு சிரித்துக் கொண்டே போய்விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதலும் கத்தரிக்காயும், கை விடுகையும்! உலகில் சர்வ சாதாரண விடயங்கள். ஆனால் கரிக் கட்டையும் சீதனமும் வசுமதியை வாட்டி வதைத்தன. வெள்ளம், பள்ளத்தை நோக்கிப் பாய்வதையிட்டு அவளுக்குச் சந்தோஷமே. திருப்தியான வாழ்வுக்கு காணக்கூடிய பணம் இருந்தால் போதும் என நினைப்பவன்.

இருபத்தாறாயிரம் டொலரைப் பெற்றோருக்குத் தெரியாமலே பாங்கிலிருந்து அவனது வட்டியும் முதலுமாக தீராத கடன்களைத் தீர்த்தாள். முழு நேரப் படிப்புக்குக் கணவனை அனுப்பிவைத்தாள்.

வஞ்சகம் பொறாமை சூழ்ச்சி என்பவற்றுக்கு அப்பாற் பட்ட எளிமையும் குழந்தைமையும் கொண்ட அவளுக்கு, சிரித்து சிரித்துக் குத்திய குத்தல்மொழிகள் வேதனை யையும் கண்ணீரையும் பெருக்கவே செய்தன.

சங்கர் தன்மீது மிகுந்த அன்பாக இருக்கிறார் என்ற அவளது அசையாத நம்பிக்கை மெல்லத் தளரத் தொடங்கியது.

சங்கர் குறுக்கிடாமல் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"வசு. என்னிடம் என்ன விளக்கத்தை எதிர்பார்க்கிறீர்? எனக்கு உண்மையைத் தவிர வேறெதுவும் புளுகத் தெரியாது. கனக்க கதைக்கவும் தெரியாது. நேசத்துடன் ஆறு வருட நட்பு. முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்கும் சற்று பிடிமானம் இருந்தது. நல்ல இனிமையும், அழகும் எதைச் சொன்னாலும் அதன்படி நடக்கலாம் போன்ற பேச்சு வன்மையும் எனக்குப் பிடித்துத்தான் இருந்தன. 'வாய்க் காரக்குடும்பம் மாட்டிக் கொள்ளாதே' என அம்மா எழுதினா. அத்தோடு போகப்போக எனது விடயங்களில் அதிகமாகத் தலையிடுதல்; சிரித்து சிரித்தே எனது குடும்பம் என்னட்டை வறுகிறது என்றும்; எனது எதிர் காலத்துக்கு ஏதும் சேர்க்க வேண்டாமோ என்றும் நச்சரிப்பும் தொடர்ந்தன... காலப்போக்கில் சுத்தமான மனம் உடையவளல்ல எனத் தெரிந்த போய் விட்டது.

"ஊரிலை உங்கடை ஆட்கள் வலு ஆடம்பரமாய் வாழுகினமாம். ஆளுக்கு கொரு வீடு; TV டெக்; மோட் டோர் சைக்கிள் என்று, பாடுபட்டு உழைப்பதைக் காணோ மாம். உன் காசிலை கவனமாக இரு என்கிற போதனை வேறு...

என் நண்பன் ஒருவனும் சாடை மாடையாய் உப்பிடித்தான் சொன்னவன்... அவனிட்டை பொறா மகளுக்கு கலியாணம் பேசி இங்கே கூப்பிடட்டாம் என்று சொல்லி விட்டவையாம். அவன் ஏசுகிறான். பட்ட கடனை அழிக்கப் பார் அல்லது வேறாரும் ஏழைக்கு அனுப்பு என்று! மருமகளைக் கூப்பிட்ட கடனும் சீதனமும் உம்முடைய புண்ணியத்தாலே தீர்ந்தது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உஸ் அதைப்பற்றிக் கதைக்காதையுங்கோ. வெள்ளம் பள்ளத்திற்குப் பாயவேண்டும்; அணைகட்டித் தேக்கக் கூடாது. உங்கடை வைரமுத்துச் சித்தப்பாவிற்கு ஏதும் அனுப்புங்கோ. எவ்வளவு பாசமாக எழுதுகிறவர்?"

சித்தப்பாவைப் பற்றி அம்மா நித்தமும் குற்றம் குறை எழுதுவா. தமிழீழ அரசாங்கம் சிறந்த கவிஞர் எனப் பொன்னாடை போர்த்தியதாம். 'அடுப்புச் சாம்பலுக்கை பூனை கிடக்குது. அவருக்கு ஒரு பட்டுச் சால்வை' என்ற அம்மாவின் ஏளன வார்த்தைகள் அவரது ஏழ்மையை புலப்படுத்தியது. அவரது கடிதங்களோ உயர்ந்த எண்ணங் களைச் சுமந்து வருமே தவிர வீட்டு நிலைமைகளைச் சுமக்காது. ஆனால் இயக்கத்திற்குப் போய்விட்ட மகனைப் பற்றிய பிரிவு வேதனையும், வந்து சந்திக்காமை பற்றிய ஆதங்கமும், ஒவ்வொரு நடவடிக்கையின் போதும் திகில் நிறைந்த உள்ளத்தோடு கோவிலில் மௌன விரதம் இருப்பது பற்றியுமே காணப்படும்.

வசு சொல்வது சரிதான். எத்தனை தீர்க்கமான ஆலோசனை. அவன் உள்ளத்தில் அவள் மேலும் ஒருபடி உயர்கிறாள்.


அன்பு பிரவாகிக்கிறது. சங்கரின் அரவணைப்பிற்குள் சிக்கி மூச்சுத் திணறும் வசுமதியின் உள்ளம் பௌர்ணமி நிலவாக ஒளிவீசுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

## சீவனுள்ள வானிலா



அப்போது இரவு பதினொரு மணி.

நிலானியையும், காரியையும் தூங்க வைத்துவிட்டுத் தமது இரவு உணவை முடித்து பாத்திரங்களைக் கழுவித் துடைத்து வைக்கிறார்கள் கௌரியும் ஆனந்தனும்.

திடீரென மேல்வீட்டில் நிலானியின் அலறல் குரலும் தடதடவென ஓடும் சத்தமும் கேட்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"என்ன?" "என்ன?" என்றவாறே ஆனந்தும் கௌரியும் பாய்ந்து ஓடுகிறார்கள்.

தந்தையைக் கட்டிக்கொண்ட நிலானியின் பயங்கர சப்தம். "அப்பா பிடியுங்கோ... பிடியுங்கோ... வாறான்... வாறான்..."

நெஞ்சை அமத்தியவாறு படபடத்து நின்ற கௌ்ரி, "ஏதோ கனாக்கண்டிருக்கிறா போல..." என்று சொல்லவும், "இல்லை, இல்லை; ஐயோ வாறான் கத்தியோடே" என்றவாறு துவண்டு சரிகிறாள் நிலானி. முகமெல்லாம் வெகுண்டு கண்ணை மூடியபடி இந்தக் குளிரிலும் முத்து முத்தாக வேர்க்க, இதயத்தின் துடிப்பு காதுக்கே கேட்க அவள் படும் அவஸ்தை...

ஆசுவாசப்படுத்தி இழுபறியாக கீழே கூட்டிச்சென்று ஒரு கதிரையில் இருத்தி ஓவல் கரைத்துக் கொடுத்து, "என்ன கனாக் கண்டீங்கள்?" என வினவுகிறார்கள்.

முகத்தில் பதட்டமும் பயமும் விலகா நிலையில், "கனா இல்லை, யாரோ வீட்டுக்குள் நிற்கிறான். தம்பியையும் கூட்டி வாங்கோ" என்கிறாள் நிலானி.

அவள் இன்னமும் சரியான விழிப்பு நிலைக்கு வரவில்லை. ஆனந்தின் கைகளுள் உடம்பு நடுங்குகிறது.

"பாத்திரங்களை அடுக்கிப் போட்டு வாறன். நீங்கள் T.V பார்த்துக் கொண்டிருங்கோ" எனத் தாய் சொல்ல, "T.V



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டாம் ஓ, T.V வேண்டாம்" என்று சொன்னவாறே பேஸ்மெனுக்குப் போக முயன்ற கௌரியின் சோட்டியைப் பிடித்து இழுத்து "அங்கை அவன் நிற்பான், கட்டாயம் வெட்டிப் போடுவான்" என ஆகாத்தியம் பண்ணுகிறாள் அவள்.


அவளின் பரிதாபமான முகத்தைப் பார்த்து வயதுக்கு மீறிய பொறுப்பைச் சுமக்கின்ற இவள் இன்று வெறுங் குழந்தைபோல நடந்து கொள்கிறாளே எனச் சிந்திக்கிறார்கள்.

"என்ன கனா கண்டனீங்கள்?" மீண்டும் மென்மையாக வினவுகிறாள் கௌரி. உடல் சிலிர்த்துத் துடிக்க அவள் மௌனம் சாதிக்கிறாள்.

இரவு லாம்பின் மங்கிய ஒளியில் நிம்மதியாகத் தூங்குகிறான் தம்பி காரி. தன்னறைக்குப் போகவோ நித்திரை கொள்ளவோ மறுக்கிறாள் நிலானி. தாய்க்கும் தந்தைக்கும் நடுவே படுத்துக் கொண்டு உழன்று உழன்று... சிறிது அயரும் போது கூடத் தூக்கித் தூக்கிப் போடுகிறது.

**அ**திகாலையில் "கௌரி, நிலானிக்கு மாத்திரமல்ல எனக்கும் தடுமாற்றமாய் இருக்கு. ஒரு பத்து வயதுப்பெண் வீட்டிலே பதினைந்து வயது போலப் பொறுப்பாக நடப்பது,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்று ஐந்து வயதுக் குழந்தை போல அழுகுது. நான் லீவெடுத்து அவளை உற்சாகப்படுத்த எங்காவது கூட்டிப் போறன். நீர் காரியைச் சமாதானப்படுத்திக் கூட்டிப்போய் ஸ்கூலில் விட்டிட்டு ஆபீசுக்குப் போம். நான் பின்னேரம் கூட்டிவாறன். ரீச்சரிடமும் சொல்லி விடும்" என்கிறான் ஆனந்த்.

காலை 10.30 மணிக்குத்தான் நிலானிக்கு விழிப்பு வருகிறது. "ஐயையோ ஏனப்பா என்னை எழுப்பவில்லை. பள்ளிக்குப் பிந்திப் போச்சு. நீங்கள் ஆபீசுக்குப் போக வில்லையா?" என்று கேட்டபடி எழுந்த நிலானிக்கு நினைவு வருகிறது.

மிரள மிரள சுற்றும் முற்றும் பார்க்கிறாள். வாஷ் றூமுக்குப் போவதற்குக் கூட அப்பாவைக் கதவருகில் நிற்க வைத்து கதவைச் சிறிதாகத் திறந்து வைத்தே காலைக் கடன்களை முடிக்கிறாள். பழையபடி மகளின் முகத்தில் வெருட்சியையும் மருட்சியையும் கண்ட ஆனந்த் பழைய நிலானியை யோசிக்கிறான்.

இரண்டு வயதாக இருக்கும்போது கனடா வந்து தங்கள் தொழில்களை நிரந்தரமாக்கிக் கொண்டு அடுத்து காரியைப் பெறும் போது நிலானிக்கு வயது ஐந்து. காரி யைக் கண்டதும் பெற்றோர் தன்னை உதாசீனம் செய்வதாக நினைத்துக் கொண்டு தனிப்பட ஒரு மூலையில் சுருண்டு போயிருக்கும் அவளைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாதானப்படுத்துவதற்குத் தினமும் பெற்றோர் படும்பாடு. 'You don't care for me (என்னைக் கவனிக்கறீங்கள் இல்லை)'எனும் குற்றச்சாட்டு. புதிய சூழலுக்கு அனுசரித்துப் போகும்போது நிலானியும் ஒரு பொறுப்பு வாய்ந்த பெரிய பெண்ணாகத்தான் அவர்களால் கருதப்பட்டாள்.'

கௌரியின் ஆசிரியை சொல்லிக் கொடுத்தது போல தங்கள் மகன் என்பதிலும் பார்க்க நிலானியின் தம்பி என்று சொல்வதில் பெற்றோரும் மகிழ அவளுக்கும் தம்பிமீது பாசம் ஏற்படுகிறது.

"உங்கடை தம்பி அழுகிறான். உங்களை ஒருபாட்டு பாடட்டாம்."

"நிலானியின் தம்பி சின்ன வயதில் அவள் சிரித்தது மாதிரித்தான் சிரிக்கிறான்" என்றால், "அவள் சிரிக்கயிக்கை இன்னும் வடிவல்லோ" என்று தகப்பன் சொல்லவும், "சீ தம்பி பல்லில்லாத வாயாலை சிரிக்கயிக்கை நல்ல வடிவு தானேணை" என்று நிலானி திருத்துவாள் *டயப்பர்* மாற்றும்போது தேவையானவற்றை எடுத்துக் கொடுக்கவும், தாய்க்கும் சிறுசிறு உதவிகள் செய்யவும், சிறு சிறு பிரச்சனைகளில் ஆலோசனை வழங்கவும் ஒரு பொறுப்புள்ள பிள்ளையாகி விட்டாள்.

தாயைவிடப் பிள்ளையைப் பராக்குப் காட்டியும் தேவையானவற்றைச் செய்தும் பிள்ளை பராமரிப்பில் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பங்கு வகிப்பதும் அவளேதான். ஆபீசும் வீட்டு வேலைகளும் துணிமணிகள் கழுவுறதும் பிள்ளைகளுக்கு வேண்டிய இதர காரியங்களைச் செய்யவுமே அவர்கள் இருவருக்கும் நேரங்காணாது.

இலங்கையில் பிள்ளை பார்க்க ஒன்று, சமைக்க ஒன்று. அதைவிட அம்மம்மா, தொழிற்பகுப்புகள் எத்தனை! சுகமான சீவியம். நிலானியைப் பார்க்க பன்னிரண்டு வயதிலே ஒரு பிள்ளை. ஆனால் நிலானியோ ஐந்து ஆறு வயதிலேயே அந்த வேலைகளைச் செய்கிறாள். பத்து வயதிலை பதினைந்து வயதுப் பிள்ளையின் பொறுப்பு. இன்றோ ஐந்து வயதுப் பிள்ளை மாதிரித் துவண்டுபோய்க் கிடக்கிறாள்.

"மேனை ஏன் பயந்து நடுங்கிறீங்கள் என்று அப்பாக்கு சொல்லுங்களேன். என்ன யோசித்துக் கொண்டிருக்கிறியள்?"

"நாங்கள் எங்கடை ஊருக்குப் போவமோ என்று யோசிக்கிறனப்பா. போவோமோ அப்பா?" சிதைந்த குரல்.

"அங்கையல்லே சண்டை நடக்கிறது?" நெற்றியைச் சுருக்கிக் கொண்டே கூறுகிறான்

"எங்கடை நாட்டை மீட்க அண்ணாமாரும் அக்கா மாரும் போர் செய்யினம். அது நல்லது தானேப்பா?"

"அதுக்கில்லையம்மா... இராணுவம் குண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போட்டும், துவக்காலை சுட்டும், வீட்டிலை இருக்கிற அக்காமாரை இழுத்துக் கொண்டுபோய் வெட்டிப் போட்டும் தமிழரை அழிக்கிறான்கள் அம்மா."

சிறிது நேர யோசனையின் பின், "நீங்கள் வந்து கூட்டிவரமுன் வேறை ஒரு இடத்திலை இருந்தம். திருச்சி என்று சொல்லுவீங்கள். அங்கை போனால் என்ன?"

"ஏன் உங்களுக்கு ரொறன்டோ பிடிக்கவில்லையா?" அப்பா கேட்கிறார்.

"ரொறன்டோவும் பிடிக்கவில்லை கனடாவும் பிடிக்கவில்லை."

மௌனம் ஆட்சி கொள்கிறது.

"குஞ்சு, அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இங்கே நல்ல வேலை, நல்ல சம்பளம், உங்களுக்கு நல்ல படிப்பு. எண்டாலும் அம்மாவும் வரட்டும் யோசிப்பம்."

அவள் முகத்தில் ஒரு தற்காலிக நிம்மதி.

"நீங்கள் T.V பார்த்துக் கொண்டிருங்கோ, நான் மெஷினில் துணிகளைப் போட்டுவிட்டு வாறன்" என அவர் எழுந்தார்.

அவள் அலமந்து அந்தரப்பட்டு, "வேண்டாம் அப்பா என்னைத் தனிய விட்டிட்டுப் போகாதையுங்கோ. பயமாயிருக்கு."

சரியான குழந்தை மாதிரிக் கையை நீட்டிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டு வெம்பிக் கண்ணீர் சொரிய நிற்கும் நிலானியைப் பார்த்து ஏங்கிப் போய் நிற்கிறார் ஆனந்த். எத்தனை நாள் தனியேயும் அல்லது காரியோடும் விட்டிட்டு வெளியே போய் ஒருமணி நேரங்கூட நின்றிருக்கிறார்கள்.

"அப்பா ரீச்சருக்கு சொன்னீங்களா? நான் கனக்கப் பாடங்களை மிஸ் பண்றன்."

"அம்மா ரீச்சருக்குச் சொல்லிப் போட்டுத்தான் போனவவாம். நாளைக்கு உமக்குத் தனியச் சொல்லித் தருவாவாம்."

"நல்ல ரீச்சரப்பா, வகுப்பிலை என்னிலைதான் அவவுக்கு நல்ல விருப்பம். என் பெயரைத்தான் உதாரண மாக எல்லாருக்கும் சொல்லி வழி நடத்துவா. தன் குழந்தையைப் பற்றி நிறையச் சொல்லுவா. நானும் வீட்டிலை நடக்கிறதெல்லாம் உங்களுக்குச் சொல்லாட் டியும் அவவுக்கு சொல்லுறனான். தம்பி சிலவேளையில் 'கோக்' தரச் சொல்லி அழுது கொண்டே இருப்பான். பிடிவாதம். T.V பாக்கவும் விடான்; மொனோப்பளி விளை யாடவும் விடான். உங்களுக்குச் சொல்லாமல் கொஞ்சம் குடுக்கிறனான். ஏதும் செய்யுமோ என்று கேட்கிறனான். கொஞ்சம் கொடுத்தால் பரவாயில்லை. இனிச் செய்ய வேண்டாம் என்று சொல்லுவா."

ஆனந்த் மனைவிக்கு இதனைச் சொல்லி முழு விடயத்தையும் ரீச்சருக்குச் சொல்லுமாறு கூறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறுநாள் ரீச்சர் நிலானியைக் கண்டதும், "ஓ, நிலானி நாங்கனெல்லாரும் missed you so badly இல்லையா பிள்ளைகள்?"

"யெஸ் யெஸ் நிலானி" எனக் கோறஸ் பாடுகின்றது வகுப்பு.

நிலானியின் கண்களில் இரு பெரிய கண்ணீர்க் குமிழிகள். ரிஸ்சூ ஒன்றை எடுத்துக் கொடுத்த ஆசிரியர், "என்ன எனக்கு ஏதோ சொல்ல வேணும் போல இருக்கிறதா" என ஆதரவாக வினாவுகிறா.

தலையாட்டவே, தான் பிறகு அழைப்பதாகக் கூறி, நிலானியின் நடத்தைகளை அவதானிக்கிறா. எதிலும் சுரத்தில்லாமல் நண்பர்களோடு அதிகம் கதையாமல் அடிக்கடி இருளும் முகத்தோடும் பயந்த நெஞ்சோடும் காணப்படுகிறாள் அவள். ஆலோசனை அறைக்கு நிலானியை அழைத்து வருகிறார் ஆசிரியர்.

"நான் கனாக் காணயில்லை ரீச்சர். ஒரு பயங்கர மானவன் என்னைக் கடத்திக் கொண்டு போய் வெட்டப் பாத்தவன். நான் அவனைக் கண்டனான். தனியப் படுக்கப் போனால் Closet உள் இருந்து முழுசிப் பார்க்கிறான். பெரிய கத்தியை வைச்சிருக்கிறான். அப்பாவைக் கண்டால் ஒளிஞ்சு போறான்."

ரீச்சர் கேள்விமேல் கேள்வி கேட்க T.Vயில் ஒரு சனலை அன்று புதிதாகப் பார்த்ததாகக் கூறுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எந்தச் சனல்?"

"வீட்டிலே சொல்லாதீங்கோ. அவை கார்ட்டுன். விளையாட்டு இரண்டும்தான் பார்க்கச் சொன்னவை. மற்றதொன்றும் பாக்கப்படாதென்றவை. நான் சும்மா தட்டினன். ஒரு பொலிஸ் சனல் வந்தது. தம்பி நித்திரை யாகி விட்டான். நான் பார்த்தேன்."

நிலானியின் பயம் பயங்கரமானதாக இருக்க வேண்டும். துக்கம் கோபம் என எல்லாம் கலந்த ஒரு உணர்ச்சிச் சுழலில் அகப்பட்டவள் போலத் தவிக்க, ரீச்சர் அவளை அணைத்து "நான் இருக்கிறன் பயப்படாமல் சொல்லும்" என்கிறா.

"ஒரு பெண்பிள்ளையைத் துண்டு துண்டாய் வெட்டிப் புதைத்தது. ஒரு பாடசாலை மாணவனை மற்ற மாணவர் அடிச்சுச் சாக்கொண்டது. டாக்ஸி ட்ரைவரைக் கொண்டது என்று ஒரே வன்முறைச் சம்பவங்கள். மறக்க முடியாமல் அதுதான் நெடுக வருகிறது. அவனைக் கண்டால் பிடிச்சுக் கொடுக்க வேணும் என்று நினைச்சவுடனே அவன் வந்திட்டான். எங்கை திரும்பிப் பார்த்தாலும் அவன் ஒளிச்சு நிக்கிறான்.

"அம்மா அப்பா வேறொரு சனலும் பாக்கப்படாதென்று சொன்னவை. அவர்களுடைய நம்பிக்கைப்படிதான் நடந்தனான். அண்டைக்குத் தவறுதலாகத்தான் வந்தது. ஆனால் அதைப் பார்க்கத்தான் தொடர்ந்து பார்க்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூண்டியது. ரொறன்டோ இப்படி என்றால் எப்படி இங்கு வாழுகிறது? பயமாய் கிடக்குது. அவன் எப்படியும் என்னை வெட்டுவான். T.V பார்த்ததைச் சொன்னால் தங்கடை சொல்லைத் தட்டியதாக அவர்கள் கவலைப்படுவார்கள். இனி என்னை நம்பவும் மாட்டினம். சின்ன விடயங்களுக்கே நான் தட்டி நடந்தால் அம்மா அழுவா. அப்பா மௌனமாகப் பேசவே மாட்டார். அதுதான் நான் சொல்லவில்லை. நீங்களும் சொல்லாதீங்கோ."

ஆசிரியருக்குப் பல விடயங்கள் தெளிவாகின்றன. தடிமன் காய்ச்சலுக்குக் குடிநீர் போட்டுக் குடிக்கும்படி செய்முறை சொல்லித்தரும் நிலானியின் வளர்ச்சிப்படிகள் ஒழுங்கற்று நடந்திருக்கின்றன. உடல் உள முதிர்ச்சிக்கு முன்னரே சமூகரீதியான முதிர்ச்சி வளர்ந்திருக்கிறது. அதனால் T.V சம்பவங்கள் வன்முறையின் பாற்பட்டதாய் பாரதூரமான கற்பனையை வளர்த்திருக்கிறது. அது உள வயதுக்கு மீறியதாய் தாங்க முடியாத பயப்பிராந்தியைத் தந்திருக்கிறது. அந்த வயதுக்கேற்ற செயலான அனுமானித்தலின்படி தனக்கும் அப்படி நடக்கப் போகிறது எனும் பிரமையைத் தோற்றுவிக்கிறது. நல்லகாலம் பெற்றோர் உடனேயே தெரியப்படுத்திவிட்டினம். பெற்றோருக்கும் ஆலோசனை தேவை.

"நிலானி பயப்படாதையும். You are my friend. அவையளுக்குக் கடைசி மட்டும் சொல்லமாட்டன். அவனைப் பற்றிய சில விடயங்கள் எனது நண்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒருவருக்கு நன்கு தெரியும். அவவை அறிமுகப்படுத்தி விடுகிறன். நல்லாய் உதவி செய்வா; கதைப்பா. It is a secret between you and me. இந்த ரகசியத்தை அம்மா அப்பாவுக்கோ வேறுயாருக்கோ சொல்லக் கூடாது என்ன?" முதன் முதலாக நிலானியின் முகத்தில் நம்பிக்கைப் புன்னகை மலர்கின்றது.

ஆசிரியர் டெலிபோன் மூலம் உள நல மருத்துவர் சசிகலாவை அழைத்து நிலானியின் மாயத் தோற்றம் அல்லது பொய்த் தோற்றம் பற்றிக் கூறிச் சந்திப்புக்கு ஒழுங்கு செய்கிறா.

**சி**ல நாட்களின் பின், "அப்பா மணி பதினொன்று ஆச்சு; ஸ்கேற்றிங்குக்கு நேரமாச்சது" என்கிறாள் நிலானி.

"திருச்சிக்குப் போக மூட்டை முடிச்சு கட்டுறன். அங்கெல்லாம் சினோ கிடையாதே" எனக் குறும்பாகச் சிரிக்கிறார் ஆனந்த்.

"போங்கோப்பா, பகிடியை விட்டிட்டு. பின்னேரம் மன்செஸ்டர் பார்க்கிலை காரியை ஸ்லேயிலை வைச்சு இழுக்க வேணும்."


சூரியன் எறித்தும் ஒளி மழுக்கினாலும் பனிப்புகார் மூடினாலும் வானிலா தன் கடமையைச் செய்து கொண்டு தான் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6

## வாலுகள் – விலாங்குகள் – மைனாக்கள்



சின்னையா தெருவோரத்தில் நின்று நல்லதம்பியர் வீட்டைப் பார்த்துக் கொண்டு பெருமூச்சு விட்டார்.

அந்தப் பாதி கருகிய வேம்பின் கீழ்த்தான் முதல் நாள் அவர்கள் இருவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது, கருத்து முரண்பாடு ஏற்பட்டதும், இது ஏதோ தர்மத்தின் குற்றமோ என்று கலங்கிய கண்களைச் சால்வையால் துடைத்துக் கொண்டதும் நினைவுக்கு வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீடு இன்னமும் புகைந்து கொண்டுதான் இருந்தது. பெரிய கல் வீடு. வெறியாட்டத்தை நிறுத்தவும் முடியாது. இன உணர்வால் பாதுகாப்பைக் கொடுக்காமலும் இருக்கக் கூடாது. மூன்று உயிர்களுக்குத் துரதிருஷ்டம். வளவே செம்மணியாகிவிடுகிறது.

தெய்வானைக் கிழவி தலையில் ஒரு பனங்காய்க் கடகத்தை வைத்துக் கொண்டு, இருகைகளிலும் கங்கு மட்டை – பாளை சுமந்து சமநிலைநடையில் வந்து கொண்டிருந்தவள் இவரைக் கண்டதும் நின்று, "எணை அப்பு, பாழ்பட்டுப் போவாங்கள் செய்யுற வேலையைப் பாரணை. அந்த மூண்டு பிரேதங்களும் எரியேக்கை வயிற்றைப் பற்றி எரிஞ்சுதணை. பெடியும் ஆர் பெற்ற பிள்ளையோ? அனாதையாய்... மண்ணள்ளித் திட்டினாலும் உவங்களுக்கு யமன் வாறானில்லையே. உவங்கடை கண்ணுக்குக் கொள்ளி செருக!" ஆத்திரத்தோடு பொரிந்து தள்ளினாள்.

சின்னையா மௌனமாக நின்றார். அவருள்ளம் குமுறிக் கொண்டிருந்தது. மௌனத்தின் பின் "தர்மம் தலை காக்கும்" என்றார்.

"அது சரி அப்பு, செத்தபிறகு ஒருவரைப் பற்றிக் குறை சொல்லக் கூடாது. ஆனாலும் நல்லதம்பியர் தன்ரை அலுவல், தன்ரை சொகுசு, தன்ரை பொருள் பண்டம் என்று ஒரே தன்னலக்காரனே. பொடியள் தங்களை நம்பி இருக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டாம் வீட்டைவிட்டு ஓடுங்கோ என்றவுடன் எவ்வளவு பிடிவாதம், ஆர்ப்பாட்டம்! ஏதோ தன்ரை வீடுதான் பெரி சென்ற மாதிரி. நீங்களெல்லாம் வலிகாமம் வடக்கிலை இருந்து போட்ட உடுப்போடை; ஆக்கள் விழுந்து விழுந்து சாகச் சாக; ஓடி வந்த போதும் ஏதோ கவனிச்சவரே? வாய்ப்பந்தல் போட்டவர். இப்பவும் என்ன? நீங்கள் ஓடி விட்டியள் அப்பு. இவர், ஆமி உரும்பிராயும் கடந்த பிறகு தானே, அயலடடையிலை செல் விழ வெளிக்கிட்டவர்" என்று மீண்டும் கூறினாள் தெய்வானைக் கிழவி.

"அதைத்தான் நானும் யோசித்துக் கொண்டு இருக்கிறன். அந்தப் பேர்த்திப் பெட்டையையாகிலும் வன்னியுக்கை விட்டிட்டு வந்திருக்கலாம். தனக்கு சமைக்க வேணும் வீடுவாசல் துப்பரவாக்க வேணும் எண்டு கூட்டியந்தது இந்தப் போக்கு போக்காட்டத்தான்."

"வந்தது தான் வந்தியே! அந்த குமரி – என்ரை செல்லக்கிளியையும் – ஏன் கூட்டி வந்தாயணை" என்று ஒப்பாரி பாடிய வண்ணம் நகர்ந்தாள்.

ரஞ்சினியை நினைத்தவுடன் சின்னையருக்கு விம்மல் தொண்டைக்குள் பொருமியது. முதுகிலே பொ-ிதாக ஒரு அடிபோலத் தட்டு விழவே திருப்பி பார்த்தார். சைக்கிளில் வந்த இருவர் அவரருகே நின்றார்கள்.

"என்னப்பு தோழன்ரை கதிக்காக கண்ணீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடுகிறியோ? உனக்கும் அந்த கதிதானே வரப்போகுது."

மற்றவன் சிரித்தான்.

"தம்பியவை உங்களை நம்பித்தானே இஞ்சை வந்த நாங்கள். அங்கை வயதுபோனவையும் இராப்பகலாய் வேலை செய்ய வேணுமாம். மனிசியும் வருத்தக்காரி. இங்கை திரும்பி வந்தால் வீடு வளவு, அதன் பயன்களோ டும் நீங்கள் தாற நிவாரணத்தோடும் காலங் கழிக்கலாம் என்று தானே வந்தம்." சின்னையா தழுதழுக்கிறார்.

"அதுசரி அப்பு நீங்கள் எங்களைத்தான் நம்பி வந்தனீங்கள். பிறகு ஏன் எங்கட எதிரிகளை வீட்டுக்கை ஒளிச்சு வைக்கிறியள்?"

முதலாமவனின் கோபம் பல்லை நெறுமியது.

"ஐயோ தம்பியவை அவர் எனக்குச் சொல்லவில்லை. அவருக்குத் தெரியுமென்று நானும் நம்பவில்லை. அவர் நெடுக பெடியளை ஏசிக் கொண்டிருக் கிறவர். எங்கடை பக்கங்களில் நடக்கயிக்கை பெடியளைப் புகளுகிறவர். தன்ரை வீட்டை விட்டுப் போகும் போதுதான் பெடியளைத் திட்டுறவர். தன்ரை நன்மைக்காக உங்களோடும் சினேகமாக இருக்க விரும்பியவர். ஆனால் யாரும் பெடியளுக்குச் சொன்னாலும் என்கிற பயம். பெட்டையும் விடமாட்டாள்."

சின்னையா ஏதோ பேசி ஐஸ் வைத்துக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நின்றார்.

"அது தானே அப்பு, கள்ளக் காதலனோடு சொர்க் கத்துக்கு ரஞ்சினியை அனுப்பிவைச்சம்."

மற்றவன் சொன்னான்.

"பெட்டையை அலங்கோலப்படுத்தியது எங்க ளுக்கும் ஆத்திரம்தான். ஆனால் அவளின்ரை கொழுப்புத் தானே அவனை மறைச்சு வைச்சது?"

"வாறன் தம்பியவை பசிக்குது..."

"ஓமப்பு. ஏதும் அசுகை அறிந்தால் சொல்லுங்கோ."

"பின்னை என்ன, நாங்கள் நிம்மதியாக வாழத்தானே இஞ்சை வந்த நாங்கள். பிறகும் வந்து கரைச்சல் தந்தால்? ஏதோ உங்கடை தயவிலை இருக்கிறம், தம்பி." கூழைக் கும்பிடு போட்டுச் செல்கிற சின்னையா வாத்திக்கு இந்து மகாசபைப் பாடசாலைகளில் வளைஞ்சு நெளிஞ்சு படிப்பித்துப் பழக்கம். ஆனால் லட்சியவாதி. சடையன் மாமரத்து உச்சிக்கிளை ஞாபகம் வரவே, கறிபுளி ஒன்றும் இல்லை இரண்டு முட்டையாகிலும் வாங்கிப் போவம் என வீட்டுக்கு விரைகிறார்.

பெடிச்சிக்கும் வன்னியானுக்கும் பேசி முடிஞ்ச கலியாணம். மற்றவையை வன்னியிலை விட்டிட்டு இவர் ஏன் ஓடி வந்தவர்? கலியாணத்தை முடிச்சிருக்கலாம் அல்லது அங்கே விட்டிட்டு வந்தால் அடிக்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சந்திக்கவாலும் முடியும். அவனுக்கு ஒரு வருடம் முடிந்தால்தானாம் மேலிடத்து உத்தரவு வரும். பிரிவைத் தாங்காத அவன் வேவுப்புலிகள் வரும்போது ஒருவனிடம் கடிதம் கொடுத்து விட்டிருக்கிறான். நல்லதம்பியருக்கும் தெரியாமல் பெட்டை அவனை மறைச்சு வைச்சிருக்கிறாள். ஐயோ எவ்வளவு காலம் பயிற்சி பெற்ற பெடியோ?

அவருக்குத் தெரியாது என்பது சின்னையருக்கு நன்கு தெரியும். ஏனென்றால் பிடிபடச் சற்றுமுன்னத்தான் வேப்பமரத்தடியில் இருந்து எத்தனை கதை சொன்னவர். பெடியளைத் திட்டித் தீர்த்தவர். எல்லாம் அவன் கேட்டிருப்பான் பாவம். ஐம்பது பேருக்குச் சரியானவன். பேரிழப்பு.

அந்தப் பிஞ்சுகளெல்லாம் தமது சந்ததிகள் நிம்மதி யாய் வாழ வேண்டும் என்பதற்காகத் தம் இன்னுயிரைத் தியாகம் செய்ய இவர் என்ன சொன்னவர்?

"எங்கள் மண் இது. இதை மீட்கப் பெடியள் அடிச்சுக் கொண்டு வரலாம். ஆனால் இது எங்கள் பிரதேசம். சுதந்திரம் எல்லாவற்றிலும் மேலானதுதான். உயிர் அதனிலும் மேலானது. பெறும் சுதந்திரத்தை அனுபவிக்க மனிசர் உயிருடன் இருக்க வேண்டுமே."

அவர் சொல்லி முடிந்ததும் சின்னையர் சினந்து சீறியதும், "இப்படி ஒரு சுயநலவாதியா? எங்கள் பக்க மெல்லாம் அவங்கள் அடிச்சு உடைச்சு யன்னல் கதவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களைப் பிடுங்கி கப்பலில் அனுப்பியபோது நியாயமாகப் பட்டது உங்களுக்கு. இன்னும் ஒரு பத்து வருடங்களுக்கு கூட வாழ முடியாத உம்மடை உசிர் ஒரு மசிரோ?" எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அந்தப் பெடியன் எல்லாம் கேட்டுக் கொண்டிருந்திருப்பான். பாவம் என்ன நினைத்திருப்பான் இவரைப் பற்றி?

ஷெல் என்பது என்ன எனத் தெரியாத காலத்தில் வலிகாமம் வடக்கு போட்டது போட்டபடி ஓடியபோது சின்னையா யாழ்ப்பாணத்துக்கே வந்துவிட்டார். நல்லதம்பி பரிதாபம் பார்த்து ஒரு நேரச் சாப்பாடும் தந்தவர்தான். இந்தப் பெரிய வீட்டில் ஒரு மூலையைத் தன்னிலும் தங்கக் கொடுக்கலாம் எனும் நினைப்பே வராதவர்.

திடீரென சடையன் மாமரத்து உச்சி நினைவுக்கு வரவே நடையைத் துரிதப்படுத்துகிறார்.

பூட்டிக்கிடந்த ஒரு வீட்டின் பின்புறத்திலிருந்த அகன்ற நீண்ட விறாந்தையை கிடுகுத் தட்டிகளால் அடைத்து ஒரு அறையும் குசினியும் தலைவாசலுமாக்கி வாழ்ந்து வருகிறார். வளவுப் பிரயோசனங்களையும்அவரே எடுத்துக் கொள்கிறார். இந்தியன் ஆமிக் காலத்திலும் அங்கே தான் இருந்தவர். காலில் வாதநோயால் வருந்திய பார்வதியையும் கூட்டிக் கொண்டு அலைந்து திரிய அவரால் முடியவில்லை.

பார்வதி காத்துக் கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"கறி புளி வாங்கிவந்தனீங்களோ?"

"ஒண்டும் கிடைக்கவில்லை. முட்டை இரண்டுதான்."

"இந்த வயதிலை உமக்கொரு முட்டை கேட்குதோ? " என்று பகிடி விடுகிறாள் அம்மணி.

"அம்மணி அப்படித்தானே? கல கல என்று எப்பொழுதும்... அதுதான் அவளுக்கு நல்ல வியாபாரம்..." பார்வதி.

மெல்லமாக, "அதுசரி தண்ணி கிண்ணி கொடுத்தியோ?" என்று தாழ்ந்த குரலிலே கேட்டார் சின்னையா.

"கொண்டு போனன். 'போங்கோ... போங்கோ... வாறான்கள்' எண்டுது. நான் வந்திட்டன். பார்த்தால் சைக்கிளிலை அந்த வாலுகள்" என்கிறார் பார்வதி.

"உங்காலை போட்டினை. இப்ப திரும்புவினை. கொஞ்சம் பொறுப்பம். இப்ப பாணோடு ஒரு முட்டை. மற்றதைப் பொரிச்சு மதியத்துக்குக் கொடு..." என்றார்.

பின்னர் சற்றுப் பலமாக, "யுத்தபூமியாய் போட்டு தெண்டு நல்லதம்பியரைப் போலக் காரணகாரியம் தேடத் தேவையில்லை. ஆரிலை பழி போடுறது!" கேள்வியை இழுத்தார்.

சின்னையருக்குப் பதிலாக "இதென்ன நாங்களே குடியேற்றம் எண்டு பிரதேசங்களைப் பறிச்சம்? சிங்களத் தைத் திணிச்சம்? தரப்படுத்தலை அமுல் படுத்தினம்? புத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமயத்தைத் திணிக்கிறம்? இளைஞருக்கு படிப்பு, வேலை வாய்ப்பு மறுத்துக் கோபத்தை உண்டாக்கினம்? அதன் விளைவுகளை எதிர்விளைவுகளை முழு இலங்கையும் அனுபவிக்கின்றது. ஏதோ வசதியாக உயர்உத்தியோகத் தோடு வாழ்பவர்களுக்குத்தான் கொதி. இராணுவத்துக் கென்ன, செல்லப்பிள்ளை. இருந்த இடத்தில் சொகுசான வாழ்க்கை. பாவங்கள் பெடியள். காடும்மேடும் மரமும் தடியும் பசியும் பட்டினியும் இவைக்கென்ன?"

"ஏதும் கிடைச்சவுடனே பதவி வகிக்க முன்னுக்கு ஓடுவினம்."

மாமரத்திலிருந்து மைனாக்குருவி கூவுகின்றது.

"ஆயத்தப்படுத்து. நான் முன் விறாந்தைக்குப் போய் ஆள் பார்க்கிறன்."

பார்வதி உணவைத் தயார் செய்து பரிமாறுகிறாள். சாக்கின் மேல் மாங்குழை தைத்த போர்வை ஒன்றோடு விட்டுள் நுழைகிறது ஓர் உருவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மூலமும் உரையும்

"லிண்டா, ஏன்தான் இப்படிக் கரைச்சல் படுத்துகிறீர்? எனக்கு விருப்பமில்லை. பயமாய் இருக்கு."

"நீர் என்னைப் புரிந்து கொள்ளுகிறீரில்லை மாலா. டேவிட் சினிமாவுக்கு அழைக்கிறான். எனக்குத் தர்ம சங்கடமாயிருக்கு. அதுதான் அவன் உம்மையும் கூப்பிடுகிறான். உமக்கு விருப்பமில்லாவிட்டால் நான் தெண்டிக்கயில்லை."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகத்தைத் தொங்கப் போட்டுக்கொண்டு மறுபுறம் திரும்புகிறாள் லிண்டா. அவள் முகத்தில் ஏமாற்றம் எழுதி ஒட்டப்பட்டுள்ளது.

"நீயும் ஆண்நண்பனும் போவதில் தவறில்லை லிண்டா. என்னைக் கூட்டுச் சேர்ப்பதிலும் தப்பில்லை. ஆனால்....."

லிண்டாவின் இடுப்பை அணைத்து முகத்தை நிமிர்த்துகிறாள் மாலா... "எனக்குப் பொழுது போக்க ஒரு நண்பனை ஒழுங்கு செய்திருக்கு என்றாயே, அதுதான் எனக்குப் பிடிக்கவில்லை" என்கிறாள் மாலா.

"ஒரு சிலரையாகிலும் பழக்கப்படுத்திக் கொண்டால் தானே பிறகு நல்ல நண்பனைத் தெரிவு செய்யலாம்? முந்தி நான் எதைச் சொன்னாலும் மறுக்காமல் செய்வீர். மற்றவையைப் பற்றி எனக்கு அக்கறையில்லை என்று சொல்வீர். இப்ப கொஞ்ச நாளாய் மாறிவிட்டீர்."

"ஏன்? " எனச் சிந்திக்கிறாள் மாலா. அவளுக்குப் புரிந்தும் புரியாமல் இருக்கிறது.

கனடாவின் பனிப் புகாரூடே அவளது வறிய கிராமம் தெரிகிறது.

**மா**லாவுக்கு பத்து வயதாக இருக்கும்போது யாழ்ப்பாணத்திலிருந்த சொந்தக் கிராமத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராணுவத்தினரால் துரத்தியடிக்கப்பட்டு வவுனியா வந்து தங்கியது அந்தக் குடும்பம். கனடாவில் குடியேற்றுவதற் காக முகவரை நாடியது. மாலாவும் அவள் தந்தை வல்லிபுரமும் முகவர்களின் புண்ணியத்தால் வேறு யாருடையதோ கடவுச் சீட்டில் கனடாவுக்குள் நுழைந்து அகதி அந்தஸ்தும் பெற்று விட்டனர். எதுவித சொந்த பந்தமும் இல்லாத நிலையில் அரச தொடர் மாடிக் கட்டடம் ஒன்றில் குடியேறினர்.

தனது மனைவி, மகன், தாயார் ஆகியோரையும் வரவழைக்கும் முயற்சியில் இரு வேலைகள் செய்து பொருளீட்ட ஓடியோடி உழைத்தார் வல்லிபுரம்.

வந்தவுடனேயே மாலா பாடசாலையில் சேர்க்கப்பட்டு விட்டாள். அவள் வகுப்பிலே ஒரு தமிழ்ப்பிள்ளைகூட இல்லை. மேல் வகுப்புகளில் இருவர் மாத்திரமுள்ளனர். இரவு பத்து மணிக்கே அப்பா வருவார். அதிகாலை 5.30க்குப் போய்விடுவார். அதன்பின் அவள்தான் தனிக் காட்டு ராணி. அங்கே அயலவர்கூட வேற்றின மக்களே.

மொழி தெரியாத காரணத்தால் வகுப்பிலே பெரும் திகைப்பும் மிரட்சியும் கொண்டிருந்தாள். புதிதாக வருபவர் களுக்கு அரசாங்கம் நல்ல சலுகைகளைச் செய்தி ருக்கிறது. ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகப் பல்லின மக்களுக்குக் கற்பிக்க ஓர் ஆசிரியர்; மாலாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரத்தி யேகமாக நாளுக்கு ஒருமணி வீதம் ஆங்கிலம் கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்; பெற்றோர் – ஆசிரியர் – மாணவர் தொடர்புகளுக்கு ஒரு தமிழ் மொழிபெயர்ப்பாளர். ஆயினும் ஆரம்ப கால வகுப்பறை வாழ்வு அவளுக்கு மிக்க கசப்புடையதாகவும் தாழ்வு மனப்பான்மையை வளர்ப்பதாகவும் அமைந்தது.

அவள் மிகச் சூட்டிகையான பெண்ணாக இருந்தாலும் சொல்வதைப் புரிந்து கொள்ளாமையால் ஏற்படும் அசட்டையும் பராக்குப் பார்த்தலும் அவள் இயல்பாயின. அதனால் அடிக்கடி 'ரைம் அவுட்' எனும் தண்டனை வேறு. அந்த நேரங்களில் அவளது பேசும் கண்களில் தோன்றும் கவலை, பயம், வெறுப்பு, கோபம் ஆகிய உணர்வுகள் அயலே இருக்கும் லிண்டாவின் உள்ளத்தை அனுதாப அலைகளால் நிறைக்கும். வசனக் கணக்குகள் தவிர்ந்த ஏனைய பயிற்சிகளை நிமிடத்தில் முடிக்கும் ஆற்றல் லிண்டாவைக் கவர்ச்சிக்கும்.

**அ**ன்று ஒரு மாணவியின் சப்பாத்துக்களைக் காண வில்லை. மாலா எடுத்ததைத் தான் கண்டதாக ஒரு மாணவன் கூறுகிறான்.

"நீ எடுத்தாயா மாலா?" கேட்கும் ஆசிரியருக்கு "ஓம்" எனப் பதில் கூறுகிறாள் மாலா.

"எங்கே ஒழித்து வைத்திருக்கிறாய்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"வீட்டில்" எனப் பதில் வருகிறது.

மாணவர் எல்லாரும் அவளைச் சுட்டி "நீதான் செய்தாய், ஓம் நீயே செய்தாய்" எனப் பாடுகிறார்கள். அழ ஆரம்பித்த மாலா அதிபர் அறைக்கு அனுப்பப்படுகிறாள். "உன்னிடம் சப்பாத்து இருக்கா?" என்று ஆசிரியரின் கேள்வியை அவள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே என அதிபர் சிந்தித்துக் கொண்டிருந்த பொழுது...

அது நடந்தது. லிண்டா அந்த மாணவனைக் காட்டி "இவன் படங்கள் வைக்கிற பெரிய பெட்டிக்குள் கையை நுளைத்துத் துழாவியதை நான் கண்டேன்" எனக் கூறுகிறாள்.

அங்கே சப்பாத்துகள் மாத்திரமல்ல, வேறு பொருள்களும் கண்டெடுக்கப்படுகின்றன. மாணவர் மாலாவிடம் மன்னிப்புக் கேட்கவும், மாலா லிண்டாவுக்கு நன்றி கூறவும் செய்வித்து அதிபர் போகிறார்.

**அ**ன்றே இருவருக்கும் தொடங்கிய நட்பு ஐந்து வருடங்களாக இறுகி நிற்கின்றது. அந்த நட்பு இவளின் உயர்ச்சிக்கு ஊன்று கோலாயிற்று. போகும் வழியிலேயே லிண்டாவின் வீடும் இருந்ததால் படிப்பு, விளையாட்டு, அவளது பெற்றோரின் அரவணைப்பு எல்லாம் கிடைத்தன.

ஆறு மாதங்களுக்குள்ளேயே ஆங்கிலத்தைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சரளமாகப் பேசவும், நடை, உடை பாவனைகளை மாற்றிக் கொள்ளவும் முடிந்தது. வல்லிபுரத்துக்கும் கனேடியனா கவே மாறிவிட்ட தன் மகளைக் காணுந்தோறும் பிடிபடாத பெருமை. தனக்கும் சில பழக்க வழக்கங்களைச் சொல்லித்தந்து, நேரத்தை மீதப்படுத்த தகரடப்பா உணவு களையும் அறிமுகம் செய்து, வீட்டையும் அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்கும் ஒரு மகள் கிடைத்தாளே...?

மூன்று வருடங்களின் பின், அம்மா, தம்பி, ஆச்சி வந்து சேர்ந்தனர். அவர்களின் மிகப்பெரிய ஆசானாய் விளங்கிய மாலா தாயின் சேலைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டாள். தம்பியாரின் பாடசாலை பெற்றார் ஆசிரியர் சந்திப்புக்கு தாயை நிலைச் சுருக்குப் பாவாடை, நீளக்கைச் சட்டை, நிறத்துக்கேற்ற காலுறை – கையுறை, ஸ்காவ், பூச்சுக்கள் என்று அமர்க்களப் படுத்திவிட்டாள். வல்லிபுரத்துக்கே மனைவியை அடையாளங் காணமுடிய வில்லை.

"கூழைக் கும்பிடு போடாமல், கூனிக்குறுகி நிற்காமல் சிறு சிரிப்போடு தலை நிமிர்ந்து 'ஹாய்' சொல்லு, கை குலுக்கு" என்று ஒத்திகை பார்த்து பார்த்து உருட்டி எடுத்து விட்டாள்.

**இ**ப்போது மாலா உயர்வகுப்புகளுக்கு வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விட்டாள். அவளது வாழ்வில் ஒரு பெரும் மாற்றம் நிகழத் தொடங்கியது. கல்லூரியே அதற்கு வழிவகுத்தது. பல்லினக் கலாசார வாரத்தில் பாடசாலைகளின் பங்களிப்பு மிக முக்கியமான தொன்றாகும். கல்லூரியின் தமிழ்க் கலாசாரப் பிரிவுக்கு மாலா பொறுப்பாளராக்கப் பட்டாள். அப்போது கல்லூரியில் பதினெட்டு மாணவரே இருந்தனர். எந்தப் பிரிவு நன்றாகச் செய்கின்றதென்னும் போட்டியும் வேறு. இந்து கலாசாரத்தைத் தேடி ஓட வேண்டிய நிர்ப்பந்தம். தமிழ் ஈழச்சங்கம், உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகத்தின் கனடாக்கிளை, இசைக் கலாமன்றம், கோவில்கள், பிரபல தமிழ் அறிஞர்கள், நூல்நிலையங்கள், மற்றப் பாடசாலைத் தமிழ் மாணவர் எனப் பல தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் அவசியம். லிண்டா தனது காரில் இவர்களையும் ஏற்றிக் கொண்டு திரிவாள். மறந்து போன தமிழும் மாலாவுக்கு மீண்டும் வரத் தொடங்கியது.

இவர்கள் கல்லூரி சிறிது ஒதுங்கியிருந்தமையும், அக்கறையின்மையும் இதர தொடர்புகள் இல்லாமல் போனதற்குக் காரணமாகும். தமக்கு வெளியே கனடாவில் தமிழர் சமுதாயம் ஒன்று நெருங்கிய தொடர்புடன் கலை கலாசாரம் வளர்த்து இயங்கிக் கொண்டிருப்பதை அறியக் கூடிய நிர்ப்பந்தம் இப்போதுதான் தெரிகிறது. தேவை களையொட்டித் தானும் அதற்குள் சங்கமம் ஆகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வகுப்பிலேயும் வேர்கள் பற்றிய ஆய்வு. தத்தம் குடும்ப மரத்தை ஆய்வு செய்யுமாறு செயல் திட்டம் கொடுக்கப் பட்டுள்ளது. அம்மாவைவிட ஆச்சி வேர்கள் விடயத்தில் பரம்பரை ஆய்வில் மிக உதவியாக இருக்கிறார். அவர் காலத்துக் கல்விமுறையில் பரந்துபட்ட அறிவும் நூல்கள் வாசிக்கும் பழக்கமும் இருந்தது. அம்மா காலத்துக் கல்விமுறை அவளை விஞ்ஞானத்துள் ஆழ்த்தி சமுதாய அறிவு பெறவிடாமல் வீழ்த்திவிட்டது.

ஆச்சி எவ்வளவு விரிவாகத் தமது தொன்மையினம் பற்றியும் வேர்கள் பற்றியும் கூறினார். இலங்கை நாராயண முதலியார் வம்சமாம். தென்னிலங்கையில் பாட்டன் காலத்தில் இருந்து பரம்பரை வைத்தியம் செய்தார்களாம். ஐம்பத்தெட்டாம் ஆண்டுக் கலவரத்தில் வீடு தீயிடப் பட்டதால் மருந்துகளும் வாகடங்களும் எரிந்து சாம்பலா யினவாம். அதற்கு முன்னர் கல்விச்சாலைகளும் ஆலயங்களும் கட்டிப் புகழ் பூத்தவர்களாம். கலவரத்தின் பின் தென்னிலங்கையை விட்டு வடக்கே அகதிகளாகச் சென்று விட்டார்கள். அங்கே சிறிது செழித்து வேர் பிடிக்கவும்... பின்ன நிகழ்ந்த அரசியல் நிகழ்வுகளினால், அவர்களுடைய வாழ்க்கை அகதி ஓட்டமாய் மாறியது...

மாலாவுக்கு எல்லாம் அதிசயம். தன் குடும்பம் லேசுப்பட்டதல்ல, தான் இவ்வளவு காலமும் நினைத்தது போல படிப்பறிவற்ற பண்பாடுகளற்ற காட்டுச் சனங்களல்ல,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாம் அகதிகளல்ல, அகதிகளாக்கப்பட்டவர்கள். நீண்ட பாரம்பரியமுடைய மொழிக் கலாசாரம் உடையவர்கள் எனத் தெரிந்தபோது அவள் மேலும் தலை நிமிர்ந்தாள். ஹலோவின் விழாக்காலத்தில் ஆச்சி சொன்ன படுபயங் கரமான பேய்பிசாசுக் கதைகளைச் "சில்லி சில்லி" என்று சொல்லிச் சொல்லியே கேட்கத் தொடங்கி விட்டாள்.

இப்போதெல்லாம் ஆச்சியிடம் பல விடயங்களைப் பகிர்ந்து கொள்கிறாள். ஆண் நண்பர்களைப் பற்றிக் கூட ஆச்சி அவ்வளவு கவலைப் பட்டதில்லை.

"முந்தி நாங்களும் மாங்காய் புடுங்கித் தா பூப்பிடுங் கித் தா என்று கலைபட்டுக் கொண்டு திரிவம். கேலி பண்ணுவானுகள். ஆனால் தப்புத் தண்டாவுக்குப் போக மாட்டம்" என்று பழைய காலத்தை அசை போட்டவாறே கூறினர்.

முதல் நாள்தான் அவள் ஆச்சியோடு கல்யாணத் தின் முன் சேர்ந்து வாழ்ந்து இஷ்டம் இல்லாவிடில் பிரிந்து போதல் பற்றிக் கூறியிருந்தாள்.


"சிவ சிவா, இது என்ன விண்ணாணம்? எச்சில் பட்டிட்டு விட்டிட்டுப் போறதோ? அந்தக் காலத்தில் சில தவறுகள் நேர்வதுதான். அதையெல்லாம் மூடி மறைச்சுப் போடு வினை."

ஆச்சியால் மேலும் பொறுக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"ஆம்பிளை எண்டால் என்ன, பெம்பிளை எண்டால் என்ன உடல் சுத்தமாக இருக்க வேண்டும். அப்பதான் கைப்படாத மலராக ஒருவருக்கொருவர் சமர்ப்பணம் ஆக வேண்டும். சீ, இந்த நாட்டிலை, எப்படி உங்களை வல்லியன் வளர்க்கப் போறானோ?"

"ஏன் ஆச்சி சரிவராவிட்டால் அவை வேறை கலியாணம் செய்வினை தானே?"

"நான் பழசு குஞ்சு; யாரும் பல் விளக்கிய தூரிகையை நன்றாகச் சுத்தப் படுத்தினாலும்கூட நீ உபயோகிப் பாயோ?"

"சீ என்னணை ஆச்சி? புதிதாகக் கிடந்தாலுமே சந்தேகப்படுகிறனான்."

"பாத்தியா பாத்தியா, உந்தக் கொடுமை தாங்காது தானே 'எயிட்ஸ்' வந்திருக்கு?"

**"எ**ன்ன யோசிக்கிறீர்?" லிண்டாவின் அவசரம்.

"இல்லை லிண்டா, நானும்தான் மாறிவிட்டேனோ தெரியாது. ஆனால் உமது நட்பினாலும் சகவாசத்தி னாலும் தான் நான் வாழ்ந்து கொண்டிருந்தேன். உண்மைக் கனேடியன் ஆனேன். ஆனால் நண்பர் விடயத்தில் என்னைச் சுதந்திரமாகச் செயற்பட விடுமன்."

"வகுப்பறை நண்பர்களிலும் பார்க்க வயது கூடியவர்கள் எம்மை மதிப்பார்கள். பிரியமாகக் கவனிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பார்கள். அதுதான் விழாவுக்கு வந்த டேவிட் மீது பிரியம் வந்தது."

லிண்டாவின் முகம் வாடுவதை மாலாவால் சகித்துக் கொள்ளமுடியவில்லை. மாலாவுக்குக் கம்பனி கொடுக்க டேவிட் 'ஆலன்' என்பவனை அழைத்து வந்திருந்தான். அதுதான் மாலாவால் அனுசரித்துப் போகமுடியவில்லை. ஆச்சியின் கதைகளும் சமீபத்திய தமிழ்ச் சமுதாயத் தினரின் தொடர்புகளும் விட்டகுறை தொட்டகுறையான சிந்திக்கும் பருவத்தில் அவளைத் தொற்றிக் கொண்டதே தன் மாற்றத்தின் காரணம் என அவள் புரிந்து கொண்டாள்.

"சரி வா, முதலில் அறிமுகப் படுத்திக் கொள்ளுவம். பிறகு பார்ப்பம்..." என்றாள் மாலா.

"நூல்நிலையத்துக்கு அருகில் டேவிட்டும் ஆலனும் நிற்கிறார்கள். கண்டவுடனேயே மாலாவின் முகம் கறுக்கிறது. அவன் ஒரு கறுவல். காதிலே தூக்கணம் போட்டிருந்தான். தோளைத் தூக்கித் துள்ளித் துள்ளி நடந்தான். மெல்லிய கோபம் வருகிறது. அவளது கனேடிய உள்ளம் ஒரு வெள்ளையை எதிர்பார்த்தது.

"டேவிட் என்ன நினைத்துக் கொண்டான்! நிறத்தவளுக்கு நிறத்தவன் தான் சோடியாகலாமோ?'

ஆலன் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட போதோ, படு நாகரீகமாகக் கை குலுக்கி 'ஹாய்' சொல்கிறாள் மாலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுத்தத் தமிழில் பேசினான் அவன். வேலவன் வேலன் ஆகி, வேலன் ஆலனாகிய கதையை வேடிக்கையாகவே கூறுகிறான். அவன் தோள் குலுக்கலும் சடைவளர்ப்பும் பிடிக்கவேயில்லை. அத்துடன் அவனது பேச்சும் பண்படாத வீதியோர ஆங்கிலமாக இருந்தது. லிண்டாவின் அப்பா போல அல்லது அண்ணா போல கனவான்களாகக் காட்சி அளிப்பவர்களைத்தான் அவளுக்குப் பிடிக்கும். அதனால் அவன் அசிங்கமாகத் தோன்றினான். இவளது மனோ நிலை அவனுக்குப் புரிகிறது. அது அவன் வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது. அது இவளுக்கு ஆறுதலைத் தருகிறது.

வேர்களின் நினைப்பு, ஆச்சியின் பற் தூரிகை, புதிதாகச் சேர்ந்து கொண்டு அடிக்கடி விழிப்புக் கொள்ளும் தமிழர் சமுதாயத் தொடர்புகள் என்பன அவள் சிந்தனைக்கு முற்றுப்புள்ளி வைத்தன.

மனப்போராட்டம் ஓய்ந்தது.

"ஆலன் நீர் தமிழன் என்றபடியால் புரிந்து கொள்வீர் தானே? நான் பல்கலைக் கழகம் சென்றபின் தான் நண்பனைத் தேடுவேன். உங்களுக்கு எங்கடை ஆட்களைத் தெரியும் தானே? கண்டபடி திரியிறன் என்று அறிந்தினமோ படிக்கவும் விடாயினம். காசு கொடுத்து ஒன்றைப் பிடிச்சுக் கட்டி வைச்சிடுவினம்."

ஆலன் கெக்கட்டம் விட்டுச் சிரிக்கிறான். மாலாவும் தன் நகைச் சுவைக்குத் தானே சிரிக்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"ஏதும் உதவி தேவையெனில் டேவிட் மூலம் சொல்லி யனுப்புவன். ஆனால் லிண்டா என்னைப் புரிந்துகொள்ள மாட்டாள். நீர் தான் ஏதாவது சொல்லிச் சமாளித்து விடும். குறை நினைக்க மாட்டீர் தானே?" எனக் கெஞ்சும் குரலில் கேட்கிறாள் மாலா.

அவன் ஆடியாடிக் கொண்டே, "கவலைப் படாதேயும். எனக்கொரு பிலிப்பினோ காதலி இருக்கிறாள். டேவிட் இன் அன்பான ஆக்கினையாலைதான் வந்தேன். அவளுக்கு இண்டைக்குச் சொல்ல வேண்டுமே எனக்கொரு தமிழ் நண்பி இருக்கிறாள் என்று. தலைமயிரைப் பிடிச்சு உலுக்கிக் கன்னத்திலும் படாஸ் என்று ஒன்று விழும். சிலுப்பிக்கொண்டு வந்து விடுவாள்" என நெளிஞ்சு சுருண்டு சுற்றிக் கேலி செய்கிறான்.

இருவருமே வாய்விட்டுச் சிரிக்கிறார்கள். திரும்பிப் பார்த்துத் திருப்தியடைகிறாள் லிண்டா.

'வெள்ளத்துள் அள்ளுண்டு போகமாட்டேன். தமிழன் என அடையாளங்காட்டித் தனித்துவம் பேணுவேன்' என உறுதிப்படுகிறது மாலாவின் உள்ளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8

## உதையும் பயன் தருமா?



அபர்ணாவின் கடிதம் சாரதாவின் கரங்களில் கச கசக்கிறது. திக்பிரமை அடைந் தவள், உடனே தொலைபேசி இலக்கங்களை அழுத்திவிட்டுக் காத்திருக்கிறாள். யாழ்ப்பாணம் கிடைத்தவுடன் குணநாய கத்தை அழைப்பிக்கிறாள்.

இருப்புக் கொள்ளாமல் தவித்தவளுக்கு அவருடைய "ஹலோ" கேட்கின்றது. "நான் சாரதா பேசுகிறேன்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேச்சுத் தொடர முன்னரே, "அபர்ணா சுகமாக இருக்கிறாள் பிள்ளை. ஏதும் அறிந்தோ எடுத்தனீர்?"

"என்ன நடந்தது? இப்ப அவள் எங்கை?" அவள் அவசரம் அவளுக்கு.

"தற்கொலை முயற்சிதான். ஆண்டவன் காப்பாற்றி விட்டான். இப்ப கொழும்பிலை உங்கடை ரீச்சர் வீட்டி லிருந்து மனநல வைத்தியரிடம் சிகிச்சை பெறுகிறாள்."

"ரீச்சர் கவனமாகப் பார்த்து கொள்ளுவா. அபர்ணா வின் கடிதம் ஒன்று இன்றுதான் வந்தது. தற்கொலை முயற்சிக்கு சில மணிகளுக்கு முதலில் எழுதிக் கொழும்பு வந்தவர் யாரிடமோ கொடுத்து விட்டிருக்கிறா. தன் தோழிக்கு யாருக்கும் தெரியாத ஒரு உண்மையை எழுதித் தன் கஷ்டநஷ்டங்களைப் பகிர்ந்து கொண்டு விடை பெறுவதாக வந்தது. பன்னிரண்டு நாளின்பின் தான் வந்து சேர்ந்தது."

"சரி பிள்ளை. அவளுக்கு அவமானம் ஒன்றும் ஏற்பட வில்லை என்பது மாத்திரம் தெரியும். ஆனால் எங்காவது காதல் கீதல் இருந்து இச்சம்பவம் அதனைக் கெடுத்து விட்டதோ தெரியாது."

"அப்படி ஒன்றும் இல்லை. நீங்கள் மனங் குழம்பாதீங்கோ அங்கிள்."

"ரீச்சர் வந்து கூட்டிக்கொண்டு போய் மூன்று நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தான். உமக்கு கடிதம் போடவேணும் என்று அந்தரப் பட்டவ. சரி பிள்ளை அவவுக்கு அங்கை கதையுங்கோ. வைக்கட்டே? உங்களுக்கும் கஷ்டப்பட்டு உழைக்கிற காசல்லே?" என்கிறார் குணநாயகம்.

"பொறுங்கோ அங்கிள்...."

சாரதா பழைய நினைவுகளில் ஒன்றிவிட்டாள். அவளும் அபர்ணாவும் சிறுவயதிலிருந்தே பள்ளித் தோழி களாகவும் ஆப்த சிநேகிதிகளாகவும் இருந்தனர். க.பொ.த. உயர்தரத்தில் சித்தி எய்தியும் போதிய திறமைச் சித்திபெறாத காரணத்தால் அபர்ணா தொண்ட ராசிரியராக பணிபுரிய சாரதா கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்தாள்.

1995ம் ஆண்டு புரட்டாதிமாதம் ஒரு நாள் சுதந்திரப் போராளிகள் குணநாயகத்தாரிடம், "எங்களாலை தற்போது தாக்குப்பிடிக்கேலாது. ஆனபடியால் எம்மை நம்பி இங்கே நிற்காதையுங்கோ. குடாநாட்டை விட்டு வெளியேறிவிடுங்கோ" என்றார்கள். பலாலியிலிருந்து ஆட்டிலறி ஷெல் அடித்து அடித்து மக்களை ஓடோட விரட்டி வீடுகளை எல்லாம் உடைத்து யன்னல் கதவு களையும் பெயர்த்தபடி இராணுவம் பல பாதைகளை களாலும் முன்னேறுகிறது. உயிர்களும் உடைமைகளும் பறிபோகின்றன. ஆனால் யாழ்ப்பாணப் பக்கம் இருப்பவர் களோ இதை அறியாமல் உயிரை விட உடைமைகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முக்கியம் என்று நின்றபோது பெடியளும் சிறிது காரமாகத் தான் நின்று வெளியேற்றினார்கள்.


குணநாயத்தாருக்கு ஓரளவு பின்விளைவுகளை அனுமானிக்கக் கூடியதாக இருந்ததால், உடனேயே அவரும் அவரைச் சேர்ந்தோரும் நேரே கொழும்புக்கு வந்து சேர்ந்து விட்டனர். அடுத்த வருடமே தோழி சாரதா திருமணம் செய்து கொண்டு கனடா வந்துவிட்டாள். மேலும் இருவருடங்கள் சென்றன. யாழ்ப்பாணத்தில் நிம்மதியாக வாழலாமாம். மகிழ்ச்சியான தடையற்ற வாழ்க்கையாம். ஆங்காங்கே சோதனைச் சாவடிகள் இருந்தாலும் பிரச்சனைகள் எதுவுமில்லையாம். 'பெரியவங்கள்' இல்லாததால், 'பண்பாட்டு'ச் சுதந்திரமும் உண்டாம். அதாவது குடிவகை வியாபாரம் – நீலப் படக் காட்சிகள் – காவாலிச் சேட்டைகள் – சீதனம் என்பன. பெடியள் இருந்தால் முடியுமா?

கொழும்பிலே வீடு என்ற பெயரால் கொட்டில்கள்! ஒன்றரை வருட முற்பணம்; காலம் முடியுமுன்னரே வெளி யேற்றப்பட்டு புதிய முற்பணம்; புதிய வாடகை வாங்கப்படும் விநோதம்! அந்த அறையை தகரத்தாலோ காட்போட்டா லோ தடுத்து இரு அறைகள் போன்ற தோற்றத்தைக் கொடுத்து இரட்டிப்பு பணம் அறவிடுதல் சாதாரணம். பணத்துக்காகவும் வீட்டுக்காகவும் அலைவது எல்லாம் அவரைப் 'போ, போ' என்று கலைத்தன. உரிமையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வெளிநாட்டு உதவி செய்யக் கூடியவர்களும் யாரும் இல்லை.

அபர்ணாவுக்கும் எதுவித உத்தியோகமுமில்லை. மேலும் படிக்க வசதியுமில்லை. சிநேகிதிகளை இருத்திக் கதைக்கக்கூட அவமானச் சின்னங்களாக விளங்கும் செத்தைபத்தைகளோடு கூடிய அடைப்புகள். அதுபோன்ற அடைப்புக் குச்சுக்களுள் இருக்கப் படுக்க இடமில்லாமல் வெப்பத்தால் வதங்கி வியர்வை நாற்றமும் சேர காலை மாலைகளில் கோவில்களிலும் கடற்கரையிலும் தெரு முகப்புகளிலும் பொழுது போக்கும் தமிழ்மக்கள்... இந்த அவலங்கள் எல்லாம், 'போ, போ' என விரட்டின.

ஊரில் நல்ல பெரிய வளவு. கறுத்தக் கொழும்பான், அம்பலவி, செம்பாட்டான், அலரி, பச்சைத்தின்னி என வகைக்கு ஒன்றிரண்டு மாமரங்கள், பலா ஒன்று, வாழை, எலுமிச்சை, தென்னை, பனை என உணவுக்குப் பஞ்சம் இல்லை. சுத்தமான காற்றோட்டமுள்ள பெரிய வீடு எல்லாம் அவரை, 'வா, வா' என அழைத்தன.

தகைமைகளும் சேவைக்காலமும் குறைந்தவர் களுக்குக்கூட போட்டியற்ற காரணத்தால் அதியுயர் பதவிகள் கிடைப்பதையும், சென்ற் லோறன்ஸ் தேவாலயத் தடி வம்பளப்புகளிலிருந்து அறிந்து, மகளுக்கான நிரந்தர ஆசிரியர் பதவியையும் ஊர்ஜிதம் செய்து கொண்டு, 'வா, வா' என்றழைத்த யாழ்ப்பாணத்துக்குப் போய்விட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆரம்பத்தில் எல்லாமே நன்றாகத்தான் இருந்தது. காலாற நடந்து படுத்து உருண்டு கொழும்பு உளைச்சல் களைத் தீர்த்துக் கொண்டார். ஒதுக்குப் புறமான கிராமமான படியால் மிருகச் சேட்டைகள் அதிகம் இல்லை என்றார்கள்.

இருபகுதியினதும் பாதுகாப்புக் கருதி அயலவர் சிலர் இவர்கள் வீட்டுக்கு இராப்படுக்கைக்கு வருகி றார்கள். இனி இறப்புவரினும் வீடுவிட்டு ஓடுவதில்லை எனவும் தீர்மானித்துக் கொண்டார் அவர்.

அபர்ணா சைக்கிளில் பாடசாலை சென்று வருவாள். அக்கிராமத்து சில உயர்வகுப்பு மாணவிகள் சிலரும் முன்பின்னாகப் போய் வருவார்கள். வழியிலே சோதனை நிலையங்களைக் கடக்கும் போதுதான் அந்தரம். படை வீரரின் ஆதரவான கதைகளுக்கு இளம்மாணவிகள் போல சிரித்துக் கதைக்கவோ நேர்த்தியான பகிடி சேட்டைகளுக்கு துடுக்காகப் பதில் சொல்லவோ ஏசவோ செய்ய மாட்டாள்.

"எடியே அவங்களும் பல்லிளிச்சு இளிச்சு, இளிச்ச வாயன்களாகிப் போனான்கள்" என்று ஒருத்தி சொல்லிச் சிரிக்க, "எங்களையும் கிரிசாந்திகளாக்கலாம் என்று நினைக்கிறான்களடி. சோதனை முடியட்டன் அவவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நினைச்சு நினைச்சு இவங்கடை குடலை மாலையாகப் போடாட்டி..." என்று சொன்னபடியே அவங்களைப் பார்த்து மற்றவள் சிரிக்க, அவங்களும் பெட்டைகள் தங்களிலை மருண்டு போனாளவை என்று நினைத்து "நல்ல பிள்ளைகள். இந்தக் கொட்டியாவாலை..." என்பதைக் கேட்டுக்கொண்டே எது என்றாலும் பாதிக்கப் படாது, அமைதியாக ஒரு புன்சிரிப்புக் கூட இல்லாமல் ஒரு மதிப்பை வரவழைப்பவளாய் சென்று வந்தாள் அபர்ணா. ஆசிரியர் என்ற மட்டில் அவர்களும் கௌரவமாகத் தான் நடந்து வந்தனர்.

ஒருநாள்

"இன்று நாங்கள் போறதுதானே.. புது ஆளுக வாறது. நாங்க மறக்க மாட்டம். நீங்க?"

"எப்படி மறப்போம் நண்பர்களே! அடுத்த முறை வருவீர்கள் தானே?" என்றாள் ஒருத்தி உண்மையான உணர்வோடு.

"நண்பர்களே, நான் அழப்போறன்" என்று விம்மி விம்மி அழுது காட்டுகிறாள் இன்னொருத்தி. அவர்களும் ஹோ ஹோ எனச் சிரிக்கிறார்கள்.

Bye Bye சொல்லிப் போகிறார்கள் பெண்கள். அபர்ணாவைப் பார்த்து மிக மதிப்புக் கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மென்மையான குரலில்,

"அப்பி யணவா ரீச்சர்" என்கிறார்கள்.

முதன்முதலாக ஏறிட்டு நோக்கிய அவள் "அதிஷ்டம் உண்டாகட்டும்" என வாழ்த்திப் போகிறாள்.

அவர்கள் கண்களில் தென்பட்டது உண்மையான பிரிவுத் துயரமா அல்லது இனிக் கொடுக்கப்பட்டிருக்கும் பணிமீதான கவலையா என யோசித்துக் கொண்டே சைக்கிளை உருட்டுகிறாள்.

"பாவங்களடி இவங்கள் ஒருநாளும் கரைச்சல் படுத்துவதில்லை. நாங்களும் தாளம் போட்டு தப்பினம். இனி எப்படிப்பட்டவர்கள் வாறாங்களோ?" உண்மையான கவலை இவர்களுக்கு.

இதுகளும் பாவங்கள்தாம். ஒருபக்கம் இவர்கள் வயதுக்கேற்ற குறும்புகள், சிரிப்புகள், எதிர்ப்பால் கவர்ச்சிகள், வம்புக்கு நிற்பது... மறுபக்கம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் தீவிரமும், இனவுணர்வும், பொறுப்பும் மேலோங்கி நிற்கிறது. இந்த வயதில் அவளும் இத்தகைய கொடுமைகளை அனுபவித்து வந்தவள் தானே?

நினைவில்...

இந்திய ராணுவக் காலத்தில் பாடசாலை மாணவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களும், சில ஆசிரியர்களும் பாடசாலை போகிறார்கள். சோதனைச் சாவடியில் திடீரென "ஐயோ ரீச்சர்" என அவள் கத்திய குரல் கேட்டு ஆசிரியர் திரும்பிப் பார்க்கிறார்.

"என்னடா செய்கிறாய்?" என ஆசிரியர் அதட்டி பெரியவனுக்கு முறைப்பட, "குண்டு இருக்கிறதோ" எனப் பார்க்கிறேன் என்ற அவனது கேலிப் புன்னகையும், மார்புச் சட்டையில் எண்ணைப் பிசுக்குடன் கூடிய அழுக்கு பதிந்து கிடந்ததும், இத்துடன் பாடசாலை வரமாட்டேன் என அடம் பிடித்து வீடுதிரும்பி யூனிபோமைக் கழற்றிக் குப்பைக்குள் எறிந்ததும் நினைவில் மின்னலடித்தன. நான் ஏன் பிறரைக் கவரும் அழகுடையவளாய் பிறந்தேன் என கவலையோடு நினைத்துக் கொள்வாள்.

"இவளவை அவங்களோடை பகிடி, சேட்டை, ஆட்டம், எங்கடை பிள்ளைகள் காட்டுக்கையிருந்து ஊணுறக்க மில்லாமல் இவங்களைத் துரத்த வழிவகுக்குறானுகள். இஞ்சை மாப்பிள்ளை பிடிக்கிறா-ளவை" எனப் பலரும் முணு முணுப்பதை அவள் அறிவாள்.

இவையெல்லாம் தன் அனுபவத்திலிருந்து தப்பிக் கவே அப்படி நடந்து கொள்கிறார்கள். என்ன புத்திக் கூர்மை! சூழலுக்கு அவர்கள் எவ்வாறு பொருத்தப் பாடு காண்கிறார்கள் என வியந்தாள் அபர்ணா. இவை யெல்லாம் சாரதாவுக்கான கடிதங்களில் விரியும்..

மறுநாள் காலை புதியவர்கள். சோதனை நிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யத்தில் கெடுபிடிகள். அபர்ணா சைக்கிளை விட்டிறங்கி உருட்டிக் கொண்டே போக சைக்கிளை விட்டிட்டு வருமாறு பணிக்கப்படுகிறாள். ஒருவன் அடையாள அட்டையை பார்வையிட மற்றவன் சிறுதடியால் கொண்டையைத் தட்டுகிறான். குமுறிக் கொப்பளித்த கோபத்தை ஒரு பார்வையால் சுட்டுவிட்டு நடக்கிறாள் அவள். சைக்கிளில் ஏறும் இடத்தில் "எடியே உவங்கடை பார்வை சரியில்லை. பயமாய்க்கிடக்கு. அவங்கள் இளம்பெடியள். இவங்கள் முத்திப்பழுத்ததுகள்."

"ஓமடி. ரீச்சர் இஞ்சாலை வர, வேட்டை நாயள் போல வாயைப்பிளந்தபடி நிண்டிட்டு, ஏதோ கதைச்சு விகாரமாய் சிரிக்கிறான்கள், பெம்பிளைகளைக் காணாத காட்டு மிராண்டிகள் போல."

ரீச்சருக்கு ஒரு ஆழ்ந்த அனுதாபப் பார்வையோடு பறக்கிறார்கள்.

ஒன்றரை மணிக்குப் பூட்டப்படும் ஆரம்பப் பாடசாலை அது. அபர்ணாவுக்கு ஏதேதோ காரணமற்ற பயங்களும், ஆபத்து வரும் போல் உள்ளுணர்வும்! இருமணிநேரம் காத்திருந்து அவர்கள் வரவும் போகிறாள்.

வீட்டில் மதியம் இராணுவத்தினர் வந்தனராம். இருவர் வசிப்போர் விபரங்கேட்டார்களாம். மற்றையோர் மாங்காய் தேங்காய் என வளவைத் துவம்சம் செய்தனராம். சளசள வென சிங்களம் பேசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குணத்தாரோடு நன்கு சல்லாபம் செய்தனராம்.

"உங்கள் மகள் இளம் ரோஜா வர்ணச் சேலை உடுத்திருந்தாரா?" என்று கேட்டார்களாம்.

தங்கள் உரையாடலை மொழிபெயர்ந்து தங்களுக்கோ அபர்ணாவுக்கோ ஒரு தீங்கும் வராதென குணத்தார் இறுமாந்திருக்க, அபர்ணாவின் உள்ளமோ திகில் கொண்டிருந்தது. ஏதும் கஷ்டம் ஏற்பட்டால்.....


ஏ. எல். படிக்கும் போது பாலியல் வல்லுறவுபற்றித் தமது அபிமான ஆசிரியை ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். முதிர்கன்னியரான அவர் கூறிய ஒருகூற்று அவள் காதுகளில் ஒலித்தது.

"பிள்ளைகள்! உயிர்நிலை தாக்கப்பட்டால் உயிர் போய்விடும் எனக் கேள்விப்பட்டிருக்கிறேன். உண்மை பொய் எனக்குத் தெரியாது. இக்கட்டான சம்பவங்கள், போராடியும் இயலாமல் நடைபெறத் தொடங்கினால், காலைவிடுவித்து ஓர் உதைவிட்டுப் பார்க்கலாம். அதற்கும் ஏலாவிட்டால் கற்பு கிற்பு என தளர்ந்து போய் விடாமல் இது உடம்பில் ஏற்படும் ஒரு காயந்தானே என அலட்சியப்படுத்திவிட வேண்டும்."

"உயிர் நிலைக்கு ஓர் உதை, உயிர் நிலைக்கு ஓர் உதை" என அபர்ணாவின் உள்ளம் உரத்து நகல் எடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாமம் ஒருமணியிருக்கலாம். குணத்தார் வீட்டிருந்து ஓரே அலறல் சப்தம். ஊர் என்ன செய்யமுடியும்? தத்தம் பாதுகாப்பு தேடி வடலிகள் பத்தைகள் பக்கம் ஓடிச்சென்று மறைந்து கொண்டது.

அம்மாவின் "விடடா விடடா" என்ற அலறல் சப்தத் தோடும் அப்பாவின் சிங்களக் கூப்பாடுகளுடனும் எழுந்த அபர்ணா கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடி வந்தாள். அவளை உள்ளே தள்ளிக் கொண்டே நுழைந்தது ஓர் முரட்டுக் கரம். தன் பலங்கொண்டவரை போராடிப் பிறாண்டியவள் கீழே விழுத்தப்பட்டாள். சாராய நெடியும் அவனது பாரமும் ஒரு மயக்க நிலையைத் தரவே சோர்ந்து போகும் பொழுது...

காதில் "உயிர்நிலைக்கோர் உதை, உயிர் நிலைக்கோர் உதை" எனும் தாரக மந்திரம் ஒலித்தது. இணங்குவது போலச் சிறிது காலை விடுவிக்கவே அவன் தன்னைத் தயார் செய்யவும் தன் பலமெல்லாம் திரட்டி, விட்டாள் ஓர் உதை.

"அநே அம்மே!" என்றலறியபடியே எகிறி விழுந்தான் அவன். மீண்டும் ஒரு பேயலறல். சத்தங்கேட்டு இராணுவம் உள்ளே ஓடிவரவும் வாரிச்சுருட்டிக் கொண்டு எடுத்தாள் ஓட்டம். எவரையுமே கவனிக்காது இடம் புரியா இடத்தில் காடுமேடெல்லாம் ஓடிக் களைத்த நிலையில் ஒருவிளாத்தி மரத்தடிக் கல்மீது அமர்ந்து அருவருப்பு நிறைந்த காலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்லில் தேய்த்துக் கொண்டிருந்தாளே தவிர வீட்டார் பற்றிய யோசனையே இல்லை.

அதிகாலையில், பதுங்கியிருந்த வேறொரு குடும்பம் இவளைக் கண்டு சோகத்திலுறைந்திருந்த அவர்கள் வீட்டுக்குக் கூட்டி வந்தது. தலைகுனிந்து கண்ணீர் சொரிந்து கொண்டிருந்த தாயைக் கண்டு, "அம்மா காய்கறி வெட்டும்போது கையில் காயம் படுகிறதில்லையா? கதவுக்குள் கைவைத்துக்கொண்டு நின்றதைக் கவனிக்காமல் நான் சாத்தியபோது உன்கை நெரித்து இரத்தம் சொரியவில்லையா? அப்படித்தான் இது ஒரு புறக் காயம் என்று நினைக்கப் பழகிக் கொள்ளுங்கோ. உன்னளவிலான கற்பு உன்னோடு இருக்கிறது. இது ஒரு வன்முறைச் செயற்பாடுதான். நீங்கள் தப்பினதே காணும்."

அவளுடைய குரல் ஓங்கி அசாதாரணமாக ஒலித்தது. உரு ஏற்றியவள் மாதிரி விறுவிறென சுடுநீர் வைத்து உள்ளங்காலை உரோஞ்சி உரோஞ்சிக் கழுவிக் கொண்டிருந்தபோது ஜீப் ஒன்று வந்து நிற்கிறது. இரு ராணுவத்தினர் தயங்கித் தயங்கி வந்தார்கள்.

"மாத்தையா மன்னிச்சுக் கொள்ளுங்கோ. அவன் இறந்து விட்டான். போஸ்ட்மோட்டம் நடக்கிறது. எங்களுக்காக நீங்கள் ஒன்று செய்ய வேண்டும். யாரோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓடிவர நாங்கள் கலைத்துக் கொண்டு வந்தபோது இவன் உங்கள் வீட்டின் முன் விழுந்து விட்டான், நாம் உங்களை எழுப்பி தண்ணீர் பெற்றுப் பருக்கினோம் என்று சொல்லி யிருக்கிறோம். உங்களை விசாரிக்க வந்தால் இதையே சொல்லுங்கோ. அப்ப நாங்கள் வாறம்."

எதைச் சொன்னாலென்ன, எங்கடை உயிருக்கு ஒருபோதும் உத்தரவாதமில்லை. மேலதிகத் தொல்லை களைத் தவிர்க்க வேண்டுமாயின் முறைப்பாடு செய்யத் தேவையில்லை. உண்மையைச் சொல்வதுமில்லை என்ற நிலை.

படைவீரனுக்கு ஏற்கனவே நெஞ்சுவலி மாரடைப்பு இருந்தும், இராணுவத்தினரின் மாத சம்பளம் சலுகைகள் அனைத்தும் அவனது ஒருவருட சம்பாத்தியத்துக்கு சமம் என்று தான் சேர்ந்திருந்தான். இதை அபர்ணாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. தன்னால் ஒரு உயிர் போய் விட்டதே எனும் குற்றவுணர்வும், அதே நேரத்தில் அவனது மென்மையான சதைகளை ஸ்பர்சித்த அரிகண்ட உணர்வும், அந்தப்பாதத்தை வெட்டி யெறிந்து ஒரு ஜெயப்பூர் காலைப் போடவேண்டும் எனும் ஆதங்கமும் சேர்த்து அவள் மனநிலை பாதிக்கப்பட்டிருந்தது. எந்நேரமும் காலைக்கழுவிக் கொண்டிருக்கும் அசாதாரண நிலை பெற்றோருக்குப் புரியவில்லை. முதல் நாளன்று கேட்ட போது கலட்டிவழிய ஓடியபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நரகலுக்குள் உழக்கி விட்டதாகக் கூறியிருந்தாள்.

தன்னைக் கடித்த எறும்பைக்கூட கொல்லாத அபர்ணா படைவீரனைக் கொன்றது தானே என்ற குற்றவுணர்வினால் மேலும் மேலும் அலைக்கழிக்கப் பட்டாள். ஒரு நேரத்துக்கு குளித்து சாப்பிட்டு சுயமாகப் பெற்றோரிடம் பேசிக்கொண்டிருப்பாள். அப்படி இரண்டு நாள் நன்றாகவே இருந்தாள். தோழிக்குக் கடிதம் எழுதினாள். பெட்டிக்குள் இருந்த ஜீன்ஸைப் போட்டுக் கொண்டு கடிதத்தைக் கொடுத்து வரச் சென்று வந்தாள். தந்தை மகிழ்ச்சியடைந்தார்.

"**பொ**றுங்கோ அங்கிள். கடிதம் போட்டதுவரை எனக்குத் தெரியும். பின் என்ன நடந்தது?"

"மறுநாள் அதிகாலை. சுருட்டையும் பற்ற வைத்துக் கொண்டு கலட்டிக்கு வந்த ஒரு கிராமத்தவன் மிகத் தூரத்தில் அபர்ணா போய் கொண்டிருந்ததைக் கண்டான். அவள் நிலை பற்றிக் குசுகுசு கதைகள் உலவியபடியால் அவன் உடனே ஓடிச் சென்று உதவிக்கழைக்கவே சிலர் ஓடிச் சென்றனர்.

அவளை எங்கும் காணவில்லை.

கலட்டி முடிய உள்ளது ஒரு தோட்டக் காணி. அதற்கு மேல் அவள் போயிருக்க முடியாது. தேடும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோட்டக் கிணற்றுள் நீர் சலசலப்பு. எட்டிப்பார்த்த ஒரு இளைஞன் படாரெனக் குதித்து விட்டான். அவள் காப்பாற்றப்பட்டு விட்டாள். இந்த விடயம் அறிந்து தான் உங்கள் ரீச்சர் இங்கே வந்து அவவைக் கூட்டிச் சென்று வைத்தியம் செய்விக்கின்றார். நீங்கள் அவவோடை கதைச்சு ஆதரவு கொடுங்கோ பிள்ளை."

"நிச்சயம் இதுதான் நல்லது. நீங்கள் கவலைப் படாதையுங்கோ. அன்ரிக்கு சுகம் சொல்லுங்கோ. அபர்ணாவின் புத்திமதியைக் கடைப்பிடிக்கச் சொல்லுங் கோ. Bye."

**சா**ரதாவின் நினைவில் ஷேக்ஸ்பியர் வருகிறார்.

டங்கான் அரசனை இரகசியமாகக் கொன்ற லேடி மாக்பெத், "Here is the smell of the blood still, all the per fumes of Arabia will not sweeten this little hand oh! oh!" – அதாவது அரேபிய நாட்டு வாசனைப் பொருள்கள் அனைத்தையும் பூசினாலும் இக்கையின் இரத்தமணம் போகாது என நடந்து நடந்து கைகளைக் கழுவும் காட்சி. அவள் மனநோயாளி யாகி இறந்துவிடுகிறாள்.

ஆனால் அபர்ணாவை அப்படி அழிந்து போக விடக் கூடாது.

எப்படி அவன் இறந்தாலும் பரவாயில்லை. இவளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





போராடிய களைப்பில் இதயம் நின்றிருக்கலாம் அல்லது உதையினால் ஏற்பட்ட அதீத நோவாலும் இதயம் நின்றிருக்கலாம். தன்னைக் கொல்லவந்த பசுவையும் கொல்லலாம் தானே? குற்றவுணர்வு பற்றிய சிலநூல்களை வாசித்து அதன் அடிப்படையில் நானும் அவளுடன் கலந்துரையாடலாம் என்று நினைத்துக் கொண்டாள்.

தோழிபோலத் தங்களுடன் அளவளாவும் அந்த விவாகமாகாத ஆசிரியையும் அவர் சொன்னதை வேத வாக்காக எடுத்துக் கொண்ட அபர்ணாவையும், அதன் பெறு பேற்றையும் உள்ளத்தில் நிறைத்து முகத்தில் நம்பிக்கைப் புன்னகை விரிய தொலைபேசியில் 011 94 1... என எண்களைச் சுழற்றுகிறாள் சாரதா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9

## பெற்றவ பெரிசுதான்



'பெம்மா'' என்று அழைத்த படியே ஓடிவருகின்றனர் ஒன்பது வயதும் ஏழு வயதுமான அவள் தங்கை மக்கள் அச்சுதனும் சுரநுதாவும்.

"என்ன காலையிலை காண யில்லை? அம்மாவுக்கு நல்லாய் கரைச்சல் கொடுத்தியளோ?" என்கிறாள் சியாமளா.

"இல்லை பெம்மா மேல்வீட்டுப்பாட்டி எங்களைத் தேவாலயத்துக்கு வரும்படி ஆசையாய் கேக்கிறவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கை விளையாட்டு, பேச்சு, பாட்டு என்று போட்டிகளும் வைக்கிறவையாம். சிற்றுண்டி குளிர்பானம் எல்லாம் தருவினமாம்" – அச்சுதன்.

"எங்களுக்குச் சரியான விருப்பம். சிவராசா அங்கிள் வீட்டு சிவகெங்கா, சிவமகேஸ் எல்லாரும் போறவை. எங்களைச் சமயம் மாற்றிப் போடுவினம் என்று அம்மா விடமாட்டாவாம்" – சுரநுதா.

"இவ சுரநுதா, பாட்டிக்கு சொல்லிப்போட்டா. அவ அம்மாவைக் கூப்பிட்டு, 'நாங்ளெல்லாம் அப்பிடிச் செய்வமோ? எல்லாரும் போகும்போது இதுகள் ஏக்கமாய் பார்த்துக் கொண்டு நிற்குதுகள். சும்மா பொழுது போக்குத் தானே. ஏதோ உங்கள் இஷ்டம்' என்று சொன்னவ. அது தான் அம்மா விட்டவ. எல்லாரும் நல்ல ஆசையாய் கதைச்சவை. நல்ல விளையாட்டுகள் – பரிசுகளும் தந்தவை. பாடின நாங்கள் " தந்தானைத் துதிப்போமே" என்று அச்சுதன் பாட, சுரநுதா "அந்த யேசுநாதர் இரண்டு கைளையும் நீட்டிக் கொண்டு 'பிள்ளைகளே என்னிடம் ஓடி வாருங்கள்' என்கிறார்" என முடித்தாள்.

"கூய்கூய் அது சிலை. இவ மடச்சாம்பிராணி" எனக் கேலி செய்கிறான் அச்சுதன்.

**"பெம்மா ஒரு கதை சொல்லுங்கோ..."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிள்ளைகளுக்குப் புரிந்த அளவில் புரியட்டும்; கேட்டால் விளக்கிவிடலாம் என்று அவளது வரலாற்று ஆய்வில் கண்ட சில தரவுகளைக் கதையாக்கி வடிக்கிறாள் சியாமளா.

அவளுடைய பல்கலைக்கழக மாணவரான இரு மகன்களும் வந்து கண்மறைவில் இருந்து கொண்டார்கள்.

**1869**ம் ஆண்டு. யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்கில், ஆடிஅமாவாசைக்கு இருநாட்களின் முன் அமெரிக்கன் சமயக்குழுவின் காரியாலயத்தில் மிக விசனத்தோடு அமர்ந்திருக்கிறார் பாதிரியார். வகுப்பறையிலிருந்து வந்த வரவுப் பதிவு அவர் சிந்தனையைத் தாக்கியது. கடந்த ஒருவாரகாலமாக மெல்ல மெல்ல வரவு வீழ்ச்சியடைகிறது. அன்று வைத்திய கல்லூரி மாணவர் பத்துப் பேரில் நான்கு பேரே வருகை தந்துள்ளனர்.

அந்த மாணவர்கள் கிறிஸ்தவத்தின் அதி உன்னத விசுவாசிகள். இவர்களின் குடும்பத்தவரும் மதமாற்றம் செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர். உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்கின்றவர்கள். வருகை தந்த மாணவரை விசாரிக்கவும் அவர் மனம் ஒப்பவில்லை. பிறர் விடயங்களில் தலையிடக்கூடாது போன்ற நயத்தக்க நாகரிகங்களைக் கற்றுக் கொடுத்துவிட்டு நாமே தவறலாமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறுமுகம் (நாவலர்) போன்ற யாராவது திமிர் பிடிச்சவங்கள் ஏதும் குள்ளத்தனம் விட்டு இவர்களின் படிப்பைக் கெடுக்கிறான்களோ...

குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்த பாதிரி யாரின் கண்களில் எதிர் விறாந்தையிலே பிலிப்பு காசிப் பிள்ளை ஆசிரியரின் தலை தெரிகிறது. பார்வைகள் சந்திக்கின்றன. வரும்படியான சைகையைப் பெற்றுத் தயங்கித் தயங்கி உள்ளே நுழைகிறார் ஆசிரியர்.

பிலிப் காசிப்பிள்ளை படிக்கிறபோது மதம் மாறி யவர்; மிக விசுவாசமாக யேசுநாதரை வழிபடுகிறவர். சைத்தானை வழிபடுகிற தன் உறவினர்கள் தேவலோக உண்மையை அறிந்து ஆண்டவரை மகிமைப்படுத்தாமல் அஞ்ஞானிகளாய் அல்லலுறுகின்றார்களே எனக் கவலைப் படுவதோடு அவர்களது தொடர்பையும் துண்டித்து விட்டார். ஆனால் நல்ல இருதயமுடைய இப்பாதிரியாரை ஏமாற்றுகிறார்களே என அவருக்குக் கோபமும், உறவி னராச்சே எனக் கோள்வைக்கவும் தயக்கம்.

"பிலிப், கிராமங்களிலை என்ன நடக்கிறது? பள்ளிக் கூடங்களில் வரவு வீழ்ச்சியாக இருக்கிறது."

"தொற்றுக்காய்ச்சல் ஏதும் இருக்குமோ அறியேன் சாமி."

பாதிரியாரும் பிலிப்பை நன்கு அறிவார். விசுவாசமான ஒரு கிறிஸ்தவன். போகிற வருகிற வழி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யெல்லாம் செபித்துக் கொண்டே திரிவார்; அனாவசியக் கதைகள் கோள் மூட்டல்கள், சலுகைகள் பெறுதல் முதலிய தகாத குணங்கள் இல்லாதவர். தானுண்டு தன்வகுப்பு உண்டு என இருந்துவிடுவார். தெளிவான கற்பித்தல்கள் யாரையும் வசப்படுத்தும். ஆனால் ஒரேயொரு விடயத்தில் மன வருத்தம் - யாரையும் மதம் மாறும் வண்ணம் ஆசை காட்டவோ வற்புறுத்துவோ மாட்டார். "தேவனின் இராச்சியத்தில் பிரவேசிக்கும் தகுதி அவர்களுக்குக் கிடைக்கவில்லை போலும்" என்று மௌ-னித்து விடுவார்.

"நாளைக்கும் பார்த்திட்டு வீடுகளுக்குப்போய்ப் பார்ப்பம்" என்கிறார் சுவாமி. பிலிப் காசிப்பிள்ளையின் கண்களில் மின்னி மறைந்த அவநம்பிக்கை அவரைத் துணுக்குற வைத்தது. சிறிது சிந்தித்த பின், "பிலிப், நீண்ட நாட்களாக இந்தப் பட்டிக்காட்டுச் சனங்களின் குலக்குழுக் கொண்டாட்டங்கள் நடனங்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டேனே. அவர்களைக் கவரும் ஏதாவது ஒரு கலையில் எங்கள் மதக் கொள்கைகளைப் புகுத்தி மக்களுக்குப் படைப்போமே" பிலிப்பின் கண்களில் திடீரெனக் கண்ட தெளிவை பாதிரியார் புரிந்து கொண்டார்.

"போத்துக்கேசியர், பள்ளுப்பிரபந்தத்தைப் பார்த்து ஞானப்பள்ளை இயற்றுவித்ததுபோல" என நினைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்ட பிலிப்பு, "நாளை அதிகாலையில் ஒரு விழாத் தொடங்குகிறது. தெல்லிப்பழைக்கு ஒரு மைல் வடக்கே பெரியகோபுரத்தோடு இருக்கும் மாவைக்கந்தன் எனும் சைத்தான் கோவிலில் கலைகளைப் பார்க்கலாம். மூன்று நாட்களாக இரவும் பகலும் நடக்கும்"

"மாவிட்டபுரம் தானே ஓ ஓ" எனப் பலத்துச் சிரிக்கிறார். ஓ ஓ அந்த கீரியின் முகம் குதிரைமுகமாக மாறி பின் மனித முகமாக வந்ததென மந்திர மாயக் கதைகள் கூறுகிறார் களே அந்த சைத்தான் இடமா?"

சிறிது சிந்தித்து விட்டு, "போவம் போவம். எதற்கும் புனித நீரையும் கொண்டு வாரும். சுவாமி வின்சிலோவையும், ரெயிலரையும் தமிழ் தெரிந்த தெல்லிப்பழை மிஷன் சுவாமியையும் கூட்டிக் செல்வோம். யோசையிடம் சொல்லிக் குதிரை வண்டியை ஆயத்தம் செய்யச் சொல்லும்."

**மா**விட்டபுரம் கீரிமலை சவாரிவண்டி கற்சாலையில் நிறுத்தப்பட்டிருந்தன, மாட்டுவண்டிகள். மணிகள் மாலைகளால் அலங்கரிக்கப்பட்ட காளைகள், உள் வளவுகளில் உதறிப் போட்ட வைக்கோல் புல் முதலியவற்றை உண்டு கொண்டு நிற்கின்றன. இவர்களின் குதிரை வண்டி மேலும் போய்க் கொண்டிருந்தது. வீதியில் உயர்தரமுடைய சில குதிரை வண்டிகள் நின்றன. வெல்வெற் திண்டுகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிமாலைகளும் பல வர்ணங்களில் காட்சியளித்தன. அவை பழைய அரச குடும்பத்து வண்டிகள் எனவும் அக்குடும்பங்கள் தாம் அப்போதும் அரசநிர்வாகத்தில் உயர்பதவிகள் வகிப்பவர் எனவும், ஒல்லாந்தர்காலத்தில் மதமாற்றம் செய்த பின்னரே அப்பதவிகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன எனவும், அவர்கள் தம் குடும்பம் அடிமை குடிமைகளோடு மிகச் சங்கையாக அங்கே வருகை தந்திருப்பதாகவும் கூறிய பிலிப்பு மேலும் மணியகாரன் வரிவசூலிப்பாளர் ஓரளவு பணம் படைத்தவர், கிராமத்தில் ஓர் கணிப்புப் பெற்றவர் என்போரே மாட்டுவண்டிக்காரர் எனவும் சொல்லிக் கொண்டார்.

மேற்கு வீதியில் வண்டியைத் திருப்பி வடக்கு வீதிப்பக்கம் இறக்கவும் யாரோ ஒரு நாட்டாண்மைக்காரன் வந்து, "காசி டோய்! மாடுதின்னிப் பறங்கியளைக் கூட்டி வந்திருக்கிறாய், வீதியின் புனிதமே கெட்டுப்போச்சு. மஞ்சள் தெளித்து மாவிலைத் தோரணங்கட்டி நறுமண மூட்டி சுவாமி வலம் வரப்போகிற இப்புனிதமான பிரதேசத்தில் உவங்களும் நீயும் காலடி வைக்கப்படாது. சுவாமி குற்றம் பொறுக்காது. அதோ பளை ஒழுங்கைக் குள் போய் அங்கே நிண்டுபார்!"

பிலிப் காசிப்பிள்ளை வெலவெலத்து இந்த மகிமை பொங்கிய சுவாமிமாரையா இப்படிச் சொன்னார் என ஏங்க, மக்கள் விருப்பப்படி நடந்துதான் மக்களைக் கவரலாம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெள்ளைக்காரத் துரைமாரைக் கண்ட அம்மக்கள் கூட்டம் சிறிது ஒதுங்கி முட்டாமல் தட்டாமல் பார்த்துக் கொண்டது. இவர்களைக் கண்டு ஓடி ஒளிக்கும் சிறுவர்கள் மறுபுறம்.

ஊர்வலம் வந்து கொண்டிருக்கிறது. தேர் புறப்பட்டதற்கான ஆரவாரம், அரோகரா, சங்கின் முழக்கம் எல்லாம் காதில் வந்து மோதுகின்றன. நெருப்புப் பந்துச் சுழல் விளையாட்டு முன்னே வர, தொடர்ந்து சிலம்பு விளையாட்டு, கும்மி, வசந்தனடி, எனக் குழுக்குழுவாக ஊர்வலம் போய்க் கொண்டிருக்கிறது. கரகமாடுங் குழுவில் வேப்பிலை வைத்த நிறை குடத்தைத் தலையில் வைத்துக் கைவீசி வட்டமாக சுழன்றாடும் ஆண்களும் பெண்களும்!

தேர், மூலையால் திரும்பும்போது நடனமாதர் தேரின் முன் தேவார திருவாசக பாராயணத்துக்கு பக்திப்பரவசம் பொங்கும் நடனங்களை ஆடிவருகின்றார்கள். தேரில் வீற்றிருக்கும் கந்தசாமியார் இந்தியாவிலிருந்து வர வழைக்கப்பட்ட மருக்கொழுந்தினாலும் விசேடமான பூக்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்க அவரையே பார்த்தபடி நடனமாதர் பத்துப்பேரும் உருகி நடனம் ஆடுகிறார்கள்.

அவர்களில் நால்வர் ஏற்கனவே கோவிலுக்குரிய பரிவாரங்கள் மற்றவர் அறுவரும் வேதாரண்யத்திலிருந்து தருவிக்கப் பெற்றவர்கள். நம்மவர் இவர்களைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவதாசிகள் என்று சொல்லாமல் மரியாதையும் மதிப்பும் வைத்துச் "சின்னமேளம்" என்பார்கள். உச்சந்தலை தொடக்கம் கால்வரை பளீரென மின்னும் நகைகளையும் ஆடைகளையும் அணிந்து சலங்கைகள் கலகலவெனச் சப்திக்க பாடலும் அபிநயமும் பக்தி வழிந்தோட ஆட்டம் அசைந்து கொண்டு வருகிறது. பொதுமக்கள் நெருக்கி யடிக்காவண்ணம் தொண்டர்கள் கைகளைக் கோர்த்து வேலியாய் நிற்கிறார்கள்.

சின்னமேளத்துக்கு முன்னே நாதஸ்வரக்கச்சேரி வந்து கொண்டிருந்தது. சகல பிரதேசங்களிலுமுள்ள நாதஸ்வர காரரும் மதுரையிலிருந்து தருவிக்கப்பட்ட நாதஸ்வர மேதைகள் நாதத்தைப் பொழிந்து தள்ள, தவில் வித்துவான்கள் ஏற்ற தாளகதியில் வாசித்ததோடு தனி ஆவர்த்தனமாக முழக்கியும் கொண்டிருந்தனர். வீதியின் இருமருங்கும் தலையில் கற்பூரச்சட்டிகளை வைத்துத் தம் ஆன்மாக்களையே நேர்த்திக்கடன் எனும் பெயரால் அர்ப்பணித்து வரும் பெண்களைப் பார்த்து, "பிலிப், இதென்ன கொடுமை! பெண்களின் தலையெல்லாம் நெருப் பெரியுது" என்று பயத்துடன் வினாவுகிறார், உவின்சிலோ.

சேலம், காட்டுப்பட்டி சேலைகளை மார்புக்குக் குறுக்காகக் கட்டி சரிகை, பட்டுநூல் வேலைப்பாடுகள் கொண்ட முகதலைப்பை முன்னே விட்டு மார்பிலே செருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்ட முகதலைப்பை முன்னே விட்டு மார்பிலே செருகி யோரும், சேலைகளின் தலைப்பைத் தாவணியாக இடது தோளில் போட்டு மறுபக்கத்தால் எடுத்துச் சுற்றிப் பின் கொய்யகத்தோடு செருகியோருமாக ஏராளமான பெண்கள் வர, அது வேப்பிலையும் சேர்த்துச் செய்த வளையம் ஒன்றின் மேல் வைத்துள்ள சட்டியிலேயே கற்பூரம் எரிகிறதென்பதை விளக்கினார் பிலிப்பு.

கற்பூரச்சட்டியோடு கண்மூடி வந்த ஒரு பெண் "இஸபெல்லா" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தவள் உள்ளே ஓடி ஆட்களுடன் மறைந்துவிட்டாள். கண்களை நம்பமுடியாத ரெய்லர் சுவாமியே இப்படி அழைத்தவர் ஆவர்.

"ஜீசஸ், உடுவில் விடுதியிலிருந்து படித்த மேரி இஸபெல்லா அல்லவா அவள். ஐந்து வருடம்! எத்தனை சூட்டிகையான பெண். உண்மையான விசுவாசி. எங்களை விட்டுப் போகமாட்டேன் என்று அழுதவள். எனக்கு முறைப்பாடும் செய்தவளல்லவா?"

"அவளுடைய மச்சானையே அவள் கட்டவேணும் என்ற பெற்றார் விருப்பத்துக்கிணங்கத்தானே வட்டுக் கோட்டை யில் படித்த ஹென்றி கிருஷ்ணபிள்ளையை ஏழு பவுண் சீதனமும் கொடுத்து கர்த்தரின் முன்னிலையில் கலியாணம் செய்து வைத்தோம். அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அவர்களின் வீடெங்கே சொல்லு பிலிப்; தம்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களை யாரோ கெடுத்துப் போட்டார்கள் போல..."

"அவள் ஏன் மேலே சட்டையும் போடவில்லை? விடுதியில் நல்ல பழக்கவழக்கங்கள் நாகரீகங்களைக் கற்றுப் போட்டு..."

ஏற்பட்ட அதிர்ச்சியால் ஆளுக்காள் மாறிமாறிக் கேள்விகள் கேட்கிறார்கள். மூச்சுத் திணறுகிறார் பிலிப்பு. நெருங்கிய உறவினர் அவர்.

"இவ்விட சம்பிரதாயப்படி பன்னிரண்டு வயதில் பெண்கள் மேற் சட்டை போட்டுக்கொள்வார்கள். விவாகமாகி முதலாவது குழந்தை பிறந்தவுடன் 'றவிக்கை கழற்றுதல்' என மேற் சட்டை கழற்றப்பட்டுவிடும். அதுதான்...." பிலிப்பைத் தீர்க்கமாகப் பார்க்கிறார்கள்.

"சுவாமி, ஹென்றி கிருஷ்ணபிள்ளை பரம்பரையாக ஒரு பெரிய சைத்தான் கோவிலின் சொந்தக்காரன் ஐயா. மதம் மாறி அவர்கள் அரசாங்கத்துக்காக வரிவசூல் செய்பவர் களுமாவார். வரவர சமுதாயத்தில் கல்வி வளர்வதனால் தம்மை யாரும் மிஞ்சிவிடுவார்களோ எனப் பயந்துதான் கல்வி கற்க வந்தார்கள். அவனுடைய தந்தை இறந்து ஒருவருடமாகிவிட்டது. இப்போ அவன்தான் கோயிலின் உரிமையாளரும் வரிவசூலிப்பாளரும்..."

மனமெல்லாம் சோர்ந்து முகமெல்லாம் கறுக்க திருப்பிப் போவோமா என எண்ணியபடியே மக்களைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓடிவிளையாடும் பையன்கள் எல்லாம் அவர்களின் பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள். சிறுசிறு பங்களிப்பு களையும் செய்கிறார்கள். இவர்களைக் கண்டால் மட்டும் ஓடிஒளிந்து சந்தேகத்தைத் தீர்க்கிறது.

"ஓ யேசுவே! அவர்கள் அறியாமல் செய்கிறார்கள். அவர்களை மன்னியும். இன்னும் எத்தனை துரோகங்களோ எனப்பார்த்து விடுவோமா?"

அடுத்ததாகக் காவடிக்கூட்டம் வருகிறது. செடில் பிடித்தாட்டும் ஆட்டக்காவடிகள். ஏற்ற வாத்தியங்கள் முழங்க காவடிகள் பெரிய இடத்தை அடைத்தவண்ணம் வருகின்றன. ஆச்சரியத்தோடு பார்க்கிறார்கள். அவர்களின் கண்ணில் ஒரு மிரட்சி தோன்றுகிறது. கைகள் முதுகு நெஞ்சு எல்லாம் வெள்ளி நிற வேல் ஊசிகளால் குத்தப்பட்டு இருக்கின்றன. அலகுகள் துளைக்கப்பட்டு வேல்கள் பூட்டப்பட்டிருகின்றன. நாக்கிலும் துளைத் தார்களோ? உள்ளிருந்தும் நாகத்தலை போல் ஏதோ ஒன்று முதுகில் முள்ளந்தண்டுப்பக்கமாக கோக்கப்பட ஊசிகளிருந்து தொடுக்கப்பட்ட கயிறு ஒன்றை ஆட்டுவிப்பவன் கையில் வைத்துச் சுண்டி இழுக்கின்றான். சதை பிய்ந்து வருவது போல ஒன்றரை அங்குலம் மேலே இழுபட்டு அடங்குகிறது. உரு ஏற்றுபவன் உடுக்கடித்து ஆட்டக்காவடிக்கு உசார் கொடுக்கிறான்.

"ஓ பாவம் பாவம்! சாவான பாவம்! காட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சனங்கள்! இப்படி முரட்டுத்தனமான - கொடூரமான இம்சைப்படுத்துகின்ற நேர்த்திக் கடனையா தேவன் கேட்கிறார். என்ன கொடூரமான சமுதாயம் இது. இவர்களைத் திருத்த எம்முன்னோர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார்கள்."

ஒரு பக்திப் பரவசமான மயக்க நிலையில் விறு விறுப்பாக குத்தி எறிந்து சுழன்று குந்தி மயிலாட்டம் ஆடும் ஒருவனின் ஆட்டம் பலரையும் ஈர்க்கிறது. வேப்பிலை கொண்டு அரோகரா சொல்லி உருவேற்ற உடுக்கு குமுறித் திமிற துடுக்கும் மிடுக்கும் நிறைந்த சங்கதிகள் பிறக்கின்றன. மக்கள் பக்திவெள்ளம் வானத்தை மூழ்கடிக்கின்றது.

உவின்ஸிலோ, ரெயிலரின் கையை தன் குளிர்ந்துபோன கரங்களால் இறுக்கி கண்ணால் சைகை செய்கிறார். முகம் பேயறைந்ததுபோல கடுஞ்சிவப்பேறிக் கிடக்கின்றது. ரெய்லர் அங்கே பார்க்கிறார். கன்னத்திலே பெரிய மச்சம், சுதேச வைத்தியர் சின்னத்தம்பியின் மகன் சாமுவேல் சிவப்பிரகாசம்.

"ஐயோ அவனா? டாக்டர் கிறீனது செல்லப்பிள்ளை. வைத்தியக் கல்லூரியின் தலைமை மாணவன். கிறிஸ்தவ ஆராதனைப் பாடல்களைப் பாடினால் மிக உருக்கமாக இருக்கும். நன்றாக செபதபங்களை அனுட்டிப்பதோடு வராத ஆசிரியர்களுக்காக வகுப்பெடுக்கும்படி அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



னால் விதைப்போன் உவமை போன்ற விடயங்களை இவர்களை விடத் தெளிவாகவும் கவர்ச்சி நிறைந்த தாகவும் விளக்குவான்."

உவின்சிலோ பாதிரியாருக்கு தலை சுற்றுகிறது. கோபத்தின் உச்சக்கட்டம் பார்வை யிலிருந்து நழுவிக் கொண்டிருக்கும் பிலிப்பு ஆசிரியரை "என்ன காணும் பிலிப்பு, இவன் சாமுவேல் சிவப் பிரகாசத்தைப்பாரும் இதையெல்லாம் பார்க்கச் சொல்லியோ எம்மைக் கூட்டி வந்தீர். நல்ல தரிசனம். இவ்வளவு காலத்திய எங்களது முயற்சிகளும், தியாகங்களும் கோடிக்கணக்கான பணச்செலவுகளும் விழலாகி விட்டனவா? இந்தச் சனங்கள் நன்றிகெட்ட துரோகிகளா? சந்தர்ப்பவாதிகளா? ஏன் மௌனம்? உமது பெறாமகன் அல்லவா அவன்!" எனக் கேட்டார்.

தயங்கியபடியே "இல்லை சுவாமி," என்ற போது வலியவே வந்து சிக்குப்பட்டார் உடுப்பிட்டி மிஷன் பாட சாலை ஆசிரியர் பீற்றர் கதிர்காமநாதன். மார்பெல்லாம் சந்தன குங்கும பூச்சோடு தோளில் குழந்தை ஒன்றோடு ஒரு பட்டாளம் உறவினர் சூழ ஆரவாரமாக வந்து கொண்டிருந்தவர் எதிரே பாதிரிமாரைக் கண்டு வெலவெலத்துப் போனார்.

ஒரு அசட்டுச் சிரிப்போடு குழந்தையை இறக்கி விட்டிட்டு வார்த்தைகளைக் கண்டு பிடிக்கிறார். அசடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழிய, "இவர்களெல்லாம் என் உறவினர்கள். வேடிக்கை பார்க்கப் போகவேண்டும் என நிர்ப்பந்திச்சினம், அதுதான் சும்மா இந்தப்பக்கம்..." என இழுத்தார்.

கையில் வைத்திருந்த மொட்டையடித்து சந்தனம் பூசப் பெற்ற தலையோடு கூடிய குழந்தையைக் காட்டி, "இவள் தான் என்ரை கடைசி மகள் லூசியா, செபமெல்லாம் நல்லாகச் சொல்லுவாள், எங்கே சொல்லிக்காட்டம்மா" என்கிறார்.

அவர்களது கண்களிலிருந்த வெறுப்பும் கோபமும் 'நீர் போகலாம்' என்ற வெளியேற்றுங் குறிப்பும் நாளை தன் தொழிலின் நிலையற்ற தன்மையைப் புரியவைக்க மெதுவே நடையைக் கட்டினார் அவர்.

யாருக்கும் பேசும் மனநிலையோ தொடர்ந்து வந்த பொம்மலாட்டம் குதிரையாட்டம் போன்றவற்றைப் பார்க்க விருப்பமோ இல்லாதபடியால் திரும்பிவிட்டனர். பெரு மூச்சுக்களும் யேசுவே எனும் முனகல்களும் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தன. மனம் நொந்து தலை கவிழ்ந்து போய்ச் சேர்ந்தனர்.

"பிறகென்னம்மா நடந்தது" அதையும் சொல்லி முடியுங்கோ.

ஏற்கனவே தம்மிடம் படித்து வெளியேறிய இந்து இளைஞரின் விசுவாசமற்ற போக்கு, சமயரீதியாகத் தாம் பெற்ற பலம் அழிக்கப்படுவதாகவும் சூழ்நிலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்தியும் தாக்கமும் தமது சக்திக்கு மீறியதாகவும், இந்து இளைஞரின் சுயநலத்துக்காகவே தமது பாடசாலைகள் இயங்கிவருவதாகவும் அவர்கள் உணர்ந்தனர்.

"மாஸ்டர் "யாழ்ப்பாணத் தேசிய கல்விச் சங்கம்" அதுதான் அந்த அந்த மனிசன் ஆறுமுகம் (நாவலர்) தலைமை தாங்கு கிறானே அது, தொப்பிக்குள் வண்டாகக் குடைகிறது. அவன் ஏதும் புதிய திட்டம் நடத்துகிறானோ?"

பிலிப்புவால் ஒன்றும் சொல்ல முடியவில்லை. ஆறுமுகம் கிறிஸ்தவத்தின் பச்சைத் துரோகி. சைவத்தை நிலை நாட்டுவதில் அவன் ஒரு சக்கரவர்த்தி. தமிழை அழியாமல் காப்பதற்கு இப்ப அவன் ஒரு இளங்கோ. அதிலும் மாமன்ன னாய் வருவான். என்ன செய்வார் அவர்?

"கிறிஸ்தவ மதத்தைப் பரப்பாத இந்து, முஸ்லிம், பௌத்த பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவி நன் கொடையை மறுத்த காரணத்தால் எதிர்ப்பிரசாரம் வலு வடைந்திருப்பதாக மெதடிஸ்றசபை பேர்சிவல் பாதிரியாரும் சொன்னார்."

வின்சிலோ இப்படிக் கூறியதும் ரெய்லர், "திருநீற்றுக் குறியோடுதான் பாடசாலைக்கு வருவேன் என அடம்பிடித்த ஆறுமுகத்தானை 'கெட்டிக்காரன் விட்டுப் பிடிப்போம் கொஞ்சநாளுக்கு' என்று நீங்கள் தானே இடங்கொடுத்தீங்கள்" எனக் கோபித்துவிட்டு, "அதுசரி நான் எப்படி தலைமைக் காரியாலயத்துக்கு இவ்வருட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அறிக்கை அனுப்புவது?" எனக் கேட்டார் பாதிரியார்.

அப்போதுதான் வாய்திறந்த பிலிப்பு ஆசிரியர், "இந்தப் பச்சைத்துரோகிகளைப் பற்றி முறையிட்டு ஏதாவது தண்டனை பெற்றுக் கொடுங்கள்" என்கிறார்.

"அவர் கிடக்கட்டும், அவையள் என்னம்மா எழுதின வை" எனக் கேட்கிறான் அவள் மகன் காந்தன்.

"அதுவா 'அற்பசெலவும் கொடாது மிஷனறிமாரிடம் ஆங்கில உயர்தரக் கல்வியைக் கற்க் கிறிஸ்தவ மதத்தைத் தழுவிய பலர் அரங்கேறி அரசாங்க உத்தியோகம் பெற்று பணவரவு வந்ததும் யேசுவைக் கைவிட்டு, மிஷனறிமார் செய்த பேருதவிகளையும் மறந்து நன்றிகெட்ட பிராணிகளாய் எமக்கு மேலும் இடர் விளைவிக்கின்றனர் ' என எழுதி அனுப்பினார்கள்."

"அப்போ பொஸ்ரனில் இருந்து என்ன பதில் கிடைத்தது?" மகன் கதிரவன்.

"ஏராளமான மாணவரை உடைய வட்டுக்கோட்டைச் செமினறியை மூடி விடுவதாகவும் உண்மையான கிறிஸ்தவர்களை மட்டும் தெரிவுசெய்து தமிழில் கல்வியைத் தொடரும் படியும், பெண்களுக்குக் கொடுக்கப் பட்டு வரும் சீதனப்பணத்தை நிறுத்தும்படியும் பதில் வந்து, சிறிது காலம் அவை செயற்படுத்தப்பட்டன. கதையும் முடிஞ்சது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"பெம்மா, பெம்மா! அப்ப நாங்கள் போகக் கூடாதோ சர்ச்சுக்கு?"

"சாய் நீங்கள் போகலாம். எல்லா மதங்களைப் பற்றியும் அறிந்திருந்தால் தான் எல்லாவற்றிலும் சகிப்பு, மதிப்பு, மரியாதை வரும். எல்லாமே நல்ல குணங்களைத் தானே கூறுகின்றன? ஆனால் ஒரேயொரு வழிபாட்டு முறையில் மட்டும் அன்பும் விசுவாசமும் வேண்டும். பெம்மாவும் அம்மாவும் ஒன்றோ? இல்லைத்தானே? அவ உங்களைப் பெத்தவ இல்லையா? அது மாதிரித்தான். அற்ப சலுகைகளுக்கு ஆசைப்படக் கூடாது."

"அண்ணா, கெதியாய் குக்கிஸ் தாங்கோ. நாங்கள் படிக்கப் போக வேணும்" என்றவாறே அச்சுதன் எழுந்து கொள்ள, காந்தனையும் கதிரவனையும் பார்த்த சுரநுதா, "இவையும் சின்னப்பிள்ளைகள் மாதிரி கதை கேட்க வந்திட்டினம்" என்று சொண்டைச் சுழிக்க, "போடி, உலகத்திலே எல்லாக்கதைகளும் எங்களுக்குத் தெரியுமோ? சரித்திரம் நல்லாய் தெரியாட்டி முட்டாள் தனமாகவல்லோ எழுதவும் பேசவும் தொடங்கி விடுவம்?" கதிரவன் சொல்லவும், காந்தன் பிஸ்கட்ஸ் உடன் வர, பெம்மா ஜுஸ் கொண்டுவர, எனக்கு மஞ்சள் எனக்கு சிவப்பு எனப் போட்டியிடத் தொடங்கினர் பிள்ளைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10

## உருப்படிகள் மூன்று

ஞானகணேசன் வீட்டுக்கு வந்து பஸ்ஸரை அழுத்தவும் கதவு திறக்கப்படுகிறது.

வாயெல்லாம் பல்லாக "ஒரு குட் நியூஸ்" என்கிறாள் ராதிகா.

பூட்ஸ்க்கள் கோட்டுக்களை ஒவ்வொன்றாக இறக்கிக் கொண்டே தன் களைப்பையும் பாராட்டாது வலுக் கட்டாயமாக வரவழைக்க புன்னகையோடு, "என்ன விடயம்?" என்கிறான் கணேஷ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அப்பாட்டை வரப்போகிறாவாம்" என முறைப்பாடு கொடுக்கிறான் நான்கு வயது சாரங்கன்."

"டேய் சத்தம் போடாதை, அப்பா களைச்சுப் போய் வாறார்." இது ஸஹானா. அவளுக்கு ஐந்து வயது.

உடுப்பை மாற்றி முகத்தைக் கழுவி வந்து கதிரையில் இருக்கவும், பைரவியைத் தோளிற் போட்டபடி காப்பியைச் சூடாக்கி கொண்டுவந்து ராதிகா கொடுக்கவும், அதைப் பருகிய பின்தான் அவனுக்கு சிறிது உற்சாகம் வருகிறது.

"என்ன குட்நியூஸ்?" சின்னனைக் கையில் வாங்கி கொண்டு அறைக்குள் போகிறான். கட்டிலில் சரிகிறான்.

"யாரோ மிருதுளாவாம், இந்தியப் பாடகியாம், ஜெயராம் குழுவினரின் அழைப்பின் பேரில் வாறாவாம். முன்னிருக்கையில் இடம் ஒதுக்கி, குடும்ப அனுமதிச் சீட்டு 100 டொலர் அன்பளிப்பாக வந்திருக்கிறது."

"வாவ் யாருக்கோ நாங்கள் இசைப்பிரியர்கள் எனவும் பஞ்சைப்பனாதைகள் என்றும் தெரிந்திருக்கு," என மனம் விட்டுச் சிரிக்கிறான் கணேசன். ராதிகாவும் சேர்ந்து சிரிக்கிறாள்.

தந்தையின் கொடுங்கைக்குள் கிடக்கிறாள் பைரவி. குதிரை விடுகிறான் சாரங்கன். "தொம் தொம் என்ற வயித்திலை குதிக்கிறாய், அப்பா பாவமடா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்கிறாள் சஹானா சிறிது பொறாமைக் குரலில்.

"யார் இந்த ஜெயராம் கம்பனி? எனக்குத் தெரியாதே. டெலிபோன் புத்தகத்திலை பாரும்."

"நான் கேட்டேன். இந்தியாவிலிருந்து தங்களுக்கு அறிவுறுத்தல் வந்ததாம், மூன்று குடும்பங்களுக்கு அன்பளிப்பு ரிக்கட் கொடுக்கும்படி. எங்களுக்கு முகவரி இல்லையாம். கொக்கோக்கோலா கம்பனியில் வேலை பார்க்கும் ஞானகணேசனுக்கு என்றிருந்ததாம். கம்பனியில் போய் விசாரித்து இங்கே கொண்டு வந்து தந்திருக்கிறார்கள்."

"இந்தியாவே தெரியாது. எங்கடை ஆட்கள் அகதி யாய் போயிருந்தால் சரி. எங்க கொண்டு வாரும் பாப்பம்."

விளம்பரத்தைப் பார்க்கிறான். தம்பூராவுடன் இருக்கும் அப்பெண் தெய்வநாயகியல்லவா? திடீரென அவன் முகம் மலர்ந்து இளமையாகிறது. அவன் கண்களில் கனவு மிதக்கிறது.

"இதுகள் ஒரு நிமிசம் நிம்மதியாய் இருக்க விடாதுகள். எனப் பிள்ளைகளைச் சினக்கவே, "வாங்கோ முகங்கழுவி சாமி கும்பிட்டு T.V. பாப்பம்" என்று பிள்ளைகளை இழுத்த வாறே வெளியேறுகிறாள் ராதிகா.

"அவசரப்படாதையும் நானும் வாறன் சமையலுக்கு" என்றவாறே அப்படத்தை உற்றுப்பார்க்கிறான் அவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அவசரப்படாதையும் நானும் வாறன் சமையலுக்கு" என்றவாறே அப்படத்தை உற்றுப்பார்க்கிறான் அவன்.

அந்த நிமிடம் அவனுக்குத் தேவை தனிமை. அதை அவனுக்குக் கொடுக்காவிட்டால் அவளின் உளவியல் பட்டத்தால் என்ன லாபம்? அவன் ஒரு கற்பனாவாதி, இடைக்கிடை மெய்மறந்து கற்பனா லோகத்தில் சஞ்சரிப்பான். தன்னுள் சிரித்துக் கொண்டாள்.


அவள் வேலையால் பிள்ளைகளையும் எடுத்துக் கொண்டு வீடு வந்து விடுவாள். காப்பி டிபன் தயாரித்து பிள்ளைகளும் தானுமாய் இளம் பசியாறவும் அவன் வருவான். எல்லாருமாக கட்டிலிலே புரண்டு பிள்ளை களோடு விளையாடி அலுப்புத் தீர்த்து பின்னரே சமையலுக்குச் செல்வார்கள். பாடம் சொல்லிக் கொடுப் பார்கள். எல்லாமேதான்.

ராதிகா ஒருநாளும் அவனது கடந்த காலத்தை அறிய முயல்வதில்லை. அவள் நிதர்சனவாதி. அதையதை அப்படியே எடுத்துக் கொள்பவள். அவனுடைய கடந்தகால மர்மம் அவனை வாட்டுவதை அவள் அறிவாள். இசையில் வல்லவளான தெய்வநாயகி பற்றி... அவனது விருப்பமான பாடல்கள் பற்றிச் சொல்லியிருக்கிறான். தான் வெளிநாடு வந்துவிட்டதாகவும் நாட்டு நிலைமையில் அவர்கள் என்ன ஆனார்களோ எனத் தெரியாதெனவும் கூறியிருக்கிறான்.

ராதிகா கணேசனைக் சந்தித்த சம்பவமே விசித்திர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானது. நடந்த இசைக்கச்சேரி சம்பந்தமான ஒரு விமர்சனக் கருத்தரங்கத்தில் ஏற்பட்ட மோதல். இசையின் சங்கீதமே இனிமையாக ரசிக்கத்தக்கதாக இருக்க வேண்டும். சாஹித்தியம் அவசியமில்லை என்பது அவள் வாதம். சங்கீத ரசனை இருப்பதனால் மொழியின்றியும் ஹிந்துஸ்தானி சங்கீதத்தையும், ஏன் மேற்கத்திய சங்கீதத்தையும் தன்னால் மெய்மறந்து ரசிக்க முடியுமாம். இசை உலகப் பொது மொழியாம். சேர்ந்து சிரிக்கவும், சேர்ந்து அழவும் முடியுமாம். கூட்டத்தைப் பார்க்கப் போன அவனுக்கு பிரபலங்களோடு வாதிடும் அவளைப் பார்த்து அதிசயம்! வேண்டுமென்றே சீண்டுவதற்காக...

சாஹித்தியம் இல்லாமல் இசையே இருக்கமுடியாது; பொருளை உணர்ந்து பாடினால்தான் அதில் *பாவம்* வரும். அதனால் இசை நயம் கூடும். ரசிகர்களைத் தன்வயப் படுத்தும் உயிர்நாடி அது. ஒரு கலைஞனின் திறமை சீரிய சாகித்தியத்தை மக்களின் இதயத்தில் உணரவைப்பது தான் என மிடுக்காகவே கூறினான்.

அவனை உற்றுப் பார்த்தவாறே, "இராக ஆலாபனை செய்வதும் பாடகனுக்கு கற்பனை வளம் தான்" என்றாள்.

தொடர்ந்து அனுசுரம், அந்நிய சுரம் வாதங்கள். அவனுக்கு ஒரே பிரமிப்பு. ஒரு ஆர்வம். கூட்டம் முடிந்தபின் கதவருகே காத்திருந்தான் கணேசன். அவளோ கதிரை-களை அடுக்கி காப்பிப் பாத்திரங்களை கழுவும் இடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வைத்து உதவி செய்து விட்டே புறப்பட்டாள். ஆம் வீடும் வடிவாக வைத்திருப்பாளாக்கும்.

"என்ன, வேறும் ஏதாவது சந்தேகமோ?"

"இதிலை என்ன சந்தேகம்? அது உங்கள் கொள்கை; இது என் கொள்கை. அவ்வளவே" சேர்ந்தே நடந்தனர்.

"காரிலா வந்தீர்கள்? எங்கே நிறுத்தி வைத்திருக் கிறீர்கள்?"

"ஆமாம், அது நீட்டுக் கார். இங்கே நிறுத்த முடியாது. அதோ அங்கே" என புகையிரத நிலையத்தைக் காட்டினான்.

"சரி அப்போ வருகிறேன்" என இரண்டு அடி எட்டி நடந்தான்.

"சொறி, அப்ப உங்கடை காரிலை நானும் வரலாமா? " இந்தப் பகிடி அவனுக்கு நல்லாகப் பிடித்துக் கொண்டது வாய்விட்டே சிரித்தான்.

தொடர்ந்த நட்பில் அவனுடைய வாழ்வில் இசையுடன் தொடர்புடைய ஒரு காதலி இருந்திருக்கிறாள் ஏனோ கல்யாணம் நடைபெறவில்லை என்பதை யூகித்துக் கொண்டாள் ராதிகா.

**க**ணேசனின் மனம் ஒவ்வொருநாளும் தெய்வநாயகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யை நினைத்து அழும். ஆரம்பத்தில் ஐந்தாறு வருடங்களாகத் தான் செய்தது பிழையோ என ஏங்கியதும், அக்காதலை மறக்க முடியாது தத்தளித்ததும் அவனை வருத்தின. அந்தக் காதற் தேவதை எந்த முரடன் கையில் அகப்பட்டுத் தவிக்கிறதோ; பிரமிக்கத்தக்க குரல் வளம் தாலாட்டுப் பாடுவதுடன் நின்று விட்டதோ என அறியான். தன் காதற் தியாகம் சரியான பலனைக் கொடுக்கவேண்டுமென இறைவனை இறைஞ்சுவான்.

வட இலங்கைச் சங்கீத சபையின் பரீட்சைகளுக்கு வரும் தெய்வநாயகியின் குரல்வளம் அவனை ஈர்த்தது. உச்சஸ்தாயியில் மிக அனாயாசமாக அவள் குரல் வழுக்கிக் கொண்டு சஞ்சரிக்கும். முகத்தில் பச்சிளங் குழந்தையின் நிர்மலமான ஒளி வீசும். மேடைகளில் அவள் பாடும்போது இவன் மெய்மறந்து கேட்டிருப்பான். அவன் உள்ளம் அவளைப் பீடத்தில் வைத்து உபசரிக்கும். நடந்த காலை வருடிவிடவேண்டும் போல் - அவள் உடலையும் உணர்வுகளையும் பாதுகாக்க வேண்டும் போல் - பாடும் போது அவள் காலடியில் அமர்ந்து மெய்மறந்து கேட்டிருப்பது போல, சாரீரவளத்தைப் பெருக்குவதிலும் சங்கதிகளைக் கற்பனை பண்ணுவதிலும் அவள் வாழ்நாள் பூரா செலவிடவேண்டும் போல, வீட்டில் ஒரு வேலையும் செய்யவிடக்கூடாது போல, அப்படி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தேவதா விசுவாசம்.

தனக்கு ஜானகி எனப் பெயர் வைக்குமாறு அம்மா சொல்லிவிட, தாத்தா தனது தாயின் பெயர் தெய்வானை யை வைக்க இணுவில் அம்மாமார், "இதென்ன அப்பு தெய்வானை, தெய்வநாயகி என வைப்போம் என உருவாகிய தன் பெயர் தனக்கு விருப்பமில்லை எனக் குழந்தை போலச் சொல்வாள். அதுதான் மிருதுளா ஆயிற்றோ. நாளடைவில் அவள்மீது கொண்ட காதல் ஒருவித ஆக்கிரமிப்புத் தன்மையை அவனிடம் உருவாக்கியது.

பெரியவர்கள் யாரும் அவளைப் பாராட்டிப் புகழ்ந்து பேசினால் பொறாமை வருகிறது. கிழடுகள் உண்மையாய் சங்கீதத்தை ரசித்தார்களா என எண்ணம் குறுக்கு வழி யிற் போனது. "அவளை அப்படியே பிடிச்சு விழுங்க வேணும் போலிருக்கிறது" எனக் கனவில் மிதந்த ஒரு இளைஞனின் கன்னத்தைப் பதம் பார்த்தன அவன் கைகள். இவள் மட்டும் இந்தியாவில் பிறந்திருக்க வேணும். ஒரு எம்.எஸ். ஆகவோ ஒரு பட்டம்மாளாகவோ விளங்கி யிருப்பாள் என இசைப்பிரியர்கள் பேசிக் கொண்டார்கள்.

அவளுக்கும் அவள் பெற்றோருக்கும் அவனை நன்றாக பிடித்திருந்தது. அவர்களைக் கேட்குமுன் தன் தாயைக் கலந்தாலோசித்தான்.

அம்மா இளம்வயதில் நல்லதொரு பாடகி. விவா-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கமான நாள்முதலா அப்பா அதற்கொரு முற்றுப்புள்ளி வைத்தவர். தந்தை வீட்டில் இல்லாத சமயம் அம்மா தாளம் போட்டுக் கொண்டு கண்ணை மூடிக்கொண்டு பாடினால் அழும் தங்கை கூட வாயை மூடிக்கேட்டிருப்பாள்.

விரத நாட்களில் தேவார திருவாசகங்கள் பாடிப்பாடிச் சமைத்தல் கூட, "உங்கை என்ன சமா வைக்கிறியே? உப்பை இரண்டு தரம் போடப்போறாய் கவனம்" என எரிந்து விழுவார். மற்றும்படி இருவரும் நல்ல தேனும் பாலுமாக இருப்பார்கள். அப்பா இரவு வேலைக்கு போகும் நேரங்களில் வெளி விறாந்தையில் பாயை விரித்து நிலவில் அம்மா பாடுவா. "குயிலே குமரன் வரக் கூவுவாய்", "வண்டாடும் சோலை தனிலே", "கண்ணன் வரக் காணேனே" எனப்பாடுவா.

மறுநாள் அயலவர் கேட்பர், "றேடியோவில் எந்த ஸ்ரேசனிலை பாடியது நல்ல பாட்டுக்கள் நாமும் தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை" என்பர்.

நீண்ட காலத்தின் பின் ஒரு நாள் வசதி கிடைத்ததும் அவசரமாக வேலைகளை முடித்துவிட்டு பாடத் தொடங்கினர். மேலே போகும்போது குரல் கரகரக்கத் தொடங்கிவிட்டது. ஒத்துழைக்கவில்லை. அம்மா மௌன மாக இருந்தா. கண்ணில் நீர் கோர்த்தது.

"என்னம்மா என்னம்மா" என அவன் கெஞ்சினான். "குரல் பிசிறடிக்குது" என விம்மினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பிசிறு என்றால் என்னம்மா? கறள் பிடிக்குது. சாதகம் பண்ணா விட்டால் அப்படித்தான் குரல் வளைந்து கொடுக்காது. அதன்பின் அம்மாவில் ஆத்மார்த்தமான மகிழ்ச்சி கெட்டுப் போய்விட்டது. ஏதோ பறிகொடுத்தவள் போல...

"சுடர் விட்டுப் பிரகாசிக்கக் கூடிய ஒரு இசைப் பெட்டகத்தை விவாகம் எனும் கூட்டில் முடக்கி விடுவதை நான் விரும்பவில்லை. எங்கள் காலத்தில் நாம் மேடை களில் பாடமுடியாது. இசைக் குடும்பத்தினரே பாடலாம். ஆனால் இப்போது அப்படியல்ல" எனக்கூறிய தாயாருக்கு நான் எல்லாத்துக்கும் விட்டுக் கொடுப்பேன் என்கிறான் கணேசன்.

"சரி சரி ஒன்று செய். இதெல்லாத்தையும் தூரவைத்து விட்டு நடுநிலையில் நின்று உன் வாழ்க்கைக்கு அமையும் மனைவி எப்படிப்பட்டவளா யிருக்க வேண்டும் என அன்றாடக் கடமைகளிலிருந்து பொதுக்கடமைகள் வரை ஒரு பட்டியல் எழுது. காட்ஸ், விளையாட்டு, காரில் சுற்றுதல், குழந்தை வளர்ப்பு எல்லாம். அதன்பின் தெய்வநாயகி அத்தோடு எத்தனைவீதம் பொருந்துகிறாள் என்று பார். அறுபது சதவீதம் பொருந்தினாலும் நான் ஒப்புக் கொள்கிறேன். ஏனெனில் காதல் மட்டும் வாழ்க்கைத் துணையாகாது. கப்பும் வளையும் பொறுக்கும்போதும் தாக்குப் பிடிக்குமா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என்றாள் அம்மா.

இருபது வீதம் கூடத் தேறவில்லை. தானே தனியாக வாழ்க்கையை நடத்துவது போலவும் அவள்மீது தான் கொண்ட பாசம் ஒரு தெய்வீக பக்தி போலவும், அவளை இருத்தி வைத்துத் தான் பூசிப்பது போலவும் பிரசவ வலியால் அவள் வருந்துவதைக் கூடப் பொறுக்காதவன் போலவும்...

சிறிது காலமாகவே கணேசனின் மாற்றத்தைப் புரிந்து கொண்ட தெய்வா தானாகவே பேச்சை எடுத்தாள்.

"அப்பா அம்மா எனக்கு கலியாணம் பேசப் போகினமாம்."

மௌனம்! கண்பேசும் ஆவல் புரியாததோ என இராகத்தை ஹம்மிங் செய்கிறாள். "உங்கள் முற்று என்ன?" என நேரடியாகவே கேட்கிறாள்.

மௌனம்!

நீண்ட மௌனத்தின் பின் "இசையறியாதவன் உன்னைக் கொண்டு செல்ல நான் விடமாட்டேன். உன் இசைஞானத்தை உலகம் அனுபவிக்க வேண்டும். என் தெய்வீகப் பிரேமையை உன்னை மணந்து கெடுத்துக் கொள்ளவும் மாட்டேன். என் அம்மாவின் இசையுணர்வு அப்பாவால் கெட்டு விட்டது. மனைவியாக வரவேண்டும் என்ற அவா துளிர்த்து நின்ற போது நான் உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





புனித்த தன்மையை ஏற்றிக் கொண்டேன். என் Possessiveness அதாவது ஆக்கிரமிப்பு இசை ரசனையை மூழ்கடித்துவிடும்."

அவளை அவன் பேச விடவில்லை.

"நீ என் இசை ராணி." பூசைக்குரியவள். நீ இந்தியா சென்று நல்லதொரு குருவிடம் பயிற்சி பெற்று கலாபூஷணமாக வருவதானால் அதற்குரிய முழுச் செலவையும் நான் பொறுப்பேன்."

பல வாதப் பிரதிவாதங்களின் பின் தெய்வா அழுது கொண்டே ஓடிவிட்டாள். நாட்டு நிலைமை உடனேயே அவர்களைப் பிரித்து வைக்கவும் அவன் வெளிநாடு வந்து விட்டான். அவர்கள் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுவிட்டமை கேள்விப்பட்டான்.

ஐந்து வருடங்களின் பின்னரேயே ராதிகாவின் அறிமுகம். ஒரு நாள் ஒரு பொதுநிகழ்ச்சியின்போது இசைத்தட்டில் கல்கி இயற்றி எம்.எஸ். பாடிய "காற்றினிலே வரும் கீதம்" தொடங்கியது. "Wait, Wait" என்றவன் தன்னை மறந்து அதிலேயே லயித்து மெய்மறந்து விட்டான். ராதிகாவுக்கு அதிசயம். சுற்றுச் சூழலை மறந்த நிலை. அப்போது தான் அவன் ஒரு கற்பனாவாதி எனக் கண்டு கொண்டாள். அவள் அப்படியல்ல. நிதர்சனப் போக்கு வாழ்வியல் போக்குக்கேற்ப அதாவது இசையின் ஆகர்ண சக்திக்கு உட்பட்டாலும் உணர்வை இழப்பவ ளல்ல. பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முடிந்ததும் எதிரில் அவள் நிற்பதைப் பார்த்து "சொறி சொறி ஆயிரம் தடவையாகிலும் கேட்டிருப்பேன். அமரகாவியம் இல்லையா?"

"அதுசரி. இதென்ன கன்னிப்பெண் ஒன்று கண்டுக்காத இளைஞன் முன் தவமிருக்குது என்று இத்தனை சனமும்..." தொடர்ந்து தனிமையில் தான் மெய் மறக்கலாம் என்று வாதத்தின் முடிவாயிற்று.

மனைவியின் இலக்கணம். பொருத்தம் பார்க்கப்பட்டது. வழியும் காட்டுகிறாள். வீட்டையும் பேணுவாள். உத்தி யோகமும் செய்கிறாள்.

எனவே, அவள், மனைவியானாள். Marriage of Convenience வசதிக்கான விவாகம். போகப்போக அதுவே காதலுமாகியது.

கனவு கலைந்து. கையில் விளம்பரத்துடன் ஓடி வந்தான். "ராது, ராது" எனப் பின்புறமாகக் கட்டிப் பிடித்துத் தட்டாமாலை சுற்றினான்.

" தெய்வநாயகி தான் மிருதுளா என் இலட்சியம் நிறைவேறி விட்டது. என் கனவு நனவாகியது. நாம் நிச்சயம் கச்சேரிக்குப் போவோம். முன் வரிசையிலிருந்து உற்சாகப்படுத்துவோம். குறுகுறுத்த என் குற்றமுள்ள மனதுக்கு இன்றுதான் நிம்மதி."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ராதிகா அவன் அன்பிலும் மகிழ்ச்சியிலும் திக்கு முக்காடிப் போனாள். அந்த இசையரசியைப் பார்ப்பதில் அளவற்ற தாகம் கொண்டாள்.

ஏ, ராது! அவள் இனித் தனக்கு விருப்பமான ஒரு இசை வல்லுநனை அல்லது இசைப் பிரியனைக் கட்டிக் கொள்ளட்டும். என் தெய்வா எனக்கு எப்போதும் பூசைக்குரிய தெய்வந்தான். அவள் கோடிக்கணக்கான மக்களை இசை இன்பத்தில் ஆழ்த்தட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11

# மீண்டும் வரவேற்கிறது



இன்று இங்கே இளைஞர் மத்தியில் ஆவேசமும் அவசரமும் காணப்படுகின்றன. தமது தாய் நாட்டு இளைஞர்களின் தன்னலமற்ற சேவை உயிர்த் தியாகமாக முடிவதைக்கண்டு பெருமிதம் அடைகின்றனர். அதனாலே உற்சாகமும் எழுச்சியும் உடையவராகத் திகழ்கின்றனர்.

இச்சிறுகதையில் வரும் பெண்ணும் இவர்களைப் போலவே ஒரு கட்டிளமைப் பெண்ணாக, பெற்றோரின் செல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளாக, அக்காமார் அண்ணாமாரின் இனிய தங்கையாக ஆடிப்பாடித் திரிந்தவள். ஆக்கிரமிப்பாளரின் கொடுமை கண்டு சிந்திக்கப் பழகியவள்.

அவள் அங்கே க.பொ.த தர வகுப்பில் படித்துக் கொண்டிருந்த போது காங்கேசந்துறை கிராமத்தில் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் ஒரு மோதல். ஆனால் அரச படையினரோ கப்பலிலிருந்தும், துறை முகத்திலிருந்தும், பலாலியிலிருந்தும் ஷெல்லடிகளை மேற்கொள்கின்றனர். அவை ஆங்காங்கே விழுந்து வெடித்து சில உயிர்களையும் உடமைகளையும் சேதப்படுத்தின. பக்கவாத நோயால் பரிதவிக்கும் தந்தையையும் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்ட தாயையும் விட்டு ஓட முடியாத நிலையில், அவளும் வீட்டை விட்டு ஓட மறுக்கிறாள். அவள் கண் முன்னேயே அவர்களது பின்வீடு ஓடெல்லாம் உடைந்து கூரை நொருங்கி விழுகிறது.

யாரோ ஒரு புண்ணியவான் தந்தையை சைக்கிளில் ஏற்றிச் செல்லவே தாயும் மகளும் வீட்டையும் பூட்டிக் கொண்டு விரைகிறார்கள். "வந்தால் வா, போனால் போ" என விழுந்து வெடிக்கும் ஷெல்லில் அகப்பட்டு இறந்தவர் களையும் காயப்பட்டவர்களையும் தாண்டி ஓடுகிறார்கள். மாவைக்கந்தன் ஆலயக்கோபுரத்துள் சிறிது நேரம் ஆறுகிறார்கள். ஷெல்லடி ஓய்ந்தன. கணப்பொழுதில்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீண்டும் தெருவுக்கு வருகிறார்கள். அந்த மாணவி, தான் வந்த பாதையைத் திரும்பிப் பார்க்கிறார். இளமையும், வளமும், செந்தளிப்பும், என்றும் மறையாத புன்னகை யையும், இயல்பாகவே பெற்றிருந்த அந்த முகம் செத்துக் கிடக்கின்றது. சந்தியிலே நாட்டப்பட்ட "காங்கேசந்துறை வரவேற்கின்றது" என்னும் எல்லைக் கல், அவள் துன்பத்தை மேலும் கூட்டுகிறது. திடீரென முகத்தில் ஒரு வைராக்கியம்.

நான் பிறந்த வீடு, வளர்ந்த வளவு, பயின்ற பாடசாலை ஓடிவிளையாடிய ஊர் அத்தனையும், என் உயிர் எம் உடலை ஏன் நான் நேசிக்கும் இந்த மண்ணையும் விட்டு துரத்தியடிக்கப்படுகின்றோம். ஓ! இந்தப் பிரச்சனையை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லக் கூடாது. எங்கள் பிற்சந்ததிகள் உரிமையோடு பாதுகாப்பாக வாழ வேண்டும்.

உறுதியை உரமாக்கிச் சென்றவள் பெற்றோரோடு ஊர் ஊராக அலைகிறாள். நீர்வேலியில் கண்ணாடித் தொழிற் சாலைக்கு எதிரேயுள்ள வீட்டில் வந்து சேர்ந்தபோது முன்பே தெல்லிப்பளை, கொக்குவில், உடுவில் ஆகிய இடங்களில் நண்பர்களோடும் உறவினர்களோடும் தங்கிப் பல அசௌகரியங்களை அனுபவித்ததுகளை ஆறியது போல உணர்ந்தாள். ஒரே பஸ்ஸில் பாடசாலை போகலாம். அயலவர் உதவியோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தனியே இருப்பது அப்பாவுக்கு மகா சந்தோஷம். பங்கர் ஒன்று வெட்டப்பட்டு மின்சார வெளிச்சமும் போடப்பட்டது. பெற்றோர் பங்கரில் இறங்க மாட்டார்கள். ஹெலி சந்தியில் பிப்ரிக்கலிபரால் அடிக்கும் போது அவள் மேலே வந்து இவர்களோடு நிற்பாள். மற்றும் படி பங்கருக்குள்ளேயே படிப்பை மேற்கொள்வாள்.

அந்தமாணவி நிறையத் தகவல்களைப் பாடசாலையில் சேர்த்துக் கொண்டாள் போலும். வானொலியையும், சில கசற்றுகளும் SOLT பத்திரிகையையும் உள்ளே எடுத்துச் செல்வாள். இவளுடைய குழந்தைத் தன்மை மாறி காற்று வேறுபக்கம் வீசத்தொடங்கியதைக் கண்ட தாயார், அவளைச் சித்தார்த்தனின் வளர்ப்புக்குள்ளாக்கினார். வெளிநாடு போக இருப்பதால் திறமைச் சித்திகளோடு சித்தி பெறவேண்டும். பின்னர் அங்கேபோய் கல்வியைத் தொடரலாம் என ஆசைகாட்டுவார் தாயார். வெளியே போய் வந்து "பெடியளின்" வீரசாகசங்களைத் தகப்பனுக்குச் சொல்லும் போதும் அயலவர் வந்து பழைய தாக்குதல்கள் பற்றிப் பேசும் போதும் அந்த மாணவியை அந்த இடத்துக்கு வராமல் பார்த்துக் கொள்வார் அந்தத் தாயார். ஆனால் அவள் உள்ளறையிலிருந்து கேட்டிருப்பாள்.

வடமராட்சித் தாக்குதலின் போது அத்தெருவால் உடுத்த உடையோடும் குழந்தைகளோடும் அலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யலையாகச் சென்றுகொண்டிருந்த மக்களைப் பார்த்து சிந்தனை வசப்பட்டாள். தன்னுள்ளத்தைக் கடினமாக்கிக் கொண்டாள். அன்றொடு அவள் சிரிப்பையும் மறந்தாள். பவுடர், பொட்டு, அழகான உடை என்பவற்றையும் அன்றே விட்டாள்....

ஒருநாள் ஆகாயத்தில் விநோதமான ஒரு சப்தம் கேட்கிறது. வெளியே வந்து பார்த்தால் மூன்றுசிறு விமானங்கள் சிவப்புநிறம் சுழன்றும் மேலும் கீழுமாக வித்தை காட்டுகின்றன. வெளிநாட்டுப் பிளேன், குண்டு போட வந்திருக்கிறது எனப் பதட்டப்பட்டு மகளை பங்கருள் போகுமாறு அலறுகிறாள் அன்னை. மிக அமைதியாக முற்றத்தில் நின்றுவேடிக்கை பார்க்கிறாள் அவள். மேற்கிலிருந்து கிழக்கே பேரிரைச்சலுடன் மிகப் பெரிய விமானம் ஒன்றுஸ்லோ மோஷனில் வருகிறது. அதனைச் சுற்றிச் சுற்றி மிராஜ் விமானங்கள் (சுப்பசொனிக்) குதியள் போடுகின்றன. கடைக்குமேலால் போய், குளத்தையும் தாண்டித் தரவைக்குள் பொதி யொன்றைப் பிரசவித்து விட்டு நகர்கிறது அந்த விமானம்.

"அது இந்திய விமானம். எங்களுக்குச் சாப்பாடு போடுது. சந்தோஷமா அம்மா?"

"உனக்கென்னென்று தெரியும்?"

"பெடியளின் அறிவித்தல் வானொலியில் எவ் எம் அலைவரிசையில் கேட்டனான்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அப்ப ஏன் எங்களுக்கு முன்பே சொல்லவில்லை? என்ரை இதயம் almost நிண்டுபோச்சு."

"உங்கடை அந்தரத்தைப் பார்ப்பம் என்றுதான். இப்ப இந்தியா தலையிட்டிருக்கு. உங்களுக்கு அதுதானே விருப்பம்? (சிரிக்கிறாள்) ஆனால் இனித்தான் பிரச்சனை கூடப்போகிறது."

எப்படி இவர்களுக்கு இவையெல்லாம் தெரிய வருகின்றன? பொத்திப் பொத்தி வளர்த்தாலும், எங்கள் கண் முன்னே நடமாடினாலும்.... இது கல்லூரியில் தான் தொடர்பு கிடைக்கிறது போல. பரீட்சை முடிந்ததும் கொழும்புக்கு அனுப்பிவிட வேண்டியதுதான் எனத் தீவிரமாக மாறுமுன் தன் பெண்ணைக் காப்பாற்ற விழைகிறாள் தாய்.

ராஜீவுக்கும் 'குள்ளநரி' ஜெயவர்த்தனாவுக்கும் ஒப்பந்தம் கைச்சாத்தகிறது. இந்தியாவின் மைந்தன் நாட்டைப் பிரித்துத் தரப்போறான் என்பது பெற்றோரின் மகிழ்ச்சி; அவளோ முகம்வாட தீவிர சிந்தனையுடன் திரி கிறாள். இரவு தொலைக்காட்சியில் இருநாட்டுத் தலைவர் களின் கைச்சாத்து ஒளிபரப்பப்படுகிறது. தொடர்ந்து ராணுவ அணிவகுப்பு நடைபெறுகிறது. படித்துக் கொண்டு இருந்த அந்த மாணவி எழுந்து வந்து கருத்தோடு பார்த்துக் கொண்டு நின்றாள். சிங்களப் படைவீரன் ஒருவன் துப்பாக்கியால் ராஜீவைத் தாக்கு கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்பாவும் அம்மாவும் "ஐயோ" என்றனர். அவளோ தன்னை மறந்து "அட தப்பிற்றார்" என்கிறாள். அதிர்ச்சியடைந்து "என்ன சொன்னாய்" என்று கத்து கிறாள் அம்மா. அவள் மெதுவே நழுவுகிறாள்.

"அந்தமோடனுக்குத்தான் அவர் யாரென்று தெரிய வில்லை. உனக்குமா? அவன்ரை குலமென்ன, கோத்திர மென்ன, படிப்பென்ன, பதவி என்ன?" ஏச்சு வாங்கிக் கொண்டே வன்மத்துடன் போய்விட்டாள், அவள்.

நேசக்கரம் நீட்டிய இந்தியா தன் பாடைகளை அனுப்பித் தமிழ் ஈழத்தைத் துவம்சம் செய்தபோதுதான் தமது மகளின் "ஐயோ தப்பிற்றான்" என்ற கோப வார்த்தைகளின் அர்த்தம் புரிந்து இளையோரின் எதிர்வு கூறலை அங்கீகரிக்க வைத்தது.

கட்டிளமைப் பருவத்திலும் சிங்காரம் ஏதுமின்றித் தவ வாழ்க்கை மேற்கொண்ட அம்மாணவி சித்தார்த்த புத்தியுடன் குறிக்கோள் ஒன்றே எனும் ஞானம் பெற்றுச் சென்று விட்டாள். அவளது டயறியில் உடன் படிக்கை கைச்சாத்தான தினத்தன்று (1987ம் ஆண்டு) "ஒரு பெரிய வல்லரசு இந்திய சமுத்திரத்தில் தன் இறைமையையும் ஆதிக்கத்தையும் காப்பாற்றிக் கொள்வதற்காக தங்கள் சுதந்திரத்துக்காகப் போராடும் ஒரு சிறிய நாட்டின் குரல் வளையில் மிதித்து விட்டது. இன்று Black Day" என எழுதப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அந்த மாணவி இன்று இருபத்தொன்பது வயது நிறைந்த மங்கையாக களம் பல கண்ட வீராங்கனையாக, கொமாண்டோப் பிரிவில் படை நடத்துகிறார். ஆட்டிலறி ஷெல்களை ஏவும் திசை தூரம் கணிதம் அறிந்தவளாய், நுட்பங்கள் தேர்ந்தவளாய், யாவராலும் மதிக்கப்படக் கூடிய திறமைகள் வாய்ந்தவளாய். சக வீராங்கனைகளின் அன்புக்குரியவளாய் வாய்ப் பேச்சற்று "புலன்களை ஒருமுகப்படுத்தி ஒரு நிலையில் குவித்து மாமுனிவர்களின் ஞானநிலைபோல அந்தப்பிரமாண்டமான யந்திரத்தின் விசைகளில் கண் குத்தி நிற்கிறாள்.

"துறைமுகம் திறக்கப்பட வேண்டுமானால் திறப்புக்கு நேரே புள்ளடி போடுங்கள்" என அனுப்பிவைக்கப்பட்ட பிரதிநிதிகளால் கொண்டு வரப்பட்ட துறைமுகம், இலங்கை இந்தியப் படைகள் வந்திறங்கி அடிக்கவும் பெண்கள் கற்பைச் சூறையாடவும், பிணமும் இரத்தமும் சேர்ந்த குழையலை நிலத்துக்கு உரமாக்கிச் செல்லவும் காரணமாயிருந்தது. பன்னிரண்டு வருடங்களுக்கு முன் சாமம் சாமமாக இரத்தத்தில் சறுக்கி, பிணங்களைத் தாண்டிக் கடந்து அம்மக்கள் ஓடிய ஓட்டம், அவள் உந்தியில் உதித்து மூக்காலும் கண்களாலும் சிந்திய வெப்பக் காற்றோடு அந்த எல்லைக்கல் காட்சியில் வந்து போகின்றது. உறுதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கரங்கள் செயற்படுகின்றன.

அன்று அவள் பார்த்த வாணவேடிக்கை இன்று அவர்களால் நிகழ்த்தப்படுகிறது. நிலைகுத்திய கண்ணோடு உடம்பு உலுக்கி ஓய்கிறது. தோழர் தோழியரின் ஆரவாரமான பாராட்டுகளின் மத்தியில் அவள் கீழிறங்கி ஒரு ஒதுக்குபுறமான கல்லில் அமர்கிறாள். மீண்டும் வருகிறோம் எம் தாயே!

திடீரென முகம் இருளுகிறது. இருகரங்களும் முகத்தை மூடுகின்றன. அவள் தடுக்க முடியாத அளவில் விசித்து விசித்து அழுகிறாள். முழந்தாளில் முகம் புதைத்து தன்னுள் கரைந்து கரைந்து கண்ணீர் வடிக்கிறாள். ஏன் அழுகிறாள்? ஏன்? ஏன்? ஏன்?

காடுகரம்பையெல்லாம் அல்லுற்று வாழும் தன் கிராமங்களை நினைத்தா? கடல் கடந்து சென்று தமக்கென ஒரு வாழ்வை அமைத்துக் கொண்டு விட்ட சுற்றஞ் சூழலுக்காகதான்தொலைத்து விட்ட தன் இளமைப் பருவத்தைப் பெற்றார். சகோதரரின் அரவணைப்பும் விளையாட்டும் இனி வரப் போவதில்லை என்ற தவிப்பினாலா?

அல்ல.

தன் மண்ணை தன் தாயை - தன் உயிரான நிலத்தை நோக்கித் தன் பாழுங்கரங்களை நீட்ட வைத்து விட்டான்களே பாவிகள் என்றுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இல்லை இல்லை.


இது தாயைச் சத்திரசிகிச்சை செய்து காப்பாற்றவே என வெற்றிக் கோஷமிடுகின்றனர் நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12

## சங்கமத்தை நோக்கி



"நான் களைச்சுப் போனன் சுகுணா, நான் களைச்சுப் போனன். என்ன செய்கிற தென்றே எனக்குத் தெரிய வில்லை. ஒட்டி இருக்கவும் முடியவில்லை வெட்டிப் பிரியவும் இயல வில்லை."

அது ஒரு பொது இடமாயி ருந்தும் கடந்த ஒரு மணி நேரமாக ஆற்றாமையோடு தன் கைகளைப் பற்றியவாறே வெம் பியழும் தோழியைப் பார்த்துக் கண்கலங்கி நின்றாள் சுகுணா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குரலிலும் ஆயாசம், உடலிலும் இளைப்பு; முகத்திலும் சுருக்கம், கண்களில் நிராசையின் ஒழுக்கு.

குயிலியா இவள்? என்னதொரு ஆரவாரமான பெண், முகத்தில் ஒரு செந்தளிப்பும் துருதுருப்பும். பல்கலை விவேகி. பேச்சில் ஒரு அழுத்தம். பொழிப்பு - அலட்டல் இல்லை. சுகுணாவை விடக் கெட்டிக்காரி. தொடர்ந்து படித்திருந்தால் இந்த ஸ்கலர்சிப் குயிலிக்கல்லவா கிடைத்திருக்கும். பாவம் எதையும் மனதில் வைத்தி ருக்கத் தெரியாத வெகுளிப் பெண் அவள். அத்தகைய நல்ல குண விசேடங்கள் பொருந்திய அவள் ஒருசில வருடங்களுள் எப்படி மாறிவிட்டாள்? திருமணம் என்பது ஒருபெருஞ் சுமையோ?

அதுவும் யோகநாதனை இப்படிச் சொல்கிறாளே, நம்ப முடியவில்லை. யோகநாதன் அவனது பகுதியில் தப்பிப் பிறந்தவன் மாதிரி. கொஞ்சம் நாகரீகமாகப் பிறரோடு பழகுவான். பண்பாகவும் அன்பாகவும் மரியாதை கொடுத்தும், யார் எதைச் சொன்னாலும் சிரித்து மழுப்பி சிநேகமாக இருக்கவும் தெண்டிப்பவன்.

எல்லாரும் ஒன்றாகத்தான் படித்தவர்கள். பொது இடங்கள் பாடசாலைகளில் சமமாகத் தான் பழகுவார்கள். எந்தச் சமூகப்பாகுபாடுகளும் மாணவரிடையே கூர்மை யாக இருப்பதில்லை. நல்ல நண்பர்களாகவும் இருப்பார்கள்.

"ஏன் குயிலி விழுந்து விழுந்து காதலிச்சியள்? இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதி உறவினரையும் வெறுத்தும் பகைத்தும் கலியாணம் செய்தீர்கள், பிள்ளைகளுமாச்சு. எப்ப தொடக்கம் உந்தப் போக்கு? என்ன பிரச்சனை?"

"அது தெரிஞ்சால் ஏன் உனக்குக் கவிழ்த்துக் கொட்டப் போறன். அப்பவும் ஆச்சி சொன்னவ வேற வேற சூழலும் வளர்ந்தது. ஆசை அறுபதுநாள் மோகம் முப்பது நாள். பிறகு பிரச்சனைகள் வரக்கூடும். ஆயிரங்காலத்துப் பயிர். யோசித்து மறந்துவிடு' என்று ஐயோ அனுபவப் பட்டவர்களின் பேச்சைக் கேட்டேனா?"

மாணவிகள் மத்தியிலே யோகனுக்கு ஒரு செல்வாக்கு. அவன் கணக்கில் புலி, ஆறுதலாக விளக்கி உதவி செய்வான். குயிலியும் சூரிதான். ஆனால் பொறுமை இல்லை. சொல்லிக் கொடுப்பது விளங்கா விட்டால் ஏசி விடுவாள். அதனால் சகமாணவிகளுக்கும் அவளிடம் கேட்கப் பயம்.

ஒருநாள் மாணவிகள் மத்தியில் விளையாட்டுப் போட்டி. குயிலிக்கு எதிர்போட்டியாளர்களை யோகன் உற்சாகப் படுத்திக் கொண்டு நின்றான். அவர்கள் வென்றதும் இவனே இவர்களைப் பார்த்து கேலிசெய்தும், அவர்களைப் பார்த்து ஆரவாரம் செய்து புகழ்ந்து ஒடித்திரியவும் ஆத்திர மடைந்து குயிலி "ஏதோ தான் நின்று விளையாடியவர் மாதிரியல்லோ குதித்து கூத்தடிக்கிறார் எனும் பொருள் படும் பழமொழி ஒன்றை "வண்ணாரக் கூத்தானும் தன்னாரவாரம்" என்று விட்டாள். அவன் சிரித்துக் கொண்டே ஒடிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"எடியே என்ன பழமொழி சொன்னனீ. இப்படியா அவனை இன்சல்ட் பண்ணுறது? பார் எல்லாரும் உன்னை முறைச்சுப் பாக்கினம்."

சுகுணா சொல்லவும் குயிலி திகைத்து விட்டாள். நினைத்தே பாராது - எதுவித அர்த்தமும் பொதியாது சொன்னது ஒரு நல்ல ஜீவனை எவ்வாறு பாதித்திருக்கும்? ஏன் தான் சாதிப் பெயர்களோடு கூடிய பழமொழிகளை வைத்திருக்கிறார்களோ? அவள் துடித்தே போய்விட்டாள். இரவு முழுவதும் நித்திரையின்றித் தவித்தாள். எப்படி என் வாயால் வழுக்கிற்று. என்னை நன்கு அறிந்த சுகுணாவே நான் வேணுமென்று சொன்னதாகக் கருதிய போது யோகராசாவின் மனம் எவ்வாறு புண்பட்டிருக்கும்?

மறுநாள் பாடசாலைக்கு வந்ததும் மன்னிப்பு கேட்காத குறையாக அவனோடு நட்புப் பாராட்டினாள். அவனுமோ அந்தக் கூற்றே தன் காதில் விழாத மாதிரி நடந்து கொண்டான். நாளடைவில் பச்சாத்தாபம் பரிதாபம் என்பன காதலுக்கு நெருங்கிய உறவாமே. இருவரும் காதலர் என ஊருலகம் பேசியது. வீடுகள் இரண்டும் விழித்துக் கொண்டன.

"மகனே யோகன், உயர்கல்வி படிப்பிக்க கூடிய சக்தி என்னிடமில்லை. என்னாலை இனித் தொழில் செய்ய முடியாது. உன்னைப் பரம்பரைத் தொழிலுக்கு விடவும் எனக்கு விருப்பமில்லை. பத்தாம் வகுப்பு பாஸ் செய்தது காணும். கொழும்பு பக்கம் போய் ஏதாவது உத்தியோகம் தேடு தம்பி."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழைத்தந்தை தன்னாலே எதிர்கொள்ள முடியாத பெரும் பிரச்சனை ஒன்றுக்கு இதுதான் வழி எனக் கண்டு கொண்டமை, ஆரவாரமில்லாமல் ஏற்றுக் கொள்ளப் பட்டது. யோகனுக்குப் பெரும் ஏமாற்றம்தான்.

உசார் நிலையில் அடுத்த கட்டத்துக்கு வியூகம் அமைத்துக் கொண்டிருந்த குயிலி வீட்டுக்காரரும் இவன் போவதை அறிந்தபின் அவளைத் தொடர்ந்து படிக்க அனுமதியளித்தனர். குயிலியும் தோழியளும் உயர்தர வகுப்புக்குச் சென்றனர். குயிலியின் சுதந்திரத்துக்கு கட்டுப்பாடுகளும் பிடிகளும் அதிகரித்திருந்தன.

தோழி சுகுணா திருகோணமலையிலிருந்து வந்து நல்ல கல்வி பெறவேண்டும் என்பதற்காகப் பாட்டி வீட்டில் தங்கிப் படிப்பவள். தூர்ந்து போய்விட்ட காதல் என பெற்றார் நினைத்திருந்த காதல், தோழியின் மூலமாக வளர்ந்து தடித்து வேரூன்றியது.

பரீட்சை எழுதியதும் பகிரங்கமாகவே ஊரில் விவா-கம் முடித்தனர். அவமானம் தாங்காத குயிலியின் பெற்றார் கதிர்காமம் சென்று மடத்திலே தங்கி விட்டனர் இரண்டு மாதம். பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கு ஒருசில புள்ளிகளே குறைவானதால் ஆசிரியத் தொழிலை மேற் கொண்ட குயிலி சமூகத்தில் எதிர்நீச்சல் போட்டுக் கொண்டிருந்தாள். யோகனுக்கு 'புளியங் கொம்பைப்' பிடித்தான் எனும் அவச்சொல் நாரசாரமாகக் கேட்டுக் கொண்டே இருக்க - கனடாவுக்குப் பயணமானார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அத்தனை காதலோடு இணைந்து பிணைந்து வாழ்கிறோம். குழந்தை பிறந்தும் அவர்தான் உதவி முழுவேலையும் செய்கிறார் என்றெல்லாம் பக்கம் பக்கமாக எழுதிப் போட்டு.........."

"நானே அவரை ஊக்குவித்து அவருடைய பெற்றாரையும் சகோதரியையும் ஸ்பொன்ஸர் பண்ணி விட்டோம். அவர்கள் வந்த பின் தான் சின்னவன் பிறந்தது. எங்களுக்கும் பெரிய ஆறுதல்."

"அவர்கள் ஏதும் கொழுவி வைக்கிறார்களோ அவர்களின் பேச்சைக் கேட்டு ஆடுகிறாரோ?"

"சாய், சும்மா சொல்லக் கூடாது. அவை வேறை இடத்திலை இருக்கினம். என்னை நல்ல கௌரவமாக நடத்துகினம். என்னைக் கேட்டே எல்லாம் செய்வினம். 'இந்தச் சிடுமூஞ்சி அண்ணையை எப்படி விரும்பினியள் மச்சாள்" என்று அவருக்கு முன்னாலேயே தங்கை கேட்டாள்."

"அப்ப என்ன, ஏதும் பாவிக்கிறதோ... குடிகிடி?"

"சீச்சீ, நானாகிலும் பிள்ளைப்பேற்றோடு றெட்வைன், பிறண்டி எடுக்கிறன். எந்த குளிரென்றாலென்ன நான் வற்புறுத்தினாலும் திரும்பியே பார்க்க மாட்டார்.' குடிச்சாலும் பரவாயில்லையே, உள் மனதுக்குள்ளே கிடக்கிறது எல்லாம் வெளியே வரும். அதன்படி அனுசரித்து வாழலாம்."

"ஏதோ மனப் புகைச்சல் இருக்கு, வெளியே சொல்ல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயலாதபடி. அது உள்ளே இருந்து வளர்ந்து கொண்டே போகுது? தன்னுள் தானே மாய்ந்து மாய்ந்து மனநிலை பாதிக்கப்படப் போகுது."

"அதுதான் சுகுணா. நீர் தோழி என்றது மாத்திரமல்ல" யோகனின் ஒரேயொரு நண்பியும் நீர்தான். அத்தோடு 'சைக்கியாற்றி பெலோஷிப்' செய்ய வந்துள்ளதால் அவிழ்த்து விட்டன் அல்லது என் மனதுள்ளேயே அமுக்கி அமுக்கி வாழ்ந்திருப்பன்"

"புரட்சித் திருமணம் எனப் பத்திரிகைகளில் கொட்டை எழுத்தில் வர பெற்றார் ஒடி ஒளிக்க துணிஞ்சு நிண்டனீங்கள், எப்படி எப்படி? பணக் கஷ்டம் ஏதாவது?

"அப்படியும் இல்லை; அவர் இரண்டு வேலை பாத்துக் கொண்டு என்னைப் படிக்க விட்டவர். இப்ப எனக்கு நல்ல சம்பளம். அவரைப் படிக்கச் சொல்லிக் கெஞ்சியும் மறுத்து விட்டார். அவைக்கு ஒரு வீடியோக் கடை போட்டுக் குடுத்திருக்கிறம். பிரச்சனை இல்லை."

இப்ப கொஞ்சக் காலமாகத் தான் தன்னுள் தானே ஒடுக்கம். அமசடக்கு. வாயால் விழும் ஓரிரு வார்த்தை களே ராமபாணம் மாதிரி உடலையும் உள்ளத்தையும் ஊடுருவிச் சல்லடையாகத் துளைத்து விடும். அந்த ரத்தம் வாய் வழியாக வார்த்தைகளாக மணிக் கணக்கில் கொட்டும். நான் என்ன செய்ய? வஞ்சனை நிறைந்த வார்த்தைகளைப் பொறுக்க முடிவதில்லை. எனவே ஏச்சுத் தான் கொடுப்பன்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





"தாம்பத்திய உறவுகள் என்ன மாதிரி?"

"இனிக் குழந்தைகள் காணும் என்ற சாட்டு. இந்த நவீன உலகில் இருந்து கொண்டு உது ஒரு சாட்டே? எப்பவும் நான் தான் விட்டுக் கொடுத்துக் கொடுத்துப் பழக்கிப் போட்டன். வாய் காட்டினால் உடனே இரங்குகிற குணம் தானே என்னுடையது. உனக்குத் தெரியும் தானே அவரை? ஒரு மேம்போக்கு. Who cares என்ற மாதிரித்தான் அப்போதும். உதுகளுக்கு எனக்கு நேரமும் இல்லை சக்தியுமில்லை. வீட்டைப் பாப்பேனோ குழந்தைகளைப் பாப்பேனோ. முந்தி அவர் சில வேலைகளைச் செய்ய நான் அவருடைய சப்பாத்துக்கும் பொலிஷ் போட்டு உடை கழுவி அழுத்தி வைப்பன். இப்பவும் ஒன்றும் உதவி செய்யாத போதும் வழக்கம் போல நான் செய்கிறன், அந்தச் சந்தோஷம் ஒன்று காணும்.

"சில சமயம் யோசிப்பன். பிள்ளைகளையும் கொண்டு இரண்டு மாதம் இந்தியாப் பக்கம் போய் பிரிந்திருந்து பார்ப்பம். அப்பவாவது உணர்ந்து எங்களுக்காக ஏங்க மாட்டாரோ என்று. ஆனால் இந்தப் பாழும் மனம் ஒரு நாளாயினும் அவன் பாவியைக் காணா விட்டாலும் அடித்துக் கொள்ளுவது பரபரக்குது. ஏங்குது, படபடப்பில் இதயம் நின்று விடுமோ என்ற மாதிரி."

ஒரே மூச்சில் கதைத்து முடித்த குயிலியை வியப்போடு பார்த்துக் கொண்டு நிற்கிறாள் சுகுணா. இந்த அன்புள்ளத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லையா அல்லது இதையும் தூக்கியடிப்பதான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏதும் கிலேசங்கள் உண்டா?.

சுகுணாவின் கூர்மையான புத்தியில் எல்லாரும் கண்ட யோகன் மாத்திரமல்ல, வேறொரு யோகனையும் அவளுக்குத் தெரியும். அவன் உள்ளம் ஆழமானது. கண்டு பிடிக்க முடியாதது. மேலே dont care type என்றதொரு நடிப்பு. ஆனால் உள்ளே வேடம் போட்டாவது மேனிலை அடைய வேண்டும் என்ற துடிப்பு இருந்தது. கணப் பொழுதுகளில் கூம்பிய முகத்தை மாற்றிச் சிரித்து சமாளிப்பதைக் கண்டிருக்கிறாள். இந்தக் காதலினால் தான் தன் படிப்பு நிறுத்தப்பட்டதெனும் குறை பட்டப் படிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டால் குயிலியின் தகப்பனார் உதவியிருப்பார். அப்படி அவர் பல ஏழைகளுக்கு பல்கலைக் கழகப் படிப்புக்குப் பண உதவி செய்தவர். ஆனால் அவரது மடியிலேயே கை வைத்து விட்டானே எனும் ஆதங்கத்தை சுகுணாவுக்குக் கூறியிருக்கிறான்.

தன் பெற்றார் மீது குயிலி காட்டும் அன்பும் அவர்களது பரிவு பாசமும் அவனைப் பொறாமை கொள்ள வைத்திருக் கலாம். அவளுடைய உத்தியோகம் அவனுக்குத் தாழ்வுணர்ச்சியைத் தந்திருக்கலாம். குயிலி தன் பெற்றோரைப் பற்றி எதுவும் பேசாமல் இருந்தாலுங் கூட 'ஓ சந்திரசேகர முதலி வம்சம் அல்லோ' என்று அவர்களை இழுத்துப் பொருமுவது, அவன் இன்னும் மறந்து போன அந்த ஏற்றத்தாழ்வைப் பின்னணியில் வைத்துப் பார்க்கும் தாழ்வு மனப்பான்மையோ, அன்புக்குரியவளை ஆட்டிப் படைக்கும் sadist ஆக ஏன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாறினான்?. வீட்டு வேலைகளில் ஒத்தாசையாக இராமல் ஒத்துழையாமை தொடங்கிய போதும் குயிலி கெஞ்சிப் போகாமல் தானே முழுவதும் செயற்பட்டாள். இதுவும் அவனுக்கு வீம்பைக் கொடுத்திருக்கலாம்.

வெளுத்தது எல்லாம் பால் என நினைக்கும் வஞ்சகம் பொறாமை எதுவுமேயற்ற குயிலியின் பரந்த மனப்பான் மையும் போக்கும் அவளின் நிம்மதிக்காக ஏதாவது செய்ய வேண்டும் போலவும் இருந்தது.

"குயிலி, நான் யோகநாதனைத் தனிமையில் சந்திக்க வேண்டும். முன்பே நாம் சந்தித்து விட்டோம் என்பதை நான் சொல்ல மாட்டன். நீரும் அப்படியே இரும்."


தன் சொல்லை அவன் கேட்பான் என்பது சுகுணா அறிவாள். காதற் பிரச்சனையில் அவளையே சதம் என்றிருந்தவன். குயிலிக்கு என்ன அன்பளிப்புகள் வாங்குவது என்பதிலிருந்து தனக்குமே சோப், தைலம், வாசனைப் பொருள் உடைகளின் நிறம் என்பன பற்றிக் கூட அவளிடமே ஆலோசனை பெற்றவன். குயிலியும்கூட தனித்தனியே தமது பலங்களையும் பலவீனங்களையும் சுகுணாவுடன் பகிர்ந்து கொள்வார்களே தவிர, தத்தமக்குள்ளே மூச்!

சுகுணா, குயிலி வீட்டுக்குப் போன போது யோகநாதன் மட்டும் இருந்தான்.

"அடடேடேடே நீங்களா! எப்ப வந்தனீங்கள் கனடாவுக்கு? போனிலை உங்கள் நண்பிதான் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொன்ன போது நான் ஏன் ஈழத்தை நினைச்சன்? கனடாவிலே பெரிய கூட்டாளி என்று ஒருவரும் இல்லையே. யாரோ குடும்ப நண்பர் மனைவியாக்கும் என்று நினைத்து, 'குயிலி இப்ப இங்கை இல்லை' என்று சொல்ல முந்தி போனை வைச்சிட்டியள்'

"இருங்கோ இருங்கோ. எப்ப வந்தனீங்கள். எங்களுக்குத் தெரியாதே? ஏன் அறிவிக்கவில்லை? இயலுமான உதவிகள் செய்திருப் போமே. ஒருவவேளை குயிலிக்குத் தெரிந்திருக்குமோ?"

அவனுடைய பரபரப்பும், முகத்தில் வீசிய ஒளியும், சந்தோஷமும், சிரிப்பும் அவளுக்குப் பிடித்திருந்தன.

"இல்லை யோகன், இலங்கையில் M.B.B.S முடிச்சிட்டன். ஒரு ஸ்கொலர்ஷிப் கிடைச்சது. அம்மாவை விட்டிட்டு வர யோசனையாய் இருந்தது. கடைசி நேரத்தில் முடிவெடுத்து அலுவல் பார்க்கவே சரியாய் இருந்தது. உங்களுக்குப் போட்ட கடிதமும் திரும்பி வந்தது. யாரிடமும் விசாரிக்க முடியவில்லை. வந்து ஒரு மாதம் ஆயிற்று. டெலிபோன் வழிகாட்டியில் நூறு யோக நாதன்கள் தங்கைதான் எடுத்தாள். சரியான இடம் தான் என அறிஞ்சு கொண்டு யாரென்று சொல்லாமல் வைச்சிட்டன்."

"முகவரி மாறி விட்டது அது தான். குயிலி, பிள்ளைகளுக்குத தலைமயிர் வெட்டக் கூட்டிப் போய் விட்டா. நான் கொண்டு போனால் என்னை உலைச்சுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போடுங்கள். "தாயாரே மோளாரே" எனக் குழறத் தொடங்கி விடுங்கள், நான் கண்டிப்பதில்லை. அதனால் இடம் கண்டிட்டினம். உங்கடை சிநேகிதி வடிவாகக் ஹாண்டில் பண்ணுவா".

அவனது சிரிப்பும் மகிழ்ச்சியும் இப்பதான் மனிசியோடு சல்லாபித்துக் கொண்டிருந்த மாதிரியான நடிப்பும். 'எனக்காடா காது குத்துகிறாய்'

"எப்படி இருக்கிறியள் காதற் சிட்டுக்கள்?"

அவன் முகம் மின்னல் வெட்டில் சுருங்கி வெளிக்கிறது. அவன் தயக்கம் மௌனம் அவனைக் கூர்மையாகப் பார்க் வைக்கிறது.

"என்ன ஏதும் பிடிபாடே?" மௌனமாகிறான்.

சுகுணாவை தவிர அவன் தாயோ மனைவியோ வேறு யாரோ அவனது இருண்ட பக்கத்தின் ஆழத்தைத் தொட்டதில்லை.

அவனே எதிர்பார்த்த கேள்வி. வேறு யாராலும் கேட்கப்படவோ தீர்க்கப்படவோ முடியாத கேள்வி.

வெளியே மாலை ஏழு மணிக்கும் சுட்டெரிக்கும் கனடா கோடை வெய்யில், யன்னலூடே அவன் கண்களைக் கூச வைக்கிறது. அவன் முகத்தின் உணர்ச்சி மாற்றங்கள் துல்லியமாக அவள் உளவியல் ஆய்வுக் கண்களுக்குத் தப்பவில்லை. தாழ்வுச் சிக்கலில் மாட்டிக் கொண்டு (Inferiority Complex) தன் பலவீனத்தை வெளியே காட்டப் பயந்து தன்னை ஒடுக்கி வாழ்கிறான் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புரிகிறது.

சாதகம் பொருத்தமில்லையாக்கும். கெதியாய் கோட்டிலை நிற்பம்போல. அவ்வளவு சந்தோஷமாக இல்லை. குயிலியின் போக்குகள் எனக்குப் பிடிக்கவில்லை. தாங்கேலாமல் இருக்கு"

"வரவர அதிகாரமும் ஆணவப் போக்கும் கூடிக் கொண்டே போகுது. ஐயா அம்மாவையும் கையுக்கை போட்டுக் கொண்டு... அவையும் ஊரிற் குடிமைகள் மாதிரி, மரியாதையும் கௌரவமும் காட்டுறதும்... ஏதும் தேவையெனில் என்னிடம் உரிமையோடு கேட்காமல் அவ்விடம் தான் பணிஞ்சு கேட்பதும்... அங்கையும் அதுகள் தான் வாழ்வளிச்சதுகள். இங்கையும் அதுகள் தான். வம்ச பரம்பரைக் குணம் என்று சிலாகிப்பதும் அடிமை குடிமை மாதிரி... எல்லாம் வெறுத்துப் போச்சு.

"குழந்தைகளின் தேவைகளைக்கூட எனக்காகக் காத்திராமல் தானே காரில் கொண்டு போய் கவனிப்பதும்... ஏதோ தானில்லா விட்டால் ஒன்றும் இயங்காது போல... ஏதோ நான் ஒரு பொம்மை. வடிச்ச சோத்தைத் தின்பதற்கு மாத்திரம் உரிமையுண்டு. அதாலை எனக்கும் பழி வாங்கல் குணம் வருகிறது."

"பழி வாங்கவா" ஆச்சரியத்துடன் வினவுகிறாள். "படிக்கும் போதே பெரும் அதிகாரம்தானே?. அந்தப் பழமொழியைச் சொன்ன அன்று இரவு முழுவதும் நித்திரையே வரவில்லை. ஆத்திரத்தாலும் அவமானத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாலும் குறுகிப் போய் ஒருபாடம் படிப்பிக்க வேணும் என நினைச்சுக் கொண்டான். விட்டில்பூச்சி தானாக வந்து விழுந்தது. ஆனால் அவ காட்டிய அன்பு சிறிது காலம் என்னிலும் பிரதிபலித்தது. இப்ப கண்டாலே வெறுப் பாயிருக்கு. பிள்ளைகளாலை யோசிக்க வேண்டியிருக்கு."

'அவளுக்கு பாவிமனிதனைக் காணாமல் இருக் கேலாதாம். இவனுக்கு கண்டாலே வெறுப்பாக வருகுதாம்' என எண்ணினாள் சுகுணா.

ஆத்திரத்தில் நெஞ்சு படபடத்தது. இந்த வில்லத்தனத்துக்குப் பொரிஞ்சு கொட்ட வேண்டும் போல. ஆனால் அவள் இப்ப அவனால் நம்பப்பட்ட சினேகிதி. குயிலிக்கு, 'மனோவியாதியைத் தீர்க்க அழைக்கப்பட்ட டாக்டர்'. எனவே இவர்களின் தப்பபிப்ராயங்களை நீக்க வேண்டும். இருவரையும் ஒன்று சேர்க்க வேண்டும். அந்த மருந்துதான் முதலில் தேவை.

"என்ன பேசாமல் இருக்கிறியள் தோழியைப் பற்றிச் சொன்னதற்குக் கோபமோ'

"இல்லை இல்லை. நீரும் எனது நண்பர்தானே? அத்தோடை அவள் உங்கள் மனைவி. ஏன் என் தோழி யென அழுத்துகிறீர்கள். எனக்கோ 'காண வந்த காட்சி யென்ன கண்டு விட்ட கோலமென்ன' என்றொரு ஏக்கம் - ஏமாற்றம். துக்கம். பெரியவர்களின் ஆசி கிடைக்காமை தான் காரணமோ. இத்தனை எதிர்ப்புகளின் மத்தியில் சுடர்விட்டு ஒளிவீசிய காதல் எப்படி இருண்டு போகும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனக்கே இல்லறத்தில் ஈடுபடப் பயமாய் வருகுது.

"யோகன், எல்லாரும் விடுகிற பிழை என்னென்றால் குற்றவாளிக் கூண்டில் எதிராளியை ஏற்றிவிட்டு தமக்கிஷ்டப்படி விசாரணை செய்து, தங்களைச் சுற்றவாளியாக்கி சுய இரக்கப்படுவது..."

"ஆனால் செய்ய வேண்டியது என்ன வென்றால் தன்னைத் தானே கூண்டிலேற்றி விட்டு, ஒரு நடுவு நிலைமையில் நின்று கொண்டு விசாரணை செய்தால் தனது குற்றங்களும் கண்ணில் படும்.

"தியானத்தில் ஆன்ம விசாரணை செய்தல் போல - யோகா பெரிய பெரிய கணக்குப் புதிர்களை யெல்லாம் சில வினாடிகளில் செய்து முடிக்கிற நீர், இந்தப் புதிரை எழுகின்ற பிரச்சனைகளை ஒவ்வொரு முறையும் விசாரணை செய்து பாரும். உடனேயே விடை கிடைக்கும். குயிலியில் குற்றமாயின் பத்திரமாய் எடுத்துச் சொல்லும் உம்மிடம் குற்றமாயின் மெதுவே பெரிதுபடுத்தாது திருந்தி நடவும்.

"குழந்தையிலிருந்தே அவளை உமக்குத் தெரியும். அவளது பலங்களும் பலவீனங்களும் தெரிந்துதான் காதலிச்சீர். இது கண்டவுடன் காதலல்ல."

"அவள் வீட்டில் மூத்த பிள்ளை. ஒவ்வொரு வகுப்பிலும் அவளே வகுப்பின் மாணவ தலைவி. இயல்பாகவே குரலில் ஒரு அதிகார தோறணை. என்னையே 'படிக்காமல் கதைக்கிறாய்' என்று எழுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிற்க விடுகிறவ. அன்புடன் சொன்னாலும் அதிகாரம் மாதிரித்தான் தோன்றும்.

"விவேகமும் புத்திக்கூர்மையும் அறிவும் உடைய ஒரு பெண் இல்வாழ்வில் எதையும் முன் கூட்டியே சிந்தித்து திட்டமிட்டுச் செயற்படத் தொடங்கி விடுவாள். உமக்கே தெரியவில்லையா வகுப்பிலே ஆசிரியர் வெளிக்கள வேலை பற்றிச் சொன்ன மூன்றாவது நிமிடமே ஆசிரியரும் அசரத்தக்கதாக திட்டம் தீட்டி செயற்படுத்தும் முறை பற்றி ஒரு பிரசங்கமே வைத்துவிட்டாளே. அவளுடைய சுறுசுறுப்பு யாருக்கு வரும? அதை மழுங்கடிக்கலாமா? அல்லது தன் குடும்ப முன்னேற்றத்துக்குப் பயன் படுத்தலாமா?

"மனக்குரங்கை இழுத்துப் பிடித்துக் கொண்டு சிந்தித்துப் பாரும் யோகன். புருஷனை மாமன் மாமி வீட்டுக்குச் சுகம் விசாரிக்கக்கூட போகவிடாமல் ஒன்றில் கோள் குண்டணி வைத்து, இல்லாவிட்டால் வேறு சாட்டுகள் சொல்லிப் போக விடாது தடுக்கும் மருமகள்மார் மலிந்த இந்த நாட்டில், உமது ஐயா அம்மா மெச்சுகினம் என்றால் அவளை நன்றாகப் புரிந்து வைத்திருக்கினம் என்பதுதான் அர்த்தம். உலக வாழ்க்கை அறிந்த உன் தங்கை அண்ணியைக் கைக்குள் போடாட்டி அண்ணாவில் வேலையில்லை என நினைத்திருக்கலாம்.

"குயிலிக்கு நல்ல சம்பளம் என்று நினைக்கிறன்."

"ஓ என்னை விட இரண்டு மடங்கு."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அதுவும் எரிச்சலாய் இருக்குதோ (சிரிக்கிறாள்)? இதெல்லாம் உம்மையறியாமல் ஏற்பட சிறு பொறாமைகள். அத்தோடை நீர் இன்னமும் சாதி குலம் என்ற Conceptஐ மறக்கிறீர் இல்லை. எதையும் அந்தக் கறுப்புக் கண்ணாடியூடே தான் பார்க்கிறீர். அடிக்கடி அடிமனதிலே இருந்து கிளம்பி ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்குது. இத்தோடை பொறாமையும் சேர்ந்து விசிறி விட, தாழ்வுச்சிக்கல் (Inferiority Complex) ஏற்படப் போகிறது. அது எதிர்க்கும் அல்லது ஆக்கிரமிக்கும் நடத்தையால் ஈடுசெய்யப் பார்க்கும். அத்துடன் கோட்டடிக்கும் இட்டுச் செல்லும். குழந்தைகளின் எதிர்காலத்தையும் பாதிக்கும்..."

சிறிது சிந்திக்க அவகாசம் கொடுக்கிறாள் சுகுணா

"யோகா உள்ளத்தைத் தொட்டுச் சொல்லும். குயிலிக்குப் பணம் இருந்தென்ன, குழந்தைகள் இருந்தென்ன, உம்முடைய அன்பு இல்லாத ஏழையாகி விட்டால் தாங்க மாட்டாள். ஒத்துக் கொள்கிறீரா?"

தலையைக் குனிந்த படியே 'ஆம்' எனத் தலையாட்டுகிறான்.

"அப்படிப்பட்ட அன்பு நெஞ்சத்தைத் துன்புறுத்த உமக்கு எப்படி மனம் வந்தது, உமது வீடு, உமது மனைவி, உமது பிள்ளைகள் எனச் சிந்திக்கவே பழகும். அப்போது அவர்களெல்லாம் யாரோவாகிவிட முடியாது. வேறு தந்தையின் மகள் என் எண்ண வைக்காது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனம் கனிந்து போகிறான் அவன்.

"யோகா, முற்றும் முழுதாக உமது பிழை என்று நான் சொல்லவில்லை. சொல்லவும் மாட்டன். எப்படியும் குயிலி என்னோடு கதைப்பாள். அவவுக்கும் இப்படி ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்வேன்.

"ஒவ்வொருவரும் தம்மைத் தாமே குற்றவாளிக் கூண்டில் ஏற்றிவிட்டு விசாரணை செய்யும் போது, பல திடுக்கிடும் தகவல்கள் வரும். தம்மைத்தாமே திருத்திக் கொள்ளவும் முடியும்."

கார் சப்தம் கேட்கிறது. கதவின் பின் மறைஞ்சு நிற்கிறாள் சுகுணா. "வெய்யில் மூஞ்சையிலை அடிக்குது Blinds ஐ இழுத்துவிடத் தெரியாதாக்கும்?" என்றவாறே உள்ளே நுழைகிறாள் குயிலி.

"என்னர மூஞ்சையிலை அடிச்சா மற்றவைக் கென்ன?" என அவன் எங்கோ பார்த்தபடி சொல்லவும்

"ஓமடா சுகிர்தன்" 'ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' எனக் குயிலி கமறவும்

"இந்தப் பழ மொழிகளாலை தானே நீ கெட்ட பெயர் வாங்குகிறாய்?" என்று சுகுணா முன்னே வரவும்.

ஓடிச் சென்று கட்டித் தழுவி "எப்பேடி வந்தனீ" என்று கேட்கிறாள்.

ஒருநாளும் இல்லாத திருநாளாய் யோகன் பிள்ளைகளின் சப்பாத்துக்களைக் கழற்றி உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செய்கிறான்.

சுகுணா புருவத்தை உயர்த்தி இறக்கி வெற்றி என நிதானிக்கிறாள்.

"இஞ்சாருங்கோ, சுகுணாவுக்கு கனடா டிபன் கொடுக்க வேணும். பிற்சாவும் பிறவுணீயும் வாங்கி வாங்கோ..." என குயிலி நேரடியாகக் கோதாவில் இறங்குகிறாள்.

"தேவியார் பிச்சை யோட்டால்தானே கடைக்குப் போகலாம்" என நேரடியாகப் பதிலிறுக்கிறான் யோகநாதன்.

எல்லாரும் சிரிக்கின்றனர்; பாவம் சுகிர்தன்!

இரண்டு கையையும் தட்டித் தட்டி "இண்டைக்கு அம்மாவும் அப்பாவும் கதைச்சிட்டினம் ஆன்ரி" என்று ஆரவாரிக்கிறான். புரியாதது போல சுகுணா அவனைப் பார்க்க தெரியாதது போல யோகன் வெளியே போக, சிரியாதது போல குயிலி உள்ளே மகிழ்ந்து போக "உன்னோடும் கதை இருக்கு. பிறகு Feed back உம் தேவை" என்கிறாள் சுகுணா.


"கொஞ்ச நாளைக்கு இங்கேயே இரன். வீடும் சுமுகமாகும்" என்று கெஞ்சுகிறாள் குயிலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13

## நிறை நிலா பூத்தது



மிருதங்கம் பஞ்சகதியில் ஜதிகள் நடத்தி முத்தாய்ப்பு வைத்ததும், தில்லானா ஆடிய நீலா சமநிலையில் நின்று, வளைந்து நன்றி வணக்கம் செலுத்தியபோது, இவ்வளவும் மன மேடையில் ஆடிக் கொண்டிருந்த அவையோர் நீண்ட கரகோஷம் செய்து ஆர வாரமாகத் தம் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்த உற்சாகப் பாராட்டைப் பெற்றுக் கொண்ட நீலா, பரபரப்பாக உள்ளே வந்து அவசரமவசரமாக உடைமாற்றி ஒப்பனை கலைத்து முகங்கழுவி சீர் செய்து தன் கைப்பையையும் காவிக் கொண்டு புறப்படுகிறாள்.

"பிள்ளைகளைப் பெற்றோரிடம் அனுப்பி விட்டீர்கள் தானே? கார் வந்திருக்கும். நான் வாறன்" என்று ஜெனிபரிடம் கூறிவிட்டு அவசரமாக நகரவும்.

"ஏன் நீலா, நாடகத்தையும் பார்த்துக் கொண்டு போவம். நல்ல நாடகம் என்று கதைக்கினம். விக்னேஸ் வரனின் நெறியாள்கையாம், புராந்தகன் நடித்ததாம்" அரங்க அறிவிப்பாளரான ஜெனிபர் சொல்லுகிறார்.

"ஐயையோ, இதே காணும். அதிக ஆசைப்பட்டால் அதிகம் நஷ்டம் தான்."

"ஏன் இப்படிப் பதட்டப் படுகிறியள்? ஜீவனுக்கு நாட்டியம் பிடிக்காதென்றால், பேரையும் மாற்ற வேண்டுமோ? அ, அது என்ன "ஜீவபாலிகா?" நல்ல கலையரசியை திரையால் மூடி மறைக்கிறதோ?"

"ஜெனிபர், எழுத்தாளர் தாம் புனைபெயர் வைக்கிறதோ? ஏன் நாங்களும் வைக்கலாமே? 'ஜீவபாலிகா' நல்ல பெயரல்லே... சொல்லிக் கொண்டே வாசலுக்கு விரைகிறாள். காரிலே சாய்ந்து கொண்டு புகைவிட்டுக் கொண்டிருக்கிறான் ஜீவன். குற்றவுணர் வோடு வந்தவள் "ரொம்ப நேரமாய் நிற்கிறியளோ" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கேட்கிறாள்.

"இப்பதான் வந்தனான். விருப்பமென்றால் நின்று நிகழ்ச்சிகளைப் பார்த்திட்டு வாருமன். நான் நிற்கிறன்."

தன்னை ஏற இறங்கப் பார்ப்பதும் கண்ணில் மின்னும் காதலும் அவளை என்னவோ செய்தன. அவருக்குத் தெரியாமல் ஏன் ஆடினேன் எனும் குற்றவுணர்வு அந்த உல்லாசத்தைக் கலைத்து விட்டது.

"நீங்களும் வந்தால் நல்ல மகிழ்ச்சியாக இருக்கும். நீங்கள் தனிய நிற்பதென்றால் எனக்கு மனம் வராது. அந்த நாடகம் என்ன பெரிசே? உங்கடை நாடகத்திலும் பார்க்க?"

அவள் வாக்கிலிருந்த சத்தியமும், குரலின் தழைந்து போன மென்மையும் அவனைத் திணறடித்தன. எட்டிக் கையைப் பிடித்து அழுக்கி, "எனக்கும் அப்படித் தான்" என்கிறான். தெருவின் நியோன் விளக்குகள் இருவருடையதும் இன்பக் கிளர்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

புல்லரித்துப் போன நிலா, "இதற்காகவே உலகில் எதையும் தியாகம் செய்யலாமே" என நினைக்கிறாள்.

கதவைத் திறந்து அவளை ஏறவிட்டு, ஒரு கணப்பொழுதும் பிரிவைத் தாங்காதவன் மாதிரி ஓடிவந்து தன் இருக்கையில் அமர்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவள் கையைப் பிடித்து கார் வளையத்தில் வைத்தவாறே காதல் ததும்ப அவளைப் பார்க்கிறான்.

மூச்சுக் காற்றின் வெப்பம் கைகளிற்படவே, கருணை பொழியும் விழிகளால் அவனைப் பார்த்து "என்ன நாங்கள் இன்றைக்கு வீட்டை போகப் போறதில்லைப் போலிருக்கு. என்ன இப்பவே..." என இழுத்துக் கொண்டே கையைப் பறிக்கிறாள்.

மெல்லச் சிரித்துக் கொண்டு, "என்ன கையெல்லாம் நிறம் நிறமாய் இருக்கு" என்றவாறே காரை ஓட்டத் தொடங்குகிறான்.

துணுக்குற்ற நெஞ்சோடு சிறிது தயங்கி, "அது பிள்ளைகளுக்கு மேக்கப் போடுவது தானே? அவசரத்தில் செவ்வையாய் கழுவயிலை."

இத்தனை நல்ல மனிதனுக்கு ஏன் இந்தச் சிறுசிறு பொய்கள் என நொந்து கொண்டு வீடு போய், ஏன் ஆட வேண்டிய சந்தர்ப்பம் வந்தது என்று சொல்லிவிட வேணும். இந்தக் குற்றவுணர்வை இனிமேலும் தாங்க முடியாது. சொல்லாவிட்டால் அவர் முகத்தை ஏறெடுத்துப் பார்க்கும் தைரியம் வராது. பொய்யாக நடக்கவும் முடியாது. முகமே காட்டிக் கொடுத்துவிடும். அந்த இக்கட்டான நிலையைப் புரிந்து கொள்ளவுங் கூடும். சிலவேளை அடுத்த பிளேனிலேயே ரொரண்டோவுக்கு "போய் அண்ணாவோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரு" என அனுப்பி விடவுங் கூடும். அல்லது சத்தம் போட்டு விட்டு கோபமாய் இருக்கவும் கூடும்.

"ஏன் முகம் இருண்டு போயிருக்குது?. நல்லா பசிக்குதோ?"

சுதாரித்துக் கொண்டு திரும்பியவளுக்கு அவன் முகத்தில் கொப்புளித்த குறும்பும் காதலும் நிறைந்த பார்வை என்னவோ செய்து சொர்க்கத்துக்கே கொண்டு சென்றது. பார்வைப் பரிமாற்றமாக மௌனம் மொழி பேச காரும் வீடு வந்து சேர்ந்தது.

ஜீவன் காரைப் பார்க் பண்ணி கறாஜ் பூட்டி வர முன்னரே, ஆட்டத்தால் வேர்த்த உடம்புக்கு ஒரு சிறு முழுக்குப் போட்டு இரவுடுப்பு அளித்து கமகமக்க வந்து மயிருலர்த்தியை உபயோகித்துக் கொண்டிருந்தாள். நயக்கும் கண்களால் அவளைப் பருகியவாறே குளியலறைக்குள் புகுந்த அவனை, "சாப்பாட்டைச் சூடாக்கவா?" என்ற குரல் திரும்பிப் பார்க்க வைத்தது.

"உமக்குப் பசித்தால் சரி. இல்லாட்டி கொஞ்ச நேரம் ஓய்வு எடுத்து இருந்திட்டு சாப்பிடலாம் ஒரு பத்து மணிக்கு?"

## II

**யா**ழ்ப்பாணக் கிராமமொன்றில் பிறந்த நீலா தன் தாயின் ஆர்வத்தைத் தடுக்க முடியாது நடன ஆசிரியை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பத்மினி சின்னத்துரையிடம் நடனங் கற்று அரங்கேற்றியவள். படிப்பிலும் வணிகத் துறைப் பட்டதாரி.

இவளது திறமையைச் சிலாகித்த பத்மினி தனது வகுப்புகளுக்கு உதவியாசிரியையாகப் போட்டது மல்லாமல் தான் இந்தியா போன போது தன் மாணவர்களை நீலாவுக்கே கொடுத்தும் சென்றார். ஆசிரியையோடு மேடையிலும் ஆடுவது வழக்கம். பேரும் புகழும் பரந்து வரும் போது, ரொறண்டோவில் வசிக்கும் அவளது ஒரேயொரு அண்ணா தன் நண்பன் ஒருவனுக்கு விவாகம் ஒழுங்கு பண்ணியிருக்குதெனவும், நடனம் என்ற சொல்லை மறப்பதற்குத் தயாரானால் பதில் போடும் படியும் எழுதியிருந்தான்.

அவளுக்கும் வயது ஏறிக் கொண்டே போகிறது. மரணக் குழிகளிலிருந்து கிரிசாந்திகளும் கோணேஸ்வரிகளும் ராஜேஸ்வரிகளும் தன்னைப் பார்த்து சிரிப்பதான அச்சம். இடப்பெயர்வால் வகுப்புகள் நடக்கமுடியாத அவலம். ஊர் வாழ்க்கையில் உயிரின் ஸ்திரமற்ற தன்மை. தன் அழிவின்பின் அண்ணாவுக்கு அனுப்புவதற்காக அன்பை யெல்லாம் கொட்டி எழுதிப் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் இறுதிக் கடிதம் அத்தனையும் அவளை விரட்டின.

அம்மாவின் திருப்திக்காகக் கலையைக் கற்றாளே தவிர, உழைப்புக்காக அல்லவே. அவளுக்கு கணவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குழந்தை வீடுவாசல் எனும் வாழ்க்கையே மிகவும் விருப்பமானது நிம்மதியான வாழ்வுக்கு கூன்குருடாயினும் பரவாயில்லை ஒன்றைக் கட்டிக்கொண்டு அண்ணாவிடம் போய் விட வேண்டும்.

அண்ணாவின் நண்பன் என்ற வகையில் அண்ணாவி டம் ஒரு கெட்ட பழக்கங்களும் கிடையாது. உயர்படிப்பு, நல்ல வேலை. வந்து பார்த்தால் அண்ணாவை சீவியகாலம் மட்டும் மறக்கமாட்டாய் என எழுதியிருந்தான். புறப்பட்டு விட்டாள்.

கொழும்பில் நின்றபோது ரெலிபோனில் பேசியிருந் தான். முதலில் அவளுக்குப் படபடப்பு. வார்த்தைகள் வர வில்லை. மௌனம்தான் கூடிய பதில்.

கொழும்பில் நின்ற போது ஜீவன் ரெலிபோனில் பேசியிருந்தான். ஒருவித படபடப்பும் வெட்கமும் சேர்ந்ததால் அவளால் பேச முடியவில்லை.


"நீலா are you there" என்ற சொற்கள் பல்வேறு சுவையிலும் வெளிவந்தாலும் ம், ம், ம், ம், தான் பதில்....

"ரகுராஜா என்னைக் கலைத்துக் கலைத்துப் பிடித்த போதே நினைச்சுக் கொண்டன் ஏதோ குறை இருக்குமென்று. இனி என்ன செய்கிறது ஊமை என்றாலும் பரவாயில்லை."

நீலா பதறியவாறே" அப்படி ஒன்றும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்ணா போட்டோ ஒன்றும் அனுப்பவுமில்லை. நினைச்சுக் கதைக்கிறது"

"அதுவும் சரிதான் போட்டோவோடு கதைச்சுப் பழகியிருந்தால் சுலபமாக இருந்திருக்கும்."

அவனது குறும்புத்தனம் அப்போது தான் இவளுக்குப் புரிந்தது. பேசினார்கள்.

"இங்கே தான் பனியும் குளிருமென்றிருந்தேன். கொழும்பிலும் நல்ல குளிர்போலை. பூஜ்யத்தின்கீழ் எத்தனை டிகிரி?" ஜீவன் கேட்டான்.

அவளுக்குப் புரியவில்லை. "ஏன் கேட்கறீங்கள்? நல்லாய் வெய்யில் அடிக்குது."

"இல்லை பல்லும் சொல்லும் தந்தியடிக்குது அதுதான் கேட்டன்." அவளது நாணங்கலந்த சிரிப்பு அவனுக்கு சங்கீதமாகப் பட்டது.

இந்த வார்த்தைகளையே தழுவித்தழுவி முத்தமிட்டு மகிழ்ந்து அடிக்கடி சிலிர்த்து புல்லரித்து ஆனந்தமாக பியர்ஸன் எயர்போட்டில் வந்திறங்கியதும் அண்ணாவும் அண்ணியும் மாத்திரமே நின்றனர். அவர்களுக்குப் பின்னால் யாரும் இல்லை. முகத்தில் சிறிது ஏமாற்றம் தான்.

"ஜீவன் நாளைக்கு நல்ல நாளாம். வீட்டுக்கு வாறன் என்றவர். பிளேனும் லேற் தானே. பதினொரு மணிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு போய் டின்னரை முடித்துப் படுக்கத்தான் சரி" என்கிறாள் பாமா.

"ஓ, அண்ணி படத்திலை பார்த்ததற்கு நேரிலை நல்ல வடிவாய் இருக்கிறியள். வாயில்லாப் பூச்சிக்கு ஏற்ற மனைவி தான், அண்ணா. வாழ்த்துக்கள்."

"அண்ணை ஐஸ் வைச்சு முடிஞ்சுது. இனி தங்கை துவங்கிற்றா."

"நீலா, பார் புழுகத்தை. உப்பிடித்தான் வாயைக் காட்டிக் காட்டி வளைச்சுப் போடுவா. ஜீவன் கூட பாமாவின் அட்வைஸ்படிதான் நடக்கும்"

"அ, என்னையும் நீலாவையும் முடைஞ்சு விடாதை யுங்கோ, இனி அதெல்லாம் நீலா செய்வா."

பாமாவின் கலகலப்போடு உணவு முடிந்து, வந்த ஆரவாரம் முடிந்து, படுக்கும்போது மணி மூன்றரை. சொகுசான படுக்கையும் அறை அலங்காரமும் திரைச் சீலைகளும் வீட்டுள் வேறொரு பொருளுமே இல்லாதது போல் குளோசெற் உள் அடக்கி இரவு நீல பல்ப்பின் மென்னொளி பரவ, சிறகுவைத்தது போன்ற மடக்கி விரிக்கும் பெரிய கண்ணாடியும் மேசையும் மலர்ச்செண்டும். ஏதோ பெரிய அரண்மனையில் சினிமாவில் வரும் அறைகள் போல ஒரு பிரமிப்பை ஏற்படுத்தின.

குளியலறை தனியா றோஸ்நிறத்தில் சுவர்வர்ணமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொம்போட் முதல் தொட்டி, சோப் பெட்டி முதலிய யாவையுமே றோஸ்நிறத்தில... யன்னல் திரை தொட்டியின் மறைப்புத் திரை யாவும் அதே நிறத்திலான மணிக்குஞ்சங்கள் வைத்துத் தைக்கப்பட்ட பிளாஸ்திரிக், நெற், பட்டுத் துணி முதலயனவற்றால் ஆக்கப்பட்டும் அழகான றோஸ் உடை உடுத்திய பொம்மை ஒன்று தன்னுள் ஏதோ லோஷன் தாங்கியபடியும், திறந்த வுடனேயே கமகம என நறுமணம் வீசுவதும், தண்ணீர் படாக் கம்பளம் விரித்த நிலமும்... இது ஒன்றே இப்படி யானால் மறு அறைகளெல்லாம் எப்படியிருக்குமோ எனும் வியப்பை ஏற்படுத்தின.

ஒரு பைப் கீழே அமுக்கினால் தண்ணீர். இன்னொன்று மேலே தூக்கினால் தண்ணீர். இன்னொன்றோ கையை நீட்டினாலே தண்ணீர் கொட்டுகிறது. இந்தப் பிரமிப்புகளோடு படுத்த உடனேயே நித்திரையாகி விட்டாள் நீலா.

மறுநாள் மிக எளிமையாக உடுத்தி ஒப்பனை ஒன்றும் செய்யாது காத்திருந்தாள் நீலா. பாமா ஜீன்ஸ் ரீசேட்டுடன் குசினிக்கும் இருக்கையறைக்கும் ஓடியபடி திரிந்தாள். ரகுராஜ், ஜீவனும் தானும் ஆறேழு வருடங்களாக எப்படி நட்பாக இருந்தோம் என்பதை சொல்லிக் கொண்டிருந்தான்.

கோட் சூட் டையுடன் மஹா தோறணையாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்திறங்கிய ஜீவனைக் கண்டதும் very very smart என்று மனதுள் பூரித்துக் கொள்கிறாள். பெண்களுக்கு எப்பவும் ஆண்களை இங்கிலிஷ்காரரின் உடையில் பார்க்கத்தான் விருப்பம். ஆனால் ஆண்களுக்கோ, பெண்கள் கால்மூட பட்டுடுத்தி தலையிலிருந்து கால்போக நகையணிந்து பூமாலை கட்டி பொட்டும் வைத்து மகாலட்சுமி மாதிரி இருக்க வேணும் என்பது பிரியம். "ஏன்டா ஜீவன் எப்படீடா என் தங்கை?" பெருமையோடு கேட்டான் ரகுராஜ்.

ஜீவன் ஒரு நாணங்கலந்த புன்னகையோடு அவளிருக்குமிடத்துக்கு வந்து தன் பொக்கற்றிலிருந்து ஒரு வெல்வெட் பெட்டியை எடுத்துக் கையில் கொடுக்க, நீலா எழுந்து நின்று அதைப் பெற்றுக்கொண்டாள். அண்ணியின் வற்புறுத்தலால் அறைத் திறந்து பார்த்தபோது, ஒரு அழகான முத்தினால் இழைக்கப்பட்ட இரு பறவைகளைக் கொண்ட சாறிப் பின் ஒன்று. வின்ரர் கோட்டிலும் குத்தலாம். அவளுக்கு ஒரே மகிழ்ச்சி. கண்ணினால் நன்றி சொன்னாள். அவளும் கொழும்பு லலிதா ஜுவெல்லறியின முத்துப் பதித்த ஒரு டை பின்னும், டியூட்டி பிறீ கடையில் விலையுயர்ந்த சேட் டையும் வாங்கியிருந்தாள்.

"இரண்டுபேரும் ஊசிதான். முதன்முதல் ஊசி அன்பளிப்பு செய்யலாமோ?" என்கிறாள் பாமா.

"செய்யலாமோ இல்லையோ இரண்டும் ஒன்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொன்று பலன்ஸ் ஆயிடிச்சு" ரகுராஜ்.

"ஏன் ஜீவன் எயர்போட்டுக்கு வரயில்லை?. புது அண்ணி என்று என்னைக்கூடப் பார்க்காமல் நீலா எட்டி எட்டி தோளுக்கு மேலால் பார்த்தது."

"என்ன அண்ணி?" என செல்லமாக கோபிக்கிறாள் நீலா.

"இவன் என்னோடை என்னேரமும் தங்கை புராணம் தான். எழுதச்சொன்னாலும் நூறு பக்கத்துக்கு எழுதலாம். அவையின்றை உணர்ச்சிகரமான சந்திப்பு எனக்கு எரிச்சலை ஊட்டும். அதுதான் வரயில்லை. இவன்ரை வாயை அடக்கத்தானே தங்கையைச் சிறைமீட்டன்

" நீலா நாணத்தோடு அவனைப் பார்த்துப் புன்னகை பூத்தாள். அவனுக்கு உடம்பெல்லாம் புல்லரிக்க மௌன-மானான்.

"சரிதான் இனி நீ ஒரு நாளைக்கு நூறு பக்கம் எழுதப் போறாய் பார். அத்தனை தங்கம் என் நீலா

"தோஎல்லாரும் ரசித்து ரசித்துச் சிரித்தனர்.

"இதைக் கேளுங்களேன் நான் ஒரு சட்டை வாங்கப் போதே ஒரு சாறி வாங்கப் போகுதே இது நீலாவுக்கு நல்லாய் இருக்கும், இது நீலாவுக்கு எடுப்பாயிருக்கும் என்றபடி தான்... அதே? ஒரு நெக்லெஸ் வேண்டுமென எவ்வளவு கஷ்டங்கொடுத்து கொஞ்ச கொஞ்சமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாங்கிச் சேர்த்து ஒன்றை வாங்கிவந்து காட்டினன். உற்றுப் பார்த்தார். இது நீலாவின் கழுத்துக்கு நல்ல ஜொலிப்பாய் இருக்கும் என்கிறார். எப்படி இருக்கும் எனக்கு? உடனே 'இது நீலாவுக்கு' என்று கொண்டு போய் வைச்சிட்டன்."

"என்னண்ணா அண்ணி சொல்றா? உண்மையா?"

"சும்மா சீண்டிவிட்டால் துள்ளுவா. அதை ரசிக்கலாம். அண்டைக்கு கோபங்கூடவாக்கும். ஒன்றும் பேசயில்லை. ஆசைப்பட்டுச் செய்விச்ச தென்று தெரிந்துகொண்டு அப்படிச் சொல்லுவனே? பகிடிக்குத்தான். ஜீவா உனக்குச் செய்வித்துத் தருவான்தானே?"

"இங்க பார் ரகு, உனக்குத் தெரியும்தானே? இந்தப் பெண்கள் உந்தக் கல்லுகளையும் உலோகங்களையும் கட்டித் தூக்கிக் கொண்டு பவனிவாறது எனக்குப் பிடிக்காதென்று..."

நீலாவைப் பார்த்தபோது அவள் தன் பின்னலைக் கையில் சுற்றி சுற்றி மலர்ந்த முகத்துடன் அதை ஆமோதிப்பது போல இருந்தமை அவளுக்கும் அதே கொள்கை தான் என்பதை உணர்ந்து கொண்டான்.

"அது சரி பாமா எப்ப உங்களைப் போல நீலாவுக்கும் பாப் செய்து விடப் போறியள்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திடுக்கிட்ட நீலா அநிச்சையாகவே பின்னலைப் பின்னாலை தள்ளிவிட்டாள்.

"இதெல்லாம் உமக்குப் பிடிக்காதென்று எனக்குத் தெரியும். இனி உம்பாடு அவ பாடு."

"ஆனால் பாமா நான் யாரொருவருடைய சுதந்திரத்திலும் தலையிட மாட்டன். விரும்பினதெதையும் செய்ய உதவியும் செய்வன்" என்றபடியே அவளைப் பார்த்து கடைவாயில் சிரிப்பும் கண்ணைச் சிமிட்டிய காதல் பார்வையும் அங்கீகரிக்கும் கண் சாடையும் காட்ட, நாணத்தால் அவளைத் திணற வைத்துத் தலையைத் தானாய் தாழ வைத்தது. முதுகிலே ஊர்ந்து மேலே வரும் உணர்ச்சிக் குவியல் நிமிர்ந்து பார்க்கவே முடியாத நாணம் அவளைப் பிடுங்கித் தின்றது.

'இதுதானா நாணம், அட இதுதானா நாணம்? சங்கத் தமிழ் கூறிய புனிதமான உணர்ச்சி இதுதானா? அப்படியானால் இதுவரை மேடைகளில் நான் காட்டிவந்த நாணம் பாசாங்கா போலியா நடிப்பா? இப்படி உள்ளத்திலும் உடலிலும் இரசாயன மாற்றம் நிகழத்தக்கதாக எங்கிருந்து இந்த நாணம் வந்தது? திரு. வி.க. சொன்னதுபோல கணவன் முன்னே மட்டும் தோன்ற வேண்டிய நாணம் என்பது இதுதானா?

### III

திருமணத்தின் பின் ஜீவன் உத்தியோகம் பார்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சக்கச்சுவான் மாகாணத்துக்கு வந்து விட்டார்கள். சக்கட்டுன் நகரில் உயர் பதவி வகிக்கும் ஜீவனுடன் வேறொரு தமிழ்க் குடும்பமும் நட்பாக இருந்தனர். அங்கே வாழ்ந்த ஒரு சில தமிழ்க் குடும்பங்களும் சில இந்தியர்களுத் சேர்ந்து கீழைத்தேய கலாச்சார மன்றம் ஒன்றைத் தொடக்கிப் பொழுதைப் போக்கி வந்தார்கள். இவர்களது நிகழ்ச்சிகளை நிறைய இங்கிலிஷ்காரர்களும் வந்து பார்த்துப் போவார்கள். நீலாவுக்கோ ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு புது அத்தியாயம் தான். பகற் பொழுதுகளில் ஜீவன் இல்லா வேளைகளில் நடனங்களை ஆடிப் பயிற்சி செய்வதுமுண்டு.

முதன் முதலாக நண்பன் குடும்பம் வீட்டுக்கு வந்தபோது, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் தனது வகுப்பு மாணவியே கெங்கா என இருவரும் கண்டு கொள்கின்றனர்.

"இஞ்சாருங்கோப்பா சித்தா, நீலா நல்ல நடன ஆசிரியை அல்லே? பத்மினியின் மாணவி. கிட்டத்தட்ட ஐம்பது மாணவிகளுக்குப் பயிற்றினவ."

"இப்ப எல்லாம் விட்டிட்டீங்களோ நீலா? இவருக்கு ஆட்டங்கள் களியாட்டங்கள் ஒன்றுமே பிடிக்காது. கலாசார மன்றத்துக்கே வாறதில்லை. அன்பளிப்பு மாத்திரம் கிடைக்கும்" என்றார் சித்தா.

"என்ன நீலாவுக்கு ஆடத் தெரியுமென்று எனக்குத்



தெரியாதே. மெய்தானே நீலா, நாட்டியம் ஆடுவீராம் ஆசிரியையாம்" என்கிறான் ஜீவன்.

அவனுடைய அப்பாவித்தனத்தை அறியாளா அவள்?

"இல்லை. நாட்டிலை போர்மூண்டவுடன், இராணுவக் கொடுமை முடியும் வரை சலங்கையைத் தொடுவதில்லை. களியாட்டங்களில் ஈடுபடுவதில்லை என்று சபதம் எடுத்தது. பின் அப்படியே மறந்து போய் விட்டது. விருப்பமுமில்லை" என்கிறாள் நீலா.

"நீலா, நீலா, எனக்கு நீர் ஒரு உதவி செய்ய வேணும். வேணிகாவுக்கு ஐந்து வயதாகிறது. ரொறண்டோவில் எங்கடை அட்களெல்லாம் திறந்திறமான ஆசிரியை களிடம் நாட்டியம் சங்கீதம் பழகுகினம். இவளுக்கு நீர் தொடக்கிவிடும். ரொறண்டோவுக்கு மாற்றலாகிப் போகும்போது அங்கை தொடர்ந்து படிக்கலாம்" கெஞ்சுகிறாள் கெங்கா.

எல்லாரும் ஜீவனையே பார்க்கினம்."பகலிலை தனிய இருக்கிறது என எனக்கும் ஒரு மாதிரித்தான் இருக்கிறது. பரவாயில்லை. நான் இல்லாத நேரத்திலை நீலா என்னவும் செய்யட்டும். O.K. என்கிறான். நீலாவுக்கு உள்ளூர நல்ல மகிழ்ச்சி. வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அந்த மன்றத்து நிகழ்ச்சிகளில் வேணிகாவும் பங்கெடுப்பதனால் இவவும் போக வேண்டி வந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரு தெலுங்குப் பிள்ளைகளும் வேணிகாவும் இவளது மாணவர். வீடும் கலகப்பு. ஜீவனுக்கும் அதிகமதிகமான உபசரிப்பு.

ஒருநாள் வகுப்பு நேரத்திலேயே வந்துவிட்டான் அவனுக்குப் பிடிக்காதே என நினைச்சு அவசரமாக வகுப்பை முடித்து விட்டாள்.

"இங்கே வாரும் நீலா, ஒரு விடயத்தைத் தொடங்கும் போது அதற்கொரு திட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு இருக்க வேண்டும். தொட்டதற்கெல்லாம் 'கட்' பண்ணக்கூடாது."

"உங்களைச் சுற்றித்தான் எல்லாத் திட்டங்களும் ஒழுங்குகளும் ஒரு நிமிடமாயினும் அலட்சியம் செய்ய வராது."

"ஆனால் மூன்று குடும்பங்களும் சம்பந்தப்பட்டிருக்கு இல்லையா?"

"என்ன தலைவலி ஏதுமா? நேரத்தோடு வந்து விட்டீர்களே" நெற்றியை வருடுகிறாள்.

"என் ராசாத்தியைப் பார்க்க வேணும் போலிருந்தது. என்ன இப்படி வேர்த்துக் கொட்டுது? கஷ்டமாயிருக்குதோ?"

உண்மையான கரிசனை அவளுக்குப் புரிகிறது. அன்றும் இப்படித்தான். கலாச்சார மன்றத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புத்தாண்டுவிழா. மந்திரி ஜாக்ஸன் வருவதாக இருக்கிறது. அத்தோடு கலையுலகப் பிரமுகர்கள் சிலர் வந்து தில்லானாவை வீடியோ எடுத்து ஏதோ ஆய்வு பண்ணப் போகிறார்களாம். அந்த வெள்ளைக்காரர், தில்லானா ஆடப் போகும் குமுதினியோடு ஏற்கனவே பேட்டியும் முடிந்தது. வசந்தா டானியேலின் மாணவியான குமுதினி ரொறண்டோ விலிருந்து இங்கே வந்திருக்கிறார். பல காலமாகப் பயிற்சியில்லாததால் கடந்த ஒரு வாரமாக நீலாவிடம் வந்து பயிற்சி எடுத்திருக்கிறாள். ஒவ்வொரு சுத்தமான முத்திரையும் ஜதியும் அவருடைய ஆசிரியரையே பிரதிபலிக்கும் படி இருந்தது. நீலாவுடைய மாணவிகளும் ஒரு நிகழ்ச்சி கொடுத்திருக்கிறார்கள்.

நீலா, போகும்போது பெற்றாருடன் போவாள். தன் பிள்ளைகளின் நிகழ்ச்சி முடிந்தவுடனேயே ஜீவனை வந்து அழைத்து வரும்படி சொல்வாள். கணவனோடு இருப்பதையே பெரிதும் விரும்புவாள். அங்கே திறமையான நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கவும் முடியாது. ஒரு சிறு வட்டம் தானே. உள்ளதுக்கை வள்ளிசுதான்.

ஒழுங்கமைப்பாளரிடையே பரபரப்பு. இன்னமும் குமுதினியைக் காணோம். பறந்தார்கள். வீடு பூட்டியிருந்ததாம். எல்லாரும் வந்து நீலாவின் காலடியில் வீழ்ந்தார்கள் தம் மானத்தைக் காப்பாற்றும்படி, அவளுக்கே அவர்களின் பரிதாப நிலையும் உண்மையான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இக்கட்டும் புரிந்தது. சிறிது சிந்தித்தாள். அண்ணாதான் சொன்னாரே தவிர, ஜீவன் தன்னிடம் நிபந்தனை எதுவும் விதிக்கவில்லையே. நடனம் பற்றி எதுவுமே பேசுவதுமில்லையே. சொன்னால் புரிந்து கொள்வார். அத்தகையதொரு புரிந்துணர்வு கொண்டவர்.

அவசரமாக உடுப்பு மாட்டி சலங்கையையும் முதன் முதலாகக் கட்டிக் கொண்டாள். குமுதினியுடன் சேர்ந்து பயிற்சி எடுத்ததால் அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை. முன் வரிசை வெள்ளைக்காரர் அசந்து போய் பார்த்திருந்தார்கள். கட்டாயம் பின்னரங்கப் பாராட்டுக்குக் காத்திருப்பார்கள். ஆனால் அவளுக்கு அவை பொருட் டாகவில்லை. அவனுக்கு எப்படித் தொடங்குவது என்பதை நினைத்து நினைத்துப் புரண்டு புரண்டு, படுத்தாளே தவிர அவன் வந்ததைக் கூடக் கவனிக்கவில்லை.

## IV

**பா**வம் ஜீவன் அவனுடைய அக்காவால் ஏற்பட்டது. நடனக்கலை வெறுப்பு. கொழும்பிலே அப்பாவும் அம்மாவும் அக்காவும் தானும் ஆனந்தமாக மெல்யோன் அவநியூவில் சொந்த வீட்டில் குடியிருந்த தன் பால்யக்காலம். 1983 இன் ஆடிக் கலவரத்தில் சிங்கள நண்பர் ஒருவரால் காப்பாற்றப்பட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் விடப்பட்டவர். அப்படியே இந்தியாவுக்கு வந்தவர்கள்தாம். நிலைமை சீரான போதுகூட இனி அது எம் மண் இல்லையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எப்போது என் வீட்டிலிருந்து வெளியேற்றப் பட்டேனோ அப்போதே என் வீட்டை மறந்து விட்டேன். இனி அங்கே போவதே அவமானம். தன் மானமிழந்து இன்னொருவன் தயவில் வாழவேண்டுமா?"

எனவே அங்கேயே தங்கி விட்டனர். இவர்கள் இருவரும் கலை ஈடுபாட்டால், நடனம், மிருதங்கம், பாட்டு வகுப்புகளில் சேர்க்கப்பட்டனர். நடனக்கலைக்கு மாத்திர மல்ல குருவுக்குமே அடிமையாகிவிட்ட அந்த பதினெழு வயது அக்காக் குழந்தை குருவைப் பிரிந்து வரமாட்டேன் என்று விட்டது.

"நம்மாலே ஒன்றுஞ் செய்யமுடியாதப்பா. அவளை நீங்களே அழைச்சுப் போயிடுங்கோ. இது ஒரு தெய்வீகக் கலை. அது ஒன்று மட்டுந்தான் எனக்குத் தெரியும்" என்றவாறே ஜதி ஒன்றை முணுமுணுத்தவாறே உள்ளே புகுந்துவிட்டார் குரு.

அப்பாவும் அம்மாவும் அதிர்ந்து போய் விட்டார்கள். அவமானத்தால் குறுகி விட்டார்கள். ஏற்கனவே இரு மனைவியர் மூன்று குழந்தைகள். வேறு பெண்களும் வந்து கொண்டும் போய்க் கொண்டும் இருக்கிறார்கள். மாணவி களா அல்லது.... அப்போது பதினான்கு வயது ஜீவனுக்கு எல்லாரையும் அடிச்சு நொருக்க வேண்டும் போன்ற வெறி. பெற்றார் முதல் மனைவியிடம் முறையிட்டார்கள்.

"கடவுள் எதைப் பிரியப்படுகிறாரோ அதற்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாம் ஒன்றும் சொல்லமாட்டோம்."

"நடனக்கலை உங்கள் மகளோடு பிறந்திருக்கு. கடந்த நான்கு வருஷமாக முழுத்தேர்ச்சியடைந்து குருவுக்கு மிஞ்சிய சீடனாகிவிட்டாள். பாருங்கோ என்ன பாவம்! நவரசங்களும் ததும்பி வழியுமோன்னோ! ஒவ்வொரு மேடையிலும் சோடிப்பொருத்தம் நன்னயிருக் கென்கிறா! புரோகிறாமேர்ஸ் இவாளே தமக்கு வேணுமின்னு கேட்கறா. பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று சேரும் கட்டத்தில் உணர்ச்சி பூர்வமாக ஒன்றி போய்விடுவா."

"ஆடியன்ஸ் அப்படி feel பண்ணித் தாமே அசந்திடுவா. வாத்யங்கள் எல்லாம் சில கணங்கள் தவித்து நிற்கும். நிசப்தமாய் இருக்கும். நாமெல்லாம் சொர்க்கத்துக்கே போயிட்ட மாதிரி feel பண்ணுவோம். அப்படியான உயர் பக்குவத்தை யாரும் தொட்டதில்லை, சிவசக்தி நடனமல்லா? மீண்டும் பக்கவாத்யம் தொடரத் தான் எல்லாரது மயக்கநிலையும் மாறும். கரகோஷம் வானைப் பிளக்கும். சின்னப் பொண்ணுதானே வீடு வந்தா? அவா காலடியிலேயே விழுந்து கிடப்பா. அவாதான் அழைச்சுப் போய் அறையில் விட்டு ஆசுவாசப் படுத்துவார். நீங்களாப் பார்த்து ஒரு மஞ்சள் கயிற்றைக் கொடுங்கோ. ஈஸ்வரப் பிராப்தி அதுதானே?"

அந்த வீட்டிலே ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நம்மால் முடியுமா?

"நீங்கள் ஏன் அவளை மறைச்சு வைச்சிருக்கிற-ியள்?. காசு சம்பாரிக்கத்தானே?. நான் பொலிசுக்குச் சொல்லப் போறன்" என்கிறார் அப்பா. இரண்டாம் மனைவி அக்காவை அழைத்து வருகிறாள். அக்கா அழுது கொண்டே ஓடிவந்து அம்மாவைக் கட்டிப் பிடிக்கிறா. எத்தனையோ மாதிரி வெருட்டுகிறார், கெஞ்சுகிறார், அழுகிறார் அப்பா.

"ஐயோ நீங்களும் வேணும் ஆனால் என் நாட்டியத்தையும் என் குருவையும் பிரிந்தால் நான் உயிரோடு இருக்க மாட்டேன். தன் பாட்டிலேயே உயிர் பிரிந்து போகும். தம்பி, டேய் தம்பி", என்றவாறே ஜீவனைக் கட்டிப் பிடிக்கிறாள்.

திமிறி விடுவித்துக் கொண்டே "உன் அழுக்குக் கைகளால் என்னைத் தொடாதே" எனக் கூறித் திரும்பி ஓடுகிறான். "கிழடா உன்னை என்ன செய்யுறன் பார்" எனச் சவாலும் விடுக்கிறான், ஜீவன்.

பெரிய அவமானம். தாங்கமுடியாத குடும்பம். சின்ன அவமானத்தைத் தாங்க முடியுமெனக் கொழும்பு வருகிறார்கள். நான்கு மாதத்தில் பெத்த மகளே தந்தையின் உயிரை இதயநோய் மூலம் அனுப்பி வைத்து விட்டாள். ஜீவனுக்காக வாழ்ந்த தாயும் அவன் எஞ்சினியர் பாஸ் பண்ணியதும் பறந்து விட்டாள். உடன்பிறப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அந்தக் கலையும் எட்டிக் காயாய் கசந்தமையால், அக்காவின் சுகநலங்கள் பற்றியும் அறிய முயற்சிப்பதில்லை.

ரகுராஜ் வரலாற்றை அறியாது விடினும், இவனுக்கு நடனம் பார்க்கப் பிடிப்பதில்லை. வெறுக்கிறாள் என்பதை அறிவான். ஆயினும் தன் தங்கை நடனம் பயின்றதைப் பற்றி கூறியிருக்கிறான். ஆனால் ஏனோ தெரியாது ரகுராஜ் தங்கையின் மீது வைத்திருந்த பாசமும், அவள் ரகுவுக்கு எழுதுகிற கடிதங்களில் காட்டும் அன்பும் இரக்ககுணமும், பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கும் நீலா மீது உண்மையான ஒரு பரிவும் பாசமும் ஏற்படலாயிற்று.

கலியாணங்கள் பேசி வரும் தரகரும் கனடாவில் கூட, கேட்கிற சீதனம் ரகுராஜ்ஜை மௌனிக்கச் செய்கிறது. அவன் நிச்சயமாக ஜீவனைக் கேட்க மாட்டான். பாமாவும் சீதனமாக ஒன்றும் கொண்டு வரவில்லை. 24 வயது தானே, 30 வயதாகட்டும் என்று சொல்வான்.

ஒருநாள் பாமா வீட்டில் மதிய உணவு அருந்திவிட்டு இருந்து கதைக்கும் போது, நீலாவின் கடிதம் வந்தது. ரகு வாசித்த பின் பாமா ஜீவனுக்குமாக உரத்தே வாசித்தாள். அன்று கிரிசாந்தி பற்றி எழுதினேன் அண்ணா இன்று... என ஒரு பாலியல் வல்லுறவு குறிக்கப்பட்டு பின்னர் அடிவயிற்றில் துவக்கினால் சுட்டுக் கொன்ற சம்பவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விரிக்கப்பட்டிருந்தது. அவரவரே சிந்தனையில் ஆழ்ந்து விட்டனர்.

ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டே, "றெஸ்ரோறண்டில் வேலை செய்யுற ஒரு பெடியன் மிச்சம் நல்ல குணம், நல்ல குடும்பம். சாதகமும் பொருத்தம். சீதனம் கேட்கவில்லை. நான் computer analyst தானே என்றும் கேட்டுக் கொண்டான்"

"இஞ்சாருங்கோ ரகு, நீலா பட்டதாரியாய் இருந்தாலும், சரிக்கட்டிக் கொள்வா. ஆனால் கனடாவிலை அதிகமாக குடும்பப் பிரச்சனையும் பிரிவுகளும் விவாகரத்துக்களும் எப்படி நடக்கின்றன என்று உங்களுக்குத் தெரியும் தானே?" என்கிறாள் பாமா.

"அரைப் போத்தல் கள்ளுக்குக் கூட வழியில்லாததுகள் இங்கை வந்து மேல நாட்டுத் திறம் குடிவகைக்கு அடிமையாயிட்டினம். அதுதான் மிச்சம் மோசமான காரணம். ஆனால் இவன் குடிப்பதில்லை" என்கிறான் ரகுராஜ்.

"அதில்லையுங்கோ, பிள்ளைகள் தப்பிப் பிழைச்சு கனடாவுக்குப் போகட்டும் என பெற்றார் அனுப்பி வைக்கிறது. பச்சைக் கிளியாக வளர்ந்ததுகள் பூனைகளிடம் ஒப்படைக்கப்படுகின்றன. கல்வியில் அல்லது புத்திசாதுரியத்தில் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளால் பொறாமை அசூசை. அவங்களுக்கு இந்தக் குறை கீழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இழுக்க, ஆதிக்க மனப்பான்மை மேலே இழுக்க, தாழ்வுச் சிக்கலில் தவிக்கிறார்கள். அதனை மேற்கொள்ள அவளை வருத்துவதும், வீட்டுள் பூட்டி வைப்பதும், அடிதடிப் பிரயோகம் விடுவதும், அவள் குடும்பத்தைத் தாழ்த்திப் பேசி அவளைக் கோபமடையச் செய்வதும்... சீ சீயெண்டு போச்சு."

ஜீவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருக்கிறான். 'என்ன ஜீவன் பேசாதிருக்கிறீர்?"

"எனக்குப் பேச என்ன தகுதியிருக்கிறது. கடைக்காரனிலும் கேவலமானவனல்லவோ நான்?" என்கிறான் ஜீவன்.

"ஏன்? ஏன்? என்ன நடந்தது?" பதறுகிறான் ரகுராஜ்.

"அப்ப என்னிலை என்ன குறை கண்டு, நீலாவைச் செய்கிறியா என்று என்னைக் கேட்கவில்லை."

ரகுராஜ் ஓடிவந்து கட்டிப்பிடிக்கிறான். அவன் கண் களிலிருந்து கண்ணீர் மல்குகிறது. பாமா ஓடிவந்து கையைப் பிடிக்கிறாள். "ஜீவன் ஜீவன்" என்று தழுதழுக்கிறாள்.

"அவருக்கு அப்பவே சொன்னன். நான் கேட்டுப் பார்க்கட்டோ என்று. அவர்தான் மறித்துப் போட்டார். 'அவன் என்ன மாதிரி வாழவேண்டியவன்' இதுக்கை விழுத்தாதை? என்று. நண்பன்தானே முதலில் கரிசனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்டப்பட வேண்டியவர்."

உணர்ச்சிக் குவியலில் தவித்த ரகுராஜை கருணை பொங்கும் விழிகளால் ஆசுவாசப் படுத்துகிறான் ஜீவன். அவன் உதட்டில் மலர்ந்த புன்னகை நிரந்தரமாயிற்று.

"வேண்டாம் ஜீவன். நீர் எனது அருமை நண்பன். உமது தகுதி என்ன என்பது எனக்குத் தெரியும். குண நடை மாத்திரம் போதாது. ஒன்று அவ நடனம் பயின்று ஆசிரியராயும் இருந்தவள். நடனக்கலை என்றாலே சிம்ம சொப்பனம் உமக்கு. அதுபற்றி அரிச்சுவடும் தெரியாத நீர், நீலாவோடு முரண்படக் கூடும். இரண்டாவது நீலா வெறும் கலைப் பட்டதாரி மாத்திரமே. மூன்றாவதும் முக்கியமானதும் வீடும் பணமும் தந்து உம்மை எடுக்கப் பல பேர் காத்திருக்கிறார்கள். எதிர்காலம் ஜொலிக்கப் போகிறது. இதற்குத்தான் நான் உமது தகுதிக்கான வரனும் தேடிக் கொண்டிருக்கிறன்."

"எனக்கு வாறவள் என் நட்பினை அங்கீகரிக்காது விட்டால் உன்னை இழப்பதா? அவளை இழப்பதா? தன் செல்வத்தைக் காட்டி ஆதிக்கம் செய்யின் நான் என்னையே இழப்பதா சொல்லு! ரகு சொல்லு!"

"யாரும் இல்லாத உன்னை நான் வளைச்சுப் பிடிச்சிட்டன் என்று உலகம் சொல்லும்."

பாமா குறுக்கிட்டு, "ஜீவன் நீராய் விரும்பிக் கேட்கிறீரோ, அல்லது நண்பனில் பரிதாபப்பட்டோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேட்கறீர்?"

"நண்பன் என்றதற்காக யாரும் தங்கள் வாழ்க்கை பூராவையும் அடைவு வைக்கத் துணிய மாட்டினம். ஏன் பாமா, என் கனவும் நினைவும் நீலா தான். இல்லாட்டி இவன் தங்கை பற்றி அலட்ட அலட்டக் கேட்டுக் கொண்டிருப்பேனா? உங்கள் காதல் கடிதங்களைக்கூட நான் பெலத்து வாசிக்க அதைக் கேட்டு ரசித்துக் கொண்டிருப்பான். அப்படித்தான் நீலாவின் கையெழுத்து - அவள் எழுதும் நயம், அமைப்பு, விடயங்களின் தொகுப்பு அயலவர் பற்றிய இரக்கமும் அன்புங் கலந்த எண்ணங்கள், அண்ணன் பற்றிய அக்கறையும் பாசமும் எல்லாம் என் உள்ளத்திலும் அன்பை ஊற வைத்துவிட்டது. உங்கள் கலியாணத்தின் பின் செயலர் நீங்களாகி விட்டீர்களே. அந்த எழுத்தைக் காணாது நான் தவித்த தவிப்பு... மரபு நிலைகளை மீறி நானே கேட்கவேண்டுமெனத் தீர்மானித்திருந்தேன். இன்றுதான் வாய்ப்பு வந்தது."

ரகுராஜ் சிந்தித்துக் கொண்டே இருந்தான். பாமா அலுவல்களை முடுக்கி விடத் தொடங்கிவிட்டாள்.

## V

**ஜீ**வன் சிறிது நாட்களாக நீலாவின் வகுப்பு நேரங்களில் வந்து உள்ளே கேட்டிருப்பான். தட்டுக்கழியாலே கால்களுக்கு எறிந்து தண்டிக்கும் ஆசிரியர்களைக் கண்டிருக்கிறான். இவள் எப்படி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்பினாலே ஆட்கொள்கிறாள் என வியப்பான்.

அன்று அவளை அழைத்து வர கொஞ்சம் சீக்கிரமே போய்விட்டான். இறங்கித் தான் பார்ப்போமே என்று வெளியே நின்றான். அந்நேரம் ஒழுங்கமைப்பாளர்கள் ஓடித் திரிவதும் பரபரப்பதையும் ரிக்கற் விற்பவர்களோடு பிரச்சனையைச் சொல்வதையும் கண்டும் கேட்டும் புரிந்து கொண்டான்.

"கொஞ்சம் நேரஞ் செல்லும் போல ஐயா... நீங்கள் வாருங்கோ உள்ளே போய் இருக்கலாம். முன்னுக்கு இடம் இருக்கு" என்று அழைத்தார்கள்.

ஜீவன் கடைசி வரிசைக்குப் பின்னாலேயே நின்று கொண்டு தனது பைனாகுலரையும் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் உள்ளத்தில் ஏதோ ஒரு இடம் நெகிழ்ந்தது உடைந்தது. மூடிய திரை திறந்தது. அந்த இடத்தில் உல்லாசம் பிறந்தது. நீலாவின் நிகழ்ச்சி முடிந்ததும் அவன் வெளியே வந்து காரடிக்குச் சென்று சிந்தித்துக் கொண்டே நின்றான்.

## VI

**கு**ளித்து உருப்பு மாற்றிக் கட்டிலிலே வந்து அமர்ந்தது கூடத் தெரியாமல் குப்புறப்படுத்தபடியே காலை ஆட்டிக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்த நீலாவுக்கு இது தெரியவில்லை. அவனுக்குப் புரிந்து போகிறது. குதி நரம்புகளை மெல்ல நீவி விட்டபோதே, "என்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காலெல்லாம் நிலத்திலே குத்திக் குத்தி வலி எடுக்கிறதோ பாவம்" என்கிறான் ஜீவன்.

அவுக் என்றெழுந்த அவள் சந்தேகத்தோடு முறைத்துப் பார்க்கிறாள்.

"என்ன ஒரு மாதிரிப் பார்க்கிறீ? நான் ஒன்றையும் பார்க்கவுமில்லை கேட்கவுமில்லை. பிள்ளைகளுக்கு பழக்குகிறது தானே அதுதான் கேட்டன்" அவன் கண்களின் வம்புத்தனமும், குறும்புத் தனமும் புரிய வைத்தன.

பாய்ந்து அவன் வாயைப் பொத்தி "வீணாகப் பொய் சொல்ல வேண்டாம். நான் எப்படிச் சொல்வதென்று தவிச்சுக் கொண்டிருக்கிறன். என்னால மறுக்க முடியாமல் போச்சுது..."

"காருக்குள்ளை தவிச்ச தவிப்பையும் நான் பார்த்துக் கொண்டுதான் இருந்தன். தங்கள் தங்கள் பிரச்சனைகளைத் தாங்களே தீர்க்கட்டுமென்று தான் அதிகம் பேசாமல் வந்தன்"

அவன் நெஞ்சில் கோலங் கீறியவாறே "உங்கடை குறும்புச் சிரிப்புகளையும், சேட்டைகளையும் கவனிச்சு ரசித்துக் கொண்டுதான் வந்தன். ஏன் இன்று கொஞ்சம் மோசமாயிருக்கிறார். நான் இதைச் சொன்னவுடனை பெட்டியையும் தூக்கிக் கொண்டு அண்ணா வீட்டைபோ" என்று பிளேனிலை ஏற்றி விடுகிறதாக்கும் எனப் பயந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொண்டே இருந்தன்."

"அதென்ன ஜீவபாலிகா, இந்தக் கலையரசியை ரசிக்காமலா"

"எனக்கு ஏதோ ஒரு சந்தேகம். உங்களுக்கு இயல்பிலேயே நடனக் கலையோடு சம்பந்தமான அசைவுகள் தாள கதிகள் அணைக்கும் பாங்குகள் எல்லாம் இருப்பதை அவதானிச்சிருக்கிறன். அண்ணா சொன்னது போல 'கலாரசனை' இல்லை என்பதல்ல, ஏதோ வெறுப்புத்தான். ஏதோ காதலில் தோல்வியாக்கும். யாரோ கலை ராணி டிமிக்கி தந்திட்டாளாக்கும் என்று நினைத்தன்" என்கிறாள் பாமா

அவளின் முகத்தை நிமிர்த்திய ஜீவன் அவள் கண்ணுக்குள் சொன்னான்: "ஆம் தோல்விதான். காதலில் தோல்வியல்ல. காதலினால் பத்து, பன்னிரண்டு வருட விரதத்தை முறித்து விட்ட தோல்விதான். எல்லாம் பிறகு சொல்வேன்" என அவள் காதில் கிசுகிசுத்து விட்டு சிறிது நேரம் அவளுடன் அன்பில் திளைத்திருந்தான்.

"என் நடனம் எப்படி இருந்தது?"

"என் உள்ளத்தில் கிளர்ச்சியை உண்டு பண்ணியது எனக்கு வேறென்ன தெரியும்? சொன்னால் கோபிக்க மாட்டியே சொல்லட்டுமா?"

"சொல்லுங்கோ! சொல்லுங்கோ!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"உங்கடை பிள்ளைகளின் நடனத்தில்..."

"அதுகள் சின்னன்கள் தானே?"

"ஒரு ஆடல் நங்கைக்குப் பரதம் மாத்திரமல்ல தமிழ் அறிவும் தேவை. முதல் தொகையறாவாக 'உலகெலா முணர்ந்து' எனும் புராணம் பாடினீங்களல்லா. 'நீர் மலி வேணியன்' என்பதற்கு என்ன அபிநயம் சொல்லிக் கொடுத்தீர்?"

"நீரினால் சூழப்பட்ட இப் பூமியின் தலைவன்" என்பதாகச் சொன்னேன்..."

"முதலிலேயே 'உலகம்' வந்துவிட்டதே பாரும். "நிலவு உலாவிய நீர்மலி வேணியன்" நிலவும் இருக்கிறது நீரும் இருக்கிறது எங்கே? சடாமுடியில்! வேணி என்பது உலகமல்ல; தலைமயிர். தமிழ் அர்த்தங்களைப் புரிந்துகொண்டு தான் அபிநயம் அமைக்க வேண்டும்."

"அடடா, பிழைதான். எத்தனை பேர் இதைக் கண்டுபிடித்தார்களோ. சக்கட்டுனிலை தமிழறிஞர்கள் யாரும் இருக்கமாட்டார்கள் என்று நினைக்கின்றேன்." அவள் முகம் வாடியது.

"இன்னொன்று சொல்லட்டுமா?"

"பயமாய் இருக்கு; சொல்லுங்கோ."

"தில்லானாவில் துரிதகதி கொஞ்சம் கஷ்டமா யிருந்தது என்ன?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நீலா ஆச்சரியத்தோடு பார்க்கிறாள். இவ்வளவு நுட்பமாக சாதாரணமானவரால் கண்டுபிடிக்க முடியாதே.

"சாஹித்தியத்தில், " சந்ததமு முனைச் சிந்தை யினில் துதிக்க வரமருள்வாய் பிரகதீஸா என்பதில்...."

விழிகள் பிதுங்க பயத்துடன் பார்க்கிறாள் நீலா.

"சந்ததமு முனை என்பதற்கு ஏன் சிகரம் முத்திரை பிடித்தீர்? ஹம்சாஸிய முத்திரை பிடிக்க வேண்டுமே" என அந்த நடன நிலையில் முத்திரை பிடித்துக் காட்டினான்.

கண்கள் விரிய ஓடிச் சென்று கொடியாகப் படர்ந்தாள் அவள். அதுதான் அந்த நாயக நாயகி பாவம்; பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்று சேர்ந்த நிலை! மௌனமும் மயக்கமும் சுதாரித்துக் கொண்டவள் நீலாதான்.

உள்ளமெல்லாம் கனிந்து கரைந்துருக "உங்களுக்கு நடனம் நல்லாவே தெரியும். நீங்கள் பயிற்சி செய்திருக் கிறீர்கள். ஏன் அடக்கி வைத்தீர்கள்? எப்படி உங்கள் இதயத்தைக் கல்லாக்கினீர்கள்? அப்படி என்ன துன்பமும் வன்மமும் நடந்தது?"

"நீலா, இப்போது என் தவறை உணர்ந்து கொண்டேன். இந்தக் கணம், மூடியிருந்த ஒரு கதவு திறந்து கொண்டது. புனிதமான இந்தக் கலை புனிதமான உணர்வுகளை எழுப்பி சமூக உறவுகளை சிதைக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேண்டாம் இது பற்றி பின்னர் சொல்வேன். ஆனால் நான்கு வருடங்கள் குருசீஷ்ய முறையில் பூரணமாகவே கற்றிருக்கிறேன். ஆம் பதினைந்து வயதுவரை

அக்கா!... இன்றுதான் உன்னத உணர்வுகளைப் பெற்றேன். எப்படி ஒரு மனம் இன்னோரு மனத்துடன் ஒன்றாகிக் கரைந்து போய் தன்னிலை மறந்து நிற்க முடியும் என்பதை அறிந்து கொண்டேன். பாவம் உனக்கு அப்போது பதினெழு வயது. விடுதல் அறியா விருப்பு. காண்போரெல்லாம் கண்ணனாகவும் நீ ராதையாகவும் தான் கற்பனை பண்ணியிருப்பாய். வாழ்க்கை என்பது என்ன எனத் தெரியாத எதிர்காலம் பற்றிச் சிந்திக்க முடியாத வயது. மானம் அவமானம் என்பவற்றிற்கு அப்பாலும் நாம் வாழப் பழக வேண்டும். இத்தனை வயதிலும் நீலாவால் நான் பெறும் இன்பக் கிளர்ச்சிகளை உதறமுடியாவிட்டால் உணர்வு பூர்வமாகச் சிந்திக்கும் அந்த வயதில் உம்மை அடக்கி எம்முடன் வந்திருக்க முடியுமா?ஜீவனின் சிந்தனை இப்படிப் போக...

என்ன விரதமாயினும் ஒரே பிடியாக இருக்கமுடியாது. காலமாற்றத்தில் எவையும் மாறத்தான் செய்யும் ஜீவனில் இடைக்கிடை காணப்படும் இறுக்கம் இனி இருக்காதென நினைக்கிறன். கண்களுக்கும் லலித கதைகள் தெரிவது நல்லது உள்ளத்தை பண்படுத்த முடியும். நடனக்கலையும் நன்கு தெரிந்தவர். என்ன பரந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனப்பான்மை, பண்பட்ட உள்ளம்: அன்புக்கும் ஏங்கும் அவ்விழியினள்... அன்பைத்தான் யாராலும் வாரி, வாரி வழங்க முடியுமே. அவரது ஆளுமை வளம்பெற என் காதல் துணை நிற்கும்.

ஜீவனும் நீலாவும் 'காதலர் பிரியாமல் கவுவக்கை நெகிழாமல்' என்பது போல இருமனமும் ஒன்றாய் உருகி மெய் மறந்து நிற்க யன்னலூடே வந்த மேகக்குறி ஒளி பூரண நிலாவாக அவர்களை தழுவி நின்றது.

இருமன மொத்த தம்பதியரிடையே இறுதிநாள் வரை ஒரு தணியாத தாகம் இருந்துகொண்டே வரும். அதுதான் உண்மைக் காதலோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14

## ஒரு அன்பு மகன் காதலனாகிறான்



வயிற்றை முன்னுக்குத் தள்ளிக் கொண்டே நாரியைக் கையால் தாங்கிக் கொண்டு ஏவறை விட்டுவிட்டு மென்மையான வியர்வைத் துளிகள் வெளியேற மெல்ல மெல்ல நடை பயிலும் தன் மனைவியைக் கனிவோடு ஒருவித பரிதாபமும் ரசிப்புத் தன்மையும் கூடப் பார்த்துக் கொண்டிருக்கிறான் வளவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இது அவர்களின் மூன்றாவது குழந்தை. 'கொஞ்சம் இருமன், கால் உளையப் போகிறது.' இது அவன்.

"என்ன செய்கிறது. நடக்கவும் வேணுமே." வேதனை கலந்த புன்முறுவல் அவளுடையது. "சரி நடவுங்கோடா பிறகு காலைப் பிடித்து விடுகிறன்." அவன் குரல் இரக்கத்தோடு ஒலிக்கிறது. அவனது உணர்வில் ஒன்றிக் கனிவான பார்வையொன்றை உகுக்கிறாள் ரேணுகா. உளம் சிலிர்த்துப் போன அவனுக்கு வேண்டாத நினைவு ஒன்று முட்டி மோதி ஆக்கிரமிக்கிறது.

அவள் முதலாவது குழந்தையைச் சுமந்தபோது ஒருநாள் இதே போலத்தான் அவள் உலாவிக் கொண்டிருக்கிறாள். எதோ உல்லாச நினைவுகளோடு உள்ளே வந்தவன் அவளை அப்படியே கட்டிய ணைக்கிறான். அப்போதெல்லாம் நிறைசூலியை எப்படி எந்தப் பக்கத்தால் எவ்வாறு அணைக்க வேண்டும் என்பதையெல்லாம் அனுபவப்படுத்திக் கொள்ளாத காலம். அத்தோடு விவாகமாகி இவ்வாழ்வின் புதிய நிலைகள் பற்றி ஒருவருக்கொருவர் புரிந்து கொள்ளவோ அநுசரித்துப் போகவோ பயிலுங்காலம். இரு வேறு குடும்பப் பழக்கவழக்கங்களின் மோதல். அம்மாக்கள் புராணம். 'எங்கள் அப்பா என்றால்...' என ரேணுகாவும் 'எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்மா என்றால்...' என வளவனும் ஏட்டிக்குப் போட்டி! 'நாங்கள் என்றால்...' எனும் நிலை இன்னமும் வரவில்லை.

கட்டிப் பிடித்த அவனை உதறியவாறே அவள் சினக்கிறாள். சிடுசிடுக்கிறாள்.

"என்ன நீங்கள், வயிறெல்லாம் பாரமாக ஒரே நோ வென்று அவஸ்தைப்படுகிறன். இண்டைக்குத்தான் முதன் முதலாகக் காணாததைக் கண்ட மாதிரிக் கூர்ந்து கொண்டு வாறியள்... காட்டுமிராண்டியள் மாதிரி."

வளவன் திடுக்குற்றான். அவனது உல்லாச உணர்வு பறந்தது. மனம் கூசிக்குறுகியது. அவமானப்பட்டது போன்ற உணர்வு. அவன் மனைவிதானே என்ற எண்ணம் அவனுக்கு வரவில்லை. 'யாரோ பெத்தவள் அவனை அவமதிக்கலாமா' என்ற எண்ணம்தான் முன்னிற்கிறது. தடுக்கமுடியாமல் அவனது தாயின் எண்ணம் வருகிறது. இப்படியான காலங்களில்கூட அவளின் முகத்தில் ஒரு செந்தளிப்பு, மலர்ச்சி. நெற்றியைச் சுருக்குவதோ, வேதனையைக் காட்டுவதோ கிடையாது. யாருடனும் சீறி விழுந்ததில்லை. அவனுடைய மானஉணர்வு இந்த ஒப்பீட்டுடன் கோபத்தை தூண்டுகிறது. அது நாக்கைக் கூர்மையாக்குகிறது.

"என்ரை அம்மாவும் நாலு பிள்ளையைப் பெத்தவ. பிள்ளை பிறக்கிற அன்றும் கல்லூரிக்குப் போட்டு வாறவ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீட்டு வேலை, சமையல், வளவு வாய்க்கால் என்று எவ்வளவு பாட்டைச் சுமந்தவ. இவ்வளவு பெரிய Fuss விட்டதில்லை. உலகத்தில் ஒவ்வொருத்தியும் பிதுக்கி விட்டிட்டுப் போறாளவை. இங்க தான் பெரிய விண்ணாணம்."

ஒரு போதும் கனக்கக் கதைக்காதவன் இன்றைக்கு ஏன் இப்படி என அவளும் யோசிக்கவில்லை. மலையாளத்தில் 'கர்ப்பிணி' என்றால் 'துர்க்குணி' என்பார்களே அதுவோ? அவளுக்கு கோபம் பீறிடுகிறது.

"பிதுக்கியாம் பிதுக்கி. கொம்மா பெரிய படிப்புக்காரி யல்லோ. நல்ல பாஷைதான் சொல்லித் தந்திருக்கிறா."

அவன் துணுக்குற்றான். அவனது அலுவலகத்தில் வேலை செய்யும் ஒரேயொரு தமிழ் தொழிலாளிதான் இவன் ஓய்வு நேரத்தில் உரையாடும் ஒரே ஒரு பேர்வழி. ஆறு பிள்ளைக்காரன். எதற்கும் அலட்சியமாக நோக்கும் தன்னம்பிக்கையாளன். கலகலப்பானவன். தைரியமாய் எதையும் துருத்திக் கொண்டு நிற்பவன். அவனது பேச்சு மொழி சிறிது தரங்குறைந்தே இருக்கும். எதற்கும் கவலைப்படும் வளவனுக்கு ஆறுதல் அளிப்பவன். ஓயாமல் ஒழியாமல் நோய் நொடி எனும் மனைவியின் முறைப் பாடுகளை அவனிடம் சொல்லி ஆலோசனை கேட்பான் வளவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"என்ன ஐயா, மனுசி சும்மா செல்லம் விட்டுக்கொண்டு உங்களைப் பயப்பிடுத்துது. பொம்பளையள் சரியான சாலக்காரியள். புருஷன்மாரைக் கையுக்க போடுறத்துக்கு உப்படித்தான் அழுதுகிழுது நாடகமாடுறது. நாங்கள் அதுக்கு மேல நாடகமாட வேண்டும். அவை தொடங்கப் போகினம் எண்ட உடனே நாங்கள் தொடங்கிவிட வேண்டும். 'ஐயையோ பார்க்கவே பரிதாபமாய் இருக்கு. எப்படித் தாங்குகிறாய்? ஏதோ இந்தப் பத்து மாதம் சுமந்துவிடு. அதுக்குப் பிறகு நான் தான் சுமப்பன். நீர் ராசாத்தி மாதிரி இருக்கலாம்' என்று அக்கறைப்படுவதாக நடித்துவிட்டால் அவை எங்களில பரிதாபப்படுவினம். உப்படித்தான் என்ர மனுசியும், கடும் நோவுக்குள்ளேயும் என்னைக் கவலைப்படுத்தக் கூடாதென்று 'எனக்கொன்றும் இல்லை பயப்படாதையுங்கோ' என்று சொல்லிப் போடும். பிறகு ஆரவாரமில்லாது பிதுக்கித் தள்ளிவிடும். பழுத்த பழம் விழத்தானே செய்யும்."

இப்படி அடிக்கடி கேட்டுக் கேட்டு அந்தத் தொடர் வாயில் வந்துவிட்டது. அதனால் அவனது தாய்க்கும் கெட்ட பெயர். அவன் நாக்கைக் கடித்துக் கொண்டு என்ன செய்யலாம் என்று யோசிக்கையில் மீண்டும் ரேணுவின் புலம்பல்.



"இனிச் சொல்லுங்கோ மாவிடிச்சு நெல்லுக்குத்தி மணியொன்றாகு முன்னர் நோவின்றிப் பிள்ளைபெற்றார் நூற்றாண்டுப் பாட்டியரே." தொடர்ந்து அழுகிறாள்.

யாரும் அழுவது அவனுக்குப் பிடிப்பதில்லை. அம்மா அழுது அவன் பார்த்ததில்லை, செத்தவீடுகள் தவிர. 'வாழும் பெண்கள் கண்ணீர் வடிக்கக் கூடாது. சவால்களைச் சமாளிக்கவும் தோல்விகளை ஏற்றுக் கொள்ளவுமான வீரம் வேண்டுமே தவிர கோழையாகக் கூடாது. மாய்மாலக் கண்ணீர் என்று மற்றவர் சொல்லக் கூடாது' என்று தங்கைமாருக்கு அம்மா அறிவுறுத்துவதை அவன் கேட்டிருக்கிறான்.

ரேணுகா இப்போ வேலைக்குப் போவதில்லை. ஆயினும் அவன் வேலையால் வந்து தேநீர் தயாரித்து அவளுக்கும் கொடுத்துக் குடிப்பான். மனப்படாது இருந்த காலத்தில் தேநீர் மணம் வயிற்றைப் பிரட்டுதென்று வளவன் தயாரிக்கத் தொடங்கிய பழக்கம். அதில் அவனுக்கு இஷ்டமில்லை. ஆயினும் பழகிவிட்டது.

இன்று அவள் அம்மாவைக் குறைசொன்னதும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அழுகிற சத்தம் அதற்கு நெய் வார்த்தது மாதிரி. திடீரென அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல். படாரெனக் காரை எடுத்துக் கொண்டு அம்மா வீடு போகிறான். அவன் அம்மா பிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கதவைத் திறந்த ரதி, அவனைக் கண்டு ஆரவாரப் பட்டுக் கொண்டு பின்னால் எட்டிப் பார்க்கிறாள்.

"ரேணு வரவில்லையா? நான் அங்கை வர இருந்தனான். நல்லவேளை நீ வந்திட்டாய். ராசவள்ளிக்கிழங்கு பால் சீனி போட்டுக் காய்ச்சினான். அது தனக்கெண்டு ஒண்டும் செய்யாது. இந்த நேரத்திலைதானே தாய் சகோதரங்களின் அருமையை நினைக்குங்கள்." சொல்லிக் கொண்டே உள்ளே போய் தேநீர் எடுத்து வந்து கொடுக்கிறாள். நுண்கதிரலைப் பெட்டியில் சூடாக்கப் பட்ட தேநீரைச் சுவைத்துக் குடிக்கிறான் வளவன். ரேணு குடித்திருக்க மாட்டாளே என்ற எண்ணமும் வருகிறது. அதே நேரத்தில் தன் தாய் அவள் மீது காட்டும் பாசத்தையும் அவள் தாய் மீது காட்டும் துவேஷத்தையும் எண்ணிப் பார்க்கிறான்.

தாயின் ஸ்தானத்தில் இருந்து ரதியம்மா விதம் விதமான பண்டங்கள் செய்து கொடுப்பாள். எதைக் கொடுத்தாலும் முதலில் ஒரு 'சீ'; பின்னர் 'வேண்டாம்'; பின்னர் 'எனக்கு விருப்பமில்லை'. பெரிதாகக் கெஞ்சினால் அருக்கிக் கொண்டு வந்து ஒரு மூச்சில் சாப்பிட்டு விடுவாள் ரேணு. தாய் தன் நிலையிலிருந்து இறங்கிக் கெஞ்சுவது வளவனுக்கு விருப்பமில்லை. அன்றொரு நாள் பக்குவமாய்ச் சமைத்த இராசவள்ளிக்கிழங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எவர்சில்வர் பாத்திரத்திலிட்டு அனுப்பிவிட்டாள் தாய். வளவனுக்கு இச்சிற்றுண்டி என்றால் நல்ல விருப்பம். அது ரேணுவுக்கும் தெரியும். பாத்திரத்தை திறந்த ரேணு அந்த மணத்துக்குப் பிரட்டி வரவே ஓடிச்சென்று சத்தி எடுத்தாள். கோபத்தோடு வந்து அப்படியே குப்பையில் கொட்டிவிட்டாள். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. "ஏன் கொட்டினீர், எவ்வளவு காசு செலவழித்தது. நான் சாப்பிட்டிருப்பேனே" என்றான்.

"எனக்கு வேண்டாம் என்றால் உங்களுக்கும் தேவையில்லை. மசக்கைக்குச் செய்ததை மற்றவை சாப்பிடக்கூடாது. என்னுடைய சாட்டில உங்களுக்குத் தானே கொம்மா விதம்விதமாய் பாகம் பண்ணுறா." அவனுக்குக் கோபத்தில் உடம்பு ஆடியது. தன்னை, தன் அம்மாவை அவமதித்ததற்காக, நல்ல உணவை வீசியதற்காக, பொய்க்காரணத்தைக் கற்பித்ததற்காக, வீண்விரயத்தை ஏற்படுத்தியதற்காக. ஆனால் அவன் தாய்க்குச் சொல்ல மாட்டான் என்பது ரேணுவுக்குத் தெரியும்.

மசக்கை, கண்டறியாத மசக்கை! மனிதரின் பண்புகளையும் இந்த மசக்கை மாற்றியமைத்து விடுமா? அல்லது இது தான் சாட்டென்று உட்கிடக்கைகள் வெளிவருகிறதோ? வெறும் பாத்திரத்தைக் கண்ட தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வளவனுக்குக் கூட வைக்காமல் ரேணு சாப்பிட்டுவிட்டாள் எனத் தேடித் தேடி வாங்குவதும், மருமகளுக்குச் செய்து கொடுப்பதும் தொடரும். அப்படித்தான் இன்றும்.

"ரீ குடிச்சிட்டியே? ரேணுவின் அம்மா கொழும்புக்கு வந்திட்டாவாமே? ரேணுவை நான் பார்ப்பன். ஆனால் அதுக்கு வீட்டின் ஏக்கம் இருக்கு. மனுசி ஒருக்கா வந்து ஒரு மாதம் நின்றிட்டுப் போனால் காணும்."

"என்ன மகனே பேசாமல் இருக்கிறாய். இப்ப நானும் வாறன். பிறகு என்னை ஆர்த்தி வீட்டில விட்டுவிடு. மருமகன் இங்கே கூட்டிவருவார். என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்?" அவள் கூர்ந்து பார்க்கிறாள் குரல் உயர்கிறது.

"ஓ அவளோட பிடிபட்டுக் கொண்டே வந்து நிற்கிறீர்? மூஞ்சியைப் பார்க்க அப்படித்தான் தெரியுது. அவள் நிறைமாதக் கர்ப்பிணி. அவள் ஏதும் சொன்னாலும் உமக்குப் பொறுத்துப் போகேலாதோ? முதற் பிள்ளை. எவ்வளவு யோசனையும் மனவேதனையும் பயமும் பெண்ணாய்ப் பிறந்த எங்களுக்கெல்லோ தெரியும். என்ன முழுசுறாய்? எனக்கு என்ன குறை? உதவிக்கு அங்க ஆனைப்படை சேனைப்படை. அத்தோடு அளவுக் கதிகமாக சகிப்புத் தன்மை இருக்கிறது. உலகத்திலுள்ள எல்லாப் பெண்களும் ஒரே மாதிரி இருக்க முடியுமே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவன் சொல்லாமலே வந்து விட்டான் என்பதை அறிந்து விரைவாகப் போன் பண்ணுகிறாள். அவளது குரல் இப்போது குழைகிறது.

"ரேணு எப்படி இருக்கிறீர்? தம்பி இங்கைதான் வந்தவர். நான் உம்மைப் பார்க்க வேண்டும் என்று சொன்னனான். அதுதான் கூட்டிப் போக வந்தவர். ரீ குடிக்கிறார். உடன வாறம்."

"ஓம் ரதி மாமி, அவருக்கு அம்மா இஞ்சை இருக்கிற படியால் ரீ குடிக்க ஓடி வந்திட்டார். நான் ஊருக்கு ஓட முடியுமோ? அப்படிப் போனாலும் அம்மா மடியில வைச்சு சீராட்டுவாவோ? அங்கை போடி, போய் ரீயைக் குடி என்றல்லவோ கலைத்திருப்பா."

ஒவ்வொரு சொல்லும் சன்னங்களாகத் துளைக்கின்றன. இந்தப் பெண்ணோடு பெண்கள் அமைப்பு ஒன்றில் அவளுக்குப் பழக்கம் இருந்தது. அறிவு, பெண் சுதந்திரம் பற்றிய தெளிவான கோட்பாடு, அழகு, உற்சாகம் அனைத்துமே ரதியம்மாவுக்குப் பிடித்திருந்தது. ரேணுவுக்கும் ரதியம்மாவின் முற்போக்கும் புரிந்துணர்வும் ஆகர்ஷிப்பாக இருந்தன. எனவேதான் அவள் மருமகள் ஆனாள்.

வளவன் எப்படித்தான் சமத்துவமாக வளர்க்கப் பட்டாலும் காலங்காலமாக ஆண்களின் இரத்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஊறிய ஆதிக்கம் அதிகாரம் இடைக்கிடை வெளிக் காட்டத்தான் செய்யும். இதை மாற்ற இரத்தமாற்றுச் சிகிச்சை செய்ய முடியுமா என்ன? அவனது எதிர்பார்ப்பு கனடாவில் வீட்டையும் பிள்ளைகளையும் பொறுப்பாகப் பார்க்கக் கூடிய பெண். உயர் கல்வியோ தொழிலோ தேவையில்லையென்பது. பெண்ணுக்குப் பொருளாதார விடுதலை வேண்டுமாம் என்றால் அரசாங்க விதிகளுக் கமைய மனைவிக்கு முறையாகச் சம்பளம் போட்டுக் கொடுப்பதோடு வீட்டுச் செலவையும் தானே பொறுக்க முடியும் என்பான். பெண்ணும் ஒரு சமூகப் பிராணி. வெளியே போக, நாலு இனத்தவரோடு பழக, பல அனுபவ அறிவு பெற என தேவைகள் பல இருக்கின்றன. காசு பெரிதல்ல. சலிப்பும் விரக்தியும் மனோநிலைப் பாதிப்புக்கு இட்டுச் சென்று விடும். சமூக உறவு அனைவருக்கும் தேவை என வாதப் பிரதிவாதங்கள். கடைசியாக வழக்கம் போல ரதியம்மாவுக்கே வெற்றி கிடைக்கும்.

ஆயினும் வளவன் பயந்தது போலல்லாமல் வாழ்க்கை சுமூகமாகப் போய்க் கொண்டிருந்தது. இடைக்கிடை 'அம்மா புராணம் தொடங்கிற்றா' என்று கேலி மாத்திரம். ஆனால் என்று வயிற்றில் வந்ததோ அன்றிலிருந்து அடிக்கடி சிறு சிறு பிரச்சனைகள்தாம். கண்காணாத மாமியும் மக்களும் அவனுக்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை. அவளுக்கோ அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உயிர்ப் பிரச்சனை. பொறுப்பேற்று அனுமதிக்கப்பட்ட கடிதங்கள் கூட அவர்களால் யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேற முடியாத காரணத்தால் தங்கி நிற்கிறது. 20,22 வயதான இரு ஆண்களையும் பக்குவப்பட்ட இரு பெண்களையும் விட்டுட்டுவர ஒரு தாய் சம்மதிப்பாளா?

விரிசல் அதிகமாகி வருவதாக ரேணு நினைக்கிறாள். உடல் இயலாமை, மனப் போராட்டம் இவை பற்றிப் புரிந்துணர்வு இல்லாமல் மோதலுக்குத் தயாராய் நிற்கும் வளவன். அதீத உபசரிப்பாலும் அன்பைக் காட்டுவதாலும் தாயைவிடப் பன்மடங்கு உயர்ந்து நிற்கும் மாமி. அதையே சொல்லிச் சொல்லி எரிச்சலையும் பொறாமையையும் விதைக்கும் கணவன். இதற்குள் வயிற்றில்...

போன் பேச்சால் அதிர்ந்து நின்றுவிட்ட ரதியம்மா அவளுடைய அலட்சியத்தையும் குத்தல்களையும் கேட்டுத் திகைக்கிறாள்.

"ஏன், என்ன நடந்தது? அவன் எனக்கு ஒன்றும் சொல்லவில்லை. எனக்கு ஒன்றும் தெரியாது ரேணு."

ரேணு ஆற்றாமையின் எல்லையில் நின்று, அனைத்தையும் கவிட்டுக் கொட்டுகிறாள். மிகச் சிறிய சிறிய சம்பவங்கள். அவை நொந்து போன உள்ளத்தை எப்படியெல்லாம் சிதறடிக்கின்றன. மறுமுனையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வருபவை தாயின் முகத்தை இறுக வைப்பதை அவதானிக்கிறான் வளவன். இடைக்கிடை சுட்டெரிக்கும் பார்வை இவன் மீது படரும்.

"ரேணு, மாமியார் என்ற அந்தஸ்துக்கு முன்னரே எங்களிடம் நல்லதொரு உறவு இருந்தது. அது ஒரு வகை. தாய் மகள் பாசமோ நட்போ தெரியாது. நல்ல காலம் இன்றாயினும் மனம்விட்டுப் பழைய உறவைப் புதுப்பித்தீர். சாதாரணமாகப் பார்க்கும் போது இவையெல்லாம் வேண்டுமென்று செய்யப்பட்டவையல்ல. ஒரு அலட்சியப் போக்கினால்தான். ஆனால் உமது நிலையிலிருக்கும் போது இவற்றை அலட்சியம் செய்ய முடியாதுதான். நல்லவேளை விரிசல் அதிகமாகிக் கோடேற முந்தி அவிழ்த்து விட்டீர். எல்லாவற்றையும் இழுத்துப் போட்டுக் கொண்டு நீரே செய்வதால் அவனுக்குக் குடும்பப் பொறுப்பும் இல்லாமல் போட்டுது."

கோடு என்ற சொல்லைக் கேட்டுப் பயந்து அவமானப்பட்டான் வளவன். என்ன கொடுமை செய்தோம் என்று அவனுக்கே தெரியவில்லை. தன்னைப் போலவே புத்தி சித்தம் உடைய படித்த பெண். தீர்மானங்கள் எடுக்கக்கூடிய அறிவு, ஆற்றல் படைத்த பெண் என்பதை அவன் அடிக்கடி மறப்பதுண்டு.

உள்ளே சென்று மீண்டும் முகத்தைக் கழுவிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிப் படத்தின் முன் நிற்கிறாள் ரதி. மகா மந்திரமான காயத்ரி மந்திரத்தைத் தெளிவாக, சுத்தமாக மூன்று முறை ஓதுகிறாள். வெளியே வரும்போது முகத்தில் சாந்தமும் தெளிவும் தெரிகின்றன. அதே நேரம் அப்பாவும் உள்ளே வருகிறார். இதுவரை ஆண் சிங்கம் போலச் சிலிர்த்து நின்ற வளவன் வாலை ஒடுக்கிக் கொண்டு அமருகிறான்.

அப்பா அவனைத் தீர்க்கமாகப் பார்க்கிறார். அப்பா வெளியூர்களில் வேலை செய்தபடியால் அம்மாதான் வீட்டின் சகல பொறுப்புகளையும் ஏற்றுக்கொண்டு செய்வித்தா. அப்பா ஒரு செல்லப் பிள்ளையாய் வந்து போனார். வீடுகளில் உதவி ஒத்தாசை நிறைய இருந்தமையால் ஒரு முகாமையாளர் வேலைதான் அம்மாவுடையது. சகல நற் பண்புகளையும் ஊட்டிய அம்மாவால் ஒரு கணவனின் கடமைகள் எவை என்பதை உணர்த்த முடியவில்லையே. அப்பாவும் ஒரு குடும்பப் பொறுப்புள்ள கணவனாக நடந்து முன்னுதாரணமாக விளங்கவில்லை. அதுவே வளவனை ஒரு நல்ல பெண்ணுக்கேற்ற கணவனாக நடக்கவிடவில்லை. குடும்பத்திலிருந்து, பொறுப்புகளிலிருந்து ஆண் அந்நியப்படும்போது பெண் தனித்து விடப்படுகிறாள். சமாளிக்கமுடியாமல் திணறுகிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





*"ஒரு பெண்ணைப் போல இன்னொரு பெண் இருக்க முடியாது. தாய்மாரை மனைவிமாருடன் ஒப்பிடக்கூடாது. ஒப்பிட்டோ உசத்தியோ பேசுவதாலேதான் பல பிரச்சனைகள் உருவாகின்றன. அம்மா ஆயிரத்தில் ஒருத்தியாயிருக்கலாம். ஆனால் உன் மனைவியை உன் பிள்ளை ஆயிரத்தில் ஒருத்தி என்றுதான் சொல்லப் போகிறான்."*

அப்பாவின் சிந்தனைகளைச் செவிமடுத்த போது வளவன் உள்ளத்தில் மாற்றம் நிகழ்கிறது. தன் குழந்தையைச் சுமக்கும் தாய் எனும் பரிவு தோன்றுகிறது. ஒன்றும் நடவாதது போல சமாளித்துக் கொள்கிறான்.

குழந்தை பிறக்கிறது. அப்பச்சிளந் தளிரை அதிசயத் தோடு நோக்குகிறான். படைப்பின் நுட்பத்தை விசித்திரத்தை எண்ணி மலைக்கிறான். அந்த வயிற்றுப் பேழைக்குள் இந்த உலக மகா அதிசயத்தையா சுமந்தாள். அவன் தான் ஒரு குட்டிக் குழந்தையாக அதற்குள் இருந்ததாக உணருகிறான். ரேணுவை அன்பும் பரிவும் நன்றியும் பொங்கப் பார்க்கிறான். உண்மைக் காதல் பிறக்கிறது. அன்றிலிருந்து அவன் ஒரு நல்ல கணவனாக மாத்திரமல்ல ஒரு நல்ல தகப்பனாகவும் மாறி விட்டான். இப்போ அம்மாவைப் பார்க்கக் கூட நேரமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"என்ன யோசிக்கிறீங்கள்" என்று பரிவோடு தன் தாடையைப் பற்றும் ரேணுவின் கைகளை அகற்றி இலாவகமாக அணைத்து முத்தமிடுகிறான். "எனக்கொன்றும் நேராது. பயப்படாதேங்கோ." அன்பின் மிகுதியால் அவள் கண்களிலிருந்து நீர் சுரக்கிறது. முகத்தோடு முகம் வைத்து இரு உள்ளங்களும் சங்கமமாகின்றன.

இன்று பெற்றாரும் யாரோ, பெற்ற பிள்ளைகளும்கூட யாரோ. அந்த இரு உயிர்களும் ஒன்று. அந்த இரு உள்ளங்களும் சங்கமமாக ஓர் உயிர் தோன்ற வேண்டியிருந்ததோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15

## மதியம் திரும்ப மதியும் திரும்புகிறது



ஒன்ராறியோ வாவிக் கரையில் ஹம்பர் குடா பார்க்கில், வாண வேடிக்கை பார்க்க மக்கள் குழாம் குழுமிக் கொண்டிருக்கிறது.

அன்று கனடா தினம்! நேர் எதிரே ரொறன்ரோ நகரம் இரவு நேரத்தின் மின்னொளியில் குளித்துக் கொண்டிருக்கிறது. ஸ்கைடோம், சி.என்.டவர், உயர் மாடி வீடுகள் எங்கும் மின் குமிழ் கள் மல்லிகை முல்லைக் கொடி களில் சிரிக்கும் வெண்ணிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்கள் போல,. வர்த்தக நிலையங்களின் ஓடி அணைந்து பலவித அழகுக் கோலங்கள் காட்டும் விளம்பரங்கள், அடிக்கடி நிலவை மறைக்கும் முகில்கள் போல., வானத்துச் சந்திரனின் ஒளி வாவியில் பிரதிபலிக்கின்றதோ?

சிறிது நேர அழகு லயிப்பு அவளுக்கு. அவள்தான் மைத்ரேயி.

"அன்ரி, தூக்குங்கோ அன்ரி," அடம்பிடிக்கும் அந்த மழலைக் குரல் அவளை இவ்வுலகுக்கு இட்டு வருகிறது. வாரியணைத்துத் தூக்கிக் கொண்டாள் தன் அண்ணன் மகன் சரணயனை.

"அன்ரி இந்த மூன் வேறை மூனோ, அல்லாட்டி எங்கடை ஸ்காபரோ மூனோ?" என்கிறான் நான்கு வயது நிரம்பாத சரண்.

"எங்கடை நிலாதான் சரண்யன்" என்றவாறே 'மூன்' சொன்னதற்குச் செல்லக் கோபம் காட்டுகிறாள் மைத்ரேயி.

மகிழ்ச்சியில் கைகொட்டிச் சிரித்த குழந்தை உடனே யோசனையோடு, "அப்ப என்னென்று இஞ்சை வந்தது" என்று கேட்டது.

அவள் திணறுகிறாள். நிலவைப் பிடித்துத் தா என்று கேட்ட இராமனின் நினைவு வருகிறது அவளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சொன்னாலும் புரிந்து கொள்ளும் பருவமா?

"அது விமானத்தில் ஏறி வந்தது" என்கிறாள் அவள்.

"அப்ப போகேக்கை எயப்போட்டிலை பாப்பம்"

"சரண் இங்கை வா. அத்தையைத் தொந்தரவு செய்யாதை. அவ இப்ப வஹீதாவின் கணவனுக்கு எவ்வகையான குடும்ப ஆலோசனை கொடுக்கலாம் என யோசித்துக் கொண்டிருப்பா."

அண்ணியைத் தொடர்ந்து அண்ணனும் கூறி ஏதோ பெரும் பகிடி விட்டதாகச் சிரித்துக் கொள்கின்றனர்.

அவனின் புன்முறுவல் அண்ணனுக்குத் தெரியக்கூடிய அளவுக்கு வெளிச்சம் போதாது. வெளிச்சம் போட்டுக் காட்டினாலும் புரிந்தது போலக் காட்டிக்கொள்ள மாட்டான். தங்கை பாசம்தான் கண்ணை மறைக்கிறதே.

மைத்ரேயி எல்லாப் பெண்களையும் போலச் சாதாரணமானவளாகத்தான் பிறந்தாள். குழந்தைப் பருவத்தில் மிகப் புத்திசாலி. இளம்பருவத்தில் தன் பாடசாலையில் மாத்திரமல்ல — யாழ்ப்பாணப் பாடசாலைக ளிலேயே முதல்தர மாணவியாகத் திகழ்ந்தாள். வட மாகாண ஆசிரியர் சங்கம் நடத்திய பரீட்சைகளிலும் போட்டிகளிலும் முதலாம் இடத்தைத் தட்டிச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விடுவாள்.

குமர பருவத்தில் எல்லோரையும் போலவே தனிமையில் வானத்தையும் நிலாவையும் மணிக்கணக்காகப் பார்த்துக்கொண்டு, ஒருவித மையலோடு கற்பனைத் தேரில் பறப்பாள். காணுமிடமெல்லாம் அவள் காதலன் (அவன் யாரோ) கைநீட்டி அழைத்தான், அரவணைத்தான். பிறைச் சந்திரனில் இருத்து ஊஞ்சலாட்டினான். கடற்கரை எல்லாம் கலைத்துப் பிடித்தான். காதல் என்றால் என்னவெனச் சினி-மா தந்த அளவுகோலால் கனவு விரியும்.

நிஜ உலகிலோ கல்விப் பிரவாகம். பாடசாலைக் கல்வி, அறிவுப் பசிக்கு அணைகட்டுவதாயில்லை. அதிகாலையில் புலவர் பார்வதிநாதசிவத்திடம் ஓரளவு சங்க நூல்கள் இலக்கியம் கற்றாள். மாலையில் பேராசிரியர் சோமசுந்தரத்திடம் ஷேக்ஸ்பியர், கீற்ஸ் கற்றாள். சனிக்கிழமைகளில் யாழ் நூலகமே கதியெனக் கிடந்தாள். ஞாயிற்றுக்கிழமை பாலசுந்தரக் குருக்களிடம் சமஸ்கிருதம் கற்றாள். இடைக்கிடை தையற் கலை, பின்னற் கலை எல்லாவற்றிலும் ஓரளவு தெரிந்திருக்க வேண்டும் என்பது அவள் சித்தாந்தம். உருத்திராபதி வீட்டில் சங்கீதமும் கற்றாள்.

இருபதாவது வயதிலேயே பேச்சுக்கால்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரத்தொடங்கின. நட்சத்திரப் பொருத்தம் சரிவந்தால் கிரகப் பொருத்தம் மட்டம். செவ்வாய் 12ல் உச்சமாக நிற்கிறதாம். அதைவிட மோசமாக கேது 12 ம் இடத்திலே கூடி நிற்கிறார்களாம். நிச்சயம் இரு தாரமாம். இந்தக் கிரகங்கள் தாங்கள் கூடிநின்று கொண்டு மனுஷரை ஏன் பிரித்து விடுவான்?

படிப்பைக் கண்டு ஓடிவந்தோர் பறந்தடித்துச் சென்றனர். அழகைக் கண்டு ஆராதித்தோர் அசங்கிடாமல் நழுவினர். கற்பனை இராச்சியத்தின் வசந்த வாழ்வு 28 வயதுக்குள்ளேயே அவளை விட்டு நீங்கிவிட்டது. இருதாரத் தடைக்கல் வாழ்வின் அல்லது மனிதரின் பொய்மையைப் புகன்று நிற்கவே, அறிவுலக நண்பர்களோடு அரட்டை அடிப்பதையும் குறைத்துக் கொண்டாள்.

முழுமையான கணக்காய்வாளராகத் தொழில் பார்த்துக் கொண்டே திருப்தி நிலைக்கு வந்துவிட்ட மைத்ரேயி ஆத்மீக நெறியில் அறிவைப் பெருக்க விழைந்தாள். மாஸ்லோவின் தேவைக் கொள்கையின் உச்சநிலை தன்னைத் தானே அறிதலும் பிறருக்காக வாழ்தலும். இந்தநிலை சிறுவயதிலேயே வந்துவிட்டது. வேத உபநிடதங்கள், சங்கரபாஷ்யம், கிருஷ்ணமூர்த்தி, சத்யசாயி, பகவத் கீதை கருத்துக்களை உள்வாங்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏற்கனவே அறிந்திருந்த விஞ்ஞானிகள் — அவர்களது கொள்கைகளுடன் ஒப்பிட்டு ஆராய்வாள்.

சிறு வயதுக்குள்ளேயே ஒரு பூரண வாழ்வை அடைந்துவிட்ட மைத்ரேயி 75-80 வயதில் கூடத் தம் கணிப்புத் தேவை நிறைவு பெறாது நாணம் சிறிதுமின்றிப் பிறர்பின் ஓடி வழிந்து மேடை கேட்பவர் போலல்லாது, தன்னிறைவு பெற்று உலக சமுதாயத்தை ஒரே தன்மையுடன் பார்க்கும் உயர்நிலைக்கு உயர்ந்து விட்டாள்.

கனடாவுக்கு வந்த அண்ணன் பரம்சோதி தங்கைக்கு நல்வாழ்வு கிடைக்கக்கூடிய சுயமான சூழ்நிலை ஒன்றைக் கண்டான். இலங்கையிலும் இலண்டனிலும் பெற்ற கல்விச் சான்றிதழ்களுடன் இருக்கும் தங்கைக்கு இனித் தேவையானது இல்வாழ்க்கைத்தான் எனத் தங்கையைக் கனடாவுக்கு அழைத்தான்.

தமிழீழச் சிந்தனை ஒரு புறம், பெண்களுக்கு இன ரீதியாகவும் சாதி ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் இழைக்கப்படும் அநீதிகளைக் கண்டு கொதிப்பது மறுபுறம். அங்கிருந்து எந்தச் செயலிலும் செய்ய முடியாத நிலை. ஒரு ஜனநாயக நாட்டுக்குச் சென்றால் அங்கிருந்தே பல பங்களிப்புகளைச் செய்யலாம் என வந்தவளுக்கு பெண்கள் அமைப்பு ஒன்றின் நிர்வாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இயக்குநர் பதவி கிடைத்தது. பல்லினப் பெண்களுடன் பழகும் வாய்ப்பும் கிடைத்தது. விவேகானந்தரைப் போலக் கிழக்கையும் மேற்கையும் இந்துமதம் மூலம் இணைக்கும் பேறும் கிடைத்தது.

அண்ணாவின் குழந்தைகள் மாத்திரமல்ல, சிறுவர் அடைக்கல விடுதிக் குழந்தைகளும், அவளது குழந்தைகள்தாம். உயர்ந்த எண்ணங்களும் சேவை மனப்பான்மையும் நிறைந்த அவளுக்கு செக்சும் காதலும் இரண்டாம் பட்சமாகிவிட்டன. ஒரு நாளின் 24 மணி நேரமும் அவளுக்குப் போதாமல் இருக்கும்போது கற்பனைகளை வளர்த்துக் கொள்ளவோ குடும்பம் பற்றிச் சிந்திக்கவோ அவளுக்கு நேரமில்லை. சமூகசேவையே தாரக மந்திரம் அதில் பெறும் மனநிறைவே அவளை ஒரு பூரணமான பெண்ணாக்கி விட்டது.

அன்றொருநாள் ஈழத்தின் இறைமை பற்றி கனடிய அமைச்சர்கள் குழுவுடன் கலந்துரையாடச் சென்ற குழுவுடன் அவளும் சென்றிருந்தாள். புதினங்களை அண்ணனிடம் பகிர்ந்து கொள்ள ஸ்காபரோ சென்றபோது, அங்கே கதைத்துக் கொண்டிருந்த இளைஞனைக் கண்டதும் மலர்ந்து போனாள்.

"தேவசேனன் நீரா? எந்தப் புத்துக்குள்ளிருந்து புறப்பட்டீர்?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" பேந்ததென்ன நீங்கள் மறக்கவில்லை. 14, 15 வயதில் கண்டது. எப்படிக் கண்டு பிடித்தீங்கள்?"

"வருடங்கள் பறக்கப் பறக்க எனக்குத் தெரிந்த தேவசேனனும் மனதுள் வளர்ந்துகொண்டே போனான். கன்னத்தில் நரை தோன்றியிருக்கும் எனவும் நினைத்தேன்."

சினேகபூர்வமாக அற்புதமாகச் சிரிக்கின்றாள். பரஞ்சோதியைப் பார்க்கிறான். அவரது கண்களிலும் ஏதோ புரிந்து விட்டதான உணர்வு. தேவசேனன் பளைப்பரியாரி சின்னத்தம்பியின் மகன். இவர்கள் வீட்டுக்குச் சமீபத்தில் இருந்தவர்கள். இவள் அம்மாவின் நோய்களுக்கு வீட்டுக்கு வந்து படியில் இருந்துகொண்டு மணிக்கட்டில் பட்டுத்துணி போட்டு நாடி பார்ப்பவர். தேவசேனன் இவளுக்கு இரண்டு வகுப்பு முதலில் படித்தவன். தந்தையைப் போல நல்ல பண்பும் பழக்க வழக்கங்களும் கொண்டவன். முதலாம் பிள்ளையாக வருவதற்குக் கணிதம், கணக்கு விட்டுக்கொண்டிருந்தது. அவளோ கணக்கில் புலி. ஹோல் அன்ட் ஸ்ரீபன்ஸன் புத்தகங்களில் தனது வகுப்புத் தரத்துக்கு மேலான கணக்குகளையும் செய்து கரை கண்டவள்.

பரஸ்பரம் ஒருவிதமான நட்பும் மரியாதையும் கொண்டிருந்த அந்தக் குடும்பங்களுள் இச்சிறு பையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்து அப்பெண்ணிடம் கணிதம் கற்றுக் கொள்வதை யாரும் தடுக்கவில்லை. ஆனால் அவன் கீழ்ப்படியில் இருக்க வேண்டும். இவள் வராந்தாவிலிருந்து படிக்க வேண்டும் என்பது பாட்டியின் கட்டளை. குழந்தைகள்; ஆனாலும் அவர்கள் தத்தம் எல்லைகளை உணர வைக்கப்பட்டவர்கள்.

தேவசேனன் 1969ம் ஆண்டு ஏழாம் ஆண்டு ஜாதிக நவோதய புலமைப் பரிசில் பெற்ற நாட்களில், அவனது கம்பீரமும் கெட்டித்தனமும் பொறாமையை விதைத்தது. ஊர் மாணவர்களால் சிறுப்பினைப்படுத்தப்பட்ட வேளை அவனது ஆளுமைக்குப் பங்கம் ஏற்படுவதைக் கண்ட பரியாரியார் அவனை சென் ஜோன்ஸ் பாடசாலையில் சேர்த்துவிட்டார். பத்தாம் வகுப்புப் பரீட்சையில் மைத்ரேயி விளக்கிய பைதகறஸ் தியரத்தின் அப்பியாசம் ஒன்றும், சரக்கு முதல் பயிற்சி ஒன்றும் இலக்கம் மாற்றி வந்தபோது பூரித்து விட்டான்.

கொழும்பில் லிகிதராக இருந்த அவனது அத்தானுடன் அனுப்பி றோயல் கல்லூரியின் விஞ்ஞான வகுப்பில் சேர்க்க ஆயத்தங்கள் நடந்தபோது கணிதத்தில் அதிவிசேட சித்தியுடன் திறமைச் சித்திகள் எடுத்திருந்தான். " அட மொக்கா! உனக்குத் தந்தாங்களே" என நையாண்டி செய்து "இனிக் கணிதமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேவையில்லை. மைத்ரேயியும் தேவையில்லை" எனத் தன் பிரிவாற்றாமையைச் சிரித்துச் சிரித்தே கூறிய இன்னும் பருவத்துக்கு வராத அப்பெண்ணின் உணர்ச்சி வதனம் அவனால் இன்றும் மறக்க முடியவில்லை.

பல வருடங்களின் பின் அமெரிக்காவில் உயர் பதவியொன்றில் அமர்ந்திருந்த தேவசேனன் விடுமுறைக்குக் கனடாவில் வந்து, றோயல் கல்லூரி பழைய மாணவர் சங்கத்துக்குச் சென்றிருந்தபோது பரஞ்சோதியைக் கண்டு பேருவகை கொண்டார். அதன் விளைவே அவன் வருகை.

இப்போதெல்லாம் இவர்களைப் பார்ப்பதற்காக அடிக்கடி வந்து போகிறார். அதோ, அண்ணனின் மூத்தவன் சயனுடன் உலாத்தி உலாத்தி அவன் பாடசாலைப் பகிடிகளையும் அதன் அர்த்தங்களையும் கேட்டுக் கேட்டு வியந்து சிரிக்கிறார். அந்த எட்டு வயதில் அவன்கூறும் பேஸ் போல், ஹொக்கி விளையாட்டுகள் பற்றியும், விண்வெளி பற்றிய விடயங்களையும் கேட்டு அதிசயிக்கின்றனர். இன்று இவர்களுக்கு கவல் தெருவிலிருக்கும் அவள் வீட்டில்தான் சாப்பாடு.

அண்ணன் பரஞ்சோதி ஒரு கனடியனாக மாறிவிட்டான். தங்கை விடயத்தில் தான் ஒரு கனடியன் என்பதை நிரூபிக்கவும் தயாராகிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அண்ணனின் நெருக்கமும், தைரியம் ஊட்டும் கதைகளும், தேவசேனனுக்கும் மைத்ரேயிக்கும் புரிந்து போகிறது. ஆனால் அவர்கள் என்றும் போல கனடாவான தால் சிறிது நெருக்கமாகப் பழகி நட்புப் பாராட்டி வருகின்றனர். பரஞ்சோதிக்கோ உலக வாழ்வு என்பது இல்லற வாழ்வுதான். விவாகம் ஒன்றே மனித வாழ்வின் ஒரே குறிக்கோள். தங்கைக்கு விவாகமாகும் வரை தனக்கு ஏதோ பெருஞ்சுமை இருப்பதான உணர்வு. ஆகவே அன்பைக் கொட்டி இளக வைக்கிறார். சமூக சேவைமீது கிண்டலடிக்கிறார். நோய் நொடி வந்தால் அத்தனை குடும்பங்களும் தலைமாட்டிலே நின்று தாங்கு தாங்கெனத் தாங்கப்போகுதுகள் என நையாண்டி செய்கிறார்.

இத்தடவை அண்ணன் அண்ணிக்குப் பதில் சொல்லியாக வேண்டும். தேவசேனனுக்கும்தான். ஓ! தேவசேனா, உன் அன்பை மதிக்கின்றேன். ஆனால், கணவன் மனைவியெனக் கற்பனை பண்ணக்கூட முடியவில்லையே! சிறுவயதில் சொந்த அண்ணனாக, நண்பனாக, உயிர்த் தோழனாக நினைக்க முடிகிறது. ஆனால்... ஆனால்... மைத்ரேயி உன் உடல் உணர்வுகள் செத்து விட்டனவா? இல்லை! கணவன் என்றால் வயதில் கூடியவன் தகுதிகளில் மிகுந்தவன் - உயர்ந்தவன். இது சமூகம் கற்பித்த பாடம். சீர்திருத்தம் பேசினாலும் பால்ய வயதில் பதிந்து விட்ட பாடம். இரண்டு படிகள் கீழேயிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவனாகக் கணிதம் படித்த, மதிப்பின்றி 'டேய்' என்று உரிமையோடு அழைக்கப்பட்டவன்.

இக்கரையில் இருந்து யாரோ அவிட்டுவாணம் விடுகிறார்கள். ஒளிப்பந்து ஒன்று பிரகாசமாய் மேலே கிளம்புகிறது. திடீரென நிறம் நிறமாக மலர்ந்து பின்னர் கரித்துகள்களாக விழுகிறது. திடீரென அவளது மனம் துன்புறுத்தப்பட்ட பெண்களின் நினைவுக்கு வருகிறது. இன்று இவர்கள் மத்தாப்பூ. நாளை அவர்கள் அதிகார ஆணவம் அழிந்த கரித்துகள்கள். பெண்ணையும் ஓர் உயி ரென மதியாது சுயமாகச் சிந்திக்கவும், முடிவெடுக்கவும் இடங்கொடாது கைவரிசை காட்டிப் பெண்கள் தஞ்ச நிலையங்களையும், சிறுவர் அடைக்கல வீடுகளையும் நிரம்பி வழியச் செய்பவர்கள். தமிழர் மாத்திரமல்ல, இவர்களைவிட மோசமாக பல்லினக் கலாசாரத்தினரும் தான். இவர்களை உணரவைக்க திருமதி தேவசேனனால் முடியுமா?

மறுநாள் மீன் தொட்டியருகே நிற்கிறாள் அவள். அண்ணனும் அண்ணியும் அவள் வாயையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். துடிப்பு மிகுந்த பொன்னிற மீனொன்றை வெளியே தூக்குகிறாள். அது துடிக்கிறது. "என்ன விசர் வேலை செய்யிறாய், விடு கீழை," அண்ணா. "யோசனைக் கடுமையிலை செய்யிறது தெரியேல்லை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





யாக்கும்", அண்ணி.

"அண்ணா! 36 வயது வரை நான் சாதித்தது அனேகம். இனிச் சாதிக்கப் போவதும் ஏராளம். பலருக்கும் பறை தட்டிப் பேர் புகழைச் சம்பாதிக்கவில்லை. போட்டோ பிடித்து பத்திரிகைகளில் போடவில்லை. பாதிக்கப் பட்டவர்களே அறிவார்கள். மீனுக்கு அச்சூழல் பழக்கப்பட்டது மாதிரித்தான் எனக்கும் இந்த வாழ்க்கை பிடித்துவிட்டது.

அண்ணி குறுக்கிடுகின்றாள். "நிம்மதியும், திருப்தியும் இருக்குதென்று நினைக்கிறாயா? தேவசேனன் இவற்றுக்கெல்லாம் மாறுபட்டவனில்லையே."

"நிம்மதி, திருப்தி என்பதோடு மனநிறைவைத் தருகின்ற பூரணமான என்னும் அடைமொழிகளையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அண்ணி உங்கள் வாழ்க்கை பூரணமானதா? அப்படியாயின் அண்ணன் இல்லாத நேரத்தில் காலில் சலங்கை கட்டி அறைக்குள் ஏன் ஆடுகிறீர்கள்? 20 வயதில் மேடையால் இறங்கிய காலத்தில் ஓய்ந்துபோன ஆட்டம் குழந்தை குட்டி, வீடுவாசல், செல்வம் நிறைந்த பூரண வாழ்வில் ஏன் இந்த ஏக்கம்? எப்போ அண்ணா வெளியே போவார் எனக் காத்திருக்கிறீர்களே."

அண்ணா அதிசயத்துடன் அண்ணியைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பார்க்கிறான். தேவசேனனின் வருகை மௌனமாக்குகின்றது. பரஞ்சோதியின் நிலைமையைப் புரிந்து கொண்டு புன்முறுவல் செய்கிறான். எனக்கு முன்பே தெரியுமே என்ற அர்த்தத்தில், "நாளைக்கு 'இன்டிபென்டென்ற் டே' படத்துக்கு டிக்கட் கிடைத்திருக்கு. வாறீங்களா?"

டயறியைப் புரட்டுகிறாள் மைத்ரேயி.

"டிக்ஸி அன்ட் புளோர் அயலவர் சேவை நிலையத்தின் சிறுவர் தின விழா இருந்தது. அது ஒத்தி வைக்கப் பட்டிருக்கு. அப்ப போகலாம்" என்கிறாள். ஒரு பாரம் நீங்கிய நிம்மதி அவளுக்கு.

அவள் தனித்துவமானவள். நாதியற்றவர்களுக்குச் சேவை செய்வாள். சேவையிற் பூரண நிலை பெறுவாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமது சமகாலப் பெண் எழுத்தாளர்களுள்
ஈழத்தின் முன்னணி நட்சத்திரமாகத் திகழ்ந்தவர்
திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம்
(குறமகள்) ஆவார்.
துடிப்பும் துணிச்சலும்
உளச் சிந்தனைகளைத் தூண்டும்
கருத்தியல் ஆழமும்,
பெண்ணிய விழிப்புணர்ச்சியை
ஏற்படுத்தும் கதைப் போக்கும்,
மார்க்சியத் தத்துவங்களை உள்வாங்கிய
சொல்லாடலும் கதையாடலும்
குறமகளை இனங்காட்டுவன.
பெண் உரிமைகளை மனித உரிமைகளாகக்
கண்டு, அவற்றுக்குத் தம் படைப்புகளில்
அழுத்தம் கொடுப்பவர்.

நூற்றுக்கணக்கான கட்டுரைகளையும்
ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதிய
குறமகள் சகலகலா வல்லியாகவும் திகழ்ந்தவர்.
விரிவுரையாளர், நாடகவியலாளர்,
பட்டிமன்ற வித்தகர்,
சிறந்த சொற்பொழிவாளர்,
உளவியல் முதுகலை மாணி.
இலக்கிய கர்த்தாக்கள் அனைவருடனும்
எவ்வித கொள்கை வேறுபாடுகள்
பாராட்டாது நட்புப் பாராட்டுபவர்.
இல்லறத்திலும் உத்தமமான துணைவி;
சிறந்த தாய்.

— கலாநிதி பார்வதி கந்தசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org